# என் சரிதம்

— சுருக்கம் — 526

[ மகாத்மா காந்தி எழுதிய சுயசரிதத்தின் சுருக்கமான பதிப்பு ]


பதிப்பாசிரியர்கள்

மகாதேவ தேசாய்

ஹரிபாவு உபாத்தியாயர்

மொழிபெயர்ப்பு : கா. ஸ்ரீ. ஸ்ரீ.



அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர் :: சென்னை

முதற் பதிப்பு - 1945 அக்டோபர் 2உ

[ஸஸ்தா ஸாஹித்ய மண்டலத்தாரின் அநுமதியோடு ஹிந்தியிலிருந்து மொழிபெயர்த்தது.]

விலை ரூ. 3 - 8 - 0

ராஜன் எலக்ட்ரிக் பிரஸ், சென்னை.
Q. H. M. S. No. 109 - 1,000 Copies. - 2—10—1945

## பதிப்பாசிரியர்கள் குறிப்பு

காந்தியடிகளின் வாழ்க்கையில் நிகழ்ந்த மிகவும் முக்கிய மான சம்பவங்களைக் கொண்டு, மக்களை ஊக்கி அறிவுறுத்தும் அதன் தன்மைக்கு எவ்விதத்திலும் குறைவு நேராத வகையில், அவருடைய 'ஆத்ம கதை'யைச் சுருக்கமாகப் பதிப்பித்து வெளி யிடவேண்டிய தேவை பல காலமாகவே இருந்துவந்தது. மூல 'ஆத்ம கதை'யையே மலிவாகப் பிரசுரித்திருந்ததனால், அதன் உள்ளுறையைக் குறைக்கப் பிரசுரகர்த்தர்கள் விரும்பவில்லை. ஆனால் ஆங்கிலப் பள்ளிக்கூடத்து மாணவர்களுக்காக 'My early life' என்ற பெயரில் சுருக்கப் பதிப்பு வெளிவந்ததிலிருந்தே ஹிந்திப் பள்ளிக்கூடத்து மாணவர்களுக்காகவும் இத்தகைய பதிப்பு ஒன்றை வெளியிடவேண்டும் என்ற எண்ணம் இருந்து வந்தது. அப்போது தற்செயலாக, வர்தாவிலுள்ள ராஷ்டிர பாஷா ஹிந்தி பிரசார ஸமிதி, இத்தகைய பதிப்பு ஒன்றைக் கொண்டுவருமாறு ஸஸ்தா ஸாஹித்ய மண்டலத்துக்கு ஸ்ரீகாகா காலேல்கர் வாயிலாக யோசனை கூறியது. மண்டலத்தார் இந்த வெளியீட்டைத் தயாரிக்கும் பொறுப்பையும் பதிப்பிக்கும் பொறுப்பையும் எங்களிடம் ஒப்பித்தார்கள். இவ்விதமாக இந்தச் சுருக்கமான பதிப்பு வாசகர்களுக்குக் கிடைத்திருக்கிறது.

பள்ளிக்கூடங்களுக்குப் பயன்படவேண்டும் என்பது இந்தப் பதிப்பைத் தயாரித்ததன் முக்கிய நோக்கம்; இதை வாசகர்கள் மறந்துவிடலாகாது. ஆதலால், பள்ளிக்கூட வாழ்க்கைக்குப் பெரும் பாலும் பயன்படக்கூடியவை அல்லாத பல நீண்ட விளக்கங்களை யும் விவாதங்களையும் 'ஆத்ம கதை'யிலிருந்து நீக்கி இதைப் பதிப்பித்திருக்கிறோம். தென்னாப்பிரிக்காவில் நிகழ்ந்த சத்தியாக் கிரகத்தைப் பற்றிய சில பகுதிகள், புத்தகம் நீண்டுவிடுமே என்ற காரணத்தினால்; மூல 'ஆத்ம கதை'யில் சேராமலிருந்தன. தென்னாப்பிரிக்கச் சத்தியாக்கிரகத்தை ஆதாரமாகக் கொண்டு அந்தப் பகுதிகளை இந்தச் சுருக்கமான பதிப்பில் சேர்த்திருக் கிறோம்.

'My early life' என்ற நூலை முன்னால் வைத்துக்கொண்டு, மூல 'ஆத்ம கதை'யிலிருந்து விஷயங்களைத் தேர்ந்தெடுத்தும் பாகு படுத்தியும் இந்தப் பதிப்பைத் தயாரித்திருக்கிறோம். கூடியவரை

யில் மூல ஹிந்திப் பதிப்பிலுள்ள வாக்கியங்களையே வைத்திருக்கிறோம். புதிதாக மொழிபெயர்க்க வேண்டியிருந்த இடங்களிலும், எளிதும் புரியக்கூடியதுமான நடையில் அமைக்க முயன்றிருக்கிறோம்.

பாரத நாட்டில் பிறந்த எவனும் காந்தியடிகளின் வாழ்க்கையை அறியாமலும் அதிலிருந்து தூண்டுதல் பெறுமலும் எப்படி இருக்க முடியும்? அவருடைய வாழ்க்கை அத்தனை பெரிது, அத்தனை வெளிப்படையானது, அத்தனை பரந்தது. பாரத நாட்டின் தேசீயத் துறை ஒவ்வொன்றையும் பற்றிநிற்கும்-பற்றுவதோடு நில்லாமல் அதில் தம் செல்வாக்கையும் செலுத்தியுள்ள - அந்த மகா புருஷரின் செயல்களை அறியாதபடி இந்திய மாணவனை எப்படி ஒதுக்கி வைப்பது? காந்தியடிகளிடம் உள்ள - குழந்தை மனத்துக்கு ஏற்ற எளிமை, ஊடுருவிச் செல்லும் கபடமற்ற தன்மை, அடக்கமுடியாத உற்சாகம், எல்லையற்ற செயல் திறமை, இவற்றிற்கெல்லாம் மேலாக, ஒவ்வொருவரிடத்திலும் பதியும் அளவற்ற அன்பு - ஆகிய இந்தக் குணங்கள், 'ஆத்ம கதை'யைப் படிப்பவர்களின் உள்ளத்தில் ஆட்சி செலுத்தாமல் இருக்கமாட்டா. மேலும், இந்தக் குணங்களை உதாரணமாகக் கொள்வது, ஒரு மாணவனுடைய வாழ்க்கையைச் சமைப்பதற்கு மிகவும் தேவையாகும். இந்த நோக்கத்தினாலுங்கூட இந்த 'ஆத்ம கதை' மாணவர்களுக்கோ இளைஞர்களுக்கோ பெரிதும் பயன்படக்கூடியது.

அதனோடு, இந்தியாவிலுள்ள எல்லா மாகாணங்களிலும் இந்தியர்களின் சர்க்காரும், முக்கியமாக ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் சர்க்காரும் (மந்திரி சபைகள்) ஏற்பட்டிருக்கும் பொழுது, பாரத நாட்டின் இந்தத் தேசீய மகா புருஷரின் வாழ்க்கை வரலாற்றைப் பள்ளிக்கூடங்களில் வழங்கச் செய்வது இன்றியமையாததாகியிருக்கிறது. இந்த நிலையில் இந்தச் சுருக்கமான பதிப்பு வெளிவந்தது சரியான தருணமே. நாளைக்கு இந்தியாவின் சுமையைத் தம் தோள்களில் தாங்குவதற்கு இருக்கும் இந்திய மாணவர்களும் இளைஞர்களும் இந்தப் பதிப்பை மிகவும் பயன்படக்கூடியதாகக் கருதுவார்கள் என்பது எங்கள் நம்பிக்கை.

டில்லி,<br>6-7-1939

மகாதேவ தேசாய்<br>ஹரிபாவூ உபாத்தியாயர்.

## பொருளடக்கம்


| அத். | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | சிறுபிராயம் | ... | 1 |
| 2. | ஆரம்பப் பாடசாலை | ... | 3 |
| 3. | உயர்தரப் பள்ளியில் | ... | 6 |
| 4. | விவாகமும் புலால் உணவும் | ... | 10 |
| 5. | விழித்துக்கொண்டேன் | ... | 15 |
| 6. | திருட்டும் பிராயச்சித்தமும் | ... | 18 |
| 7. | சத்திய தரிசனம் | ... | 22 |
| 8. | மூன்று பிரதிக்கினைகள் | ... | 23 |
| 9. | முதல் அநுபவம் | ... | 25 |
| 10. | பிரதிக்கினை காத்தது | ... | 29 |
| 11. | ஆங்கிலக் கனவானாக முயற்சி | ... | 31 |
| 12. | எளிய வாழ்க்கை | ... | 34 |
| 13. | தப்பினேன் | ... | 38 |
| 14. | பாரிஸ்டர் ஆனேன் | ... | 41 |
| 15. | தென்னாப்பிரிக்காவுக்குப் பிரயாணம் | ... | [illegible] |
| 16. | தொண்டுக்குப் பிள்ளையார் சுழி | ... | [illegible] |
| 17. | புயலுக்கு அறிகுறிகள் | ... | 51 |
| 18. | உரைகல் | ... | 53 |
| 19. | தொண்டுள்ளமும் எளிமையும் | ... | 59 |
| 20. | ஒரு புனித நினைவும் பிராயச்சித்தமும் | ... | 62 |
| 21. | போயர் யுத்தம் | ... | 64 |
| 22. | நாடு திரும்புதல் | ... | 67 |
| 23. | மீண்டும் தென்னாப்பிரிக்கா | ... | 76 |
| 24. | ஒரு புத்தகத்தின் அதிசய சக்தி | ... | 79 |
| 25. | போனிக்ஸ் ஸ்தாபனம் | ... | 81 |
| 26. | ஜூலூ கலகம் | ... | 89 |
| 27. | ஆயுள் விரதம் | ... | 91 |
| 28. | வீட்டில் சத்தியாக்கிரகம் | ... | 94 |
| 29. | புலனடக்கம் | ... | 97 |
| 30. | வக்கீல் வாழ்க்கையில் சில நினைவுகள் | ... | 100 |
| 31. | சத்தியாக்கிரகத்தின் பிறப்பு | ... | 103 |
| 32. | சிறையில் | ... | 105 |
| 33. | சிறையில் ஆரம்ப அநுபவங்கள் | ... | 107 |
| 34. | நினைவில் மிளிரும் சம்பவம் - 1 | ... | 110 |

| | | | |
|---|---|---|---|
| 35. | நினைவில் மிளிரும் சம்பவம் - 2 | ... | 113 |
| 36. | மறுபடி சத்தியாக்கிரகம் | ... | 115 |
| 37. | டால்ஸ்டாய் ஆசிரமம் | ... | 118 |
| 38. | நல்லவர்களும் கெட்டவர்களும் | ... | 121 |
| 39. | சகோதரிகளின் பங்கு - 1 | ... | 125 |
| 40. | சகோதரிகளின் பங்கு - 2 | ... | 130 |
| 41. | தொழிலாளிகளுங்கூட | ... | 132 |
| 42. | எங்கள் யாத்திரை - 1 | ... | 137 |
| 43. | எங்கள் யாத்திரை - 2 | ... | 140 |
| 44. | சத்தியாக்கிரகத்தின் வெற்றி | ... | 145 |
| 45. | கோகலேயைச் சந்திக்க | ... | 148 |
| 46. | யுத்தத்தில் பங்கு | ... | 151 |
| 47. | கோகலேயின் தாராளம் | ... | 154 |
| 48. | இந்தியாவுக்குத் திரும்புதல் | ... | 157 |
| 49. | கோகலேயுடன் பூனாவில் | ... | 159 |
| 50. | மிரட்டலா? | ... | 162 |
| 51. | சாந்தி நிகேதனம் | ... | 165 |
| 52. | மூன்றாம் வகுப்பிலுள்ள சங்கடங்கள் | ... | 166 |
| 53. | என் முயற்சி | ... | 169 |
| 54. | ஆசிரம ஸ்தாபனம் | ... | 171 |
| 55. | சோதனை | ... | 173 |
| 56. | ஒப்பந்தக் கூலிமுறை ஒழிந்தது | ... | 176 |
| 57. | அவுரிக் கறை | ... | 180 |
| 58. | பீஹாரின் எளிமை | ... | 183 |
| 59. | அஹிம்ஸையைக் கண்டேன் | ... | 186 |
| 60. | வேலை முறை | ... | 190 |
| 61. | தொழிலாளிகளுடன் தொடர்பு | ... | 194 |
| 62. | ரௌலட் சட்டமும் என் தர்ம சங்கடமும் | | |
| 63. | அற்புதமான காட்சி | ... | 198 |
| 64. | அந்த வாரம்! - 1 | ... | 202 |
| 65. | அந்த வாரம்! - 2 | ... | 211 |
| 66. | 'ஹிமாலயத் தவறு' | ... | 214 |
| 67. | பஞ்சாபில் | ... | 217 |
| 68. | காங்கிரஸில் பிரவேசம் | ... | 220 |
| 69. | ஒரு சம்பாஷணை | ... | 224 |
| 70. | பூர்ணாஹுதி | ... | 227 |

# மகாத்மா காந்தி
# என் சரிதம்
## சுருக்கம்

## 1

### சிறுபிராயம்

என் தந்தை கபா காந்திக்குப் பணம் குவிக்க வேண்டுமென்ற ஆசை இருந்ததில்லை. ஆகவே அவர் எங்களுக்கு வைத்துப்போன சொத்து மிகக் கொஞ்சந்தான்.

அவர் பெற்றதெல்லாம் அநுபவ ஞானம் மட்டுமே. பள்ளிக்கூடப் படிப்பு ஐந்தாவது வகுப்போடு சரி. சரித்திரம், பூகோளம் இவைகளைப்பற்றி அவருக்கு ஒன்றுமே தெரியாது. ஆனால் உலக விவகாரங்களில் நன்ருகத் தேர்ச்சி பெற்றிருந்தார்; மிகவும் நுணுக்கமான சிக்கல்களைத் தீர்ப்பதிலோ அல்லது ஆயிரக்கணக்கான மனிதர்களை வைத்து வேலை வாங்குவதிலோ அவருக்கு என்றுமே சிரமம் ஏற்பட்டதில்லை. மதசம்பந்தமான படிப்பும் அவருக்கு இல்லையென்றே சொல்லிவிடலாம்; ஆனால், கோயில்களுக்குப் போவதனாலும், கதைகளும் புராணங்களும் கேட்பதனாலும், எத்தனையோ ஹிந்துக்கள் சகஜமாக அறிந்துவரும் மத விஷயங்கள் அவருக்கும் தெரிந்திருந்தன. எங்கள் குடும்பத்துக்கு வேண்டியவரும் அறிவாளியுமான ஓர் அந்தணருடைய உபதேசத்தினல்,

அவர் கீதை படிக்க ஆரம்பித்தார்; தினமும் பூஜையின்போது சில சுலோகங்களை உரக்கப் பாராயணம் செய்வார்.

என் தந்தை குடும்பப் பற்றுள்ளவர்; சத்தியத்தில் பிரியங் கொண்டவர்; வீரர்; தாராள மனப்பான்மையுடையவர்; ஆனால், கோபமும் உண்டு. 'லஞ்சம் என்றாலே கட்டோடு பிடிக்காது; ஆகையால் எப்போதும் சரியான தீர்ப்புச் சொல்வார்' என்று, எங்கள் குடும்பத்திலும் சரி, வெளியேயும் சரி, அவருக்கு நல்ல புகழ் உண்டு. ஒரு தடவை, உதவி பொலிடிகல் ஏஜண்டாக இருந்த ஒருவர் ராஜகோட் ஸம்ஸ்தானத்து மன்னரை அவமதித்துப் பேசியபோது, என் தந்தை அதை எதிர்த்தார். துரைக்குக் கோபம் வந்துவிட்டது; 'மன்னிப்புக் கேட்டால்தான் ஆச்சு' என்றார் கபா காந்தியிடம். 'அது முடியாது' என்று அவர் தெளிவாக மறுத்துவிட்டார். அதற்காகச் சில மணிநேரம் காவலில் இருக்கவும் நேர்ந்தது; ஆனால் அவர் சிறிதும் அசையவில்லை. கடைசியில், அவரை விட்டுவிடும்படி துரை உத்தரவு கொடுக்கவேண்டியதாயிற்று.

என் தாயைப்பற்றி நினைக்கும்போது, அவர் தவ ஒழுக்கத்திற் சிறந்தவர் என்ற எண்ணமே என் மனத்தில் பதிந்திருக்கிறது. அவருக்குப் பக்தி பாவனை அதிகம். பூஜையும் பாராயணமும் செய்யாமல் ஒருபோதும் உணவு கொள்ளமாட்டார்; வேளை தவறாமல் விஷ்ணு கோயிலுக்குப் போய்வருவார். எனக்கு நினைவு தெரிந்தது முதல், அவர் எந்த வருஷத்திலாவது சாதுர்மாஸ்ய விரதத்தை விட்டதாக எனக்கு ஞாபகம் இல்லை. அவர் மிகவும் கடுமையான விரதங்களை ஏற்று, எவ்வித இடையூறுமின்றி அவற்றை நிறைவேற்றுவார். நோயுற்ற போதிலுங்கூட நோன்பை விடமாட்டார். ஒரு சமயம் அவர் சாந்திராயண விரதம் இருந்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது. இடையில் நோயுற்றுங்கூட, அவர் விரதத்தை விடவில்லை. சாதுர்மாஸத்தில் ஒருவேளையே ஆகாரம் செய்வது அவருக்குச் சர்வ சாதாரணம். இதனோடு திருப்தி பெறாமல், ஒரு முறை சாதுர்மாஸத்தின்போது அவர் ஒன்று விட்டு ஒரு நாள் உபவாசம் இருந்தார். இரண்டு மூன்று நாட்களுக்கு அடர உபவாசம் இருப்பது அவருக்குச் சாதாரணமாகிவிட்டது. மற்றொரு சாதுர்மாஸத்தின்போது, சூரியநாராயணனைத் தரிசித்த பின்பே உணவு கொள்வதென்று விரதம் வைத்துக்கொண்டார். அந்தத் தடவை, நானும் மற்றப் பையன்களுமாகச் சேர்ந்து, 'எப்போது சூரியன் தென்பட்டு, அம்மா சாப்பிடப் போவாரோ!' என்று மிகவும் ஆவலோடு ஆகாயத்

தைப் பார்த்துக்கொண்டிருப்போம். சாதுர்மாஸத்தில் அநேக மாகச் சூரிய தரிசனம் கிடைப்பதே அரிதுதான் என்பது எல்லோருக்கும் தெரியும். மேகக்கூட்டத்திலிருந்து விலகி வெளிவந்த கதிரவனைக் கண்டவுடனே, "அம்மா, அம்மா! அதோ சூரியன் வந்துவிட்டது" என்று நாங்கள் கூச்சல் போட்ட நாட்களும் என் ஞாபகத்துக்கு வருகின்றன. அம்மா அவசர அவசரமாக ஓடிவந்து பார்ப்பதற்குள், கதிரவன் மறைந்துவிடுவான். "அதனால் என்ன, பரவாயில்லை. இன்று நான் சாப்பிடுவதில் இறைவனுக்குப் பிரியம் இல்லை" என்று கூறிக்கொண்டே திரும்பிப்போய், அவர் மீண்டும் வீட்டுவேலைகளில் முனைந்துவிடுவார்.

உலக விவகாரங்களில் அவர் மிகவும் கெட்டிக்காரர். ஸம்ஸ்தானத்தைப்பற்றிய விஷயங்கள் யாவும் அவருக்குத் தெரியும். அந்தப்புரத்துப் பெண்மணிகள் அவருடைய புத்திகூர்மையை அறிந்து, அவரிடம் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார்கள். நான் சிறுவனாக இருந்தபோது, சில சமயம் அவர் என்னையும் கூடவே அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு போவார். 'பா' வுக்கும் (டாகுர் ஸாஹப்பின் விதவைத் தாய்) அவருக்குமிடையே நிகழ்ந்த பல நல்ல சம்பாஷணைகள் இன்னமும் எனக்கு ஞாபகம் இருக்கின்றன.

இத்தகைய பெற்றோர்களின் கிருகத்தில் 1869-ஆம் வருஷம் அக்டோபர்மீ 2௳ போர்பந்தர் என்று வழங்கும் ஸுதாமாபுரியில் நான் பிறந்தேன்.

என் சிறுபிராயம் போர்பந்தரிலேயே கழிந்தது. அங்கு ஏதோ ஒரு பள்ளிக்கூடத்தில் என்னைப் படிக்கவைத்ததாக ஞாபகம். மிகவும் சிரமப்பட்டுச் சில பெருக்கல் வாய்பாடுகள் கற்றுக் கொண்டிருப்பேன் என்று தோன்றுகிறது. அந்தக் காலத்தில் மற்றச் சிறுவர்களோடு சேர்ந்து உபாத்தியாயரைத் திட்டத்தான் கற்றுக்கொண்டேன் என்பது ஞாபகம் இருக்கிறது. இதைத்தவிர வேறு ஒன்றும் எனக்கு நினைவில்லை. இதிலிருந்து அந்தக் காலத்தில் என் புத்தி மந்தமாகவும் ஞாபகசக்தி குறைவாகவுமே இருந்திருக்கவேண்டுமென்று நான் ஊகிக்கிறேன்.

# 2

## ஆரம்பப் பாடசாலை

அப்பா 'ராஜஸ்தானி கோர்ட்டி'ன் அங்கத்தினர் பதவியை ஏற்றுப் போர்பந்தரிலிருந்து ராஜகோட்டுக்குச் சென்றபோது

எனக்குச் சுமார் ஏழு வயசு இருக்கும். ராஜகோட்டில் என்னை ஆரம்பப் பாடசாலையில் சேர்த்தார்கள். அந்த நாட்களைப்பற்றி எனக்கு நன்ருக நினைவு இருக்கிறது. உபாத்தியாயர்களின் பேர் ஊர்கள் கூட ஞாபகமாக இருக்கின்றன. போர்பந்தரைப்போலவே இந்தப் பள்ளிக்கூடத்துப் படிப்பு விஷயத்திலும் முக்கியமாக அறிந்துகொள்ளக்கூடிய சம்பவம் ஏதும் நிகழவில்லை. வகுப்பில் நான் சாதாரண மாணவனுகத்தான் இருந்திருப்பேன் என்று தோற்றுகிறது. அங்கிருந்து மேற்பள்ளிக்கும் பிறகு உயர்தரப் பள்ளிக்கும் சென்றேன். உயர்தரப் பள்ளிக்குப் போகும்போது எனக்குப் பன்னிரண்டு வயசு நிரம்பிவிட்டது. அந்தக் காலத்தில் நான் எந்த உபாத்தியாயரிடமாவது பொய் சொன்னதாகவோ, யாருடனாவது நெருங்கிப் பழகியதாகவோ எனக்கு ஞாபகம் இல்லை. நான் மிகவும் கூச்சமுள்ள பையன்; பள்ளிக்கூடத்தில் என் வேலை உண்டு, நான் உண்டு. மணி அடிக்கும் சமயத்தில் பள்ளிக்கூடம் போய்ச் சேருவேன்; பள்ளிக்கூடம் விட்டவுடனே வீட்டுக்கு ஓடிவருவேன். 'ஓடிவருவது' என்ற சொல்லைத் தெரிந்தேதான் உபயோகித்திருக்கிறேன். எனக்கு யாரோடும் பேசப் பிடிக்காது. 'யாராவது என்னைப் பரிகாசம் செய்தால்?' என்ற பயமும் இருந்தது. ஆகவே, வீட்டுக்கு ஓட்டமாகத்தான் வருவேன்.

உயர்தரப் பள்ளியில் நான் சேர்ந்த வருஷத்தில், குறிப்பிடத் தக்க ஒரு சம்பவம் நிகழ்ந்தது. கல்வி இலாகா இன்ஸ்பெக்டர் ஜாயில்ஸ் துரை எங்கள் பள்ளிக்கூடத்தைப் பரிசோதிக்க வந்தார். அவர் முதல் பாரத்து மாணவர்களை ஐந்து பதங்கள் சொல்லி எழுதச் சொன்னர். அவற்றில் ஒன்று 'கெட்டில்' (Kettle). நான் அதைத் தவருக எழுதினேன். உபாத்தியாயர் தம் பூட்ஸ் நுனியால் என் காலை மிதித்து எச்சரிக்கை செய்தார்; ஆனல் நான் விழித்துக்கொண்டால்தானே? அடுத்த பையனுடைய பலகையைப் பார்த்துச் சரியாக எழுதும்படி சமிக்ஞை செய்கிருர் என்பது என் மூளைக்கு எட்டவில்லை. அவர் என் 'முட்டாள் தன'த்தைக் குறிப்பிடுகிருர் என்பதை மட்டும் அறிந்து கொண்டேன்; ஆனல் அவருடைய தந்திரமும் சமிக்ஞையும் என் விஷயத்தில் அடியோடு பயன்படவில்லை. பிறரைப் பார்த்துக் 'காபி' அடிப்பது என்னல் சாத்தியமாகவில்லை.

இப்படி இருந்துங்கூட, உபாத்தியாயரிடம் வணக்கமாக இருக்க நான் தவறியதில்லை. பெரியோர்களுடைய குற்றங்குறைகளைப் பாராட்டாத குணம் என்னிடம் இயற்கையாகவே இருந்தது. அப்புறம், இந்த உபாத்தியாயருடைய மற்றும் பல குறை

கள் எனக்குத் தெரிந்தன. ஆயினும், அவரிடம் நான் வைத்திருந்த மரியாதை ஸ்திரமாகவே இருந்தது. பெரியோர்களின் கட்டளையை நிறைவேற்றவேண்டும்; அவர்கள் சொற்படி நடக்கவேண்டும்; ஆனால், அவர்களுடைய செயல்களைப்பற்றி நாம் கவனிக்கக் கூடாது என்பதை மட்டுமே நான் அறிந்துகொண்டேன்.

இதே சமயத்தில் இன்னும் இரண்டு சம்பவங்கள் நிகழ்ந்தன. அவை எனக்கு எப்போதும் ஞாபகத்தில் இருந்திருக்கின்றன. சாதாரணமாக என் பாடப் புத்தகங்களைத் தவிர வேறு எதையும் படிப்பதில் எனக்கு ருசி இருந்ததில்லை. 'பாடத்தை நெட்டுருப் போடாவிட்டால் உபாத்தியாயர் கண்டிப்பார். அதைப் பொறுத்துக்கொள்ள முடியாது. 'அவரை ஏமாற்றக்கூடாது' என்ற எண்ணத்தினால் படித்துத் தொலைப்பேன். ஆனால் படிப்பில் மனம் செல்லாது. ஆகையால் அநேகமாகப் பாடம் மறந்துபோகும். இந்த லக்ஷணத்தில் வேறு புஸ்தகங்கள் படிக்க எப்படி மனம் வரும்? ஆனால், ஒரு தடவை, அப்பா வாங்கியிருந்த 'சிரவண பித்ரு பக்தி நாடகம்' என்ற புத்தகத்தின்மீது என் பார்வை சென்றது. மனம் அதைப் படிக்க விரும்பியது. மிகவும் ஆசையோடும் சுவையோடும் அதை நான் படித்தேன். அப்பொழுதெல்லாம் கண்ணாடியில் படம் காண்பிப்பவர்கள் சிலர் எங்கள் வீட்டுக்கு வருவது வழக்கம். அந்தப் படங்களிலே ஒன்றில், சிரவணன் தன பெற்றோரைக் காவடியில் உட்கார வைத்துத் தூக்கிக்கொண்டு, தீர்த்த யாத்திரைக்குச் செல்வதைக் கண்டேன். இவை இரண்டும் என் மனத்தில் நன்றாகப் பதிந்துவிட்டன. நானும் சிரவணனைப்போல ஆகவேண்டும் என்று மனத்தில் தோன்றலாயிற்று. சிரவணன் இறக்கும் சமயத்தில் அவனுடைய தாய்தந்தையர் சோகத்தால் புலம்பியது இப்போதும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. லலிதமான அந்தப் பாட்டை நான் வாத்தியத்தில் வாசிப்பதும் உண்டு. வாத்தியம் வாசிப்பதென்றால் எனக்கு ஆசை; அப்பாவும் ஒரு வாத்தியம் வாங்கிக் கொடுத்திருந்தார்.

இதே சமயத்தில் ஒரு நாடகக் கம்பெனி வந்தது. அந்த நாடகத்தைப் பார்க்க எனக்கு அநுமதி கிடைத்தது. அது அரிச்சந்திர நாடகம். அதைப் பார்த்துப் பார்த்து எனக்குத் திருப்தியே உண்டாகவில்லை. அதைப் பல தடவை பார்க்கவேண்டுமென்று விரும்பினேன்; ஆனால் இப்படி அடிக்கடி என்னை யார் போகவிடுவார்கள்? எது எப்படியாயினும், என் மனத்துக்குள்ளேயே நான் இந்த நாடகத்தை ஆயிரக்கணக்கான தடவை விளையாடியிருப்பேன். அரிச்சந்திரனைப்பற்றிய கனவுகள் தோன்றும். 'அரிச்சந்திர

னைப்போல எல்லோரும் ஏன் சத்தியவாதிகளாக இருக்கலாகாது?' என்ற ஒரு கேள்வியில் ஆழ்ந்தேன். அரிச்சந்திரனைப்போல விபத்துக்களை அநுபவிப்பதும் சத்தியத்தைக் காப்பதுமே உண்மை யான சத்தியம் என்ற கொள்கை ஏற்பட்டது. நாடகத்திற் போலவே உண்மையில் அரிச்சந்திரனுக்கு அந்த விபத்துக்களெல் லாம் வந்திருக்கும் என்றே நான் எண்ணியிருந்தேன். அவனுடைய துன்பங்களைக் கண்டும், அவற்றை ஞாபகப்படுத்திக்கொண்டும் நான் நிரம்ப அழுதிருக்கிறேன். அரிச்சந்திரன் சரித்திர சம்பந்த முள்ள மனிதனாக இல்லாமலிருப்பதும் சாத்தியமே என்று இன்று என் புத்தி கூறுகிறது; ஆனால் என் உள்ளத்திலோ அரிச்சந்திர னும் சிரவணனும் இன்றும் உயிரோடு இருக்கிறார்கள். இன்றைக் குக்கூட நான் அந்த நாடகங்களைப் படித்தால் கண்ணீர் வராமல் இராது என்று நினைக்கிறேன்.

## 3

### உயர்தரப் பள்ளியில்

எனக்குக் கல்யாணமானபொழுது நான் உயர்தரப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். என் அண்ணன்மார் இருவருங்கூட என் னோடு அதே பள்ளியில் படித்துவந்தார்கள். பெரியவர் மிகவும் உயர்ந்த வகுப்பில் இருந்தார். என்னோடு மணமானவர், எனக்கு ஒரு வகுப்பு மேலே இருந்தார். விவாகத்தின் பயனாக எங்கள் இருவருக்கும் ஒரு வருஷம் வீணாகப் போயிற்று. என் தமைய னுக்கோ பின்னும் தீமையே விளைந்தது. மணமான பின்பு அவர் பள்ளிக்கூடத்துக்குப் போகவே முடியவில்லை. கல்யாணத்தினால் எத்தனை இளைஞர்கள் இந்தத் தீமைக்கு ஆளாகிறார்களோ, இறை வனுக்குத்தான் தெரியும்!

நான் மட்டும் விடாமல் படித்தேன். உயர்தரப் பள்ளியில் என்னை யாரும் அசடென்று நினைத்ததில்லை. உபாத்தியாயர்க ளுடைய அன்பை எப்போதும் பெற்றுவந்தேன். மாணவனுடைய படிப்பைப்பற்றியும் நடத்தையைப்பற்றியும் பெற்றோருக்கு ஒவ் வொரு வருஷமும் நற்சாட்சிப் பத்திரங்கள் அனுப்புவதுண்டு. அவற்றில், ஒரு நாளாவது என் படிப்பைப்பற்றியோ நடத்தை யைப்பற்றியோ புகார் இருந்ததில்லை. இரண்டாவது பாரத்துக்கு அப்புறம் எனக்குப் பரிசுகளும் கிடைத்தன; ஐந்தாவது ஆறாவது பாரங்களில் மாதத்துக்கு முறையே நான்கு ரூபாயும் பத்து ரூபா யும் உபகாரச் சம்பளங்கூடப் பெற்றேன். உபகாரச் சம்பளம்

பெறுவதற்கு என் தகுதியைவிட அதிருஷ்டந்தான் அதிகமாக உதவியது. இந்த உபகாரச் சம்பளங்கள் எல்லாப் பிள்ளைகளுக்கும் அல்ல; ஸோரட் பிராந்தியத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கென்றே ஏற்பட்டிருந்தன. அந்தக் காலத்தில், நாற்பது ஐம்பது மாணவர்கள் கொண்ட ஒரு வகுப்பில், ஸோரட்டைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருக்க முடியாது.

என்னைப் பொறுத்தவரையில், நான் என்னை மிக்க தகுதி வாய்ந்தவனாக நினைக்கவில்லை என்றுதான் ஞாபகம். பரிசோ உபகாரச் சம்பளமோ கிடைக்கும்போது எனக்கு ஆச்சரியம் உண்டாகும். ஆனால் ஒன்று: என் நடத்தையில் எனக்கு மிகுந்த கவனம் இருந்தது. ஒழுங்கு தவறி ஏதாவது நடந்துவிட்டால், எனக்கு அழுகை வரும். உபாத்தியாயர் கண்டிக்கும்படியான செயலைச் செய்துவிட்டாலோ, அல்லது அவர் அவ்விதம் நினைத்தாலுங்கூட, என்னால் அதைப் பொறுக்க முடியாது. ஒரு தடவை அடி வாங்கியதுகூட எனக்கு ஞாபகம் இருக்கிறது. அடி வாங்கியதற்காக வருந்தவில்லை; தண்டனைக்கு உரியவனாக என்னைக் கருதும்படியாயிற்றே என்றே நான் பெரிதும் வருத்தப்பட்டேன். தேம்பித் தேம்பி அழுதேன். இந்தச் சம்பவம் நான் முதல் பாரத்திலோ இரண்டாம் பாரத்திலோ படிக்கும்போது நிகழ்ந்தது. அப்போது தோராப்ஜீ ஏதல்ஜீ கீமீ என்பவர் தலைமை உபாத்தியாயராக இருந்தார். அவர் மிகவும் கடுமையாகக் கட்டுப்பாட்டை அநுசரிப்பவர்; ஆயினும் மாணவர்களுக்கு அவரிடம் பிரியம். அவர் திட்டப்படி வேலை செய்வார், வேலை வாங்குவார்; பாடங்களை நன்றாகப் போதிப்பார். அவர் உயர் வகுப்பு மாணவர்களுக்குத் தேகாப்பியாசத்தையும் கிரிக்கெட்டையும் கட்டாயமாக்கியிருந்தார். எனக்கு அதில் பிரியமே இல்லை. கட்டாயம் ஆக்குவதற்கு முன்பு, நான் தேகாப்பியாசம் செய்யவோ, கிரிக்கெட் அல்லது காற்பந்து விளையாடவோ போகவே மாட்டேன். இதற்கு என் சங்கோசமும் ஒரு காரணம். தேகப் பயிற்சியில் நான் கொண்டிருந்த இந்த வெறுப்புத் தவறானது என்று இப்போது எனக்குத் தெரிகிறது. தேகப் பயிற்சிக்கும் படிப்புக்கும் ஒன்றும் சம்பந்தமே இல்லை என்று அப்போது தவறாக எண்ணியிருந்தேன். கல்வியில் மனப்பயிற்சிக்கு எவ்வளவு இடம் தருகிறோமோ, அவ்வளவு இடம் தேகப் பயிற்சிக்கும் இருக்கவேண்டும் என்பதைப் பின்புதான் அறிந்துகொண்டேன்.

இவ்வளவும் இருந்துங்கூட, தேகப் பயிற்சி செய்யாததால் எனக்கு ஒரு நஷ்டமும் உண்டாகவில்லை என்றே சொல்லவேண்

டும். இதற்குக் காரணம் இருக்கிறது. திறந்த வெளியில் உலாவப்போவது நல்லது என்று நான் புத்தகங்களில் படித்திருந்தேன். அது எனக்குப் பிடித்தது. அப்போதிலிருந்தே உலாவப் போவது எனக்குப் பழக்கமாகிவிட்டது. இன்னும் அந்தப் பழக்கம் இருக்கிறது. உலாவுவதும் ஒருவிதமான தேகப்பயிற்சிதான்; ஆதலால் என் சரீரம் ஏதோ கொஞ்சம் வலுப்பெற்றது.

தேகாப்பியாசத்துக்குப் பதிலாக நான் உலாவும் பழக்கத்தை மேற்கொண்டேன்; அதனால் உடலை உழைக்காத குற்றத்துக்காக எனக்கு ஒருவேளை தண்டனை கிடைக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் மற்றொரு பிழைக்கு ஏற்ற தண்டனையை நான் இன்று வரை அநுபவித்து வருகிறேன். கல்விப் பயிற்சி பெற, நல்ல கையெழுத்து இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை என்ற தப்பான எண்ணம் எங்கிருந்துதான் என் மனத்தில் வந்து புகுந்ததோ? இங்கிலாந்துக்குப் போகும் வரையில் அந்த எண்ணம் இருந்தது. கையெழுத்து விகாரமாக இருப்பது, கல்வியில் குறைபாடு இருப்பதற்கு அடையாளம் என்பதைப் பின்பு கண்டேன். ஒவ்வோர் இளைஞனும் யுவதியும் முன் ஜாக்கிரதையோடு, நல்ல கையெழுத்து, கல்விக்கு அவசியமான ஓர் உறுப்பு என்பதை அறிந்துகொள்ளவேண்டும்.

என் பள்ளிப் படிப்பைப்பற்றிய இரண்டு சம்பவங்கள் குறிப்பிடத்தக்கன. நான்காம் பாரத்திலிருந்து சில விஷயங்களை ஆங்கிலத்தில் கற்பிப்பார்கள்; ஆனால் எனக்கு ஆங்கிலத்தில் ஒன்றுமே தெரியாது. ரேகைக் கணிதத்தில் நான் ஏற்கனவே பின்னடைந்தவன்; போதாக்குறைக்கு ஆங்கிலத்தில் படிப்பது எனக்குப் புரியவே இல்லை. உபாத்தியாயர் நன்றாகத்தான் சொல்லிக்கொடுப்பார்; ஆனால் என் அறிவுக்கு ஒன்றுமே எட்டவில்லை. பல தடவை நான் சோர்வடைந்தேன். கஷ்டப்பட்டு ஏதோ ஒருவிதமாக 'யூக்லிட்'டின் பதின்மூன்றாவது பிரமேயம் வரையில் வந்துவிட்ட பின்பு, ரேகைக் கணிதம் மிகவும் சுலபமான விஷயமாக எனக்குத் திடீரென்று பட்டது. நேர்மையாகவும் சுலபமாகவும் அறிவைப் பயன்படுத்திக் கற்கவேண்டிய ஒரு விஷயத்தில் கஷ்டம் என்ன இருக்கிறது? அதற்குப் பின்பு ரேகைக் கணிதம் எனக்குச் சுலபமும் சகஜமுமான விஷயமாகிவிட்டது.

ஸம்ஸ்கிருதந்தான் எனக்கு ரேகைக் கணிதத்தைவிடக் கஷ்டமாக இருந்தது. ரேகைக் கணிதத்தில் உருப்போடவேண்டியது ஒன்றுமில்லை: ஆனால் ஸம்ஸ்கிருதத்தில் என்னைப் பொறுத்த வரையில் எல்லாவற்றையுமே உருப்போடவேண்டித்தான் இருந்

தது. இதுவும் நான்காவது பாரத்தில்தான் ஆரம்பம். ஆருவது பாரத்துக்குச் சென்றதும் என் மனமே உடைந்துபோயிற்று. ஸம்ஸ்கிருத உபாத்தியாயர் மிகவும் கடுமையான ஆசாமி. மாண வர்களுக்கு நிரம்பப் பாடங்களை ஏற்றிவிடுவதில் அவருக்கு ஆசை. ஸம்ஸ்கிருத வகுப்புக்கும் பார்ஸி வகுப்புக்கும் ஒருவகைப் போட்டி இருந்தது. பார்ஸி கற்பிக்கும் மௌல்வி ஸாகப் மிருது வான சுபாவமுள்ளவர். பார்ஸி பாஷை மிகவும் சுலபமென்றும், மௌல்வி ஸாகபும் நல்லவரென்றும் மாணவர்கள் தமக்குள் பேசுவார்கள். மாணவர்கள் எவ்வளவு படிக்கிருர்களோ அதைக் கொண்டே அவர் திருப்தியடைவதாகவும் சொன்னுர்கள். சுலபம் என்பதனுல் மயங்கி, ஒரு நாள் நான் பார்ஸி வகுப்பில் போய் உட்கார்ந்தேன். ஸம்ஸ்கிருத உபாத்தியாயருக்கு இதனுல் வருத்தம் உண்டாயிற்று. அவர் என்னைக் கூப்பிட்டு, "நீ ஒரு வைஷ்ணவரின் புதல்வன் என்பதை நினைத்துப் பார். உன் மதத்துக்குரிய பாஷையை நீ கற்றுக்கொள்ள வேண்டாமா? உனக்கு ஏதாவது கஷ்டமாக இருந்தால் என்னிடம் சொல்லு. எல்லாப் பையன்களுக்கும் நன்ருக ஸம்ஸ்கிருதம் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்பதே என் விருப்பம். போகப் போக, அதில் பல ரஸமான விஷயங்கள் உனக்குத் தென்படும். நீ இவ் விதம் சோர்வடையக் கூடாது. நீ மீண்டும் என் வகுப்புக்கு வந்து உட்காரு" என்ருர்.

நான் வெட்கமடைந்தேன். உபாத்தியாயரின் அன்பை அசட்டை செய்ய முடியவில்லை. இன்று என் ஆத்மா கிருஷ்ண சங்கர பண்டியாவுக்கு நன்றி செலுத்துகிறது; ஏனெனில் அந்தக் காலத்தில் நான் அந்தச் சிறிதளவு ஸம்ஸ்கிருதங்கூடப் படிக்காமலிருந்தேனுயின், இன்று ஸம்ஸ்கிருத சாஸ்திரங் களில் நுகர்ந்துவரும் ஆனந்தத்தைப் பெற முடிந்திராது. நான் அதிகமாக ஸம்ஸ்கிருதம் படிக்க முடியவில்லையே என்ற பச்சாத் தாபம் எனக்கு இருந்துவருகிறது; ஏனெனில், ஒவ்வொரு ஹிந்துச் சிறுவனும் ஸம்ஸ்கிருதத்தில் நல்ல பயிற்சி பெருமலிருக்கலா காது என்பதை நான் போகப் போகத்தான் தெரிந்துகொண்டேன்.

இந்தியாவில் உயர்தரக் கல்விமுறையில், தாய்மொழியோடு கூட, தேசிய பாஷையான ஹிந்தி, ஸம்ஸ்கிருதம், பாரசீகம், அரபி, ஆங்கிலம் ஆகியவற்றிற்கும் இடம் இருக்கவேண்டும் என் பது என் இப்போதைக் கொள்கை. இந்தப் பாஷைகளின் தொகை யைக் கண்டு யாரும் பயந்துபோக வேண்டாம். இந்தப் பாஷை களை முறைப்படி கற்பித்து, எல்லா விஷயங்களையும் ஆங்கிலத்

தின் மூலம் சொல்லிக்கொடுக்கும் பளுவையும் நீக்கிவிட்டால், இவற்றைக் கற்பது சுமையாகத் தோன்ருது. அதற்கு மாருக, இவற்றைப் படிப்பதில் சுவை தோன்றும். அதிலும், ஒரு பாஷையை விதிப்படி கற்றுக்கொண்டவருக்கு மற்றப் பாஷைகள் சுலபமாக வந்துவிடும்.

வாஸ்தவத்தில் ஹிந்தியும், குஜராத்தியும், ஸம்ஸ்கிருதமும் ஒரே பாஷை என்று சொல்லவேண்டும். பார்ஸி பாஷையும் அரபியும் இதே மாதிரிதான். பார்ஸி ஸம்ஸ்கிருதத்தைப் போலவும் அரபி ஹிப்ரு பாஷையைப்போலவும் தோற்றினுலுங்கூட, இரண்டும் இஸ்லாமிய மதம் உதித்த பிறகே பூத்துக் காய்த்துக் கனிந்தனவாதலால், அவற்றிற்குள் நெருங்கிய தொடர்பு உண்டு. உருதுவை நான் தனி மொழியாகவே கருதவில்லை; ஏனெனில் அதன் இலக்கணம் ஹிந்தியோடு சேர்ந்துவிடுகிறது. அதன் சொற்கள் பார்ஸி அரபி பாஷைகளைச் சேர்ந்தவை. குஜராத்தியும் ஹிந்தியும், வங்கமொழியும், மராட்டியும் நன்ருகக் கற்க விரும்புவோருக்கு ஸம்ஸ்கிருதம் தெரிந்திருப்பது அவசியமாக இருப்பது போலவே, நல்ல உருது கற்க விரும்புவோர் அரபியும் பார்ஸியும் தெரிந்துகொள்வது அவசியமாகும்.

## 4

## விவாகமும் புலால் உணவும்

பதின்மூன்ருவது வயசில் எனக்கு விவாகமாயிற்று என்பதை எழுதும்போது என் உள்ளம் மிகவும் துன்புறுகிறது. இன்று நான் என் கண்முன்னுல் பன்னிரண்டு பதின்மூன்று வயசுக் குழந்தைகளைப் பார்க்கிறேன்; என் விவாகத்தைப்பற்றிய ஞாபகம் வரும்போது என்மீதே எனக்கு இரக்கம் தோன்றுகிறது ; 'என்னைப் போன்ற கெட்ட நிலைக்கு ஆளாகாமல் அவர்கள் இதுவரை தப்பியிருக்கிருர்களே' என்பதற்காக அவர்களைப் போற்றவேண்டும் என்ற விருப்பம் உண்டாகிறது. பதின்மூன்ருவது வயசில் நடந்த விவாகத்தைச் சரி என்று ஸ்தாபிக்க, நீதி பொருந்திய எவ்விதத் தர்க்கமும் என் மண்டையில் நுழைய முடியாது. எனக்கு மணமானபோது நான் உயர்தரப்பள்ளியில்தான் படித்துவந்தேன் என்பதை முன்னமே சொல்லியிருக்கிறேன். தற்காலத்து நம் ஹிந்து சமூகத்தில் தான் ஒரு புறம் படிப்பும், மறுபுறம் கல்யாணமும் கூடவே நடக்க முடியும்.

இன்னும் ஒரு துக்ககரமான சம்பவத்தை இங்கு எழுதவேண்டும்: கெட்ட மனிதன் ஒருவனோடு நான் சகவாசம் வைத்துக் கொண்டது. இது என் வாழ்க்கையில் துக்ககரமான ஓர் அத்தியாயம். அந்த ஆசாமியும் என் நடு அண்ணனும் ஏற்கனவே கூட்டாளிகள்; ஒன்றாகப் படித்தவர்கள். அவனுடைய பல துர்க்குணங்கள் எனக்குத் தெரியும்; ஆயினும் அவனை எனக்கு நம்பிக்கையுள்ள தோழனாகக் கருதினேன். என் தாய்க்கும் தமையனாருக்கும் மனைவிக்கும் நான் அவனோடு உறவாடுவது கெடுதலாகப் பட்டது. என் மனைவியின் எச்சரிக்கையை, கர்வங் கொண்ட கணவனாகிய நான் கவனிப்பேனா? அம்மாவின் வார்த்தையை மீறுவதுமட்டும் எனக்குக் கஷ்டமாக இருந்தது. தமையனாரின் பேச்சையும் நான் சரிதான் என்று கேட்டுக்கொள்வேன்; ஆயினும் அவரிடம், "நீங்கள் அவனைப்பற்றிச் சொல்லும் குறைகளெல்லாம் எனக்குத் தெரியும்; ஆனால் அவனுடைய குணங்களை நீங்கள் அறியவில்லை. அவன் திருந்திவிட்டானானால் மிகவும் நல்லவனாகி விடுவான் என்பது என் நம்பிக்கை" என்று சமாதானம் சொன்னேன். இதனால் அவருக்குத் திருப்தி உண்டானதாக எனக்குத் தெரியவில்லை; ஆனால் ஒன்று மட்டும் நடந்தது: அவர் என்மீது நம்பிக்கை வைத்து என் வழியே போகும்படி விட்டுவிட்டார்.

நான் அநுமானித்தது சரியல்ல என்று பின்னால்தான் தெரிந்தது. சீர்திருத்தம் செய்வதற்குங்கூட, மனிதன் ஆழ்நீரில் அமிழ்ந்து விடக்கூடாது. யாரை நாம் சீர்திருத்த விரும்புகிறோமோ அவர்களோடு நட்புக் கொள்ள முடியாது. நட்பில் இரண்டற்ற தன்மை இருக்கும். இத்தகைய நட்பு உலகத்தில் மிகக் குறைவாகவே தென்படும். சமமான குணங்களும் ஒழுக்கங்களும் உள்ளவர்களிடையேதான் நட்புச் சோபிக்கும்; நிலைநிற்கும். நண்பர்கள் ஒருவர் மற்றவர்மீது தம் ஆதிக்கத்தைச் செலுத்தாமல் இருக்க முடியாது. ஆதலால் நட்பில் சீர்திருத்தத்துக்கு இடம் மிகக் குறைவாகவே இருக்கும். வேற்றுமையற்ற நட்பு அபாயகரமானது என்பது என் அபிப்பிராயம்; ஏனெனில், மனிதன் குற்றத்தை விரைவில் கிரகிப்பான். குணத்தைக் கிரகிப்பதற்கு முயற்சி தேவை. ஆத்மாவின் நட்பை - இறைவனுடைய நட்பை - வேண்டுபவன் தன்னந்தனியனாக இருப்பதே ஏற்றது; அப்படி இல்லையென்றால் முழு உலகத்தோடும் நட்புரிமை கொள்வது நலம். இந்த எண்ணங்கள் சரியாகவும் இருக்கலாம்; தவறாகவும் இருக்கலாம். ஆனால், வேற்றுமையற்ற நட்புக்கொள்ளவும் அதை வளர்க்கவும் நான் செய்த முயற்சியெல்லாம் வீணாயிற்று என்பதில் சந்தேகம் இல்லை.

இந்த மனிதனோடு எனக்குத் தொடர்பு ஏற்பட்ட காலத்தில், ராஜகோட்டில் 'சீர்திருத்த' அலை உச்சிநிலையில் எழும்பிக்கொண்டிருந்தது. ஹிந்து உபாத்தியாயர்களில் பலர் மறைவாக மாமிச ஆகாரமும் மதுபானமும் செய்வதாக அவன் தகவல் கொடுத்தான். ராஜகோட்டில் பிரமுகர்களான மற்றும் சிலருடைய பெயர்களையும் இந்த ஜாப்தாவில் சேர்த்தான். உயர்தரப் பள்ளிக்கூடத்து மாணவர்கள் பலருடைய பெயர்கள் எனக்கு எட்டின.

இந்த விஷயத்தை அறிந்ததும் எனக்கு ஆச்சரியமும் கூடவே வருத்தமும் உண்டாயின. நான் இதற்குக் காரணம் கேட்டபோது, எனக்குக் கிடைத்த பதில் வருமாறு: "நாம் புலால் உண்பதில்லை. அதனால்தான் பலவீனர்களாக இருக்கிறோம். ஆங்கிலேயர் நம்மீது ஆட்சி செலுத்துகிறார்களே, இதற்குக் காரணம் அவர்கள் புலால் உண்பதுதான். என் தேகக்கட்டும், வலிமையும், வேகமாக ஓடும் திறனும் உனக்குத் தெரியும். இதற்கெல்லாம் காரணம் நான் மாமிசம் புசிப்பதுதான். புலால் உண்பவனுக்குச் சொறி சிரங்குகள் வரா; அப்படியாக வந்தாலும் விரைவில் குணமாகிவிடும். இதோ பார்: நம் உபாத்தியாயர்கள் மாமிசம் புசிக்கிறார்கள்; இத்தனை பெரிய மனிதர்களெல்லாம் புசிக்கிறார்கள்; ஆய்ந்து ஆராயாமலா அவர்கள் இப்படிச் செய்கிறார்கள்? நீயும் புசிக்கத்தான் வேண்டும். சாப்பிட்டுத்தான் பாரேன்; உன் உடம்பில் எவ்வளவு பலம் ஏறுகிறதென்பது தெரியும்."

இந்தத் தர்க்கங்கள் ஒரே நாளில் சொல்லப்பட்டவை அல்ல. பல உதாரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, எத்தனையோ முறை இவை என்னிடம் வந்தன. என் நடு அண்ணன் ஏற்கனவே அவனுடைய வலையில் சிக்கிக்கொண்டவர். அவரும் அவன் பக்கமாகவே பேசினார். அவர்கள் இருவரையும்விட நான் மெலிந்து பலவீனனாக இருந்தேன். தேகக்கட்டிலும் வலிமையிலும் அவர்கள் என்னை விஞ்சியிருந்தனர். அவர்கள் அச்சமற்றவர்களாக இருந்தனர். அந்த நண்பனுடைய பராக்கிரமங்களைக் கண்டு நான் மோகித்துப்போனேன். அவன் எவ்வளவு வேண்டுமானாலும் ஓடுவான். மிகவும் வேகமாக நடப்பான். மிகவும் நீளமாகவும் உயரவும் குதிப்பான். அடியைப் பொறுத்துக் கொள்ளும் சக்தியும் நிரம்ப இருந்தது. இந்தச் சக்தியை அவன் அவ்வப்போது வெளியே காட்டுவான். தன்னிடம் இல்லாத சாமர்த்தியம் பிறரிடம் இருப்பதைக் கண்டு வியப்பது மனிதனுடைய இயல்பு. நானும் அப்படித்தான் வியந்தேன். வியப்பிலிருந்து ஆவல் பிறந்தது. ஓடிக் குதித்து விளையாடும் சக்தி என

னிடம் இல்லை. 'இவனைப் போல நானும் ஏன் பலசாலியாகக் கூடாது?' என்று மனத்துக்குள்ளே கேட்டுக்கொண்டேன்.

அதனோடு, நான் மிகவும் பயங்கொள்ளியாகவும் இருந்தேன். திருடர், பேய்பிசாசுகள், பாம்பு முதலியவற்றைப் பற்றிய பயம் சதா சர்வகாலமும் என்னைச் சூழ்ந்துகொண்டிருக்கும். இந்தப் பயம் என்னைப் பிடுங்கித் தின்றது. இரவில் எங்கும் தனியே போகத் தைரியம் வராது. இருட்டிலோ எங்குமே போகமாட்டேன். விளக்கு இல்லாமல் அநேகமாகத் தூங்கவே முடியாது. அதோ அந்த இடத்திலிருந்து பேய் பிசாசுகள் வந்துவிடுமோ, இந்தப் பக்கத்திலிருந்து திருடனும் அந்தப் பக்கத்திலிருந்து பாம்பும் நுழைந்துவிடுமோ - என்று எப்போதும் பயம். ஆகையால் கட்டாயம் விளக்கு வைத்துக்கொள்வேன். இந்தப் புறம், என் அருகில் தூங்கும் இளம் வயசினளான மனைவியிடமும் இந்தப் பயங்களைப்பற்றிப் பேசக் கூச்சமாக இருக்கும்; ஏனென்றால், அவள் என்னைவிடத் தைரியசாலி என்பது எனக்குத் தெரியும். அதனால் அவளிடம் பின்னும் அதிகமாக வெட்கப்படுவேன். பாம்பு முதலியவற்றைப்பற்றிய பயம் எப்படி இருக்கும் என்பதே அவளுக்குத் தெரியாது. இருட்டில் தனியாகவே போய் விடுவாள். என்னுடைய இந்தப் பலவீனங்கள் அந்த நண்பனுக்குத் தெரியும். உயிரோடு ஓடும் பாம்புகளைத் தான் கையில் பிடித்துக்கொள்ள முடியும் என்று அவன் என்னிடம் சொல்வான். திருடனிடம் அவனுக்குப் பயமே இல்லை. பேய் பிசாசுகளையோ அவன் நம்புவதே இல்லை. இவை யாவும் அந்த மாமிச உணவின் பிரதாபந்தான் என்பதை அவன் என் மனத்தில் பதிய வைத்துவிட்டான்.

அந்த நாளில், கவி நர்மதருடைய பாட்டு ஒன்றைப் பள்ளியில் பாடுவது உண்டு. "மாமிசம் புசிப்பதனால்தான் ஆங்கிலேயர் கொழுக்கு மழுக்காக இருக்கின்றனர்; நம் மீது ஆட்சி செலுத்துகின்றனர். மாமிசம் புசிக்காத காரணத்தினால்தான் இந்தியர்கள் நடைபிணமாகிக் கிடக்கின்றனர்" என்பது அந்தப் பாட்டின் கருத்து.

இவை எல்லாம் என் மனத்தில் நன்றாகப் பதிந்தன. நான் மாமிசம் புசிக்கச் சம்மதித்தேன். புலால் உண்பது நல்லது; அதனால் நான் பலசாலியாவேன், அச்சமற்றவனாவேன்; நாடு முழுவதுமே மாமிசம் புசிக்கத் தொடங்கினால் ஆங்கிலேயரைத் தோற்கடிக்க முடியும் என்று எண்ணலானேன்.

மாமிசம் புசிக்க ஆரம்பிக்கவேண்டிய நாள் நிச்சயமாயிற்று. ஏகாந்தமான இடத்தைத் தேடி நாங்கள் ஆற்றங்கரைப் பக்கமாகச் சென்றோம். இதற்குக் காரணம்: என் தாய்தந்தையர் வைஷ்ணவர்கள்; நான் அவர்களுடைய பரம பக்தன். நான் மாமிசம் புசித்த தகவல் அவர்களுக்கு எட்டினால், அவர்கள் வருத்தத்துக்கு எல்லையே இராது.

மேலும் சத்தியத்தில் எனக்கு இருந்த அன்பின் காரணமாக, நான் பின்னும் ஜாக்கிரதையோடு இருந்தேன். பெற்றோருக்குத் தெரியாமல் மாமிசம் புசிக்க ஆரம்பித்தால் அது அவர்களை ஏமாற்றியதாகும் என்பதை நான் அப்போது அறிந்திருக்கவில்லை என்று சொல்லமுடியாது. ஆனால், என் மனந்தான் அப்பொழுது 'சீர் திருத்த'த்தில் லயித்திருந்ததே! என் வரைக்கும் அது சுவையைப் பற்றிய பிரச்னை அல்ல. மாமிசம் ருசியாக இருக்குமா இராதா என்பது எனக்குத் தெரியாது. நான் பலமும் பராக்கிரமமும் வாய்ந்தவனாவதற்கு விரும்பினேன்; என் நாட்டினரையும் அவ்வண்ணமே ஆக்க விரும்பினேன். அதனால் அவர்கள் ஆங்கிலேயரைத் தோற்கடித்துப் பாரத நாட்டைச் சுதந்தரமாக்க முடியும் என்று நினைத்தேன். அந்தச் சமயத்தில் நான் 'ஸ்வராஜ்யம்' என்ற சொல்லையே கேட்டதில்லை; ஆனால் விடுதலை என்பது என்ன என்று மட்டும் அறிந்திருந்தேன். இந்தச் 'சீர்திருத்த' வெறி என்னைக் குருடனாக்கிவிட்டது. ரகசியமாக அதைச் செய்துமுடிக்க நல்ல ஏற்பாடு ஆகிவிட்டபோது, ஒரு விஷயத்தைப் பெற்றோரிடமிருந்து மறைப்பது சத்தியத்திலிருந்து விலகுவது ஆகாது என்று வீணாக என் மனத்தைச் சமாதானப்படுத்தினேன்.

கடைசியில் அந்த நாள் வந்துவிட்டது. அன்றைய என் மன நிலையை வர்ணிப்பது சிரமம். 'சீர்திருத்த'த்தில் உற்சாகமும், வாழ்க்கையில் ஒரு புதிய அநுபவத்தைப் பெறப்போகிறோம் என்ற ஆவலும் ஒருபுறம்; மறுபுறம் இவ்வளவு அக்கறையோடு நான் செய்யப்போகும் ஒரு காரியத்தைத் திருடனைப்போல மறைக்க வேண்டியிருக்கிறதே என்ற வெட்கம். இவை இரண்டில் எந்த உணர்ச்சி ஓங்கியிருந்தது என்பதைச் சொல்ல முடியாது. ஆற்றங்கரைப் பக்கமாக வெகு தூரம் சென்றதும், யாரும் திடீரென்று பார்க்க முடியாத ஓர் இடத்துக்கு வந்து சேர்ந்தோம். சமைத்த மாமிசத்தை என் வாழ்க்கையில் முதல் தடவையாக அங்கே கண்டேன். அதனோடு கூடவே, கடையில் வாங்கிய டபிள் ரொட்டியும் வைத்திருந்தது. அவை இரண்டில் ஒரு வஸ்துவும் எனக்குப் பிடிக்கவில்லை. மாமிசம் தோலைப்போல இருந்தது. சாப்பிடவே

முடியவில்லை. எனக்கு வாந்தி வரும்போல இருந்தது. அதை அப்படியே வைத்துவிட்டேன்.

அன்றிரவு எனக்கு மிகவும் கடுமையாக இருந்தது. எவ்விதமும் தூக்கம் வரவில்லை. ஓர் ஆடு என் உடலுக்குள் உயிரோடு இருப்பது போலவும், கனவில் 'பேம் பேம்!' என்று கத்துவது போலவும் தோற்றும். நான் திடுக்கிட்டு எழுந்து, பச்சாத்தாபப் படுவேன். ஆனால், 'மாமிசத்தை விட்டால் வேறு வழி இல்லையே. இப்படித் தைரியத்தை இழக்கக்கூடாது. மாமிசம் புசிப்பது ஒரு கடமை; ஆகவே தைரியத்தைக் கைக்கொள்ள வேண்டும்' என்று மறுபடி எண்ணுவேன்.

# 5

## விழித்துக்கொண்டேன்

என் நண்பன் அத்தனை சுலபமாக என்னை விடுபவனாக இல்லை. அவன் இப்போது மாமிசத்தை விதவிதமாகவும் ருசிகரமாகவும் சமைத்து நன்றாக மூடிவைக்க ஆரம்பித்தான். பிறகு ஆற்றங் கரைக்குப் பதிலாக, ஸம்ஸ்தானத்து மாளிகையொன்றில், அங்கிருந்த சமையற்காரரிடம் பேசி ஏற்பாடு செய்தான். அங்கிருந்த போஜன மண்டபமும் மேஜை நாற்காலிகளுமாகிய வெளிப் பகட்டு என்னை மயக்கிவிட்டது.

இதற்கேற்ற மாறுதலும் என் மனத்தில் உண்டாயிற்று. ஆடுகளிடம் இரக்கங் கொள்வதை விட்டொழித்தேன். மாமிசத்தைப்பற்றிச் சொல்ல முடியாது; ஆனால் இறைச்சி கலந்த பண்டங்களைத் தின்பதில் சுவை தோன்றியது. இவ்வாறு ஒரு வருஷம் கழிந்திருக்கும். இதற்குள் ஐந்தாறு தடவையே இறைச்சி விருந்து நடந்திருக்கும். ஏனெனில், முதலாவது, ஸம்ஸ்தானத்து மாளிகை தினந்தோறும் கிடைக்காது. இரண்டாவது, மிகவும் ருசியுள்ள மாமிச உண்டிகளை நினைத்தபோதெல்லாம் தயாரிக்க முடியாது. அதனோடு இத்தகைய பணியாரங்களுக்குப் பணமும் செலவழிக்க வேண்டியிருந்தது. என்னிடமோ செல்லாக் காசு கூடக் கிடையாது. நான் எதைக் கொடுப்பது? செலவுக்கு ஏற்பாடு செய்வதெல்லாம் அந்த நண்பனின் பொறுப்பாக இருந்தது. அவன் எப்படி அதைச் சமாளித்தான் என்பது இன்றளவும் எனக்குத் தெரியாது. எனக்கு மாமிச உணவில் சுவையை ஊட்டி, என்னைப் பிரஷ்டனாக்கிவிடுவதுதான் அவன் நோக்கம். ஆகவே,

செலவுப் பொறுப்பை அவனே ஏற்றுவந்தான். ஆனால், அவனிடம் கொள்ளக் குறையாத பொக்கிஷம் எதுவும் இருக்கவில்லை; ஆதலால் இத்தகைய விருந்துகள் எப்போதாவதுதான் நடக்கும்.

இவ்விருந்துகளில் கலந்துகொள்ளும் தினங்களில், நான் வீட்டில் சாப்பிட இயலாது. அம்மா சாப்பிடக் கூப்பிடும்போது, "இன்று பசி இல்லை; சாப்பிட்டது ஜீர்ணமாகவில்லை" என்று சாக்குப்போக்குச் சொல்லுவேன். இவ்வாறு சாக்குச் சொல்லும்போதெல்லாம், என் மனத்தில் ஆழ்ந்த வருத்தம் உண்டாகும். 'இத்தனை பொய்யா, அதுவும் தாயின் முன்னால்!' என்று நினைப்பேன். நான் மாமிசம் புசிப்பது பெற்றோருக்குத் தெரிந்துவிட்டால், அவர்களுக்கு அது இடி விழுந்தாற்போல இருக்குமே என்ற எண்ணம் ஒவ்வொரு கணமும் என் இருதயத்தை அரித்துக்கொண்டிருந்தது.

ஆகவே, "மாமிசம் புசிப்பது அவசியந்தான்; அதைப் பரப்பி இந்தியாவைச் சீர்திருத்துவதும் அவசியமே. ஆனால் பெற்றோரை ஏமாற்றுவதும் பொய் சொல்வதும் மாமிசம் புசிக்காமலிருப்பதை விடத் தீயவை. ஆதலால் தாயும் தந்தையும் உயிரோடு இருக்கும் வரையில் புலால் உண்ணக்கூடாது. அவர்கள் காலத்துக்குப் பிறகு, நான் சுதந்தரமடைந்ததும், வெளிப்படையாகப் புலால் உண்ணவேண்டும். அந்தச் சமயம் வரும்வரையில், மாமிசத்தின் வழிக்கே போகக்கூடாது" என்று நான் தீர்மானித்தேன். இந்த முடிவை என் நண்பனுக்குத் தெரிவித்தேன். அன்றோடு மாமிச உண்டி என்னை விட்டு ஒழிந்தது. நானும் என் தமையனும் மாமிசம் புசித்துவந்த செய்தி என் பெற்றோர்களுக்குத் தெரியவே தெரியாது.

பெற்றோர்களை ஏமாற்றக்கூடாது என்ற நல்லெண்ணத்தினால் நான் மாமிசம் உண்பதை விட்டொழித்தேன்; ஆனால் அந்த நண்பனின் நட்பை விடவில்லை. பிறரைச் சீர்திருத்த முன்வந்த நான், என்னை நானே கெடுத்துக்கொண்டேன்; அதுவும், நான் கெட்டுப்போகிறேன் என்ற உணர்வுகூட இல்லாமல்.

அவனுடைய நட்பினால் நான் விபசாரத்திலும் சிக்கியிருப்பேன்; ஆனால் மயிரிழையில் தப்பித்துக்கொண்டேன். ஒரு தடவை அவன் என்னை ஒரு விபசார விடுதிக்கு அழைத்துச் சென்றான். நான் வீட்டுக்குள்ளே போனேன்; ஆயினும் கடவுளின் அருளினால் தப்பினேன். ஆனால், இவ்வளவான பின்பும், நான் விழித்துக் கொள்ளவில்லை. இந்த நண்பனோடு சகவாசம்

வைத்துக்கொள்வது கொடுமை என்று அப்போதுங்கூட எனக்குத் தோன்றவில்லை. இன்னும் பல கசப்பான அநுபவங்கள் ஏற்பட வேண்டியது பாக்கியாக இருந்தது. நான் மனத்தில்கூட எண்ணிப் பார்க்காத தோஷங்களெல்லாம் அவனிடம் இருப்பதை நேரில் கண்டு உணர்ந்தபின்புதான், இது எனக்குத் தெரிந்தது.

இதே சமயத்தில் நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்லியாக வேண்டும். எனக்கும் என் மனைவிக்குமிடையே பல தடவை அபிப்பிராய பேதங்களும் மனஸ்தாபங்களும் ஏற்பட்டுவந்தன. அவற்றிற்குக் காரணமும் இந்த நட்புதான். நான் காதல் மிகுந்த கணவனாக இருந்ததுபோலவே சந்தேகங்கொள்ளும் கணவனாகவும் இருந்தேன். இந்த நட்பு என் சந்தேகத்தை வளர்த்துவந்தது; நண்பனுடைய நாணயத்தில் எனக்கு அடியோடு அவநம்பிக்கையே இல்லாதிருந்ததுதான் காரணம். இந்த நண்பனின் பேச்சை நம்பி, என் மனைவியைப் பல தடவை துன்புறுத்தியிருக்கிறேன். இந்த ஹிம்ஸைச் செயலுக்காக என்னை நான் என்றும் மன்னித்ததில்லை. ஹிந்துப் பெண்தான் இத்தகைய துன்பங்களைச் சகித்துக் கொண்டு இருக்க முடியும். இதனால்தான் நான் எப்போதுமே பெண்ணைப் பொறுமையின் வடிவமென்று கருதிவந்திருக்கிறேன். வேலைக்காரர்களின்மீது தவறான சந்தேகங்கள் கொண்டால் அவர்கள் வேலையை உதறிவிட்டுப் போய்விடுகிறார்கள்; மகன்மீது சந்தேகம் கொண்டால், அவன் தகப்பனின் வீட்டை விட்டுப் போய்விடுகிறான்; நண்பர்களுக்குள்ளே சந்தேகம் விழுந்துவிட்டால் நட்பு முறிந்துபோகிறது, மனைவிக்குத் தன் கணவனிடம் சந்தேகம் இருந்தால், அவள் பாவம், மனத்துக்குள்ளேயே புழுங்குகிறாள்; வாயைத் திறப்பதில்லை; ஆனால், கணவனுக்கு மனைவியிடம் சந்தேகம் விழுந்துவிட்டாலோ, அவள் எல்லா வேதனைகளையும் அநுபவித்துத்தான் தீரவேண்டும். அவளுக்கும் போக்கிடம் ஏது? உயர்வகுப்பைச் சேர்ந்த ஹிந்து மனைவி, கோர்ட்டுக்குச் சென்று விவாகரத்துகூடச் செய்ய முடியாது. இத்தகைய ஒருதலைப்பக்ஷமான நியாயந்தான் அவளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நியாயத்தோடுதான் நான் என் மனைவியிடம் நடந்துகொண்டேன். இந்தத் துன்பச் சம்பவத்தை நான் என்றும் மறக்கமுடியாது.

அஹிம்ஸையின் தத்துவத்தை நான் ஸூக்ஷ்மமாக அறிந்து கொண்டபின்புதான் இந்தச் சந்தேகம் என்னை விட்டு அறவே ஒழிந்தது. அதாவது, அப்போது நான் பிரம்மசரியத்தின் மகிமையை அறிந்தேன். மனைவி கணவனுக்கு அடிமையல்ல;

அவனுடைய வாழ்க்கைத் துணைவி; இருவரும் ஒருவர் மற்ற வருடைய சுகதுக்கங்களில் சமமான பங்கு கொண்டவர்கள்; கணவனுக்கு நன்மைதீமைகளைச் செய்ய எவ்வளவு சுதந்தரம் உண்டோ அவ்வளவு சுதந்திரம் மனைவிக்கும் உண்டு என்பதை அறிந்தேன். நான் மனைவிமீது சந்தேகங்கொண்ட இந்த நாட்கள் ஞாபகத்துக்கு வரும்போதெல்லாம், என் முட்டாள்தனத்தையும் சிற்றின்பப் பற்றினால் குருடனாகிக் கொடுமையாக நடந்து கொண்டதையும் நினைந்து என்மீதே கோபங்கொள்கிறேன்; நண்பனிடம் நான் கொண்டிருந்த மோகத்தை நினைந்து இரங்குகிறேன்.

## 6

## திருட்டும் பிராயச்சித்தமும்

மாமிசம் புசித்த காலத்திலும் அதற்கு முன்பும் என்னிடம் இருந்த சில குறைபாடுகளை விரித்துக் கூறவேண்டியது இன்னும் பாக்கியாகவே இருக்கிறது. அவை என் விவாகத்துக்கு முன்போ அல்லது அது ஆனவுடனேயோ நிகழ்ந்தவை.

என் உறவினர் ஒருவரோடு எனக்கும் சிகரெட் குடிக்கும் பழக்கம் ஏற்பட்டது. எங்களிடம் பணமே கிடையாது. சிகரெட் குடிப்பதில் ஏதாவது பயன் இருப்பதாகவோ அல்லது அதன் நாற்றத்தில் ஏதாவது சுவை இருப்பதாகவோ நாங்கள் நினைக்கவில்லை. ஆனால், புகையைச் சுருள் சுருளாக வாயிலிருந்து விடுவதில் ஏதோ ஒருவகை ஆனந்தம் இருப்பதாக மட்டும் அறிந்து கொண்டோம். என் சிற்றப்பா சிகரெட் குடிப்பதுண்டு. அவரும் இன்னும் பலரும் காற்றில் புகை மண்டலத்தை விடுவதைக் கண்டு எங்களுக்கும் குடிக்கவேண்டுமென்ற எண்ணம் உண்டாகும். எங்களிடத்தில் பணம் இல்லாததால், சிற்றப்பா எறிந்துவிடும் சிகரெட் துண்டுகளைத் திருடிப் புகைக்க ஆரம்பித்தோம்.

ஆனால் இந்தத் துண்டுகளுங்கூட வேண்டியபோதெல்லாம் கிடைப்பதில்லை. மேலும், அவற்றில் புகையும் அதிகமாக வருவதில்லை. ஆகவே நாங்கள் வீட்டு வேலைக்காரர்களின் பணத்திலிருந்து காலணா அரையணாவாகத் திருடிப் புகைக்கலானோம். ஆனால், அவற்றை எங்கே வைப்பது என்பதுதான் சங்கடமாக இருந்தது. பெரியவர்களின் முன்னிலையில் சிகரெட் குடிக்க முடியாது என்பதுதான் தெரியுமே. ஏதோ ஒருவிதமாகத் திருட்டுக் காசைக் கொண்டே சில வாரங்கள் கழித்தோம். இதற்

இடையில், ஏதோ ஒருவிதச் செடியின் (அதன் பெயர் மறந்து போயிற்று) தண்டு பீடியைப்போலப் பற்றும் என்றும், அதைப் புகைக்க முடியும் என்றும் தகவல் கிடைத்தது. நாங்கள் அந்தச் செடியின் தண்டுகளைக் கொண்டுவந்து, புகை பிடிக்கலானோம்.

ஆனால் இதனாலெல்லாம் எங்களுக்குத் திருப்தி உண்டாக வில்லை. சுதந்தரமாக ஒன்றும் செய்ய முடியாமல் இருப்பது எங்களுக்குச் சங்கடமாக இருந்தது. பெரியவர்களின் உத்தரவு இல்லாமல் ஒன்றுமே செய்ய முடியாதிருந்த நிலைமையை நாளாக ஆக எங்களால் பொறுக்கவே முடியவில்லை. கடைசியில் வாழ்வில் வெறுப்படைந்து, நாங்கள் தற்கொலை செய்துகொள்ளத் தீர் மானித்தோம்.

ஆனால் தற்கொலை செய்துகொள்வது எப்படி? விஷம் எங் கிருந்து கொண்டுவருவது? ஊமத்தை விதையைச் சாப்பிட்டால் மனிதன் இறந்துவிடுவான் என்று நாங்கள் கேள்வியுற்றிருந் தோம். காட்டில் தேடித் திரிந்து அவ்விதைகளைக் கொண்டுவந் தோம். சாயங்காலந்தான் சரியான வேளை என்று தீர்மானித் தோம். கேதாரநாதரின் கோயிலுக்குச் சென்று விளக்கில் நெய் ஊற்றிவிட்டுத் தரிசனம் செய்தோம். பிறகு தனிமையான இடத்தைத் தேடிச் சென்றோம். ஆனால் விஷத்தைச் சாப்பிட எங்களுக்குத் தைரியம் வரவில்லை. 'உடனே சாவு வராவிட்டால்? அப்படிச் சாவதால் லாபந்தான் என்ன? பராதீனத்திலேயே விழுந்துகிடந்தால்தான் என்ன?' - இத்தகைய எண்ணங்கள் மனத்தில் தோன்றலாயின, இரண்டு மூன்று விதைகளை விழுங்க வும் விழுங்கினோம்; ஆனால் அதற்குமேல் தின்னத் துணிவு உண்டாகவில்லை.மரணத்தை நினைந்து நாங்கள் பயந்துவிட்டோம். ராமர் கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்து அமைதியாக இருப்பதென்றும், தற்கொலை எண்ணத்தை மனத்தினின்று நீக்கி விடுவதென்றும் நிச்சயித்தோம்.

தற்கொலை செய்துகொள்ள நினைப்பது சுலபம்; ஆனால் தற் கொலை செய்துகொள்வது சுலபமல்ல என்பதை அப்போது அறிந்துகொண்டேன். ஆதலால்தான், தற்கொலை செய்துகொள் வதாக யாராவது என்னிடம் பயமுறுத்தினால், அதனால் நான் அவ்வளவாக அசைவதில்லை; அவ்வளவேன், கொஞ்சமும் அசைவ தில்லை என்றே சொல்லலாம்.

இந்தத் தற்கொலை எண்ணத்தின் பயனாக, சிகரெட் துண்டு களைப் புகை பிடிக்கும் வழக்கத்தையும், வேலைக்காரனின் பணத்தைத் திருடி அதற்குச் சிகரெட் வாங்கிக் குடிக்கும்

வழக்கத்தையும் நாங்கள் விட்டொழித்தோம். பெரியவனானபின்பு, எனக்குச் சிகரெட் பிடிக்கும் எண்ணமே உண்டானதில்லை. நான் இந்தப் பழக்கத்தை எப்பொழுதுமே அநாகரிகமானதென்றும் தீமை பயப்பதென்றும் அசங்கியமானதென்றுமே கருதிவந்திருக்கிறேன். ஆனால் உலகத்தில் சிகரெட் பிடிக்கும் ஆசை ஏன் இவ்வளவு தீவிரமாக இருக்கிறது என்பது இன்னமும் எனக்குப் புரியவே இல்லை. ரெயிலில் சுருட்டுக் குடித்துக்கொண்டிருப்பவர்கள் அதிகமாக உள்ள வண்டியில் உட்காருவது எனக்குச் சிரமமாகிவிடுகிறது; அந்தப் புகையினால் எனக்கு மூச்சுத் திணறிப்போகிறது.

சிகரெட் துண்டுகளைத் திருடுவது, புகைப்பதற்காக வேலைக்காரனின் காசைத் திருடுவது - இவற்றைவிடப் பெரிய திருட்டுக் குற்றமொன்றை நான் செய்திருக்கிறேன். இவற்றைவிட அது கெடுதலானது என்று நான் நினைக்கிறேன். சிகரெட் குடிக்கும் பழக்கம் ஏற்பட்டபோது எனக்குப் பன்னிரண்டு பதின்மூன்று வயசு இருக்கும்; ஒருகால் இதைவிடக் குறைவாகவும் இருக்கலாம். இந்தத் திருட்டின்போது எனக்குப் பதினைந்து வயசு இருக்கும். புலால் உண்ட என் தமையனாரின் கைக்காப்பிலிருந்து நான் ஒரு துண்டு தங்கம் திருடினேன். அவர் சுமார் இருபத்தைந்து ரூபாய் வரையில் கடன்பட்டிருந்தார். அவர் கையில் தங்கத்தாலான கெட்டிக்காப்பு இருந்தது. அதிலிருந்து ஒரு தோலா தங்கம் வெட்டி எடுப்பது கடினமல்ல.

தங்கத்தை வெட்டி எடுத்துக் கடனைத் தீர்த்தேன்; ஆனால் இந்தக் குற்றத்தை என்னால் பொறுக்க முடியவில்லை. இனிமேல் திருடுவதில்லை என்று உறுதி கொண்டேன். தந்தையின் முன்னால் சென்று திருட்டை ஒப்புக்கொண்டுவிடுவதென்று எண்ணினேன்; ஆனால் அவர் முன்னால் வாயைத் திறப்பதே கஷ்டம். தந்தை என்னை அடிப்பாரே என்ற பயமில்லை; அவர் எங்களில் எவரையும் ஒரு முறையாவது அடித்திருப்பதாக எனக்கு ஞாபகமில்லை. ஆனால் அவர் தம் மனத்துக்குள்ளாகவே பெரிதும் வருந்துவாரே; ஒருகால் தலையிலும் அடித்துக்கொள்வாரே என்பதுதான் என் தயக்கத்துக்குக் காரணம். ஆயினும் நான் மனத்துக்குள்ளே, 'இந்த ஆபத்தை ஏற்றுக்கொண்டாவது, நாம் செய்த தீச்செயலை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்; இப்படிச் செய்தாலன்றிப் பாவம் தீராது' என்று சொல்லிக்கொண்டேன்.

கடைசியில், ஒரு கடிதம் எழுதி என் குற்றத்தை ஒப்புக்கொண்டுவிடுவதென்று தீர்மானித்தேன். அவ்வாறே கடிதம்

எழுதி நேரிலே அவரிடம் கொடுத்தேன். அந்தக் கடிதத்தில் என் குற்றங்களை எல்லாம் ஒப்புக்கொண்டு தக்க தண்டனை அளிக்கும்படியும் வேண்டியிருந்தேன். இதற்காக எவ்விதத்திலும் தாங்கள் துன்புறலாகாது என்று வணக்கத்துடன் கேட்டுக் கொண்டிருந்தேன். இனி எப்போதும் இப்படிச் செய்வதில்லை என்று பிரதிக்ஞையும் செய்திருந்தேன்.

தந்தையிடம் கடிதத்தைக் கொடுக்கும்பொழுது என் கைகால்கள் நடுங்கின. அப்போது அவர் பௌத்திர நோயினால் பீடிக்கப்பட்டு, படுத்த படுக்கையாக இருந்தார். மரப்பலகைகளின்மீது அவர் படுக்கை போட்டிருந்தது. அவர் எதிரில் சென்று உட்கார்ந்துவிட்டேன்.

அவர் கடிதத்தைப் படித்தார். கண்களிலிருந்து முத்துத் துளிகள் சிந்தின. கடிதம் நனைந்துவிட்டது. சிறிது நேரம் அவர் கண்களை மூடிக்கொண்டிருந்தார்; பிறகு கடிதத்தைக் கிழித்துப் போட்டார். கடிதத்தைப் படிக்க எழுந்து உட்கார்ந்திருந்தவர் மீண்டும் படுத்துக்கொண்டார்.

நானும் அழுதேன். தந்தையின் மனத் துன்பத்தை நான் உணர்ந்தேன். நான் ஒரு சித்திரகாரனாக இருந்தேனாயின், இன்று அந்தச் சித்திரத்தைத் தத்ரூபமாக வரைந்திருப்பேன். இன்றும் என் கண்முன்பு அந்தக் காட்சி அவ்வளவு தெளிவாகத் தென்படுகிறது.

இந்த முத்துத் துளியாகிய அன்புக் கணை என் இருதயத்தில் வந்து எய்தது. நான் அதற்குக் கட்டுப்பட்டேன். இத்தகைய அன்பை அநுபவித்தவர்களுக்குத்தான் இதன் உயர்வு தெரியும். அன்புக் கணையினால் எய்யப் பெற்றவன்தான் அதன் ஆற்றலை அறிவான்.'

எனக்கு இது அஹிம்சையின் உதாரண பாடமாக இருந்தது. அந்தக் காலத்தில் தந்தையின் அன்பைத் தவிர இதில் வேறு ஒன்றும் எனக்குத் தென்படவில்லை. ஆனால் இன்று நான் அதைத் தூய அஹிம்சை என்றே அறிந்திருக்கிறேன். இத்தகைய அஹிம்சை உலகமெலாம் பரவும் உருவத்தை ஏற்கும்போது அதன் பிடியிலிருந்து யார் தப்ப முடியும்? உலகனைத்தையும் தழுவும் இத்தகைய அஹிம்சையின் ஆற்றலை அளந்து கூறவே முடியாது.

இவ்விதம் அமைதியமான மன்னிப்பும் கிடைத்தது. தந்தையின் இயல்பான குணத்துக்கு மாறானது. அவர் கோபங்கொண்டு கடுஞ்சொல் கூறுவாரென்றும், ஒருவேளை தலையிலும் அடித்துக்

கொள்ளக் கூடுமென்றும் நினைத்திருந்தேன். ஆனால், அவர் எல்லையற்ற சாந்த குணத்தை வெளிப்படுத்தினார். தூய உள்ளத்தோடு குற்றத்தை ஒப்புக்கொண்டதன் விளைவே இது என்று நான் கருதுகிறேன். மன்னிப்பதற்கு உரியவரிடம் தானே தன் இஷ்டமாகச் சென்று, தூய உள்ளத்தோடு தன் குற்றத்தைக் கூறி, இனி அப்படிச் செய்வதில்லை என்று பிரதிக்ஞை செய்பவன்தான் மிகத் தூய பிராயச்சித்தத்தைச் செய்தவனாகிறான். இவ்விதம் நான் என் குற்றத்தை ஒப்புக்கொண்டதனால், என்னைப்பற்றி என் தந்தைக்குக் கவலையே இல்லாமற் போயிற்று. என்னிடம் அவர் கொண்டிருந்த அன்பு பின்னும் அதிகமாக வளர்ந்தது.

## 7

## சத்திய தரிசனம்

ராஜகோட்டில், எல்லா மத சம்பிரதாயங்களையும் சமமாகக் கருதும் பயிற்சி எனக்கு அநாயாசமாகக் கிடைத்தது. ஹிந்து தர்மத்தின் ஒவ்வொரு சம்பிரதாயத்திலும் மரியாதை வைக்கக் கற்றுக்கொண்டேன். என் பெற்றோர் சிவன் கோயிலுக்கும் போவார்கள்; ராமன் கோயிலுக்கும் போவார்கள். எங்களையும் அங்கே அழைத்துப் போவார்கள்; அல்லது அனுப்புவார்கள்.

அதனோடு, என் தந்தையிடம் ஜைன தர்மாசாரியர்கள் ஒருவர் மாற்றி ஒருவர் யாராவது கட்டாயம் வந்த வண்ணமாக இருப்பார்கள். அப்பா அவர்களுக்கு மத சம்பந்தமான போதனைகளைக் கூறி, அதிதி சத்காரமும் மரியாதையும் செய்வார். அவர்கள் அவரோடு மத சம்பந்தமாகவும் உலக விஷயங்களைப்பற்றியும் பேசுவார்கள். இதைத் தவிர, அவருக்கு முகம்மதிய நண்பர்களும் பார்ஸி நண்பர்களுங்கூட இருந்தார்கள். எத்தனையோ தடவை அவர்கள் தத்தம் மத விஷயங்களைப்பற்றிப் பேசுவார்கள். அப்பா மிகவும் ஆதரமும் அன்புங்கொண்டு அவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருப்பார். நான் அவருக்கு 'நர்ஸா'க இருந்தேன்; ஆதலால் இவ்விதச் சம்பாஷணைகள் நிகழும் சமயத்தில் அநேகமாக நானும் அவரோடு இருப்பேன். இந்தச் சூழ்நிலைகளின் பயனாக, எல்லா மதங்களையும் சமமாகப் பார்க்கும் தன்மை எனக்கு உண்டாயிற்று.

இவ்விதமாகப் பிற மதங்கள் விஷயத்தில் சமத்துவம் உண்டானபோதிலுங்கூட, அந்தச் சமயத்தில் கடவுள் விஷயமாக என் மனத்தில் கொஞ்சமாவது நம்பிக்கை இருந்தது என்று சொல்ல

முடியாது. ஆயினும், ஒரு விஷயம் மட்டும் என் மனத்தில் நன்ருக வேரூன்றிவிட்டது. அதாவது, உலகப் படைப்பு நீதிநெறியையே அஸ்திவாரமாகக்கொண்டு நிலைநிற்கிறது; எந்தவிதமான நீதியும் சத்தியத்தில் அடங்கிவிடுகிறது என்பதே. ஆனுல் சத்திய சோதனை இன்னமும் முடிந்த பாடில்லை. நாளுக்கு நாள் சத்தியத்தின் மகிமை என் பார்வையில் மேலோங்கிக்கொண்டே போயிற்று ; சத்தியத்தைப்பற்றிய வியாக்கியானம் விரிந்து கொண்டே போயிற்று ; இன்னமும் விரிந்துகொண்டே இருக்கிறது.

நன்னெறியை விரிக்கும் ஒரு குஜராத்திப் பாட்டு அப்போது என் உள்ளத்தில் அப்படியே பதிந்துவிட்டது. 'அபகாரத்துக்கு மாற்று அபகாரமல்ல; உபகாரம் செய்வதேயாம்' என்ற கருத்து என் வாழ்க்கைச் சூத்திரமாக அமைந்துவிட்டது. அது தன் சக்தியையெல்லாம் என்னிடம் செலுத்த ஆரம்பித்தது. அபகாரம் செய்பவனுக்கு நன்மையை விரும்புவதோ, செய்வதோ எனக்குப் பிடித்துப்போன விஷயமாயிற்று. அதில் நான் எண்ணிலாத சோதனைகள் செய்தேன். அந்த அற்புதமான பாட்டின் வரிகள் இவையே :

"உனக்கு நீர்மோர் கொடுத்தவனுக்கு வயிறுநிறைய உணவு அளி ;
புன்சிரிப்போடு வரவேற்பவனை அன்போடு சாஷ்டாங்கமாக வணங்கு ;
ஒரு தம்படி கொடுத்து உதவியவனுக்குத் தங்க நாணயங்களாகக் கொடு ;
உன் துன்பத்தில் சகாயம் செய்தவனுக்கு உயிரையும் கொடுக்கத் துணி ;
ஒரு நன்மைக்குப் பதில் பத்து மடங்கு நன்மை செய்வதே உன் தர்மம் ;
தீமைக்குப் பதிலாக நன்மை செய்பவர்களே உண்மையில் உலகில் வாழ்பவர்கள்."

# 8

## மூன்று பிரதிக்ஞைகள்

**1887**-ஆம் வருஷம் நான் மெட்ரிகுலேஷனில் தேர்ச்சி பெற்றேன். அப்போது பம்பாய், அஹமதாபாத் ஆகிய இரண்டும் பரீக்ஷை ஸ்தலங்கள். நாட்டின் வறுமையினுலும், குடும்பத்துப் பணநிலை மிகவும் சாதாரணமாக இருந்ததனுலும், என்னைப்போன்ற காட்டியாவாட்காரன் சமீபத்தில் மட்டுச் செலவுள்ள அஹமதாபாத்துக்குச் செல்ல விரும்புவது இயல்பாக இருந்தது. அப்போது தான் நான் முதல் தடவையாகத் தனியே ராஜகோட்டிலிருந்து அஹமதாபாத்துக்குப் பிரயாணம் செய்தேன்.

இனி நான் காலேஜில் மேலே படிக்கவேண்டும் என்பது வீட்டுப் பெரியவர்களின் விருப்பம். காலேஜ் பம்பாயில் இருந்தது; பாவநகரிலும் ஒன்று இருந்தது. ஆனால், பாவநகரில் செலவு குறைவு. ஆதலால் சாமல்தாஸ் காலேஜில் படிப்பதென்று நிச்சயமாயிற்று. அங்கே எதைப் பார்த்தாலும் எனக்குக் கஷ்டமாகத் தோன்றியது. ஆசிரியர்களின் உபந்நியாசங்களில் மனம் செல்லவே இல்லை; ஒன்றும் புரியவும் இல்லை. அது அவர்களுடைய குற்றமல்ல; என் படிப்பே அவ்வளவு மோசமாக இருந்தது. இன்னும் கேட்டால், அந்தக் காலத்தில் சாமல்தாஸ் காலேஜில் இருந்த ஆசிரியர்கள் முதல்தரமானவர்களென்று பெயர் வாங்கியவர்கள். முதல் வருஷப் படிப்பை முடித்துவிட்டு, நான் வீடு வந்துசேர்ந்தேன்.

எங்கள் குடும்பத்தின் நண்பரும் ஆலோசனையாளருமான மாவ்ஜி தவே என்னும் பிராம்மணர் மிகுந்த கல்வியறிவும் உலக விவகாரத்தில் தேர்ச்சியும் படைத்தவர். ஜோஷீஜி என்று நாங்கள் அவரைக் கூப்பிடுவது வழக்கம். "இப்போது காலம் மாறிவிட்டது. உங்கள் அண்ணன் தம்பிகளில் யாராவது கபா காந்தியின் பதவியை நிலைநாட்ட விரும்பினால், அது படிப்பு இல்லாமல் முடியாது. என் யோசனை, நீங்கள் இந்த வருஷமே மோகன்தாஸைச் சீமைக்கு அனுப்பிவிடவேண்டும். அங்கே மூன்று வருஷகாலம் இருந்து அவன் பாரிஸ்டராகிவிடுவான்" என்று அவர் ஆலோசனை கூறினார். பிறகு என்பக்கமாகத் திரும்பி, "என்ன, உனக்குச் சீமைக்குப் போக இஷ்டமா அல்லது இங்கே படிக்க இஷ்டமா?" என்று கேட்டார்.

இந்தக் கேள்வி எனக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல இருந்தது. காலேஜ் தொந்தரவுகளினால் நான் ஏற்கனவே சலிப்பெய்தி யிருந்தேன். "சீமைக்கு அனுப்பினால் மிகவும் நல்லது" என்று பதில் சொன்னேன். ஆனால் என் தமையனார் சிந்தையில் ஆழ்ந்தார். பணத்துக்கு என்ன ஏற்பாடு செய்வது? மேலும், இவ்வளவு சிறுவயசில் அத்தனை தூரம் என்னை எப்படி அனுப்புவது?

தாயாருக்கும் மிகவும் சங்கடமாக இருந்தது. என்னை அவ்வளவு தூரம் அனுப்புவது அவருக்குப் பிடிக்கவில்லை. சீமை வாழ்க்கையைப்பற்றி அவர் தகவல்கள் விசாரிக்கலானார். இளைஞர்கள் சீமைக்குப் போய்க் கெட்டுப் போகிறார்கள் என்று ஒருவர் சொன்னார். அங்கே போய் அவர்கள் மாமிசம் புசிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள் என்றார் இன்னொருவர். அங்கே மதுபானம்

செய்யாமல் இருக்கவே முடியாது என்றார் இன்னுமொருவர். அன்னையார் இவற்றையெல்லாம் என்னிடம் சொன்னார். "அம்மா, நீ என்னை நம்பு; நான் நம்பிக்கைத் துரோகம் செய்யமாட்டேன். இந்த மூன்று விஷயங்களினின்றும் விலகியிருப்பதாக நான் பிரதிக்கினை செய்கிறேன். மேலும், அவ்வளவு ஆபத்துக்கு இடம் இருந்தால், ஜோசிஜி என்னைப் போகச் சொல்வாரா?" என்று கூறி, அவரைத் தேற்றினேன்.

"எனக்கு உன்னிடம் நம்பிக்கை உண்டு; ஆனால் தூரதேசத்தில் நீ என்ன செய்வாய்? எப்படி இருப்பாய்? எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. நான் பேசர்ஜி ஸ்வாமியைக் கேட்டுச் சொல்கிறேன்" என்றார் தாயார்.

பேசர்ஜி ஸ்வாமி என்பவர் பனியா ஜாதியில் பிறந்தவர்; இப்போது ஜைன சாதுவாகி யிருந்தார். ஜோசிஜியைப்போலவே அவரும் எங்களுக்கு வேண்டியவர். அவர் எனக்கு உதவி செய்தார். "நான் இவனிடமிருந்து மூன்று பிரதிக்கினைகள் வாங்கிக் கொள்கிறேன். பிறகு இவனை அனுப்புவதில் எவ்வித ஆக்ஷேபமும் இல்லை" என்று அவர் கூறினார். அவர் சொன்னபடியே நான் மாமிசம், மதுபானம், மாதர் இன்பம் இவற்றை நாடுவதில்லை என்று பிரதிக்கினை செய்தேன். பிறகு என் தாயார் அநுமதி அளித்தார்.

நான் சீமைக்குப் போவதை முன்னிட்டு, என்னை வாழ்த்தி அனுப்ப உயர்தரப் பள்ளியில் மாணவர்களின் கூட்டமொன்று நடந்தது. ராஜகோட்டிலிருந்து ஓர் இளைஞன் சீமைக்குப் போகிறான் என்பது எல்லோருக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்தது. நான் வாழ்த்துக்குப் பதில் சொல்ல, ஏதோ எழுதி எடுத்துக் கொண்டு போயிருந்தேன். ஆனால் அதைப் படிப்பதற்குள் என் பாடு போதும் போதுமென்றாகிவிட்டது. தலை சுற்றியது; உடல் நடுங்கியது - இவ்வளவுதான் எனக்கு ஞாபகம் இருக்கிறது.

## 9

## முதல் அநுபவம்

**1888**-ஆம் வருஷம் ஸெப்டம்பர்மீ 4வ நான் பம்பாய்த் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டேன். கப்பல் பிரயாணத்தினால் எனக்கு எவ்விதத் தொந்தரவும் உண்டாகவில்லை. ஆனால் நாள் செல்லச் செல்ல, எனக்கு அலுப்புத் தட்டியது. ஆங்கிலத்தில் பேசும் பழக்கம் இல்லாததால், பண்டசாலை உத்தியோகஸ்தரிடம் பேசக் கூச்சமாக இருந்தது. ராஜகோட்டில் வக்கீலாக

இருந்து, பாரிஸ்டராவதற்காக இங்கிலாந்து சென்றுகொண்டிருந்த என் கூட்டாளியான மஜூம்தாரைத் தவிர மற்றப் பிரயாணிகள் யாவரும் ஆங்கிலேயர்கள். அவர்களோடு என்னால் பேச முடியாது. அவர்கள் என்னோடு பேச முயன்ற போதெல்லாம், அவர்கள் வார்த்தையே எனக்குப் புரியவில்லை. அப்படியாகப் புரிந்தாலும், என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை. பேசுவதற்கு முன்பு ஒவ்வொரு வாக்கியத்தையும் மனசிலேயே சொல்லிப் பார்த்துக்கொள்ளவேண்டி இருந்தது. கத்தி, முள் முதலிய கருவிகளினால் சாப்பிட எனக்குத் தெரியாது. இவற்றில் மாமிசம் கலவாத பதார்த்தங்கள் எவை என்று கேட்கவும் தைரியம் இல்லை. ஆகவே நான் சாப்பாட்டு மேஜைக்கு ஒரு தடவையாவது போகவே இல்லை. என் அறையிலேயே உட்கார்ந்து சாப்பிட்டேன். நான் கொண்டுவந்திருந்த மிட்டாய்கள் முதலியவற்றையே முக்கியமாக வைத்துக்கொண்டு பொழுதை ஓட்டிவந்தேன். மஜூம்தாருக்கு மாத்திரம் எவ்வித மான சங்கோசமும் இல்லை. அவர் எல்லோருடனும் தாராளமாகக் கலந்து பழகினார். கப்பலின் மேல்தட்டிலுங்கூட இஷ்டமான இடத்திலெல்லாம் உலாவிவருவார். நான் நாள் முழுவதும் என் அறைக்குள்ளேயே புழுங்கிக் கிடந்தேன். கூட்டம் இல்லாத சமயமாகப் பார்த்துத்தான் மேல்தட்டுக்குப் போய் உட்காருவேன். எல்லாரோடும் கலந்து பழகவேண்டுமென்று மஜூம்தார் எனக்குப் போதனை செய்தார். வக்கீல்கள் வாயாடிகளாக இருக்க வேண்டும் என்று கூறி, வக்கீல் தொழிலில் தம் அநுபவங்களையும் எடுத்துச் சொன்னார். "ஆங்கிலம் நம்முடைய சொந்தப் பாஷை அன்று; ஆகையால் பேசுவதில் பிழைகள் ஏற்படுவது இயல்பு. ஆயினும் பேசப் பழகிக்கொண்டே இருக்கவேண்டும்" என்றெல்லாம் சொன்னார். ஆனால், என் கூச்சத்தை விட்டுத் தொலைப்பது எனக்குக் கஷ்டமாக இருந்தது.

ஓர் ஆங்கிலக் கனவான் என்னிடம் இரக்கங்கொண்டு என்னோடு பேச ஆரம்பித்தார். நான் என்ன சாப்பிடுகிறேன், யார், எங்கே போகிறேன், யாரோடும் ஏன் பேசுவதில்லை என்றெல்லாம் கேட்டார். என்னை மேஜைக்குச் சாப்பிடப் போகும்படி தூண்டினார். மாமிசம் சாப்பிடுவதில்லை என்ற என் உறுதியான பேச்சைக் கேட்டு அவர் ஒரு நாள் சிரித்தார். என்னிடம் அநுதாபங்கொண்டு, "இதுவரை (போர்ட் ஸெயித் வந்துசேரும் வரையில்) எல்லாம் சரிதான்; ஆனால் பிஸ்கே குடாவுக்குப் போனதும் உன் தீர்மானத்தை மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கும். இங்கிலாந்

திலோ, மாமிசம் புசிக்காமல் ஒன்றுமே நடக்காது; அத்தனை குளிர்ச்சியான தேசம்'' என்றார்.

''மாமிச உணவு இல்லாமலே அங்கே வசிக்க முடியும் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேனே?'' என்றேன்.

''அதெல்லாம் பொய். எனக்குத் தெரிந்தவர்களில் ஒருவனாவது மாமிசம் சாப்பிடாதவன் இல்லை. நான் உன்னை மதுபானம் செய்யச் சொல்லவில்லை; ஆனால் எனக்குத் தெரிந்தவரையில், மாமிசம் மட்டும் நீ கட்டாயம் உண்ணத்தான் வேண்டும்.

''உங்கள் புத்திமதிக்காகக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், மாமிசம் புசிப்பதில்லை என்று நான் என் தாய்க்கு வாக்குக் கொடுத்திருக்கிறேன். மாமிசம் உண்ணாமல் நான் இங்கிலாந்தில் பிழைத்திருக்க முடியாமற்போனால், மீண்டும் இந்தியாவுக்குத் திரும்பி வந்துவிடுவேனே தவிர, ஒருபோதும் மாமிசம் தின்ன மாட்டேன்.''

பிஸ்கே குடா வந்தது. அங்கும் எனக்கு மாமிசமோ மதுவோ அவசியமென்று தோன்றவில்லை.

ஏதோ ஒரு விதமாக, கஷ்டமோ சுகமோ, எங்கள் பிரயாணம் முடிந்தது. ஸௌதாம்ப்டன் துறைமுகத்தில் எங்கள் கப்பல் நங்கூரம் பாய்ச்சியது. அன்று சனிக்கிழமை என்று ஞாபகம். கப்பலில் நான் கறுப்பு உடை அணிந்திருந்தேன். என் நண்பர்கள் எனக்கு வெள்ளைக் கம்பளத்தில் கோட்டும் நிஜாரும் தயாரித்துக் கொடுத்திருந்தார்கள். கப்பலிலிருந்து இறங்குவதற்கு முன்பு, வெள்ளை உடை தரித்துக்கொண்டால் நன்றாக இருக்கும் என்று எண்ணி, அந்த உடுப்பை அணிந்தேன். அதே உடுப்போடு கப்பலிலிருந்து இறங்கினேன். அப்போது ஸெப்டம்பர் மாதக் கடைசி. நான் ஒருவன்தான் வெள்ளைக் கம்பள உடை அணிந்திருக்கிறேன் என்பதைக் கண்டேன். என் பெட்டிகளையும் அவற்றின் சாவிகளையும் கிரிண்ட்லே கம்பெனியின் குமாஸ்தாக்கள் வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள். மற்றவர்கள் செய்வதைப்போலத்தானே நாமும் செய்யவேண்டும் என்று நினைத்து, என் சொந்தச் சாவிகளைக்கூட அவர்களிடமே கொடுத்துவிட்டேன்!

டாக்டர் பிராணஜீவன் மேஹதா, தலபத்ராம் சுக்ல, பிரின்ஸ் ரண்ஜித்சிங், தாதாபாய் நவரோஜி ஆகிய நால்வருக்கும் அறிமுகக் கடிதங்கள் என்னிடம் இருந்தன. விக்டோரியா ஹோட்டலில் தங்குவது நல்லது என்று கப்பலில் ஒருவர் சொல்லியிருந்தார். ஆகவே மஜூம்தாரும் நானும் அங்கே போனோம். ஏற்கனவே நான் ஒருவன் மட்டும் வெள்ளையுடை அணிந்திருப்பது எனக்கு

வெட்கக்கேடாக இருந்தது. போதாக்குறைக்கு ஹோட்டலுக்குச் சென்றதும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையாதலால் திங்களன்று வரையில் கிரிண்ட்லே கம்பெனியிலிருந்து சாமான் வராதென்று தகவல் கிடைத்தது. ஆகவே எனக்குப் பெரும் சங்கடமாகி விட்டது.

ஸௌதாம்ப்டனிலிருந்தே நான் டாக்டர் மேஹதாவுக்குத் தந்தி கொடுத்திருந்தேன். மாலை ஏழு எட்டு மணி இருக்கும். அவர் வந்தார். அன்பு மிகுதியினால் அவர் என்னை வெகுவாகப் பரிகாசம் செய்தார். நான் என்னை அறியாமலே அவருடைய பட்டு ரோம முள்ள தொப்பியைப் பார்க்க எடுத்து, மாறான புறமாகக் கையால் தடவினேன். தொப்பியின் ரோமம் விறைத்துக்கொண்டு நின்றது! டாக்டர் மேஹதா இதைப் பார்த்ததும், உடனே என்னைத் தடுத்தார்; ஆனால் தவறு நடந்தது நடந்துவிட்டது. அவர் தடுத்ததன் பயனாக, இனி இத்தகைய விஷமம் செய்யக்கூடாது என்பதை நான் அறிந்துகொண்டேன்.

இங்கிருந்து ஐரோப்பியப் பழக்கவழக்கங்களைப்பற்றி முதல் முதலாக நான் கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். டாக்டர் மேஹதா விளையாட்டும் சிரிப்புமாகவே எனக்குப் பல விஷயங்களைக் கற்பித்தார். "இங்கெல்லாம் பிறருடைய பொருள்களைத் தொடக்கூடாது. இந்தியாவில் அறிமுகமானவுடனே நாம் சகஜமாகக் கேட்கும் கேள்விகளை இங்கே கேட்கக்கூடாது. உரக்கப்பேசலாகாது. இந்தியாவில் துரைகளோடு பேசும்போது 'ஸார்' என்கிறோமே, அது இங்கே அநாவசியம். வேலைக்காரன்தான் தன் எஜமானனையோ அல்லது அதிகாரியையோ 'ஸார்' என்று சொல்வான் என்று தெரிவித்தார். "ஹோட்டலில் செலவு அதிகமாகும்; ஆதலால் ஏதாவது ஒரு குடும்பத்தோடு வசிப்பது நலம் என்றும் கூறினார்." ஆனால் இது சம்பந்தமான யோசனையைத் திங்கட்கிழமை வரையில் தள்ளிவைத்தோம்.

ஹோட்டலில் எனக்கும் சரி, மஜூம்தாருக்கும் சரி, கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற்போல இருந்தது. செலவும் மிகவும் அதிகம். ஸிந்துமாகாணவாசி ஒருவர் மால்டாவிலிருந்து எங்களோடு பிரயாணம் செய்தார். மஜூம்தார் அவரோடு நன்றாகப் பழகினார். அந்த ஸிந்திப் பிரயாணிக்கு ஏற்கனவே லண்டனைப்பற்றிய விஷயங்கள் யாவும் தெரியும். எங்கள் இருவருக்கும் அறைகள் பார்த்துக் கொடுக்கும் பொறுப்பை அவர் ஏற்றுக் கொண்டார். நாங்கள் சம்மதித்தோம். திங்கட்கிழமை எங்கள் சாமான்கள் வந்ததுமே, ஹோட்டல் பாக்கியைத் தீர்த்து

விட்டு, அந்த நண்பர் வாடகைக்கு ஏற்பாடு செய்திருந்த அறைகளுக்குப் போய்ச் சேர்ந்தோம். ஹோட்டல் செலவு, என் பங்குக்கு, ஏறக்குறைய மூன்று பவுன் ஆனது ஞாபகம் இருக்கிறது. நான் ஸ்தம்பித்துப் போனேன். மூன்று பவுன் கொடுத்தும் நான் பட்டினியாகவே இருந்தேன். அங்கே எந்த உணவும் எனக்குப் பிடிக்கவில்லை. ஒன்றை வாங்கி, அது பிடிக்கவில்லை என்று மற்றோர் உணவைக் கேட்டால், இரண்டுக்கும் பணம் கொடுக்க வேண்டியிருந்தது. நான் இதுவரையிலும் பம்பாயிலிருந்து கொண்டுவந்திருந்த உணவுப் பண்டங்களை வைத்துக் கொண்டே காலத்தைத் தள்ளிவந்தேன்.

அந்த அறையில் நான் மிகவும் வருந்தினேன். எப்போதும் தாய்நாட்டைப்பற்றிய ஞாபகந்தான். அன்னையின் அன்பு என் கண்முன் உருவெடுத்து நிற்கும். இரவானவுடனே அழுகை ஆரம்பமாகிவிடும். வீட்டைப்பற்றிய பல விஷயங்கள் ஞாபகத்துக்கு வரும். அந்தப் புயலில் தூக்கம் வருவதேது? அந்தத் துன்பத்தைச் சொல்லி ஆற்றிக்கொள்ளவும் அங்கே யாரும் இல்லை. அப்படிச் சொன்னாலும் பயன் என்ன? என்ன செய்தால் எனக்குத் துணிவு உண்டாகும் என்பது எனக்கே தெரியவில்லை. ஜனங்கள் புதியவர்கள்; பழக்க வழக்கங்கள் புதியன; வீடுகளும் புதியவை; வீடுகளில் வசிக்கும் முறைகளும் புதியவை. எந்தப் பேச்சு அல்லது எந்தச் செய்கை இவ்விடத்து மரியாதை முறைகளுக்கோ வழக்கத்துக்கோ மாறானது என்பதும் நன்றாகத் தெரியாது. இவற்றைத் தவிர, சாப்பாட்டு விஷயத்தில் கட்டுப்பாடு வேறு. நான் சாப்பிடக்கூடிய உணவுப்பொருள்கள் எனக்குச் சப்புச் சவுக்கென்று இருந்தன. ஆகவே என் நிலைமை பெரிய தர்ம சங்கடமாகப் போய்விட்டது. சீமையில் இருக்க எனக்குப் பிடிக்கவில்லை; ஆனால், இந்தியாவுக்குத் திரும்பிப்போகவும் முடியாது. இவ்வளவு தூரம் வந்துவிட்ட பிறகு, மூன்று வருஷகாலத்தைக் கழித்துவிட்டே திரும்புவதென்று நிச்சயித்தேன்.

## 10

### பிரதிக்கினை காத்தது

டாக்டர் மேஹ்தா திங்களன்று என்னைப் பார்க்க விக்டோரியா ஹோட்டலுக்குப் போனார். அங்கே அவருக்கு என் புதிய விலாசம் தெரிந்தது. அவர் என் இடத்திற்கு வந்தார். என் அறை முதலியவற்றைப் பார்த்துவிட்டு, அதிருப்தியுடன் தலையசைத்துவிட்டு, "இந்த

இடம் உபயோகமில்லை. சீமைக்கு வந்து வெறுமே புஸ்தகங்களைப் படிப்பதைவிட இந்நாட்டுப்பழக்கவழக்கங்களில் அநுபவம் பெறுவதுதான் மிகவும் முக்கியம். இதற்கு நீ ஒரு குடும்பத்தில் இருப்பது அவசியம். ஆனால் இப்போதைக்குச் சில விஷயங்களில் பயிற்சி பெறுவதற்கு, ... என்பவரோடு இருப்பது நல்லது. நான் உன்னை அவரிடம் அழைத்துச் செல்கிறேன்" என்றார்.

நன்றியறிதலோடு அவர் யோசனையை ஒப்புக்கொண்டு, அவரோடு அந்த நண்பரின் வீட்டுக்குப் போனேன். அந்த நண்பர் எனக்கு உபசாரங்கள் செய்வதில் எவ்விதக் குறையும் வைக்கவில்லை. என்னைத் தம் சொந்தச் சகோதரரைப்போல நடத்தினார்; ஆங்கிலப் பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொடுத்தார். என்னைச் சிறிதளவு பேசவும் பழக்கினார்.

ஆனால், என் சாப்பாட்டுப் பிரச்னைதான் பெரிய தகராறாக இருந்தது. உப்பு, மிளகாய், மஸாலா கலவாமல் வேகவைத்த கறிகாய்கள் எனக்குச் சுவைக்கவில்லை. வீட்டுக்காரி பாவம், எனக்கென்று என்ன சமைத்துப் போடுவாள்? காலையில் ஓட் மீல் என்னும் தானியத்தாலான கூழ் சமைப்பாள். அதனால் கொஞ்சம் வயிறு நிரம்பும். ஆனால், பகல் வேளையிலும் மாலையிலும் தினமும் பட்டினியாகவே இருந்துவந்தேன். மாமிசம் சாப்பிடும்படி அந்த நண்பர் என்னிடம் ஓயாமல் சொல்லிவந்தார். நான் பிரதிக்ஞையைப் பற்றிக் கூறிச் சும்மா இருந்தேன். அவர் தினந்தோறும் தர்க்கம் செய்வார். எல்லா நோய்களுக்கும் ராமபாணத்தைப் போன்ற ஒரே மருந்தாகிய 'முடியாது' என்ற பதில்தான் என்னிடம் இருந்தது. அவர் எனக்குப் போதனை செய்யச் செய்ய, என் மன உறுதியும் அதிகமாயிற்று. தினமும் நான் ஆண்டவனை என்னைக் காக்குமாறு பிரார்த்திப்பேன்; தினமும் என் கோரிக்கை நிறைவேறிவந்தது. ஆண்டவனைப்பற்றி எனக்குத் தெரிந்துவிடவில்லை; ஆனால் சிரத்தையே இந்தச் செயலுக்குக் காரணமாக இருந்தது.

ஒரு நாள் அந்த நண்பர், பெந்தம் எழுதிய ஒரு புஸ்தகத்தை எனக்குப் படித்துக் காட்டினார். பிரயோஜனவாதத்தைப் பற்றிய விஷயத்தைப் படித்தார். நான் புரியாமல் விழித்தேன். பாஷை அவ்வளவு கடுமை. எனக்குச் சிறிதளவு புரிந்த பிறகு, அவர் அதை எனக்கு விளக்கிக் கூறினார். அப்போது நான், "என்னை மன்னியுங்கள். இவ்வளவு நுட்பமான விஷயங்களை என்னால் புரிந்துகொள்ள முடியாது. இந்த நாட்டில் மாமிசம் சாப்பிடுவது உசிதம் என்று ஒப்புக்கொள்ளுகிறேன்; ஆனால் நான் பிரதிக்

கிணையை மீற முடியாது. இவ்விஷயமாக வாதாடவும் நான் விரும்பவில்லை. தர்க்கம் செய்து நான் உங்களை வெல்ல முடியாது என்பது எனக்குத் தெரியும். நீங்கள் என்னை முட்டாள் என்றோ பிடிவாதக்காரன் என்றோ நினைத்து, இந்த விஷயத்தில் விட்டு விடுங்கள். தங்களுக்கு என்னிடமுள்ள அன்பை அறிவேன். என் நிலைமையைக் கண்டு இரங்கியே தாங்கள் இவ்விதம் வற்புறுத்து கிறீர்கள் என்பதும் தெரியும்; ஆனால் அது என் வசமில்லை. என் பிரதிக்கினை எவ்விதமும் தகராது" என்று பதில் கூறினேன்.

அவர் என்னை ஆச்சரியத்தோடு பார்த்தார். புஸ்தகத்தை மூடிவைத்துவிட்டு, "சரி, இனி நான் இதைப்பற்றி உன்னோடு வாதம் செய்யமாட்டேன்!" என்று கூறி, வாய் மூடினார். நான் மகிழ்ந்தேன். இதற்குப் பிறகு அவர் என்னோடு வாதாடுவதை விட்டுவிட்டார்.

ஆயினும் என்னைப்பற்றிய கவலை அவரைவிட்டு நீங்கவில்லை. அவர் சிகரெட் குடிப்பார்; மதுபானம் செய்வார்; ஆனால் அவற்றில் எதையும் நான் செய்ய வேண்டுமென்று ஆசை காட்டவில்லை. அதற்கு மாறாக அவை எனக்கு வேண்டாமென்றே கூறிவந்தார். அவருடைய கவலை முழுவதும், நான் மாமிசம் சாப்பிடாததால் இளைத்துப் போவேனே; அந்தத் தடையினால் நான் தாராளமாக ஆங்கிலேயர் சமூகத்தில் பழக முடியாதே என்பதுதான்.

இவ்விதம் ஒரு மாதகாலத்தை நான் அவ்விடத்துப் பழக்க வழக்கங்களைப் பயில்வதில் கழித்தேன்.

# 11

## ஆங்கிலக் கனவானுக முயற்சி

இதனிடையில் என் நண்பர் என்னைத் தோற்கடிக்க மற்றுமோர் உபாயத்தை யோசிக்கலானார். அவருக்கு என்மீதிருந்த மிகுந்த அன்பு காரணமாக, நான் மாமிசம் சாப்பிடாவிட்டால் என் உடல் நலம் கெட்டுப்போய்விடும் என்றும், அதனோடு இந்தியாவுக்குத் திரும்பிய பின்பும் இங்கிலாந்தைப்பற்றி ஒன்றுமே தெரியாத 'மண்டு'வாக இருந்துவிடுவேன் என்றும், இங்கிலாந்தில் வாசம் செய்வதால் அங்கே எனக்குக் கிடைக்கவேண்டிய பயனை இங்கே தனிமையை நாடி வாழ்வதால் நான் பெறமுடியாது என்றும் அவர் எண்ணினார்.

அவருடைய இந்த மனக் கலக்கத்தைப் போக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. 'பிறர் என்னைக் காட்டுமிராண்டி என்று சொல்லும்படி இருக்கமாட்டேன்; ஆங்கிலக் கனவானுவதற்கு வேண்டிய தகுதிகளைப் பெற முயல்வேன்; மற்ற உபாயங்களினால் சமூகத்தில் கலந்து பழகுவதற்கு ஏற்றவனாகி, ஆகார விஷயத்தில் நான் கொண்டுள்ள தனிப்பட்ட தன்மையை மறைத்து விடுவேன்' என்று எண்ணினேன். இதற்காக நான் ஆங்கில 'நாகரிக'த்தைக் கற்றுக்கொள்ளும் வேலையை மேற்கொண்டேன்.

நான் அணிந்திருந்தவை சீமையுடைகள் தாம்; ஆனால் அவை பம்பாயில் தைத்தவை. உயர்ந்த ஆங்கிலேயர் கூட்டத்தில் பழக அவை ஏற்றவை அல்ல என்று கருதி, 'ஆர்மி அண்டு நேவி ஸ்டோரி'ல் புதிய உடைகள் வாங்கினேன். பத்தொன்பது ஷில்லிங்குக்கு ஸில்க் தொப்பி வாங்கினேன். இவ்வளவோடு திருப்தி ஏற்படவில்லை. பாண்ட் தெருவில்தான், மிதப்பாக வாழும் நாகரிகப் பேர்வழிகள் உடைகள் தயாரித்துக்கொள்வது வழக்கம். அங்கே பத்துப் பவுன் கொடுத்து, மாலையில் அணியும் உடைகளை அஸ்தர் வைத்துத் தைக்கச் சொன்னேன். சாதுவும் தயாளுவுமான என் தமையனாருக்கு எழுதி, இரண்டு பைகளில் கோத்து மாட்டிக் கொள்ளக்கூடிய தங்கத்தினாலான இரட்டைக் கடிகாரச் சங்கிலி ஸ்பெஷலாக வரவழைத்தேன். கடையில் தயாராய்ச் செய்து விற்கும் 'டை' அணிவது நாகரிகமல்ல. ஆகவே 'டை' கட்டிக்கொள்ளும் கலையைப் பயின்றேன். நம் நாட்டில் க்ஷவரம் செய்துகொள்ளும் நாட்களில்தான் கண்ணாடி பார்ப்பார்கள்; இங்கு நிலைக் கண்ணாடியின் முன்பு நின்றுகொண்டு 'டை'யைச் சரியாகக் கட்டுவதிலும், தலைமயிரைப் படிய வாரி வகிடு எடுப்பதிலும் தினந்தோறும் பத்து நிமிஷம் வீணாகிவிடும். என் தலைமயிர் மிருதுவானதல்ல. அதைச் சரியாகப் படியவைக்க, 'பிரஷ்ஷோ'டு, அதாவது துடைப்பக்கட்டை என்றே சொல்லலாமே, தினமும் போராட வேண்டியிருந்தது. தொப்பியை வைத்துக்கொள்ளும்போதும் எடுக்கும்போதும், வகிடு கலையாமலிருக்க, கை தானாகவே தலையை நாடும். போதாக்குறைக்கு, கனவான்களின் கூட்டத்தில் உட்கார்ந்திருக்கும்போது, தலைமயிரை அடிக்கடி ஒழுங்குபடுத்தும் நாகரிகச் செயல் வேறு நடைபெறும்.

ஆனால், இத்தனை பகட்டோடு இருந்தால் மட்டும் போதுமா? நாகரிக உடைகள் அணிந்துகொள்வதனாலேயே ஒருவன் கனவானாகிவிட முடியுமா என்ன? நாகரிகத்திற்கு வேண்டிய இன்னும் சில விஷயங்களையும் கற்றுக்கொள்ள வேண்டியது பாக்கியாகவே

இருந்தது. கனவானுக்கு நடிக்கத் தெரியவேண்டும். மேலும், பிரெஞ்சு பாஷை நன்றாகத் தெரியவேண்டும். காரணம், இங்கிலாந்துக்கு அயலிலுள்ள பிரான்ஸ் தேசத்துப் பாஷை பொது மொழியாக இருந்தது. எனக்கு ஐரோப்பாவில் யாத்திரை செய்யும் விருப்பம் இருந்தது. பிறகு, பிரசங்கம் செய்யும் கலையிலும் கனவான் நிபுணனாக இருக்கவேண்டும். நான் நடனம் பயிலத் தீர்மானித்து, நடனப் பாடசாலை ஒன்றில் சேர்ந்தேன். ஒரு 'டர்மு'க்கு (term) மூன்று பவுனோ என்னவோ சம்பளம் கட்டினேன். மூன்று வாரங்களில் ஐந்தாறு பாடங்கள் கற்றுக்கொண்டேன். ஆனால் தாளத்துக்கு ஏற்றபடி, காலைச் சரியாக எடுத்து வைக்க முடியவில்லை. பியானோ வாசிக்கும்; ஆனால் அது என்ன சொல்கிறதென்று எனக்குப் புரிபடவில்லை. 'ஒன்று, இரண்டு, மூன்று' என்ற கிரமத்தில் நடனம் நடக்கும்; ஆனால், இவற்றினிடையே உள்ள வித்தியாசத்தை அந்தப் பியானோ வாத்தியந்தான் காட்டியது. அது ஒன்றும் எனக்குத் தெரியவே இல்லை. இப்போது என்ன செய்வது? கோவணாண்டிச் சாமியார் கதைதான்! கோவணத்தை எலியினின்றும் காக்க, அவர் பூனையை வளர்த்தார். பூனையின் பாலுக்காக ஆடு வாங்கினார்-இப்படியாக அவருடைய குடும்பம் பெருகியது. பிடில் வாசிக்கக் கற்றுக்கொண்டால் ஸ்வர தாளங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளலாம் என்று நினைத்தேன். பிடில் வாங்க மூன்று பவுன் தொலைத்தேன். அதைக் கற்றுக்கொள்வதற்கு வேறு தக்ஷிணை கொடுத்தேன். பிரசங்கம் செய்யும் கலை பயில்வதற்காக மற்றோர் உபாத்தியாயரின் வீட்டைத் தேடிப் பிடித்தேன். அவருக்கு ஒரு கினி அர்ப்பணம் செய்தேன். அவருடைய பேச்சைக் கேட்டு, பெல் என்பவர் தொகுத்த, 'ஸ்டாண்டர்டு எலக்யூஷனிஸ்ட்' என்ற சொற்பொழிவு நூலை வாங்கினேன். பிட் என்பவரின் பிரசங்கத்திலிருந்து பாடத்தைத் தொடங்கினேன்.

ஆனால், பெல் துரை என் காதில் 'பெல்' (மணி) அடித்துவிட்டார். நான் விழித்துக்கொண்டேன்; உணர்வு பெற்றுச் சிந்திக்கலானேன்.

'என் ஆயுசு முழுவதையும் நான் இங்கிலாந்தில் கழிக்கப் போவதில்லை. ஆங்கிலத்தில் இனிமையாகப் பிரசங்கம் செய்யும் வன்மையைப் பெற்று எனக்கு என்ன ஆகவேண்டும்? நடனமாடக் கற்பதனால் நான் எப்படிக் கனவானாக முடியும்? பிடில் வாசிக்க இந்தியாவிலேயே கற்றுக்கொள்ளலாமே. நானோ மாணவன்; நான் கல்விச் செல்வத்தை வளர்க்கவேண்டும்; என் தொழி

லுக்குத் தேவையான முஸ்தீப்புகளைச் செய்துகொள்ளவேண்டும். என்னுடைய ஒழுக்கத்தினால் நான் கனவான் என்று கருதப்பட்டால் சரியே; இல்லாவிட்டால் இந்த ஆவலை விட்டுவிட வேண்டியதுதான்' என்று எண்ணமிட்டேன்.

இந்தச் சிந்தனைகளின் ஆவேசத்தில், என் பிரசங்க உபாத்தியாயருக்கு இந்தக் கருத்துக்களைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி அனுப்பினேன். அவரிடம் இரண்டு மூன்று பாடங்களைப் படித்திருந்தேன். நடனம் கற்றுக்கொடுக்கும் உபாத்தியாயினிக்கும் இவ்வாறே கடிதம் எழுதினேன். பிடில் உபாத்தியாயினியிடம் நேரே பிடிலை எடுத்துக்கொண்டு போய், அதை வந்த விலைக்கு விற்றுத் தரச் சொன்னேன். அவளோடு சிறிது நட்பு ஏற்பட்டிருந்ததால், நான் இதுவரை பைத்தியக்காரத்தனமாக வாழ்க்கை நடத்தியதையும் அவளிடம் கூறினேன். நடனம் முதலிய தொந்தரவுகளிலிருந்து நான் விடுபடுவதை அவளும் விரும்பினாள்.

ஆங்கிலக் கனவானாகவேண்டும் என்ற இந்த என் வெறி சுமார் மூன்று மாத காலம் இருந்திருக்கலாம்; ஆயினும் தடபுடலாக உடுப்பு அணியவேண்டும் என்ற பைத்தியம் மட்டும், பின்பு வருஷக்கணக்காக நீடித்திருந்தது. ஆனால் இப்போது நான் மாணவனாகிவிட்டிருந்தேன்.

# 12

## எளிய வாழ்க்கை

நடனம் முதலிய பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தது நான் கட்டுக்கு அடங்காமல் அலைந்த காலத்துக்கு அறிகுறி என்று யாரும் நினைக்கவேண்டாம். அதிலும் சிந்தனையின் அம்சம் இருந்தது என்பதை வாசகர்கள் அறிந்தே இருப்பார்கள். கிறுக்குப் பிடித்த அந்தச் சமயத்திலுங்கூட நான் ஓரளவு ஜாக்கிரதையாகவே இருந்தேன். ஒவ்வொரு தம்படிக்கும் கணக்கு வைத்திருந்தேன். மிதமாகவே செலவழித்தேன். மாதம் பதினைந்து பவுனுக்குமேல் செலவாகக்கூடாது என்று தீர்மானித்திருந்தேன். வண்டிச் சத்தம், தபால் செலவு முதலியவற்றைக்கூட விடாமல் எழுதிவந்தேன். இரவு தூங்கப் போவதற்கு முன்பு, தினமும் கணக்கைச் சரிபார்த்துக் கொள்வேன். இந்த வழக்கம் என்னிடம் நிலையாகவே இருந்துவந்திருக்கிறது. இதன் பயனாக, பொது ஜனக் காரியங்களில் என் கையில் லக்ஷக்கணக்கான ரூபாய்கள் புரண்டபோதெல்லாம், நான் சிக்கனமாகச் செலவு செய்து வந்திருக்

கிறேன். என் மேற்பார்வையில் நடந்த ஒவ்வோர் இயக்கத்திலும் கையிருப்புப் பணம் ஏதாவது இருந்துகொண்டே இருக்குமே தவிர, நான் ஒருபோதும் கடன் வாங்க நேர்ந்ததே இல்லை.

என் செலவைப் பேர்பாதியாகக் குறைத்துவிட நிச்சயித்தேன். கணக்கைக் கவனித்துப் பார்த்தபோது வண்டிச் சத்தச் செலவு அதிகமென்று தோன்றியது. மேலும், நான் ஒரு குடும்பத்தோடு வசித்ததால் வாரவாரம் ஏதாவது ஒரு செலவு வந்துகொண்டே இருந்தது. ஆகவே குடும்பத்தோடு வசிப்பதை விட்டு, வாடகைக்குத் தனி அறை எடுத்துக் கொள்வதென்றும், அவ்வப்போது செய்ய நேரும் வேலைகளுக்குத் தக்கபடியும் புது அநுபவங்களைப் பெறுவதற்காகவும் வெவ்வேறு இடத்திற்கு ஜாகையை மாற்றிக் கொள்வதென்றும் முடிவு செய்தேன். வேலை இருந்த இடத்துக்கு நடந்தே செல்லக்கூடிய தூரத்தில் அறைகள் அமர்த்திக் கொண்டேன். இதனால் வண்டிச் சத்தம் மீதி. இதற்கு முன்னால், போகவேண்டிய இடங்களுக்கு வண்டிச் சத்தம் கொடுத்துப் போவதோடு, உலாவுவதற்கென்று வேறு தனியே நேரம் பிடித்தது. இந்த ஏற்பாட்டினால், நடைக்கு நடையும் ஆயிற்று; வண்டிச் சத்தமும் குறைந்தது. தினமும் எட்டு மைல் பத்து மைல் தூரம் நடப்பது எனக்குச் சகஜமாகப் போயிற்று. இப்படி நடந்து வந்ததனால்தான் இங்கிலாந்தில் நான் நோயற்று இருந்தேன். என் உடலும் வலுப்பெற்றது. குடும்பங்களோடு வசிப்பதைவிட்டு, இரண்டு அறைகள் வாடகைக்கு எடுத்துக்கொண்டேன்: ஒன்று படுக்கும் அறை; மற்றொன்று உட்கார்ந்து வேலை செய்வதற்கு. இந்த மாறுதலை இரண்டாவது நிலை என்று சொல்லலாம். மூன்றாவது நிலை இனி வரப்போகிறது.

இம்மாதிரி பாதிச் செலவு குறைந்தது. ஆனால் பொழுது? பாரிஸ்டர் பரீக்ஷைக்கு அதிகம் படிக்க வேண்டியதில்லை என்பது எனக்குத் தெரியும். எனவே, கவலையற்று இருந்தேன். ஆங்கில மொழியில் நல்ல தேர்ச்சி இல்லாதது என் மனத்தை உறுத்திக் கொண்டே இருந்ததனால், பாரிஸ்டராவதோடு வேறு ஏதாவது படிக்கவும் வேண்டும் என்று நினைத்தேன். ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைகளைப்பற்றி விசாரித்தேன். பல நண்பர்களிடமும் கலந்து பேசினேன். அங்கே சென்றால் செலவு அதிகமாகும் என்றும், நீண்ட நாள் படிக்கவேண்டியிருக்கும் என்றும் தெரிந்துகொண்டேன். மூன்று வருஷங்களுக்கு மேல் நான் இங்கிலாந்தில் இருக்க முடியாது. "கடினமான பரீக்ஷையில்

தேர்ச்சி பெற விரும்பினால், நீ லண்டன் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்குப் போ. அதற்கு அதிக உழைப்பு வேண்டும். பொது அறிவு வளரும். செலவும் இல்லை" என்று ஒரு நண்பர் யோசனை கூறினார்.

இந்த யோசனை எனக்குப் பிடித்தது; ஆனால் பரீக்ஷைக்குரிய விஷயங்களைக் கண்டதும் பிரமித்துப் போனேன். லத்தீனும் மற்றும் ஏதாவது ஓர் ஐரோப்பிய மொழியும் கட்டாயமாகப் படிக்கவேண்டி யிருந்தது. இப்போது லத்தீன் கற்றுக்கொள்வது எப்படி?

"வக்கீலுக்கு லத்தீன் மிகவும் பயன்படும். லத்தீன் தெரிந்தால் சட்டப் புத்தகங்களைப் படித்து அறிவது சுலபம். ரோமன் சட்டத்தில் ஒரு முழுப் பரீக்ஷை லத்தீன் பாஷையிலேயே எழுத வேண்டும். அந்த மொழியைக் கற்றுக்கொள்வதால் ஆங்கிலமும் நன்றாக வரும்" என்றார் ஒரு நண்பர். அவர் கூறியது என் மனத்தில் பதிந்தது. நான் படிப்பதென்று முடிவு கட்டி, தனிப்பட்ட ஒருவர் நடத்திவந்த மெட்ரிகுலேஷன் வகுப்பில் சேர்ந்தேன். ஆறுமாதத்துக்கு ஒரு தடவை பரீக்ஷை. எனக்கு ஐந்து மாதத் தவணைதான் இருந்தது. இந்த நிலையில் பரீக்ஷைக்குப் போவது என்னால் ஆகக்கூடிய காரியமாக இல்லை; ஆனால், கனவானாக வேண்டும் என்ற வெறியில், நான் தீவிரமாக உழைக்கும் மாணாக்கனாகிவிட்டேன். காலவரையறை ஏற்படுத்திக் கொண்டு, ஒவ்வொரு நிமிஷத்தையும் பயன்படுத்தினேன். ஆனால், மற்றப் பாடங்களோடு லத்தீனும் பிரெஞ்சும் கற்றுக்கொண்டு ஈடு கொடுக்கும் படியாக அத்தனை கூர்மையான அறிவும் ஞாபகசக்தியும் எனக்கு இல்லை. பரீக்ஷை கொடுத்தேன்; லத்தீனில் தவறிவிட்டேன்.

இதனால் வருத்தம் உண்டாயிற்று; ஆயினும் மனம் சோரவில்லை. லத்தீன் மொழியைக் கற்பதில் எனக்குச் சுவையும் ஏற்பட்டிருந்தது. மறுமுறை பரீக்ஷைக்குப் போவதால் பிரெஞ்சு பின்னும் நன்றாக வரும் என்று நினைத்தேன். விஞ்ஞானத்தில் புது விஷயம் எடுத்துக்கொள்ள எண்ணினேன். இந்தியாவில் ரஸாயன சாஸ்திரம் எனக்குப் பாடமாக இருந்ததனால், லண்டன் மெட்ரிக்குக்கும் முதல் தடவை அதையே எடுத்துக்கொண்டிருந்தேன். சோதனைகள் நடத்துவதற்கு இங்கே இடமில்லாமையால், மனம் வைத்துக் கற்கக்கூடிய விஷயமாக இருந்தும், அது எனக்குப் பிடிக்கவே இல்லை. இந்தத் தடவை, 'ஒளியும் வெப்பமும்' என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டேன். இது சுலப

மானது என்று சொன்னார்கள்; எனக்கும் அது சுலபமாகத்தான் பட்டது.

மீண்டும் பரீக்ஷைக்குப் படித்ததோடு, பின்னும் எளிய வாழ்க்கையை மேற்கொள்ளவும் முயன்றேன். என் குடும்பத்தின் ஏழைமைக்குத் தக்கபடி, இன்னமும் என் வாழ்க்கை எளிதாகவில்லை என்று தோன்றியது. தமையனாருடைய வறுமையையும் தாராளத்தையும் நினைக்கும்போது எனக்கு மிகவும் வருத்தம் தோன்றும். மாதம் பதினைந்து பவுனும் ஏழு பவுனும் செலவழித்து வந்தவர்கள் உபகாரச் சம்பளம் பெறுபவர்களாக இருந்தனர். என்னைவிட அதிகச் சிக்கனமாக வாழ்பவர்களையும் கண்டேன். இத்தகைய ஏழை மாணவர்கள் பலரோடு நான் பழக நேர்ந்தது. ஒரு மாணவன் லண்டனில் ஏழைகள் வசிக்கும் தெருவில் வாரத்துக்கு இரண்டு ஷில்லிங் வாடகைக்கு ஒரே அறையில் வசித்து வந்தான். மலிவான கோக்கோக் கடையில் இரண்டு பென்னிக்குக் கோக்கோவும் ரொட்டியும் வாங்கித் தின்று வயிறு வளர்த்துவந்தான். அவனோடு போட்டியிடும் துணிவு எனக்கு உண்டாகவில்லை; எனினும் இரண்டு அறைகளுக்குப் பதிலாக ஒரே அறை போதும் என்றும், பாதி வேளைக்கு நானே சமைத்துக்கொள்ளலாம் என்றும் நினைத்தேன். இப்படிச் செய்தால், மாதம் நான்கு அல்லது ஐந்து பவுனில் வாழ முடியும். எளிய வாழ்வைப் பற்றிய புத்தகங்களையும் படித்தேன். இரட்டை அறைகளை விட்டு, வாரத்துக்கு எட்டு ஷில்லிங் வாடகைக்கு ஒரே அறை அமர்த்திக்கொண்டேன். 'ஸ்டௌ' ஒன்று வாங்கினேன்; காலை வேளையில் நானே சமைக்க ஆரம்பித்தேன். இதற்கு இருபது நிமிஷத்துக்கு மேல் ஆகவில்லை. ஓட் மீல் கூழ் செய்து கோக்கோவுக்குத் தண்ணீர் பொங்கவைக்க எவ்வளவு நேரம் பிடித்துவிடும்? பகல் வேளைக்கு எங்காவது வெளியில் சாப்பிட்டுவிடுவேன். இவ்விதமாகத் தினம் ஒன்று ஒன்றேகால் ஷில்லிங்கில் சாப்பாட்டை முடித்துக்கொண்டேன். நான் மிகவும் அதிகமாகப் படிப்பிலே ஈடுபட்டிருந்த சமயம் இதுதான். வாழ்வு எளிதாகிவிட்டதால், பொழுது நிரம்பக் கிடைத்தது. இரண்டாம் முறை பரீக்ஷை கொடுத்தேன்; தேர்ச்சி பெற்றேன்.

எளிமையினால் வாழ்க்கை சுவையற்றுப்போயிருக்கும் என்று வாசகர்கள் கருதிவிட வேண்டாம். அதற்கு மாறாக, இந்த மாறுதல்களினால் என் அகநிலையும் புறநிலையும் ஒன்றுபட்டன. என் பழக்க வழக்கங்கள் குடும்ப நிலைக்கு ஒத்தவை ஆயின.

வாழ்க்கை மேன்மேலும் சத்தியமயமாயிற்று. அதனால் என் ஆத்மானந்தத்துக்கு எல்லையே இருக்கவில்லை.

## 13

### தப்பினேன்

**வா**ழ்க்கையைப்பற்றி நான் ஆழ்ந்து யோசிக்க யோசிக்க, அகத்திலும் புறத்திலும் நடவடிக்கையில் மாறுதல்கள் அவசியம் என்று தோன்றலாயிற்று. வாழ்வு முறையிலும் பணச் செலவிலும் மாறுதல்கள் ஆரம்பமான வேகத்திலேயே - இன்னும் கேட்டால் அதைவிட அதிகமான வேகத்திலேயே - சாப்பாட்டில் மாறுதல் ஏற்பட்டது. சைவ உணவைப்பற்றிய ஆங்கிலப் புத்தகங்களை நான் பார்த்தேன். சீமையில் இத்தகைய சிந்தனை உள்ளவர்களின் ஸ்தாபனம் ஒன்று இருந்தது. அதன் சார்பாக ஒரு வாரப் பத்திரிகையும் வெளிவந்துகொண்டு இருந்தது. நான் அதற்குச் சந்தாதாரானேன். அந்த ஸ்தாபனத்திலும் அங்கத்தினன் ஆனேன். கொஞ்ச நாளிலேயே அதன் நிர்வாக சபையில் என்னை எடுத்துக்கொண்டார்கள். மரக்கறி உணவை ஆதரிக்கும் இயக்கத்துக்குத் தூண்களாக நின்ற பலருடன் எனக்குப் பழக்கம் ஏற்பட்டது. உணவு சம்பந்தமான என் பரிசோதனைகளில் மேன்மேலும் சிக்கினேன்.

ஊரிலிருந்து வரவழைத்த மிட்டாய் மசாலா முதலியவற்றை நிறுத்தினேன். இதனால் மிளகாயிலும் மசாலாவிலும் விருப்பம் குறைந்தது. தேநீரையும் காபியையுங்கூட விட்டுவிட்டேன். அநேகமாக ரொட்டி, கோக்கோ, வேகவைத்த கறிகாய்கள் இவற்றைக்கொண்டே காலந்தள்ளினேன். என்னுடைய இந்தச் சோதனைகளினால், சுவைக்கு உண்மையான இருப்பிடம் நாக்கு அல்ல, மனந்தான் என்பதைத் தெரிந்துகொண்டேன்.

வெவ்வேறு மதங்களைப்பற்றித் தெரிந்துகொள்ளவும் முயன்றேன். இதன் நடுவில் பிரம்மஞான சங்கத்தைச் சேர்ந்த இரு நண்பர்களுடன் பழக்கம் ஏற்பட்டது. அவர்கள் என்னைக் கீதையைப் படிக்கத் தூண்டினார்கள். அந்தச் சமயத்தில் அவர்கள், கீதைக்கு எட்வின் ஆர்னால்ட் எழுதிய ஆங்கில மொழிபெயர்ப்பைப் படித்துக்கொண்டிருந்தார்கள்; ஆனால் என்னைத் தங்களுடன் ஸம்ஸ்கிருதத்தில் கீதையைப் படிக்கச் சொன்னார்கள். எனக்கு வெட்கமாக இருந்தது; கீதையை ஸம்ஸ்கிருதத்தில் என்ன, குஜராத்தியில்கூட நான் படித்ததில்லை. இதை நான் கூச்சத்

தோடு அவர்களிடம் சொல்ல நேர்ந்தது; ஆனால் அதோடு கூடவே, "நான் உங்களோடு படிக்கத் தயார். பார்க்கப்போனால் எனக்கு ஸம்ஸ்கிருதம் அவ்வளவாகத் தெரியாதென்றே சொல்லலாம். ஆயினும் மொழிபெயர்ப்பில் ஏதாவது தாறுமாறாய் இருந்தால் அதைக் குறிப்பிடக்கூடிய அளவுக்கு எனக்குத் தெரியும்" என்று சொன்னேன். இவ்வாறு இந்தச் சகோதரர்களோடு கீதை படிக்க ஆரம்பித்தேன். இரண்டாவது அத்தியாயத்தின் கடைசியில் உள்ள சுலோகங்களின் கருத்து என் மனத்தில் ஆழமாகப் பதிந்தது:

> "இந்திரியங்களைப்பற்றிச் சிந்திப்பதனால் மனிதனுக்கு அவற்றில் பற்றுதல் உண்டாகிறது. பற்றுதலிலிருந்து விருப்பம் உண்டாகிறது. விருப்பத்தால் சினம் பிறக்கிறது. சினத்திலிருந்து மயக்கம்; மயக்கத்திலிருந்து நினைவுத் தவறுதல்; நினைவுத் தவறுதலிலிருந்து புத்தி நாசம்; புத்தி நாசத்தால் அவன் அழிகிறான்."

அது முதல் அவற்றின் ஒலி என் காதுகளில் இரவும் பகலும் சுழன்றுகொண்டிருந்தது. பகவத்கீதை அருமையான நூல் என்று அப்பொழுது எனக்குப் பட்டது. இந்தத் தீர்மானம் நாளுக்கு நாள் பின்னும் உறுதியாகிக்கொண்டே வந்தது. இன்று அது தத்துவ நூல்களிலெல்லாம் மிகச் சிறந்தது என்று நான் மதிக்கிறேன். நம்பிக்கை குன்றிய சமயங்களில் இந்த நூல் எனக்குப் பிரமாதமாக உதவியிருக்கிறது.

இதே காலத்தில் சைவ உணவு விடுதி ஒன்றில் மாஞ்செஸ்டரைச் சேர்ந்த ஒரு நல்ல கிறிஸ்தவர் எனக்கு அறிமுகமானார். அவருடைய தூண்டுதலினால் நான் பைபிள் படித்தேன்; ஆனால் பழைய ஏற்பாட்டை (Old Testament) என்னால் படிக்கவே முடியவில்லை. அது எனக்கு ருசிக்கவும் இல்லை. புதிய ஏற்பாட்டைத் (New Testament) தொடங்கியபோது முக்கியமாக ஏசு கிறிஸ்துவின் மலைப்பிரசங்கம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அது நேராக என் உள்ளத்தில் சென்று ஆழ்ந்தது. என் அறிவு, கீதையோடு அதை ஒப்பிட்டுப் பார்த்தது. "உன் சட்டையைக் கேட்பவனுக்கு நீ உன் போர்வையையும் கொடு. உன் வலது கன்னத்தில் அடித்தவனுக்கு இடது கன்னத்தையும் காட்டு." இதைப் படித்ததும் எனக்கு அளப்பரிய ஆனந்தம் உண்டாயிற்று. சியாமள பட்டருடைய அந்த 'நீர்மோர்'ப் பாட்டு எனக்கு ஞாபகம் வந்தது.

ஹிந்து மதத்தைப்பற்றியும் வேறு மதங்களைப்பற்றியும் நான் சாதாரணமாகத் தெரிந்துகொண்டிருந்தபோதிலும், ஆபத்துக் களிலிருந்தும் சங்கடங்களிலிருந்தும் காப்பதற்கு அந்த அறிவு போதுமானதாக இல்லை.

நான் சீமையில் இருந்த கடைசி வருஷத்தில், அதாவது 1890-இல், 'போர்ட்ஸ்மத்'தில் மரக்கறி உணவை ஆதரிப்பவர் களின் மகாநாடு ஒன்று கூடியது. அதற்கு என்னையும் மற்றோர் இந்திய நண்பரையும் அழைத்திருந்தார்கள். எங்கள் இருவருக் கும் ஒரு பெண்மணியின் வீட்டில் இடம் கொடுத்திருந்தார்கள். வரவேற்புக் கமிட்டியாருக்கு அந்தப் பெண்மணியைப்பற்றி ஒன்றும் தெரியாது. அது ஒரு கெட்டுப்போன வீடு.

இருட்டியது. கூட்டத்திலிருந்து நாங்கள் வீடு திரும்பினோம். சாப்பாடு ஆனதும் சீட்டாட உட்கார்ந்தோம். இங்கிலாந்தில் நல்ல வீடுகளில்கூட வீட்டுக்காரி விருந்தினர்களோடு இவ்விதம் சீட்டாடுவது உண்டு. ஆட்டத்தின்போது குற்றமற்ற பரிகாசம் செய்துகொள்வதும் சகஜம். ஆனால் இங்கே விகாரமான கேலிப் பேச்சுக்கள் ஆரம்பமாயின.

என் நண்பர் இந்த வித்தையில் நிபுணர் என்பது எனக்குத் தெரியாது. அந்தக் கேலி எனக்கு ஸ்வாரஸ்யமாக இருந்தது. மெல்ல மெல்ல நானும் அதில் கலந்துகொண்டேன். கேலிப்பேச்சி லிருந்து செயலுக்கு மாறும் நிலை வந்தது; சீட்டுக்கட்டை ஒரு புறமாக வைக்கவேண்டிய சந்தர்ப்பம் வந்தது. ஆனால் என் நண் பரின் இருதயத்தில் கடவுள் தோன்றினார். "நீ எங்கே! இந்தப் படுகுழி எங்கே! இது உன் வேலையல்ல. ஓடு இங்கிருந்து!" என்று அவர் சொன்னார்.

எனக்கு வெட்கமாகப் போயிற்று. நான் விழித்துக்கொண் டேன். உள்ளூற, இந்த நண்பருக்கு நன்றி பாராட்டினேன். தாய்க்குச் செய்துகொடுத்த பிரதிக்ஞை ஞாபகம் வந்தது. அங் கிருந்து ஓட்டம் பிடித்தேன். நடுங்கியவாறே என் அறைக்கு வந்துசேர்ந்தேன்.

அந்தச் சமயத்தில், 'மதம் என்பது என்ன, கடவுள் எப்படிப் பட்டவர், அவர் நமக்குள் எப்படி இயங்குகிறார்?' என்பவையெல் லாம் எனக்குத் தெரியா. உலக ரீதியில், 'கடவுள் என்னைக் காப்பாற்றினார்' என்ற பொருளில் அதைப் புரிந்துகொண்டேன். ஆனால் வாழ்க்கையின் பற்பல துறைகளில் எனக்கு இத்தகைய அநுபவம் பிற்காலத்தில்தான் உண்டாயிற்று. உண்மையில் என்னைப் பல ஆபத்தான சமயங்களில் இறைவன் தானாகவே

காத்துக்கொண்டான் என்று சொல்ல எனக்கு மிகவும் ஆனந்த மாக இருக்கிறது. நாலு பக்கத்திலிருந்தும் நம்பிக்கையை இழந்து உட்காரும் சந்தர்ப்பம் வரும்போது, கைகால்கள் சோர்ந்துபோகும் வேளையிலே, எங்கிருந்தோ திடீரென்று உதவி வந்து சேருகிறது. துதி, வழிபாடு, பிரார்த்தனை ஆகிய இவை குருட்டு நம்பிக்கைகள் அல்ல; நாம் உண்பதும், தண்ணீர் அருந்துவதும், நடப்பதும், உட்காருவதும் எவ்வளவு உண்மையோ அவ்வளவு - இன்னும் கேட்டால் அவற்றைவிட அதிக - உண்மையானவை இவை. அவ்வளவேன், இது ஒன்றுதான் உண்மை; மற்றவை யாவும் பொய், மித்தியை என்று சொல்வதும் பிழையாகாது.

## 14

## பாரிஸ்டர் ஆனேன்

இதனிடையில் என் படிப்புத் தொடர்ந்துவந்தது. ஒன்பது மாதம் கடுமையாக உழைத்த பின்பு 1891-ஆம் வருஷம் ஜூன் 10-ஆம் தேதி நான் பாரிஸ்டர் ஆகி, 12-ஆம் தேதி இந்தியாவுக்குப் புறப்பட்டேன்; ஆனால் என்னுடைய சோர்வுக்கும் பயத்துக்கும் எல்லையே இல்லை. நான் சட்டங்களைப் படித்திருந்தேனே தவிர, 'தொழில் செய்யும்படியான சட்டஞானம் உனக்கு இன்னும் வரவில்லை' என்றுதான் என் மனம் கூறியது.

ஜூன் ஜூலை மாதங்களில் அரபிக்கடல் கொந்தளித்துக்கொண்டிருக்கும். ஏடனிலிருந்து கடல் அம்மாதிரித்தான் இருந்தது. பிரயாணிகள் யாவரும் நோய்வாய்ப்பட்டனர். நான் ஒருவன்தான் சுரத்தாக இருந்தேன். கப்பலின் மேல்தளத்தில் நின்று புயல் வீசுவதைப் பார்ப்பேன். அலைகள் என்னை நனைத்து விடும். காலை ஆகாரத்தின்போது பிரயாணிகளில் நாங்கள் இரண்டொருவரே தென்படுவோம். மெல்லிய ஓட்மீல் கூழ் அடங்கிய தட்டை மடியில் வைத்துப் பிடித்துக்கொண்டு சாப்பிட வேண்டி இருந்தது; இல்லாவிட்டால் மடியிலேயே கூழ் சிந்தி விடும்.

இந்த வெளிப்புயல் என் உள்ளே வீசிக்கொண்டிருந்த ஒரு புயலின் அடையாளம் என்றே எனக்குத் தோன்றியது; ஆனால் வெளியே புயல் வீசியபோதிலும் நான் அமைதியாக இருந்தது போலவே என் மனப் புயலிலும் கலங்காமல் இருந்தேன்.

துறைமுகத்துக்கு என் தமையனார் வந்திருந்தார். தாய் சுவர்க்கம் சென்ற விஷயம் எனக்கு அடியோடு தெரியாது.

வீட்டுக்குப் போனதுமே என்னிடம் இந்தச் செய்தியைச் சொல்லி ஸ்நானம் செய்வித்தார்கள். சீமையில் இருக்கும்போதே எனக்கு இந்தச் செய்தியைத் தெரிவித்திருக்கக்கூடும். ஆயினும் அதிர்ச்சி குறைவாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்தினுல் நான் பம்பாய் வரும்வரையில் இதைத் தெரிவிக்கக்கூடாது என்றே என் தமையனுர் தீர்மானித்திருந்தார். தந்தையின் மரணத்தை விட இந்தச் செய்தி எனக்கு அதிக அதிர்ச்சியைத் தந்தது. நான் வைத்திருந்த ஆசைகள் பல பொடிந்துபோயின. இருந்தும் நான் அழுது புலம்பவில்லை என்பது எனக்கு ஞாபகம் இருக்கிறது. கண்ணீரைக்கூட அநேகமாகத் தடுத்துவிட்டேன். ஒன்றுமே நிகழாததுபோலத் தொழிலில் இறங்கினேன்.

கொஞ்சகாலம்வரையில் நான் ராஜகோட்டில் இருந்தேன். ஆனுல் என் நண்பர்கள் நான் சில காலம் பம்பாய் சென்று ஹைகோர்ட்டில் விசேஷ அநுபவம் பெறவேண்டும் என்றும், அங்கே இந்தியச் சட்டம் படிப்பதோடு கூடியவரை தொழில் நடத்தவும் முயலவேண்டும் என்றும் ஆலோசனை கூறினுர்கள். நான் பம்பாய்க்குப் போனேன். நாலைந்து மாதங்களுக்குமேல் அங்கே இருக்க முடியவில்லை. செலவு ஏறிக்கொண்டே இருந்தது. வரும்படியோ ஒன்றுமில்லை. ஆதலால் பம்பாயிலிருந்து நிராசை யோடு ராஜகோட்டுக்குத் திரும்பினேன். தனியாகக் காரியால யம் ஆரம்பித்தேன். ஏதோ கொஞ்சம் வேலை கிடைத்தது. மனுக் கள் எழுதும் வேலை கிடைத்துவந்தது. மாதத்துக்கு ஏறக்குறைய முந்நூறு ரூபாய் வருமானம் கிடைக்க ஆரம்பித்தது. இந்த மனுக் கள் கிடைத்ததற்குக் காரணம் என்னுடைய யோக்கியதாம்சங்கள் அல்ல. இவை ஒருவர் மூலமாக எனக்குக் கிடைத்தன. என் தமைய னுரின் நண்பரான வக்கீல் ஒருவருக்குத் தொழில் நன்றாக நடந்து வந்தது. மிகவும் அவசியமும் முக்கியமுமான, அல்லது அவர் முக்கியம் என்று நினைக்கும் மனுக்களைப் பாரிஸ்டரிடம் அனுப்பு வது வழக்கம். அவருடைய ஏழைக் கட்சிக்காரர்களின் மனுக்களே எனக்குக் கிடைத்துவந்தன.

# 15

## தென்னுப்பிரிக்காவுக்குப் பிரயாணம்

இதன் நடுவில் காட்டியாவாடில் ஸம்ஸ்தானத்திலுள்ள தகராறுகளைப் பற்றியும் எனக்குச் சில விஷயங்கள் தெரியவந்தன. அதனுல் என் மனம் வெறுத்துப் போயிற்று.

இந்த சமயத்தில் தமையனுரிடம் போர்பந்தரைச் சேர்ந்த தாதா அப்துல்லா அண்ட் கோ என்ற முகம்மதியக் கடைக்காரரிடமிருந்து, "தென்னுப்பிரிக்காவிலே எங்களுக்குப் பெருத்த வியாபாரம் நடக்கிறது. தையப் ஹாஜீ கான் முகம்மது என்பவருக்கு எதிராக நாற்பதினுயிரம் பவுன் எங்களுக்குச் சேரவேண்டிய பெரிய வழக்கு ஒன்று பல நாட்களாக நடந்துவருகிறது. தங்கள் தம்பியை இங்கே அனுப்பினுல் எங்களுக்கும் உதவியாக இருக்கும். அவருக்கும் ஏதோ கொஞ்சம் உதவி கிடைக்கும்" என்ற செய்தி வந்தது.

இந்தக் கடையின் பங்குதார் ஒருவர் ஒரு வருஷம் நான் வேலை செய்தால் போகவர முதல் வகுப்புக் கட்டணமும், சாப்பாட்டுச் செலவைத் தவிர 105 பவுனும் கொடுப்பதாக வாக்குறுதி செய்தார். அதன்படி ஏப்ரல், 1893-இல் நான் இந்தியாவிலிருந்து தென்னுப்பிரிக்காவுக்குப் புறப்பட்டேன்.

நேட்டாலுக்குத் துறைமுகம் டர்பன். ஆனுல் நேட்டாலையே துறைமுகம் என்று சொல்லுவார்கள். துறைமுகத்தில் என்னை அழைத்துச் செல்ல அப்துல்லா ஸேட் வந்திருந்தார். கப்பல் கரைக்கு அருகில் வந்தது. கப்பலிலிருந்து தம் நண்பர்களை அழைத்துக்கொண்டுபோக வந்திருந்த நேட்டால்வாசிகளின் நடவடிக்கையைப் பார்த்ததும் இங்கே இந்தியர்களுக்கு விசேஷ ஆதரவு இல்லை என்பதைத் தெரிந்துகொண்டேன். அப்துல்லா ஸேட்டிடம் அவரை அறிந்தவர்கள் பழகும்போது ஒருவித அற்பத்தனத்தைக் காட்டியதைக் கண்டு என் மனம் வருந்தியது. இந்த அவமதிப்பு அவருக்குச் சகஜமாகப் போயிருந்தது. பார்த்தவர்கள் யாவரும் என்னை வேடிக்கையாகப் பார்த்தார்கள். என் உடை மற்ற இந்தியர்களை விட முற்றும் வேறுக இருந்தது. அப்பொழுது நான் பிராக் கோட்டு முதலியவை அணிந்து தலையில் வங்காளிகளைப் போலத் தலைப்பாகை கட்டியிருந்தேன்.

என்னை வீட்டுக்கு அழைத்துப் போனுர்கள். அப்துல்லா ஸேட்டின் அறைக்குப் பக்கத்து அறையை எனக்குக் கொடுத்திருந்தார்கள். இன்னமும் அவர் என்னை அறிந்துகொள்ளவில்லை. நானும் அவரை அறிந்துகொள்ளவில்லை. தம் சகோதரர் என்னிடம் கொடுத்திருந்த கடிதத்தை அவர் படித்துப் பார்த்தார். அதனுல் அவர் பின்னும் சங்கடத்தில் ஆழ்ந்தார். சகோதரன் இந்த வெள்ளை யானையை வீட்டில் கட்டிவிட்டானே என்று அவர் நினைத்துக் கொண்டார். துரைகளைப் போன்ற என்னுடைய உடுபுடவை அவருக்கு அதிகச் செலவை வைக்கும் என்று தோன்றிற்று.

எனக்கோ அந்தச் சமயத்தில் ஒன்றும் முக்கியமான வேலையே இல்லை. அவருடைய வழக்கு டிரான்ஸ்வாலில் நடந்துகொண்டிருந்தது. உடனே என்னை அங்கே அனுப்பி அவர் என்ன செய்ய முடியும்? அதனோடு, என்னுடைய யோக்கியதையையும் நாணயத்தையும் எவ்வளவு தூரத்துக்கு நம்பலாம் என்பதும் ஒரு கேள்வி. பிரிடோரியாவில் என்னோடு கூடவே இருக்கவும் அவரால் முடியாது. பிரதிவாதிகள் பிரிடோரியாவில் இருந்தார்கள். அவர்கள் ஒருவேளை என்னைத் தம் பக்கமாகத் திருப்பிக் கொண்டால்? அந்த வழக்குச் சம்பந்தமான வேலையை என்னிடம் கொடுக்காமலே இருந்தால் என்ன? மற்ற வேலைகளை அவருடைய காரியஸ்தர்கள் என்னைவிட நன்ருகச் செய்துவந்தார்கள். மேலும் காரியஸ்தன் தவறு செய்தால் ஏதோ கேட்கவோ கொள்ளவோ செய்யலாம்; என்னிடமோ வாயைக்கூடத் திறக்கமுடியாது. ஒன்று குமாஸ்தா வேலை; மற்ருென்று வழக்குச் சம்பந்தமான வேலை. இவற்றைத் தவிர்த்து மூன்ருவது வேலை இல்லை. இந்த நிலையில் வழக்கை என்னிடம் ஒப்பிக்கவில்லை என்ருல் வீட்டில் உட்காரவைத்து என் செலவைத் தாங்கவேண்டும்.

அப்துல்லா ஸேட்டுக்கு எழுதப்படிக்க மிகவும் கொஞ்சமாகத் தெரியும். எழுத்து அறிவு குறைவு. ஆனல் அநுபவ ஞானம் மிகவும் அதிகம். அவருடைய அறிவு கூர்மையானது. அவர் தாமே இதை அறிந்திருந்தார். பழக்கத்தினுல் பேசிக் காரியத்தை நடத்திக்கொள்ளும்படியான அளவு ஆங்கிலம் பேசத் தெரியும். பாங்கில் மானேஜர்களோடு பேசுவார்; ஐரோப்பிய வியாபாரிகளோடு பேரம் பேசுவார்; வக்கீல்களுக்குத் தம் வழக்கை விவரிப்பார். இந்தியர்களுக்கு அவரிடம் நல்ல மதிப்பு இருந்தது. அவருடைய கடை அந்தக் காலத்தில் இந்தியர்களின் கடைகளுக்குள்ளே மிகப் பெரிதாக இல்லாவிட்டாலும் பெரிய கடைகளிலே ஒன்ருக இருந்தது என்பது நிச்சயம்.

நான் வந்த மறுநாளோ மூன்ரும் நாளோ என்னை அவர் டர்பன் கோர்ட்டுக்கு அழைத்துப்போனுர். அங்கே பலருக்கு என்னை அறிமுகப்படுத்தினுர். கோர்ட்டில் தம் வக்கீலுக்குப் பக்கத்தில் என்னை உட்கார வைத்தார். மாஜிஸ்டிரேட் என் முகத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். "உன் தலைப்பாகையைக் கழற்றிவிடு" என்று அவன் சொன்னுன். நான் அதை மறுத்து வெளியே வந்தேன்.

என் தலையில் இங்கும் சண்டைதான் எழுதியிருந்தது.

தலைப்பாகையை எடுக்கச் சொன்ன ரகசியம் என்ன என்பதை அப்துல்லா ஸேட் எனக்கு விளக்கினுர்: முகம்மதிய உடை அணிந்துகொள்பவன் தன் முகம்மதியத் தலைப்பாகையை அணிந்து கொள்ளலாம்; மற்ற இந்தியர்கள் கோர்ட்டுக்குள் போகும்போது தலைப்பாகையை எடுத்துவிடவேண்டும்.

இந்த நிலையில் தலைப்பாகை அணிந்துகொள்வது சங்கடமான பிரச்னையாகிவிட்டது. தலைப்பாகையை எடுப்பது என்ருல் மான பங்கத்தைப் பொறுத்துக்கொள்வது என்று அர்த்தம். ஆகவே நான் ஓர் உபாயம் செய்ய யோசித்தேன்: இந்தியத் தலைப்பாகையை எடுத்துவிட்டு ஆங்கிலத் தொப்பியை அணிந்துகொள்வது. அதை எடுப்பதனுல் மானபங்கம் என்ற பிரச்னையே எழாது. நானும் இந்தச் சச்சரவிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம்.

ஆனுல் அப்துல்லா ஸேட்டுக்கு இந்த உபாயம் பிடிக்கவில்லை. "நீங்கள் இந்தச் சமயத்தில் இப்படி மாறுதல் செய்தால் அதற்கு விபரீதமான பலன் ஏற்படும். நாட்டுத் தலைப்பாகையை அணிந்து கொள்ள விரும்புகிறவர்களின் நிலைமை அப்போது தொங்கலிலே இருக்கும். மேலும் உங்கள் தலைக்கு நம்முடைய தேசத்துத் தலைப்பாகைதான் அழகாக இருக்கிறது. நீங்கள் ஆங்கிலத் தொப்பி அணிந்தால் ஜனங்கள் உங்களை ஹோட்டல் வேலைக்காரன் என்று நினைப்பார்கள்" என்று அவர் சொன்னுர்.

இந்த வார்த்தைகளில் உலக அறிவும் தேசாபிமானமும் சிறிது குறுகிய நோக்கமும் இருந்தன. மொத்தத்தில் அப்துல்லா ஸேட்டின் பேச்சு எனக்குச் சரி என்றே தோன்றிற்று. நான் இந்தத் தலைப்பாகைச் சம்பவத்தைப்பற்றி, தலைப்பாகையையும் என் கட்சியையும் ஆதரித்துப் பத்திரிகைகளில் எழுதினேன். பத்திரிகைகளில் அது விஷயமாகப் பெரிய விவாதம் நிகழ்ந்தது. 'Unwelcome visitor' 'அழையாத விருந்தாளி' என்று பத்திரிகைகள் என்னை அழைத்தன. மூன்று நான்கு நாட்களுக்குள்ளே தென்னுப்பிரிக்காவில் அநாயாசமாக எனக்குப் புகழ் கிடைத்தது. சிலர் என் கட்சியை ஆதரித்தார்கள். சிலர் என் அதிகப் பிரசங்கித்தனத்தை ஆத்திரம் தீரக் கண்டித்தார்கள்.

அப்துல்லா ஸேட்டுக்கு எனக்காக வேலை தேட அதிக நேரம் பிடிக்கவில்லை. அவருடைய வழக்குக்காக நான் பிரிடோரியாவில் இருப்பது அவசியமாக இருந்தது.

ஏழாம் நாளோ எட்டாம் நாளோ நான் டர்பனிலிருந்து புறப்பட்டேன். எனக்கு முதல் வகுப்பு டிக்கட் வாங்கியிருந்தனர். தூங்கும் இடத்துக்காக 5 ஷில்லிங் கொடுத்துத் தனி

டிக்கட் வாங்கவேண்டும். அப்துல்லா ஸேட் என்னிடம் வற்புறுத்தித் தூங்கும் இடத்துக்கும் டிக்கட் வாங்கிக்கொள்ளச் சொன்னார். நான் கொஞ்சம் பிடிவாதத்திலும் கொஞ்சம் வெறியிலும் அந்த ஷில்லிங்குகளை மீத்தலாம் என்ற நினைவிலும் அதை மறுத்துவிட்டேன்.

"இதோ பாருங்கள்: இது வேறு தேசம்; இந்தியா அல்ல. ஆண்டவன் அருளில் நமக்கு ஒன்றும் குறைவில்லை. நீங்கள் பணத்தைப்பற்றி ஒன்றும் யோசிக்கவேண்டாம். உங்கள் சுகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்துகொள்ளுங்கள்" என்று அவர் எனக்கு எச்சரித்தார். நான் அவருக்கு வந்தனம் செய்து, "நீங்கள் என்னைப்பற்றிக் கவலைப்படவேண்டாம்" என்று சொன்னேன்.

நேட்டாலின் ராஜதானியான மேரிட்ஸ்பர்க்குக்கு வண்டி இரவு சுமார் ஒன்பது மணிக்குப் போயிற்று. அங்கே தூங்குகிறவர்களுக்குப் படுக்கை கொடுப்பார்கள். ஒரு ரெயில்வே வேலைக்காரன் என்னிடம் வந்து, "உங்களுக்குப் படுக்கை வேண்டுமா?" என்று கேட்டான்.

"என்னிடம் படுக்கை இருக்கிறது" என்று சொன்னேன்.

அவன் போய்விட்டான். பிறகு ஒரு பிரயாணி வந்தான். அவன் என்னை உற்றுப் பார்த்தான். நான் இந்தியன் என்பதைக் கண்டு திடுக்கிட்டான். வெளியே போய் இரண்டொரு சிப்பந்திகளை அழைத்துக்கொண்டு வந்தான். யாரும் என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. கடைசியில் ஓர் ஆபீஸர் வந்தான். "எழுந்திரு. நீ வேறு பெட்டிக்குப் போகவேண்டும்" என்று அவன் சொன்னான்.

"என்னிடம் முதல் வகுப்பு டிக்கட் இருக்கிறதே."

"அதைப்பற்றி அக்கறை இல்லை. நான் உன்னிடம் சொல்லுகிறேன்: நீ கடைசிப் பெட்டியில் போய் உட்காரவேண்டும்."

"நான் சொல்லுகிறேன்: டர்பனிலிருந்து இதே பெட்டியில் உட்கார்ந்துகொண்டு வருகிறேன். இதிலேயே போக விரும்புகிறேன்."

"இது முடியாது. நீ இறங்கவேண்டும். இல்லாவிட்டால் சிப்பாய் வந்து உன்னை இறக்குவான்."

"சரிதான். சிப்பாயே வந்து என்னை இறக்கட்டும்; நானாக இறங்கமாட்டேன்."

சிப்பாய் வந்தான். என் கையைப் பிடித்து நெட்டித் தள்ளி என்னைக் கீழே இறக்கினான். என் சாமான்களைக் கீழே எடுத்துப்

போட்டான். நான் வேறு பெட்டிக்குப் போக மறுத்தேன். வண்டி கிளம்பிவிட்டது. நான் 'வெயிட்டிங்' ரூமில் போய் உட்கார்ந்தேன். கைப்பையை என்னிடம் வைத்திருந்தேன். மற்றச் சாமான்களை நான் தொடவில்லை. ரெயில்வேக்காரர்கள் சாமான்களை எங்கோ எடுத்துவைத்தார்கள்.

குளிர்காலம். தென்னாப்பிரிக்காவில் உயரமான பிரதேசங்களில் குளிர் மிகவும் அதிகமாய் இருக்கும். மேரிட்ஸ்பர்க் உயரமான இடம். ஆதலால் அங்கே கடுமையான குளிர். என் 'ஓவர் கோட்டு' சாமான்களோடு தங்கிவிட்டது. சாமான்களைக் கேட்க எனக்குத் தைரியம் இல்லை. மறுபடியும் ஏதாவது அவமதிப்பு நேருமோ என்ற எண்ணம். குளிரில் நடுங்கி ஒடுங்கிக்கொண்டிருந்தேன். அறையில் வெளிச்சம் இல்லை. நள்ளிரவில் ஒரு பிரயாணி வந்தான். அவனைப் பார்த்தால் என்னோடு ஏதோ பேச விரும்பினாற் போலத் தோன்றியது. ஆனால் என் மனம் பேசும் நிலையிலே இல்லை.

நான் சிந்திக்கலானேன்: 'என் கடமை என்ன? ஒன்று, என் உரிமைகளுக்காக நான் போராடவேண்டும். அல்லது, திரும்பிப் போய்விட வேண்டும். அப்படி இல்லையா, இந்த அவமதிப்புக்களைப் பொறுத்துக்கொண்டு பிரிடோரியாவுக்குப் போய் வழக்கை முடித்துக்கொண்டு ஊருக்குப் போய்விடவேண்டும். வழக்கை அரைகுறையாக விட்டு ஓடிப்போவது பயங்கொள்ளித்தனம். என் விஷயத்தில் நடக்கும் இந்த அவமதிப்பு வெறும் வெளிக் காயந்தான்; உள்ளுக்குள்ளேயே பரவிய ஒரு பெரு வியாதியின் வெளிப்படையான அடையாளம் இது. நிறத் துவேஷந்தான் இந்தப் பெரும் நோய். இந்த ஆழ்ந்த நோயைக் களைந்து எறியும் சாமர்த்தியம் இருந்தால் அதை உபயோகிக்கவேண்டும். அதற்காக எவ்வளவு கஷ்டங்களும் துன்பங்களும் நேர்ந்தாலும் பொறுத்துக்கொள்ள வேண்டும். நிறத் துவேஷத்தைப் போக்கும் செயலோடு அதற்கு எந்த அளவில் தொடர்பு இருக்கிறதோ அந்த அளவுக்கு இந்த அநியாயங்களை எதிர்க்கவேண்டும்.'

இவ்வாறு யோசித்து எப்படியாவது அடுத்த வண்டியில் போய்விடுவதென்று தீர்மானித்தேன்.

மறுநாள் காலையில் நான் ஜெனரல் மானேஜருக்குத் தந்தி மூலம் ஒரு நீண்ட புகார் கொடுத்தேன். அப்துல்லா ஸேட்டுக்கும் செய்தி அனுப்பினேன். அவர் உடனே ஜெனரல் மானேஜரைச் சந்தித்தார். ஜெனரல் மானேஜர் தன் ஆசாமிகளின் பக்கமாகத் தான் பேசினான். "ஆனால் காந்தியை ஒரு தொந்தரவும் இல்லா

மல் அவன் போகவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடு என்று ஸ்டேஷன் மாஸ்டருக்கு எழுதியிருக்கிறேன்" என்று சொன்னான்.

அப்துல்லா ஸேட் மேரிட்ஸ்பர்க்கிலுள்ள ஹிந்து வியாபாரிகளுக்கும் என்னைச் சந்தித்து எனக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யுமாறு தந்தி கொடுத்திருந்தார். மற்ற ஸ்டேஷன்களுக்கும் இவ்வாறே தந்தி கொடுத்திருந்தார். ஆகவே வியாபாரிகள் ஸ்டேஷனில் என்னைப் பார்க்க வந்தார்கள். அவர்கள் தமக்கு நேரும் அவமதிப்புக்களைப்பற்றி என்னிடம் விவரித்ததோடு, "உங்கள் விஷயத்திலே நடந்தது ஒன்றும் புதிதல்ல. முதல் வகுப்பிலும் இரண்டாம் வகுப்பிலும் பிரயாணம் செய்யும் இந்தியர்களை ரெயில்வேச் சிப்பந்திகள் மட்டுமல்ல, ஐரோப்பியப் பிரயாணிகளும் துன்புறுத்துவது சகஜம்" என்று சொன்னார்கள். அன்று பகல் முழுவதும், இந்தப் பேச்சுக்களைக் கேட்பதிலேயே கழிந்தது. இருட்டியதும் வண்டி வந்தது. எனக்கு இடம் தயாராக இருந்தது. டர்பனில் தூங்கும் இடத்துக்காக எந்த டிக்கட்டை வேண்டாம் என்று சொன்னேனோ அதை மேரிட்ஸ்பர்க்கில் வாங்கினேன். வண்டி என்னைச் சார்லஸ் டவுனுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தது. அதற்கு அப்புறம் குதிரை வண்டியில் பின்னும் கஷ்டங்கள் எனக்குக் காத்திருந்தன. கடைசியில் நான் ஜோஹான்ஸ்பர்க் போய்ச் சேர்ந்தேன். அங்கிருந்து மறுபடி ரெயில் மார்க்கமாகப் பிரிடோரியாவுக்குப் போனேன்.

## 16

### தொண்டுக்குப் பிள்ளையார்சுழி

1893-இல் தென்னாப்பிரிக்காவில் வாழும் இந்தியர்களின் நிலைமையைப்பற்றி நான் முற்றும்தெரிந்துகொண்டேன். ஆனால் பிரிடோரியாவில் இந்தியர்களோடு இதைப்பற்றி எப்போதாவது பேசுவதைத் தவிர நான் நேரடியாக இதுவரை ஒன்றும் செய்யவில்லை. வழக்கு வேலைகளில் ஒருபுறமும் தென்னாப்பிரிக்க இந்தியர்களின் துன்பங்களைப் போக்கும் முயற்சியில் மற்றொரு புறமும் ஆகிய இரண்டையும் ஒன்றாகச் செய்ய முடியாது என்று கண்டேன். இரண்டையும் நடத்த முயல்வது இரண்டுக்கும் நஷ்டமாக இருக்கும் என்று எனக்குத் தீர்மானமாகத் தெரிந்தது. இது 1894-இல் நடந்த சம்பவம். தென்னாப்பிரிக்காவுக்கு நான் எந்த வழக்குக்காக வந்தேனோ அது நல்லபடியாக முடிந்துவிட்டது. ஆதலால் நான் டர்பனுக்குத் திரும்பிவந்து அங்கிருந்து இந்தியாவுக்கு வர

ஆயத்தம் செய்தேன். அப்துல்லா ஸேட்டின் வீட்டில் எனக்குப் பிரிவு உபசாரம் நடந்துகொண்டிருந்தபோது யாரோ ஒருவர் 'நேட்டால் மர்க்குரி'யின் பிரதியொன்றை என்னிடம் கொண்டு வந்து கொடுத்தார். அதில் நேட்டால் சட்டசபையின் விவரம் வெளியாகியிருந்தது. அதில் இந்தியர்களின் வாக்குரிமைகளைப் பற்றிச் சில வரிகள் இருந்தன. இந்தியர்களின் வோட்டுரிமையைப் பறிக்கும் எண்ணத்தோடு நேட்டால் சர்க்கார் ஒரு மசோதாவைக் கொண்டுவர விரும்பியது. ஏற்கனவே இந்தியர்களுக்கு உரிமைகள் மிகக் குறைவு. இன்னும் கொஞ்சநஞ்சம் இருந்தவற்றையும் பறிப்பதற்கு இது ஆரம்பமாக இருந்தது. இதைப் பார்த்ததும் நான் இந்தியா போவதை நிறுத்திவிட்டேன்.

அன்று இரவே உட்கார்ந்து சட்டசபைக்கு அனுப்புவதற்கு ஒரு மகஜர் தயாரித்தேன். சட்டசபையின் நடவடிக்கைகளைச் சீக்கிரம் தொடங்கக்கூடாதென்று அரசாங்கத்துக்குத் தந்தி அடித்துக் கேட்டுக்கொண்டோம். உடனே ஸேட் அப்துல்லாவின் தலைமையில் ஒரு கமிட்டியை நியமித்து அவர் பெயராலேயே இந்தத் தந்தியை அனுப்பியிருந்தோம். இதன் பயனாக மசோதா சம்பந்தமான நடவடிக்கைகள் இரண்டு நாட்களுக்கு ஒத்திவைக்கப்பட்டன. தென்னாப்பிரிக்காவிலுள்ள சட்டசபைக்கு இந்தியர்களின் சார்பாக இவ்விதம் மகஜர் அனுப்பிய முதல் சந்தர்ப்பம் அதுதான். அதனால் மாறுதல் ஏற்படாமலில்லை; ஆனால் மசோதா நிறைவேறுவதைத் தடுக்க முடியவில்லை. இம்மாதிரியான கிளர்ச்சி செய்வது தென்னாப்பிரிக்காவில் வாழும் இந்தியர்களுக்கு இதுதான் முதல் தடவை. அதனால் சமூகம் முழுவதிலும் புதிய உத்ஸாக அலை பரவியது. ஒவ்வொரு நாளும் கூட்டங்கள் நடக்கும். அவற்றிற்கு ஜனங்கள் ஏராளமாக வருவார்கள். தேவைக்கு அதிகமான பணமும் சேர்ந்தது. எத்தனையோ பேர் தாமாக முன்வந்து ஊதியமின்றி வேலை செய்யவும் தயாரானார்கள். அவர்கள் நகல் எடுப்பார்கள்; சுற்றித் திரிந்து கையெழுத்துக்கள் வாங்குவார்கள்; இன்னும் மற்ற வேலைகளையும் செய்வார்கள். தாமாக வலியவந்து ஊழியம் புரிவதோடு பணமும் கொடுப்பவர்கள் சிலர் இருந்தார்கள். பழைய ஒப்பந்தக் கூலிகளின் சந்ததியார் மிகவும் ஊக்கத்தோடு இந்த இயக்கத்தில் பங்கு எடுத்துக்கொண்டார்கள். அவர்களுக்கு ஆங்கிலம் தெரியும்; கையெழுத்து நன்றாக இருக்கும். இரவும் பகலும் நகல்கள் எடுப்பது முதலிய வேலைகளை அவர்கள் உற்சாகமாகச் செய்தார்கள். ஒரு மாதத்துக்குள்ளேயே, அப்போது குடியேற்ற நாட்டு

மந்திரியாக இருந்த லார்டு ரிப்பன் பேருக்கு ஒரு மகஜர் பதினயி ரம் கையெழுத்துக்களோடு அனுப்பினோம். என் எதிர்ப்பின் தாத்காலிகமான வேலை இவ்வாறு முடிந்தது.

அப்போது நான் மறுபடி இந்தியாவுக்குத் திரும்ப அநுமதி கோரினேன். ஆனால் இந்தியர்களுக்கு இந்த இயக்கத்தில் மிகுந்த ஊக்கம் உண்டாகியிருந்ததனால் என்னைப் போகக்கூடாதென்று தடுத்தார்கள். "'இது அரசாங்கத்தின் முதல் அடி. இதைத் தடுக்காவிட்டால் கடைசியில் நம்முடைய வாழ்க்கையே ஒழிந்து போகும்' என்று நீங்கள் தாமே எங்களுக்குச் சொன்னீர்கள்? குடியேற்ற நாட்டு மந்திரி நம்முடைய வேண்டுகோளுக்குச் சரி யான பதிலே கொடுப்பார் என்று எப்படிச் சொல்ல முடியும்? எங்களுடைய உத்ஸாகத்தை நீங்கள் ஏற்கனவே பார்த்திருக்கி றீர்கள். வேலை செய்யவும் பணம் செலவழிக்கவும் நாங்கள் தயா ராக இருக்கிறோம். உருப்படியாக ஏதாவது செய்தாலொழிய இப் போது நடந்தது அவ்வளவும் வீணாகப் போகும். ஆகவே இந்தச் சமயத்தில் நீங்கள் இங்கே தங்குவதுதான் உங்கள் கடமை என்று நாங்கள் நினைக்கிறோம்" என்று அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய இந்த முறையீடு எனக்குப் பிடித்தது. இந்தியர் களின் நலன்களைக் காப்பதற்கு ஒரு ஸ்திரமான ஸ்தாபனம் ஏற் பட்டுவிட்டால் நல்லது என்று எனக்குத் தோன்றிற்று. மறுபடி இந்தக் காரணத்தினால் என்னுடைய பிரயாணம் தடைப்பட்டது. இந்த விதமாக மே, 1804-இல் 'நேட்டால் இந்தியன் காங்கிரஸ்' ஸ்தாபிதமாயிற்று. இறைவன் தென்னாப்பிரிக்காவில் என் வாழ்க் கைக்கு அடிகோலினான். இந்தியர்களின் சுயமரியாதைப் போராட் டத்துக்கு விதை விதைத்தான்.

காங்கிரஸின் ருசிகரமான சரித்திரத்தின் சில பகுதிகளை இங்கே விட்டுவிடுகிறேன். எப்படிப்பட்ட ஆபத்துக்களை எல் லாம் எதிர்க்க நேர்ந்தது என்பது அவற்றைப் படித்தால் தெரியும். அரசாங்க அதிகாரிகள் எந்த முறைகளில் காங்கிரஸ் ஸ்தாபனத் தைத் தாக்கினார்கள், அது அந்தத் தாக்குதல்களிலிருந்து மயி ரிழையிலே எப்படித் தப்பித்துக்கொண்டது என்பவை அவற் றிலே இருக்கின்றன. ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் இங்கே கட்டாயம் குறிப்பிடவேண்டும். நிகழ்ச்சியை மிகைப்படுத்திப் பேசும் பழக்கத்திலிருந்து இந்திய சமூகத்தை விடுவிப்பதற்கு முழு முயற்சி செய்தோம். தம்முடைய குற்றங்களை அவர்கள் தாமே கவனிக்கும்படியாகவும் யத்தனித்தோம். ஐரோப்பியரின் வாதங்களில் நல்லவையாகவும் தக்கவையாகவும் தோன்றிய

வற்றை மதித்தோம். ஐரோப்பியர்களோடு சமமாகவும் மரியாதையாகவும் ஒத்துழைக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் நேர்ந்தபோது உண்மையான உள்ளத்தோடு ஒத்துழைத்தோம். எங்கள் இயக்கத்தின் முழுச் செய்திகளையும் பத்திரிகைகளுக்கு அனுப்பினோம். பத்திரிகைகள் சில சமயங்களில் இந்தியர்களைத் தாக்கியபோது அவற்றிற்கு ஏற்ற பதிலும் அனுப்பிவந்தோம்.

# 17

## புயலுக்கு அறிகுறிகள்

நான் தென்னாப்பிரிக்காவுக்கு வந்து மூன்று வருஷங்கள் ஆகிவிட்டன. நான் ஜனங்களைத் தெரிந்துகொண்டிருந்தேன். அவர்கள் என்னைத் தெரிந்துகொண்டிருந்தார்கள். என் வக்கீல் தொழில் சாதாரணமாக நன்கு அமைந்துவிட்டது. ஜனங்களின் பொருட்டு நான் அங்கே இருப்பது அவசியம் என்பது நிச்சயமாகிவிட்டது. ஆகவே நான் வீடு திரும்பிக் குழந்தைகுட்டிகளை அழைத்துவந்து இங்கேயே நிலைத்துவிடத் தீர்மானித்தேன். 1896-இல் ஜனங்களிடம் ஆறு மாதத்துக்கு அநுமதி பெற்று இந்தியாவுக்கு வந்தேன். ஊரில் நான் ஆறு மாதங்களைக்கூடக் கழிக்கவில்லை. நேட்டாலிலிருந்து உடனே திரும்பி வருமாறு எனக்குக் 'கேபிள்' வந்தது. நான் திரும்பினேன். அப்துல்லா ஸேட் அப்பொழுது 'குர்லண்டு' என்று ஒரு ஸ்டீமர் வாங்கியிருந்தார். அந்தக் கப்பலிலேயே நான் குடும்பத்தோடு கட்டணம் கொடுக்காமலே புறப்பட்டு வரவேண்டும் என்று அவர் வற்புறுத்தினர். நான் நன்றியறிதலோடு அவருடைய எண்ணத்தைப் பூர்த்திசெய்தேன். டிஸம்பர் மாத முதலில் பம்பாயிலிருந்து இரண்டாம் தடவை நேட்டாலுக்குக் கப்பல் ஏறினேன். இந்தத் தடவை என்னோடு என் மனைவியும் இரு புதல்வர்களும் இருந்தார்கள். 'நாதரி' என்ற மற்றொரு ஸ்டீமரும் அதே காலத்தில் டர்பனுக்குப் புறப்பட்டது. இரு கப்பல்களிலும் சேர்த்து எண்ணூறு பிரயாணிகள் இருந்தனர். இவர்களில் பாதிப் பேர் டிரான்ஸ்வால் போகிறவர்கள்.

கப்பல் எந்தத் துறைமுகத்திலும் நிற்காமல் நேராக நேட்டால் போவதாக இருந்ததால் பதினெட்டு நாளைப் பிரயாணந்தான். நாங்கள் போய்ச் சேர்ந்ததுமே பெரும் புயல் வீசப்போகிறது என்பதற்கு அறிகுறிபோல, நாங்கள் நேட்டால் போகவேண்டிய தினத்துக்கு மூன்று நான்கு நாட்கள் முன்னால் கடலில் பெரும்

புயல் எழுந்தது. இந்தத் தென் பிரதேசத்தில் அதுகோடை மழைக் காலம். ஆதலால் தென்கடலில் சிறியவையும் பெரியவையுமான புயல்கள் அடிக்கடி வீசுவது உண்டு. வேகமான புயல் அடித்தது. பல நாட்கள் அடித்ததால் பிரயாணிகள் நடுங்கினார்கள்.

இந்தக் காட்சி அழகாக இருந்தது. துன்பத்தில் யாவரும் ஒன்றாகிவிட்டனர். வேற்றுமைகள் யாவற்றையும் மறந்தனர். உண்மையான உள்ளத்தோடு இறைவனைச் சிந்தித்தனர். ஹிந் துக்களும் முகம்மதியர்களும் எல்லாரும் ஒன்று சேர்ந்து ஆண்டவனைத் துதித்தனர். எத்தனையோ பேர் பிரார்த்தனைகள் செய்து கொண்டார்கள். காப்டனும் பிரயாணிகளிடம் வந்து, "புயல் வேகமாக அடித்தாலும் இதைவிடப் பெரிய பெரிய புயல்களை நான் பார்த்திருக்கிறேன். கப்பல் உறுதியாக இருந்தால் திடீரென்று மூழ்காது" என்று ஆறுதல் கூறினான். இவ்விதம் அவன் பிரயாணிகளைத் தேற்றியும் யாருக்கும் சமாதானம் உண்டாக வில்லை. கப்பல் எங்கோ முறிந்துவிட்டாற்போலவும் எங்கோ ஓட்டை உண்டாகிவிட்டாற்போலவும் பிரயாணிகள் கூவினார் கள். "இதோ கவிழப் போகிறது" என்று நினைக்கும்படியாகக் கப்பல் ஆடியது. மேல்தளத்தில் நிற்பதே சிரமமாக இருந்தது.

இதே கவலையில் 24 மணி நேரம் கழிந்ததாக எனக்கு ஞாபகம். கடைசியில் மேகங்கள் கலைந்தன. சூரியநாராயணன் தரிசனம் அளித்தான். "இனிமேல் புயல் ஓய்ந்துவிட்டது" என்றான் காப்டன். ஜனங்களின் முகத்தில் இருந்த கவலை நீங்கியது. அதனோடுகூடவே இறைவனும் எங்கோ மறைந்துபோனான். மரண பயம் நீங்கியவுடனே மறுபடி ஆடல் பாடல்களும் சாப்பாடும் ஆரம்பமாயின. அவர்களை மாயைத்திரை சூழ்ந்துகொண்டது. இப்பொழுதும் நமாஜ் படித்தார்கள்; பஜனைகள் செய்தார்கள்; ஆனால் புயல் அடித்தபோது அவர்களிடம் தென்பட்ட உருக்கம் இல்லை.

இந்தப் புயலினால் நான் பிரயாணிகளோடு கலந்து ஒன்றிப் போனேன். எனக்குப் புயலைப்பற்றிய பயம் இல்லை என்றோ மிகவும் குறைவாக இருந்தது என்றோ சொல்லலாம். இத்தகைய புயல்களை நான் ஏற்கனவே பார்த்திருந்தேன். கப்பலில் என் மனம் அலுத்ததில்லை. மயக்கம் வருவதில்லை. ஆதலால் நான் பிரயாணிகளிடையே அச்சமின்றித் திரிய முடிந்தது. அவர்களுக்கு ஆறுதல் கூறி, காப்டனின் செய்தியைத் தெரிவித்தேன். இந்த நட்புத் தளை பிற்காலத்தில் எனக்கு மிகவும் உபயோகப்பட்டது. டிஸம்பர் 18-ஆம் தேதியோ 19-ஆம் தேதியோ டர்பன் துறை

முகத்தில் கப்பல் நங்கூரம் பாய்ச்சியது. 'நாதரி'யும் அன்றே வந்து சேர்ந்தது. ஆனால் உண்மையான புயலை எதிர்ப்பது இனி மேல்தான் பாக்கியாக இருந்தது.

# 18

## உரைகல்

இருபத்துமூன்று நாட்கள் வைத்தியப் பரிசோதனைக்குப் பிறகு அதாவது ஜனவரி 13-ஆம் தேதி கப்பலைத் துறைமுகத்துக்குக் கொண்டுவர அநுமதி கிடைத்தது. 'பிரயாணிகள் இறங்கலாம்' என்ற உத்தரவு வெளியாயிற்று. கப்பல் துறைக்கு வந்தது. பிரயாணிகள் இறங்கினார்கள். ஆனால் என் விஷயத்தில் தென்னாப்பிரிக்க அரசாங்கத்தின் அங்கத்தினரான மிஸ்டர் எஸ்கம்ப், "காந்தியையும் அவருடைய குழந்தை குட்டிகளையும் சாயந்தரம் இறக்குங்கள். வெள்ளைக்காரர்கள் அவருக்கு விரோதமாக வெறிகொண்டிருக்கிறார்கள். அவருடைய உயிருக்கு ஆபத்து. துறைமுக ஸூபரின்டெண்டெண்ட் மிஸ்டர் டாட்டம் அவரைச் சாயங்காலம் அழைத்துக்கொண்டு போவார்" என்று காப்டனுக்குச் சொல்லி அனுப்பினார்.

காப்டன் இந்தச் செய்தியை என்னிடம் சொன்னான். நான் அதன்படி நடக்க ஒப்புக்கொண்டேன். ஆனால் இந்தச் செய்தி வந்து அரைமணி நேரங்கூட ஆகியிராது. அதற்குள் மிஸ்டர் லாட்டன் வந்து காப்டனிடம், "மிஸ்டர் காந்தி என்னோடு வர விரும்பினால் என் பொறுப்பில் அவரை அழைத்துப்போக விரும்புகிறேன். கப்பலின் ஏஜெண்டினுடைய வக்கீல் என்ற ஹோதாவில் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: மிஸ்டர் காந்தியின் விஷயமாக உங்களுக்குக் கிடைத்த செய்தியிலிருந்து உண்டான பொறுப்பிலிருந்து உங்களை நான் விடுவிக்கிறேன்" என்று சொன்னார். பிறகு அவர் என்னிடம் வந்து, "உங்களுக்கு உயிர்ப் பயம் இல்லை என்றால் ஸ்ரீமதி காந்தியையும் குழந்தைகளையும் வண்டியில் ருஸ்தம்ஜீ ஸேட்டின் வீட்டுக்கு அனுப்பிவிட்டு, நீங்களும் நானும் பொதுவழியே நடந்து செல்வோம். இருட்டிய பிறகு ரகசியமாக நகரத்துக்குள் செல்வது எனக்கு அடியோடு பிடிக்கவில்லை. இப்போது நாலுபுறமும் அமைதியாக இருக்கிறது. வெள்ளைக்காரர்கள் இங்கும் அங்குமாகச் சிதறி இருக்கிறார்கள். நீங்கள் இப்படி மறைந்து செல்வது உசிதமல்ல என்பது என் அபிப்பிராயம்" என்று சொன்னார்.

நான் அதற்கு ஒப்புக்கொண்டேன். என் மனைவியும் குழந்தைகளும் ருஸ்தம்ஜீயின் வீட்டுக்கு வண்டியில் சௌக்கியமாகப் போய்ச் சேர்ந்தார்கள். நான் காப்டனிடம் விடைபெற்று மிஸ்டர் லாட்டனோடு கப்பலிலிருந்து இறங்கினேன். ருஸ்தம்ஜீயின் வீடு அங்கிருந்து சுமார் இரண்டுமைல் தூரம் இருந்தது.

நாங்கள் கப்பலிலிருந்து இறங்கியபோதே சில வெள்ளைக்காரப் பையன்கள் என்னைக் கண்டுபிடித்துக்கொண்டு, "காந்தி, காந்தி" என்று கத்தினார்கள். உடனே நாலைந்துபேர் ஓடிவந்து அவர்களோடு உரக்கச் சத்தம்போட்டார்கள். கும்பல் கூடுவதைக் கண்ட மிஸ்டர் லாட்டன் ரிக்ஷா வரவழைத்தார். எனக்கு ரிக்ஷாவில் உட்காருவது எப்போதுமே பிடிக்காது. முதல் முறையாக அதில் உட்காருவதாக இருந்தேன். ஆனால் பையன்கள் உட்கார விட்டால்தானே? அவர்கள் ரிக்ஷாக்காரனை மிரட்டித் துரத்தி விட்டார்கள்.

நாங்கள் முன்னேறினோம். கும்பலும் வளர்ந்துகொண்டே இருந்தது. மேலே நடப்பது அசாத்தியமாகிவிட்டது. முதல் முதலில் கூட்டம் மிஸ்டர் லாட்டனை என்னிடமிருந்து அப்புறப் படுத்தியது. பிறகு என்மீது கற்களும் அழுகிய முட்டைகளும் மழையாகப் பொழிந்தன. எவனோ ஒருவன் என் தலைப்பாகையையும் கீழே தள்ளினான். எனக்கு உதைகள் விழலாயின.

எனக்கு மயக்கம் வந்துவிட்டது. பக்கத்தில் இருந்த வீட்டின் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு சமாளித்துக்கொண்டேன். ஆனால் நிற்க முடியவில்லை. இப்பொழுதும் உதைகள் விழுந்த வண்ணமாகவே இருந்தன.

இதற்குள் போலீஸ் ஸுபரின்டெண்டெண்டின் மனைவியார் அவ்வழியே போனார். அவருக்கு என்னைத் தெரியும். என்னைப் பார்த்ததுமே அவர் என் அருகில் வந்து நின்று, வெயில் இல்லாதிருந்தும் தமது குடையை எனக்கு எதிரே பிடித்தார். இதனால் கூட்டம் சிறிது அடங்கியது. அவர்கள் என்னை அடித்தாலும் மிஸஸ் அலெக்ஸாண்டர்மேல் படாமல் அடிக்கவேண்டியிருந்தது.

இதனிடையே நான் தாக்குண்டதைக் கண்ட எவனோ ஓர் இந்தியன் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடியிருந்தான். ஸுபரின்டெண்டெண்ட் அலெக்ஸாண்டர் ஒரு போலீஸ்படையை என்னைக் காப்பதற்கு அனுப்பினார். சமயத்தில் அது வந்து சேர்ந்தது. என் வழி போலீஸ் ஸ்டேஷனைத் தாண்டியே சென்றது. ஸுபரின்டெண்டெண்ட் என்னைப் போலீஸ் ஸ்டேஷனில் தங்கச் சொன்னார். நான் அதை மறுத்துவிட்டேன். "அவர்கள் தங்கள் பிழையை

அறிந்ததும் சாந்தம் அடைவார்கள். அவர்களுடைய நியாய புத்தியில் எனக்கு நம்பிக்கை உண்டு'' என்று சொன்னேன்.

போலீஸ் காவலில் நான் பத்திரமாக ருஸ்தம்ஜீயின் வீடு போய்ச் சேர்ந்தேன். முதுகில் எனக்குக் காயம் பட்டிருந்தது. ஓர் இடத்தில்தான் பலத்த காயம். கப்பல் டாக்டர் தாதி பர்ஜோர் அங்கேயே இருந்தார். அவர் எனக்கு நன்றாகச் சுச்ரூஷை செய்தார். வீட்டினுள்ளே அமைதி நிலவியிருந்தது. ஆனால் வெளியே வெள்ளைக்காரர்கள் சூழ்ந்துகொண்டிருந்தனர். சாயந்தரம் ஆயிற்று. இருட்டியது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் வெளியே கொம்மாளம் அடித்துக்கொண்டு, "காந்தியை எங்களிடம் ஒப்பித்துவிடுங்கள்'' என்று கூச்சலிட்டனர். நிலைமை எக்கச்சக்கமாக இருப்பதைக் கண்டு ஸூப்பரின்டெண்டெண்ட் அலெக்ஸாண்டர் கும்பலை மிரட்டலினால் அல்ல, வேடிக்கையும் விளையாட்டும் செய்துகொண்டே தம் வசத்தில் வைத்திருந்தார்.

ஆயினும் அவர் கவலையற்று இருக்கவில்லை. "நீங்கள் உங்கள் நண்பரின் உயிரையும் சொத்துக்களையும் வீட்டையும் உங்கள் குழந்தைகளையும் காப்பாற்ற விரும்பினால் நான் சொல்லுகிறபடி மறைவாக இந்த வீட்டை விட்டு வெளியே போய் விட வேண்டும்'' என்று அவர் எனக்குச் செய்தி அனுப்பினார். அவருடைய ஏற்பாட்டின்படி நான் இந்தியச் சிப்பாயின் உடை அணிந்தேன். தலையில் காயம் படாமலிருக்க, ஒரு பித்தளைத் தட்டை வைத்துக்கொண்டு, அதன்மீது தமிழர்களைப்போல நீண்ட தலைப்பாகையைச் சுற்றிக்கொண்டேன். என்னோடு ரகசியப் போலீஸார் இருவர் இருந்தனர். அவர்களில் ஒருவன் இந்திய வியாபாரியாக மாறுவேஷம் பூண்டிருந்தான். முகத்துக்கு வர்ணம் பூசி இந்தியரின் முகத்தைப்போலச் செய்துகொண்டிருந்தான். மற்றொருவன் என்ன வேஷம் போட்டிருந்தானோ, எனக்கு ஞாபகம் இல்லை. நாங்கள் அருகிலிருந்த சந்து வழியாகப் பக்கத்துக் கடைக்குப் போய் அங்கே கிடங்கில் குவித்திருந்த கோணிப்பைகளின் வழியே இருட்டில் தப்பித்துக்கொண்டு வாசற்பக்கமாக வந்து கூட்டத்தைத் தாண்டி வெளியே போய்விட்டோம். தெருக் கோடியில் வண்டி தயாராக இருந்தது. அதில் உட்கார்ந்து, அலெக்ஸாண்டர் முன்னால் என்னைத் தங்கச் சொன்ன அந்தப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்தோம். அவருக்கும் ரகசியப் போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கும் நான் நன்றி செலுத்தினேன். இவ்வாறு ஒருபுறம் நான் வேறு இடத்துக்குப் போகிறபோது ஸூப்பரின்டெண்டெண்ட் அலெக்ஸாண்டர்,

"அந்தப் புளிய மரத்தின் மேலே
காந்தியைப் பிடிச்சுத் தூக்கிடுவோமே!"

என்று பாடி ஜனங்களைச் சந்தோஷப்படுத்திக்கொண் டிருந்தார்.

நான் சௌக்கியமாகப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்த செய்தி கிடைத்ததும், அவர் கூட்டத்தைப் பார்த்து, "இப்போது என்ன செய்வது! நீங்கள் வேட்டையாட விரும்பும் பொருள் இந்தக் கடைவழியே பத்திரமாக நழுவிவிட்டது" என்றார். இதைக் கேட்டதும் கூட்டத்தில் சிலர் கோபம் கொண் டனர். சிலர் சிரித்தனர். மற்றும் பலர் அவர் பேச்சை நம்பவே இல்லை.

"அப்படியானால் உங்களில் யாராவது உள்ளே போய்ப் பார்த்துக்கொள்ளுங்கள். காந்தி அங்கே இருந்தால் அவரை உங்க ளிடம் ஒப்பித்துவிடுகிறேன். இல்லாவிட்டால் நீங்கள் உங்கள் வீட்டுக்குப் போய்விடவேண்டும். நீங்கள் பார்ஸி ருஸ்தம்ஜியின் வீட்டைக் கொளுத்தமாட்டீர்கள்; காந்தியின் குழந்தைகுட்டி களுக்குத் தீங்கு செய்யமாட்டீர்கள் என்று மட்டும் எனக்கு நம்பிக்கை உண்டு" என்று அவர் சொன்னார்.

கூட்டம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தது. அவர்கள் உள்ளே போய்வந்து கூட்டத்துக்கு ஏமாற்றச் செய்தியைத் தெரி வித்தார்கள். ஸூபரின்டெண்டெண்ட் அலெக்ஸாண்டரின் சமயோசிதமான சாமர்த்தியத்தையும் கெட்டிக்காரத்தனத்தையும் எல்லோரும் புகழ்ந்துகொண்டும், சிலர் மனத்துக்குள்ளேயே குமுறிக்கொண்டும் வீட்டுக்குத் திரும்பிப் போனார்கள்.

காலஞ்சென்ற மிஸ்டர் சேம்பர்லேன் தென்னாப்பிரிக்க அதிகாரிகளுக்கு, "காந்தியைத் தாக்கியவர்கள்மீது வழக்குத் தொடர்ந்து அவருக்கு நியாயம் கிடைக்கச் செய்யவேண்டும்" என்று தந்தி அடித்தார். மிஸ்டர் எஸ்கம்ப் என்னைக் கூப்பிட்டு அனுப்பினார். எனக்கு ஏற்பட்ட காயங்களுக்காக வருத்தப்பட் டுக்கொண்டு, "உங்களுக்குச் சிறிது துன்பம் நேர்ந்தாலும் எனக் குச் சந்தோஷம் உண்டாகாது என்பதை நீங்கள் அவசியம் ஒப்புக் கொள்வீர்கள். மிஸ்டர் லாட்டன் சொன்னதைக் கேட்டு நீங்கள் உடனே துணிச்சலாக இறங்கினீர்கள். உங்களுக்கு அந்த உரிமை உண்டு. ஆனால் என் செய்திக்கேற்பத் தாங்கள் நடந்துகொண் டிருந்தால் இந்தத் துன்பகரமான சம்பவம் நேர்ந்திராது. உங்க ளைத் தாக்கியவர்களை நீங்கள் அடையாளம் கண்டுபிடிக்க முடியு மானால், நான் அவர்களைக் கைது செய்து வழக்கு நடத்தத் தயா

ராய் இருக்கிறேன். மிஸ்டர் சேம்பர்லேனும் இப்படித்தான் விரும்புகிறார்" என்று சொன்னார்.

"நான் யார்மீதும் வழக்கு நடத்த விரும்பவில்லை. தாக்கியவர்களில் இரண்டொருவரை நான் அடையாளம் கண்டுபிடித்தாலுங்கூட அவர்களைத் தண்டிக்க வைப்பதால் எனக்கு என்ன லாபம்? மேலும் நான் அவர்களைக் குற்றவாளிகளாக நினைக்கவே இல்லை. நான் இந்தியாவில் நேட்டால் வெள்ளைக்காரர்களைப் பற்றி மனம்போனபடி மிகவும் கேவலமாக வைததாக அந்த அப்பாவிகளிடம் யாரோ சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் இதை நம்பிக் கோபம் கொண்டால் இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? தவறு மேலே உள்ளவர்களுடையது. இன்னும் நான் சொல்லப்போனால், அது உங்களுடைய தவறு. ஜனங்களுக்கு நீங்கள் சரியான யோசனை சொல்லியிருக்கலாம். ஆனால் நீங்கள் ராய்ட்டர் தந்தியை நம்பினீர்கள். நான் உண்மையாகவே மிகைப்படுத்திக் கூறியதாக எண்ணினீர்கள். நான் யார் மீதும் வழக்கு நடத்த விரும்பவில்லை. அப்பட்டமான உண்மை ஜனங்களுக்குத் தெரியும்போது அவர்கள் தாமே வருந்துவார்கள்" என்று பதில் சொன்னேன்.

"அப்படியானால் இதை நீங்கள் எழுதிக் கொடுக்கிறீர்களா? மிஸ்டர் சேம்பர்லேனுக்கு நான் இதைப்பற்றித் தந்தி கொடுக்க வேண்டும். நீங்கள் அவசரத்தில் எதையும் எழுதிக் கொடுப்பதை நான் விரும்பவில்லை. மிஸ்டர் லாட்டனோடும் மற்ற நண்பர்களோடும் கலந்துகொண்டு உங்களுக்கு எது சரியென்று தோன்றுகிறதோ செய்யுங்கள். ஆனால் ஒன்று: உங்களைத் தாக்கியவர்கள் மீது நீங்கள் வழக்குத் தொடராமலிருந்தால் எல்லாவற்றையும் சாந்தமாக்குவதில் எனக்கு மிகுந்த உதவியாக இருக்கும். உங்கள் செல்வாக்கோ நிரம்ப வளரும்."

"இதைப்பற்றி என் யோசனைகள் நிச்சயமாகிவிட்டன. நான் யார்மீதும் வழக்குத் தொடர விரும்பவில்லை என்பது முடிவான பேச்சு. ஆகவே நான் இதே இடத்தில் உங்களுக்கு எழுதிக் கொடுத்துவிடுகிறேன்" என்று சொல்லி, தேவையான கடிதத்தை எழுதிக்கொடுத்தேன்.

நான் தாக்குண்டதற்கு இரண்டொரு நாட்கள் கழித்து எஸ்கம்பைச் சந்தித்தபோது நான் போலீஸ் ஸ்டேஷனிலேயே இருந்தேன். என் காவலுக்காக என்னோடு இரண்டொரு சேவகர்கள் இருந்துவந்தனர். ஆனால் உண்மையில் பார்க்கப்போனால்

மிஸ்டர் எஸ்கம்பிடம் என்னை அழைத்துப் போனபோது இவ்வாறு காவல்புரியவேண்டிய தேவையே இருக்கவில்லை.

நான் கப்பலிலிருந்து இறங்கிய அன்றே அதாவது மஞ்சள் கொடி இறங்கியதுமே, 'நேட்டால் அட்வைஸரி'ன் பிரதிநிதி என்னை வந்து பார்த்தான். என்னை எத்தனையோ கேள்விகள் கேட்டான். அவன் கேள்விகளுக்குப் பதிலாக நான் ஒவ்வொரு விஷயத்துக்கும் முழுப் பதில் சொல்லியிருந்தேன். ஸர் பிரோஸ்ஷாவின் நேர்மையான யோசனைக்கு இணங்கி, அப்பொழுது நான் இந்தியாவில் ஒரு பிரசங்கமாவது எழுதாமல் செய்ததில்லை. என் கட்டுரைகள், பிரசங்கங்கள் எல்லாவற்றின் தொகுதியும் என்னிடந்தான் இருந்தனவே. அவை யாவற்றையும் நான் அவனிடம் கொடுத்து, தென்னாப்பிரிக்காவில் பின்னும் கடுமையான சொற்களில் சொல்லாத எந்த விஷயத்தையும் நான் இந்தியாவில் பேசிவிடவில்லை என்பதை நிரூபித்தேன். "குர்லண்ட், நாதரி என்னும் கப்பல்களில் பிரயாணிகளை அழைத்து வந்ததில் என் ஒத்தாசை அடியோடு இல்லை. அவர்களில் பலர் நேட்டாலிலேயே பழமையாக வசிப்பவர்கள். மீதிப்பேர் நேட்டால்போகிறவர்களல்ல, அவர்கள் டிரான்ஸ்வாலுக்குப்போகிறவர்கள்" என்பவற்றையும் தெளிவாக்கினேன். அந்தக் காலத்தில் நேட்டாலில் வியாபாரம் மந்தம். டிரான்ஸ்வாலில் வியாபாரம் மிகுதி. வரும்படியும் நன்றாகக் கிடைத்து வந்தது. ஆதலால் பெரும்பாலான இந்தியர்கள் அங்கே போவதையே விரும்பினார்கள்.

இவ்வாறு விஷயத்தைத் தெளிவுபடுத்தியதனாலும் என்னைத் தாக்கியவர்கள்மீது வழக்குத் தொடராததனாலும் நல்ல பலன் ஏற்பட்டது. வெள்ளைக்காரர்களுக்கு வெட்கமாகப் போயிற்று. பத்திரிகைகள் என்னைக் குற்றமற்றவன் என்று கூறி, ரகளை செய்தவர்களைக் கண்டபடி திட்டின. இவ்விதமாகக் கடைசியில் இந்தச் சம்பவத்தினால் எனக்கு லாபமே உண்டாயிற்று. எனக்கு எது லாபமோ அது சமூகத்துக்கும் லாபம். இதனால் இந்தியர்களின் கௌரவம் உயர்ந்தது. சத்தியாக்கிரகத்துக்கு என் வழி மிகவும் சுலபமாயிற்று.

மூன்று நான்கு நாட்கள் கழித்து நான் வீடு திரும்பினேன். சிறிது நாட்களிலேயே என் வேலைகளைப் பார்க்கத் தொடங்கினேன்.

# 19

## தொண்டு உள்ளமும் எளிமையும்

என் வேலைகள் சரியாக நடந்து வந்தபோதிலும் அதனால் எனக்குத் திருப்தி உண்டாகவில்லை. வாழ்க்கை பின்னும் எளிமையாக இருக்கவேண்டும்; சரீரத்தால் ஏதாவது உதவி செய்யவேண்டும் என்று மனத்துக்குள் ஒரு போராட்டம் நடந்துகொண்டே இருந்தது.

தற்செயலாக ஒரு நாள் முடவனான ஒரு குஷ்டரோகி என் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். முதலில் எதையாவது சாப்பிடக் கொடுத்து அவனைத் துரத்திவிடலாம் என்று நினைத்தேன். ஆனால் அப்புறம் அவனை ஓர் அறையிலே கொண்டுவிட்டுப் புண்களைக் கழுவிப் பணிவிடை செய்தேன். ஆயினும் இது எத்தனை நாளைக்கு நடக்கும்! அவனை எப்பொழுதுமே வீட்டில் வைத்துக்கொள்ள வசதியும் இல்லை; தைரியமும் இல்லை. ஆதலால் அவனை ஒப்பந்தத் தொழிலாளிகளுக்கு ஏற்பட்ட அரசாங்க ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விட்டேன்.

ஆனால் இதனால் எனக்குத் திருப்தி ஏற்படவில்லை. இம் மாதிரியே ஏதாவது பணிவிடை எப்போதும் கிடைத்துக்கொண்டிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று தோன்றிற்று. டாக்டர் பூத் (Booth) என்பவர் ஸெயிண்ட் ஆடம்ஸ் மிஷனுக்குத் தலைவராக இருந்தார். எவன் வந்தாலும் அவர் எப்போதும் இலவசமாக மருந்து கொடுப்பார். ரொம்ப நல்லவர். அவர் உள்ளத்தில் அன்பு நிரம்பியிருந்தது. அவருடைய மேற்பார்வையில், பார்ஸி ருஸ்தம்ஜீயின் நன்கொடையைக் கொண்டு ஒரு சிறிய ஆஸ்பத்திரியை ஆரம்பித்தார்கள். அதில் நர்ஸாக வேலை செய்ய எனக்கு மிகுந்த விருப்பம் உண்டாயிற்று. தினம் ஒரு மணியிலிருந்து இரண்டுமணி வரையில் அங்கே மருந்து கொடுக்கும் வேலை இருந்தது. சம்பளமில்லாமலோ, தானாக முன்வந்தோ வேலைசெய்ய ஒரு கம்பவுண்டர் அங்கே வேண்டியிருந்தது. நான் அவ்வளவு காலம் என் வேலையைக் குறைத்துக்கொண்டு இந்த வேலையைச் செய்யத் தீர்மானித்தேன். காரியாலயத்தில் உட்கார்ந்துகொண்டே யோசனைகள் சொல்வது, தஸ்தாவேஜிகளுக்குக் குறிப்பு எழுதுவது, சச்சரவுகளைத் தீர்த்து வைப்பது - வக்கீல் சம்பந்தமான வேலை எனக்கு இவ்வளவுதான். மாஜிஸ்டிரேட்

கோர்ட்டில் ஏதோ சில வழக்குகள் இருக்கும். அவற்றில் பெரும் பான்மையானவை விவாதத்துக்கு இடமில்லாதனவாக இருக்கும். இந்த வழக்குகளை மிஸ்டர் கான் அந்தச் சமயங்களில் எனக்காக நடத்துவார். அவர் எனக்கு அப்புறம் வந்து என்னுடனேயே இருந்துவந்தார். அவருடைய இந்தக் கூட்டுறவினால் நான் இந்தச் சிறு ஆஸ்பத்திரியில் வேலை செய்யலானேன்.

தினமும் காலையில் அங்கே போகவேண்டியிருக்கும். போக வரவும் அங்கே வேலை செய்யவும் சுமார் இரண்டுமணி நேரம் பிடிக்கும். இந்தத் தொண்டினால் எனக்கு மன அமைதி கிடைத்தது. நோயாளிகளிடம் என்ன ஏது என்பதைக் கேட்டு டாக்டருக்குச் சொல்வதும் அவர் எழுதித் தரும் மருந்தைத் தயார் செய்து கொடுப்பதுமே என் வேலை. துன்புற்ற இந்தியர்களோடு நான் இந்த வேலையினால் நெருங்கிப் பழக முடிந்தது. அவர்களில் பெரும்பாலோர் தமிழர்களும் தெலுங்கர்களும் அல்லது ஒப்பந்தத் தொழிலாளிகள்.

இந்த அநுபவம் பிற்காலத்தில் எனக்கு மிகவும் உபயோகமாயிற்று. போயர் யுத்தத்தின்பொழுது காயம்பட்டவர்களுக்கும் மற்ற நோயாளிகளுக்கும் பணிவிடைகள் செய்ய இது எனக்கு மிகவும் பயன்பட்டது.

தொண்டிலே ஆர்வத்தோடுகூட என்னிடம் எளிமை எப்படி ஆரம்பமாயிற்று என்பதை இனிக் கவனிப்போம்.

நான் சுகபோகங்களை அநுபவிக்க ஆரம்பித்திருந்தது உண்மை. ஆனால் அது நீடித்து இருக்கவில்லை. புது மோஸ்தருக்கு வேண்டிய அலங்காரச் சாதனங்களையெல்லாம் நான் சேகரித்திருந்தேனே தவிர, அவற்றில் எனக்கு மோகம் உண்டாகவில்லை. ஆதலால் குடியும் குடித்தனமும் ஆரம்பித்தவுடனே, வேறு புறமாகச் செலவுகளைக் குறைக்கலானேன். வண்ணான் செலவும் அதிகமாகத் தோன்றியது. மேலும் வண்ணான் துணிகளைச் சரியாகக் கொண்டுவராததால் இரண்டு மூன்று டஜன் சட்டைகளும் அவ்வளவு காலர்களும் இருந்தாலும் போதவில்லை. காலரைத் தினமும் மாற்றிக்கொள்வேன்; சட்டையைத் தினமும் இல்லாவிட்டாலும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் கட்டாயம் மாற்றுவேன். இதனால் செலவு இரட்டிப்பு ஆயிற்று. இது எனக்கு வீண் என்று தோன்றிற்று. வீட்டிலேயே சலவைக் கருவிகள் வாங்கினேன். சலவைத் தொழிலைப்பற்றிப் புத்தகத்தில் படித்து நான் கற்றுக்கொண்டதோடு மனைவிக்கும் கற்றுக்கொடுத்தேன்.

வேலைப் பளு இதனால் அதிகமானாலும் இது புதுத் தொழிலாக இருந்ததால் மனத்துக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

முதல் முதலில் நான் காலர் வெளுத்ததை எப்போதும் மறக்க முடியாது. அதில் பசை அதிகமாக இருந்தது. இஸ்திரிப் பெட்டி போதுமான அளவு சூடாக இல்லை. மேலும், காலர் எரிந்து போகுமோ என்ற பயத்தில் சரியாக அழுத்தி இஸ்திரிச் செய்ய வில்லை. அதனால் காலர் முற்றுமுறப்பாக இருந்துங்கூட அதி லிருந்து பசை உதிர்ந்துகொண்டே இருந்தது.

அந்தக் காலரைப் போட்டுக்கொண்டே நான் கோர்ட்டுக்குப் போனேன். இதர பாரிஸ்டர்களின் பரிகாசத்துக்கு ஆளானேன். ஆனால், இத்தகைய நையாண்டிகளைப் பொறுத்துக்கொள்ளும் தன்மை என்னிடம் அந்தக் காலத்திலும் குறைவாக இல்லை.

"காலரை என் கையால் வெளுக்கும் முதல் முயற்சி இதுதான். ஆதலால் அதிலிருந்து பசை உதிருகிறது. ஆனால் இதனால் எனக்கு ஒன்றும் தொந்தரவாக இல்லை. மேலும் உங்கள் எல்லோருக்கும் இவ்வளவு மகிழ்ச்சிக்குக் காரணமாயிருந்தது விசேஷம்" என்று சொன்னேன்.

"இங்கே வண்ணான்கள் கிடைக்கவில்லையா?" என்று ஒரு நண்பர் கேட்டார்.

"சலவைக் கூலியை என்னால் தாங்க முடியவில்லை. காலருக்கு எவ்வளவு விலையோ அவ்வளவு சலவைக் கூலியாகிறது. போதாக் குறைக்கு வண்ணானுக்கு வேறு தோப்புக்கரணம் போடவேண்டி யிருக்கிறது. அதைவிட வீட்டிலேயே சலவை செய்துகொள்வ தைத்தான் நான் விரும்புகிறேன்."

ஆனால் இந்தத் தன்னம்பிக்கையின் பெருமையை நண்பர்களுக் குத் தெரியும்படி என்னால் சொல்ல முடியவில்லை.

கடைசியில் நான் எனக்கு வேண்டிய துணிகளைச் சலவை செய்வதில் கெட்டிக்காரனாகிவிட்டேன். வண்ணான் சலவையை விட வீட்டுச் சலவை எவ்வகையிலும் தாழ்ந்ததாக இல்லை. காலரின் பிகுவும் பளபளப்பும் வண்ணான் வெளுத்த காலரை விட எவ்வகையிலும் குறைவாக இல்லை.

கோகலேயிடம் ஸ்வர்க்கிய மகாதேவ கோவிந்த ரானடேயின் அன்புப் பரிசான துப்பட்டா ஒன்று இருந்தது. கோகலே அதை மிகவும் ஜாக்கிரதையாக வைத்திருந்து விசேஷ சந்தர்ப்பங்களில் மட்டுமே உபயோகித்துவந்தார். ஜோஹான்ஸ்பர்க்கில் அவர் வரவேற்பையொட்டி நடந்த விருந்து, மிகவும் முக்கியமான சந்தர்ப்பம். தென்னாப்பிரிக்காவில் அவர் செய்த மிகப் பெரிய

பிரசங்கம் இதுதான். ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் அந்தத் துப்பட்டாவை அணிந்துகொள்ள விரும்பினர். அதில் மடிப்புக்கள் விழுந்திருந்தன. இஸ்தரிச் செய்வது அவசியமாய் இருந்தது. வண்ணனிடம் அனுப்பி அதைக் கையோடு இஸ்தரிச் செய்துகொண்டுவருவது சாத்தியமாக இல்லை. "என் வித்தையை யும் கொஞ்சம் பாருங்களேன்" என்று நான் சொன்னேன்.

"வக்கீல் தொழிலில் நீ சொல்வதை நான் நம்ப முடியும். ஆனால் இந்தத் துப்பட்டாவை உன்னிடம் வெளுக்கக் கொடுத்து மாதிரி பார்க்க முடியாது. நீ இதில் எங்கேயாவது நெருப்புப்பட விட்டுவிட்டால்? இது எவ்வளவு அருமையானது என்பது உனக் குத் தெரியுமா?" என்று சொல்லி அவர் மிகவும் உல்லாசமாக, அந்தப் பரிசுப் பொருள் கிடைத்த கதையை என்னிடம் கூறினர்.

நான் அவரைக் கெஞ்சி அதில் நெருப்புப் படாமலிருக்கப் பொறுப்பு ஏற்றுக்கொண்டேன். அதன் பயனாக எனக்கு இஸ்தரிச் செய்ய அனுமதி கிடைத்ததோடு, அதில் நான் நிபுணன் என்பதற்குப் பிறகு அத்தாட்சிப் பத்திரமும் கிடைத்தது. இனி உலகம் எனக்கு அத்தாட்சிப் பத்திரம் கொடுக்காவிட்டால் என்ன?

## 20

### ஒரு புனித நினைவும் பிராயச்சித்தமும்

டர்பனிலும் சரி, ஜோஹான்ஸ்பர்க்கிலும் சரி, என்னோடு பல நண்பர்களும் அநேகந்தடவை குமாஸ்தாக்களும் வசித்துவந்தார்கள். அவர்கள் முக்கியமாக ஹிந்துக்களும் கிறிஸ்தவர்களுமே. மாகாணக் கணக்குப்படிச் சொல்லப்போனால் குஜராத்திகளும் மதராஸிகளுமே. அவர்கள் விஷயமாக என் மனத்தில் எவ்வித வேற்றுணர்ச்சியும் உண்டானதாக எனக்கு ஞாபகம் இல்லை. நான் அவர்களை என் வீட்டாரைப் போலவே நினைத்துக்கொண்டேன். இது என் தனிப்பட்ட குணமல்ல; என் சுபாவமே அது. என்னுடைய ஒரு குமாஸ்தா கிறிஸ்தவர். அவர் பெற்றோர் பஞ்சம ஜாதியைச் சேர்ந்தவர்கள். எங்கள் வீட்டில் மூத்திரத்துக்கென்று அறைகளில் தனித்தனியே பாத்திரம் இருந்தது. அவற்றைச் சுத்தம் செய்யும் வேலை எங்கள் இருவருடையது - அதாவது கணவன் மனைவியருடையது. அது வேலைக்காரர்களின் வேலையல்ல. எங்களைத் தம் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக நினைத்த குமாஸ்தாக்கள் தாமே அதைச் சுத்தம் செய்துவந்தார்கள். ஆனால் பஞ்சம ஜாதியைச் சேர்ந்தவரான இந்தக் குமாஸ்தா புதிதாக வந்தவர். அவர்

பாத்திரத்தை நாங்களே எடுத்துச் சுத்தம் செய்யவேண்டியிருந்தது. கஸ்தூரிபாய் மற்றப் பாத்திரங்களை எடுத்துச் சுத்தம் செய்துவிடுவாள். ஆனால் இந்தச் சகோதரரின் பாத்திரத்தை எடுப்பது அவளுக்கு அசிங்கமாகப் பட்டது. இதனால் எங்கள் இருவருக்குள்ளும் பெருத்த சச்சரவு உண்டாயிற்று. நான் எடுத்தாலும் அவளுக்குப் பிடிக்கவில்லை ; தானே எடுப்பதும் அவளுக்குக் கஷ்டமாக இருந்தது. இருந்தும், கண்களிலிருந்து முத்துத் துளிகள் உதிருகின்றன : ஒரு கையிலே பாத்திரம் ; தன் சிவந்த கண்களால் என்னைச் சுட்டுப் பார்த்துக்கொண்டு கஸ்தூரிபாய் படிகளின் வழியே இறங்குகிறாள் ! அந்தச் சித்திரத்தை நான் இன்றுகூடத் தத்ரூபமாக வரைய முடியும்.

ஆனால் நான் உருக்கமும் அன்பும் உள்ள கணவனாக இருந்ததுபோலவே நிஷ்டுரமாகவும் கடுமையாகவும் இருந்தேன். நான் என்னை அவளுடைய வாத்தியாராக எண்ணிக்கொண்டேன். என் குருட்டு அன்புக்கு உட்பட்டு நான் அவளை மிகவும் வருத்தினேன். அவள் வெறுமே பாத்திரத்தை எடுத்துக்கொண்டு போனதால் எனக்குத் திருப்தி உண்டாகவில்லை. அவள் அதைச் சிரித்துச் சந்தோஷத்தோடு எடுத்துப் போகவேண்டும் என்று விரும்பினேன். இதற்காக அவளை மிரட்டவும் செய்தேன். "இதோ பார். இந்த இடக்கு எல்லாம் என் வீட்டிலே நடக்காது" என்று ஒரு நாள் கோபமாகச் சொன்னேன்.

என்னுடைய இந்தப் பேச்சு, கஸ்தூரிபாய்க்கு அம்புபோலப் பட்டது. அவள் குமுறும் மனத்தோடு, "அப்படியானால் நீங்களே வைத்துக்கொள்ளுங்கள் உங்களுடைய இந்த வீட்டை! இதோ நான் போகிறேன்" என்றாள்.

அப்போது நான் இறைவனை மறந்துபோயிருந்தேன். தயை என்பது என் உள்ளத்தில் துளியும் இருக்கவில்லை. நான் அவள் கையைப் பிடித்தேன். படிகளுக்கு எதிரேயே வெளியில் போகும் வாசற்கதவு இருந்தது. நான் அந்த எளிய அபலையின் கையைப் பிடித்து வாசற்கதவுவரையில் இழுத்துக்கொண்டு போனேன். கதவைப் பாதி திறப்பதற்குள் கண்களில் நீர் வடிய, "உங்களுக்கு ஒன்றும் வெட்கமில்லை. ஆனால் எனக்கு உண்டு. கொஞ்சமாவது வெட்கப்படுங்களேன். நான் வெளியே புறப்பட்டுக் கடைசியில் எங்கே போகமுடியும்? பெற்றோர்களாவது இருக்கிறார்களா, அங்கே போய்விடுவோம் என்பதற்கு ? நான் பெண்; ஆதலால் உங்கள் மிரட்டலைப் பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும். கொஞ்சமாவது வெட்கப்பட்டுக் கதவை மூடுங்கள். யாராவது

பார்த்தால் இரண்டு பேருக்கும் அவமானம்" என்று சொன்னாள்.

நான் என் முகத்தை உக்கிரமாகவே வைத்துக்கொண்டேன். ஆனால் மனத்துக்குள்ளேயே வெட்கம் உண்டாயிற்று. வாசற் கதவை மூடினேன். மனைவி என்னை விடமுடியாதபோது நான் மட்டும் அவளை விட்டு எங்கே போக முடியும்! இவ்விதமாக எங்களுக்குள் எத்தனையோ தடவை சச்சரவுகள் உண்டாகியிருக்கின்றன. ஆனால் அவற்றின் முடிவு எப்போதும் நல்லதாகவே இருந்திருக்கிறது. என் மனைவி தன் அற்புதமான பொறுமையினால் வெற்றி பெற்றிருக்கிறாள்.

இன்று நான் அப்பொழுதைப்போலக் குருட்டு மோகமுள்ள கணவன் அல்ல. அவளுடைய வாத்தியாரும் அல்ல. இன்று நாங்கள் ஒருவர் மற்றவரின் அநுபவசாலிகளான நண்பர்கள். ஒருவர் விஷயத்திலே மற்றவர் நிர்விகாரமாக இருந்து வாழ்க்கை நடத்துகிறோம். கஸ்தூரிபாய் இன்று நோய்களில் பலனை எதிர்பாராமல் பணிவிடைகள் செய்யும் சேவிகையாக இருக்கிறாள்.

என் சொற்படி நடப்பதில் அவள் தன் வாழ்க்கை பயனுறுவதாக எண்ணியிருக்கிறாள். தூய வாழ்க்கை நடத்தும் என் முயற்சிகளில் அவள் எப்போதும் தடை செய்ததில்லை. ஆகவே, எங்கள் இருவரின் அறிவிலும் சக்தியிலும் பெருத்த வித்தியாசம் இருந்தபோதிலும், எங்கள் வாழ்க்கை சந்தோஷமாகவும், சுகமாகவும், மேல் நோக்கிச் செல்வதாகவும் அமைந்திருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

## 21

### போயர் யுத்தம்

**1897**-இலிருந்து 1899 வரையில் வாழ்க்கையிலுள்ள பல அநுபவங்களை விவரிப்பதைவிட்டு இப்பொழுது போயர் யுத்தத்துக்கு வருகிறேன். இந்த யுத்தம் ஆரம்பித்தபோது என் மனம் போயர்களின் சார்பிலே இருந்தது. ஆனால் இத்தகைய விஷயங்களில் சொந்தச் சிந்தனைகளின்படி வேலை செய்யும் உரிமை இன்னும் எனக்குக் கிடைக்கவில்லை என்று எண்ணினேன். இது சம்பந்தமாக என் உள்ளத்தில் நடந்த போராட்டத்தின் நுண்ணிய விவரங்களைத் 'தென்னாப்பிரிக்கச் சத்தியாக்கிரகச் சரித்திர'த்தில் எழுதியிருக்கிறேன். அதை அறிய விரும்புகிறவர்கள் அந்தப் புஸ்தகத்தைப் படிக்கலாம். பிரிட்டிஷ் அரசாங்கத்தினிடம் நான்

கொண்டிருந்த பக்தி என்னை அந்த யுத்தத்தில் பங்கு எடுத்துக் கொள்ள வலுக்கட்டாயமாக இழுத்தது என்பதை மட்டும் இங்கே சொன்னால் போதும். பிரிட்டிஷ் பிரஜை என்ற முறையில் எனக்கு உரிய உரிமைகளை நான் கோரும்போது, அதே முறையில் பிரிட்டிஷ் ராஜ்யத்தைக் காப்பதில் உதவி செய்வதும் என் கடமை என்று நினைத்தேன். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இந்தியா எல்லா விதத்திலும் முன்னேற முடியும் என்பது அந்தக் காலத்தில் என் அபிப்பிராயம்.

ஆதலால் எனக்குக் கிடைத்த தோழர்களைச் சேர்த்துக் கொண்டு பல துன்பங்களை எதிர்த்து, யுத்தத்தில் காயமடைந்தவர்களுக்குப் பணிவிடை செய்யும் கோஷ்டி ஒன்றை நாங்கள் தயார் செய்தோம். 'இங்கே இருக்கும் இந்தியர்கள் ஆபத்தான வேலைகளுக்கு வரமாட்டார்கள்; தன்னலத்தைத் தவிர அவர்களுக்கு வேறு ஒன்றும் தெரியாது' என்றுதான், சாதாரணமாக ஆங்கிலேயர்கள் அதுவரையில் நினைத்துவந்தார்கள். ஆகவே என் ஆங்கிலேய நண்பர்கள் பலரும் எனக்கு ஏமாற்றமான பதிலையே தந்தனர். டாக்டர் பூத் மட்டும் பெரிய தூண்டுகோலாக இருந்தார். காயமடைந்த வீரர்களுக்குப் பணிவிடை செய்யும் பயிற்சியை அவர் எங்களுக்கு அளித்தார். எங்கள் தகுதியைப் பற்றி நான் டாக்டர்களிடம் அத்தாட்சிப் பத்திரங்களும் வாங்கினேன்.

இது சம்பந்தமான எங்கள் கோரிக்கையை அரசாங்கத்தார் ஒப்புக்கொண்டார்கள். இந்தப் படையில் ஏறக்குறைய 1100 பேர்கள் இருந்தார்கள். இவர்களில் சுமார் 40 பேர் தலைவர்கள். சுமார் 300 பேர் சுதந்தர இந்தியர்கள். மீதிப் பேர் ஒப்பந்தத் தொழிலாளர்கள். டாக்டர் பூத்தும் எங்களுடன் இருந்தார். இந்தப் படை தன் வேலையை நன்றாகச் செய்தது. யுத்த களத்துக்கு வெளியேதான் நாங்கள் வேலை செய்யவேண்டி இருந்தது. எங்கள் பாதுகாப்புக்காகச் செஞ்சிலுவை* அடையாளம் அணிந்திருந்தோம்; ஆயினுங்கூட அவசியம் நேர்ந்தபொழுது நேராக யுத்த களத்தின் எல்லைக்குள்ளேயும் போய் வேலை செய்யும் சந்தர்ப்பம் எங்களுக்குக் கிடைத்தது. இம்மாதிரி ஆபத்தான வேலையை எங்களுக்குக் கொடுப்பதில்லை என்று அரசாங்கத்தார் எங்களிடம் ஒப்பந்தம் செய்திருந்தார்கள். ஆனால் ஸ்பியான்கோப் என்னும்

* யுத்தத்தில் செஞ்சிலுவை அடையாளமிட்ட பட்டிகளைச் சுச்ருஷை செய்பவர்கள் இடது கையில் கட்டிக்கொண்டிருப்பார்கள். எதிரிகள்கூட அவர்களுக்குத் தீங்கு விளைக்கக்கூடாது என்பது விதி.

இடத்தில் நேர்ந்த தோல்விக்குப் பிறகு நிலைமை மாறியது. "ஆபத்தான இடத்தில் வேலை செய்ய நீங்கள் கடமைப்பட்டவர்கள் அல்லவாயினும், அபாயத்தை எதிர்த்துக் காயமடைந்த சிப்பாய்களையும் ஆபீஸர்களையும் ரணகளத்திலிருந்து 'டோலி'களில் எடுத்துப்போக நீங்கள் தயாராக இருந்தால், அரசாங்கம் உங்கள் உதவிக்கு நன்றி செலுத்தும்" என்று ஜெனரல் புலர் செய்தி அனுப்பி யிருந்தார். நாங்கள் தாம் எந்த ஆபத்துக்கும் தயாராக இருந்தோமே! எனவே ஸ்பியான்கோப் யுத்தத்துக்குப் பிறகு, துப்பாக்கிப் பிரயோக எல்லைக்குள்ளும் நாங்கள் சேவை செய்யலானோம்.

இந்நாட்களில் நாங்கள் எத்தனையோ தடவைகளில் இருபது இருபத்தைந்து மைல் தூரம் போகவேண்டியிருந்தது. ஒரு தடவை காயம்பட்டவர்களை 'டோலி'யில் தூக்கிக்கொண்டு இவ்வளவு தூரம் சென்றோம். நாங்கள் தூக்கிக்கொண்டு போன காயம்பட்ட வீரர்களில் ஜெனரல் வுட்கேட் முதலியவர்களும் இருந்தார்கள். ஆறு வாரங்கள் ஆனதும் எங்கள் படைக்குப் பிரிவு உபசாரம் அளித்தார்கள். அப்பொழுது எங்களுடைய இந்தச் சிறிய சேவையைப் பெரிதும் பாராட்டினார்கள். அதனால் இந்தியர்களுக்கு மதிப்பு அதிகமாயிற்று. 'இந்தியர்களும் சாம்ராஜ்யத்தின் வார்சுதார்களே' என்று பாட்டுப் பாடினார்கள்.

துன்பத்தின்போது மனித இயற்கை எவ்வளவு உருக்கமடைகிறது என்பதற்கு உதாரணமாக ஓர் இனிய நினைவை இங்கே சொல்லாமல் இருக்க முடியாது. நாங்கள் 'சீவ்லி' பாசறையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தோம். இந்த இடத்தில்தான் லார்டு ராபர்ட்ஸின் புதல்வர் லெப்டெனெண்ட் ராபர்ட்ஸ் குண்டு பாய்ந்து இறந்தார். அவர் சவத்தைக் கொண்டுபோகும் பெருமை எங்கள் படைக்குக் கிடைத்தது. திரும்புகையில் அன்று பகலில் கடுமையான வெயில். நாங்கள் திபுதிபுவென்று வந்துகொண்டு இருந்தோம். எல்லோருக்கும் தாகத்தினால் நாக்கு ஒட்டிக்கொண்டது. வழியில் ஒரு சிறு அருவி ஓடியது. முதலில் யார் தண்ணீர் குடிப்பது என்பது கேள்வி. 'டாமி'கள் குடித்ததும் நாம் குடிக்கலாம் என்று நான் நினைத்திருந்தேன். அவர்கள் உடனே எங்களைப் பார்த்து, "முதலில் நீங்கள் குடியுங்கள்" என்று சொன்னார்கள். "வேண்டாம், நீங்கள் முதலில் குடியுங்கள்" என்றோம் நாங்கள். இவ்வாறு வெகு நேரம் வரையில் எங்களிடையே இனிய வற்புறுத்தல் போட்டி நடந்தது.

இந்த அத்தியாயத்தை முடிப்பதற்கு முன்னால் ஒரு முக்கியமான சம்பவத்தை நான் சொல்லியாகவேண்டும். போயர்கள் லேடி ஸ்மித் என்னும் இடத்தை முற்றுகையிட்டிருந்தபோது அங்கே ஆங்கிலேயர்களைத் தவிர அதையே இருப்பிடமாகக் கொண்ட சில இந்தியர்களும் இருந்தார்கள். அவர்களில் சிலர் வியாபாரம் செய்பவர்கள். மற்றவர்கள் ரெயில்வேயிலோ ஐரோப்பியர்களிடமோ கூலிவேலை செய்பவர்கள். இவர்களில் ஒருவன் பிரபுசிம்மன். லேடி ஸ்மித்தில் இருந்த 'கமாண்டிங் ஆபீஸர்' அங்கு இருந்த ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு வேலையை ஒப்பித்திருந்தார். மிகவும் அபாயகரமான, பெரிய பொறுப்புள்ள வேலையை அவர் பிரபுசிம்மனுக்குக் கொடுத்திருந்தார். லேடி ஸ்மித்தின் அருகில் ஒரு குன்றின்மீது போயர்கள் 'தோம்போம்' என்ற தங்கள் பீரங்கியை நாட்டிவைத்திருந்தார்கள். அதிலிருந்து பாய்ந்த குண்டுகள் பல கட்டிடங்களை அழித்தன. எத்தனையோ மனிதர்கள் இறந்தனர். மிருகங்களும் இறந்தன. பீரங்கியிலிருந்து புறப்பட்ட குண்டு அதன் இலக்கை எட்டுவதற்குக் குறைந்தது இரண்டொரு நிமிஷங்கள் பிடிக்கும். முற்றுகைக்கு உட்பட்ட ஜனங்களுக்கு முன்னறிவிப்புக் கிடைத்தால் தங்கள் நடுவில் குண்டு வருவதற்கு முன்பு அவர்கள் மறைந்துகொள்ள முடியும். பிரபுசிம்மன் ஒரு மரத்தின்மேல் மறைந்திருந்து குண்டுகள் புறப்படும் போதெல்லாம் அந்தக் குன்றையே அசையாமல் பார்த்திருந்து, பளிச்சென்று குண்டு புறப்பட்டவுடனே மணி அடிப்பான். மணி ஓசையைக் கேட்டதும், 'இதோ குண்டு வந்துவிட்டது' என்று லேடி ஸ்மித் வாசிகள் உணர்ந்துகொண்டு சட்டென்று மறைவிலே ஒளிந்து உயிரைக் காப்பாற்றிக்கொள்வார்கள்.

பிரபுசிம்மனுடைய வீரச் செயல், அப்பொழுது இந்தியாவில் வைஸ்ராயாக இருந்த லார்டு கர்ஸன் வரையில் எட்டியது. அவர் காஷ்மீரத்து உடை ஒன்றை அவனுக்குப் பரிசாக அனுப்பியிருந்தார்.

# 22

## நாடு திரும்புதல்

யுத்த வேலையிலிருந்து விடுபட்டதும், 'இனிமேல் தென்னாப்பிரிக்காவில் நமக்கு வேலை இல்லை, நம்முடைய வேலை எல்லாம் தாய்நாட்டில் தான்' என்று நான் நினைத்தேன். தென்னாப்பிரிக்காவில் இருந்த இடத்திலேயே நான் ஏதாவது ஊழியம் செய்துகொண்டுதான்

இருந்தேன். ஆனால் அங்கு இருந்தால் பணம் சம்பாதிப்பதே முக்கிய வேலையாகப் போய்விடுமோ என்று தோன்றிற்று. ஊரிலிருந்து நண்பர்களும் திரும்பிவருமாறு என்னை இழுத்தார்கள். ஊருக்குப் போவதால் நான் அதிக உபயோகமாக இருக்கமுடியும் என்றும் தோன்றியது. நேட்டாலிலோ மிஸ்டர் கானும், மன்ஸுகலால் நாஜரும் வேலைசெய்ய இருந்தார்கள்.

நான் நண்பர்களை என்னை விடுவிக்கும்படி வேண்டினேன். மிகவும் சிரமத்தோடு ஒரு நிபந்தனையின்மீது அவர்கள் என் கோரிக்கைக்கு இணங்கினார்கள். ஒரு வருஷத்துக்குள் ஜனங்களுக்கு நான் தேவையாகத் தோன்றினால் மீண்டும் தென்னாப்பிரிக்காவுக்கு வந்துவிட வேண்டும் என்பதே நிபந்தனை. இந்த நிபந்தனை கடினமானது என்று எனக்குத் தோன்றினும் நான் அன்புப் பிணையில் கட்டுப்பட்டிருந்தேன்.

'அன்பு நூலினால் கடவுள் என்னைப் பிணைத்துவிட்டார்' என்ற கருத்துள்ள மீராபாயின் பாட்டு ஏறக்குறைய என் விஷயத்திலும் உண்மையாக இருந்தது. பொது ஜனங்களின் பஞ்சாயத்து என்பது இறைவனைப்போல. நண்பர்களின் வாக்கை என்னால் தட்ட முடியவில்லை. நான் அவர்களுக்கு வாக்குக் கொடுத்து உத்தரவு பெற்றுக்கொண்டேன். இந்தச் சமயத்தில் நேட்டாலோடு மட்டுமே எனக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. அங்கே இருந்த இந்தியர்கள் அன்பு அமுதத்தில் என்னைத் திளைக்கவைத்தார்கள். ஒவ்வோர் இடத்திலும் உபசாரப் பத்திரங்கள் அளித்து விலை உயர்ந்த பொருள்களைப் பரிசாக அளித்தனர்.

1896-இல் நான் இந்தியாவுக்குத் திரும்பியபோதும் இம் மாதிரியே பரிசுகள் கிடைத்தன. ஆனால் இந்தத் தடவை கிடைத்த பரிசுகளையும் கூட்டங்களின் காட்சியையும் கண்டு நான் அசந்து போய்விட்டேன். பொன் வெள்ளி நகைகள் மட்டுமின்றி வைர நகைகளும் பரிசாகக் கிடைத்திருந்தன.

இந்தப் பொருள்களை ஏற்றுக்கொள்ள எனக்கு உரிமை ஏது? இவற்றை ஏற்றுக்கொண்டால், 'நான் பணம் வாங்கிக்கொண்டு ஜனங்களுக்கு ஊழியம் செய்வதில்லை' என்று மனத்தை எப்படிச் சமாதானப்படுத்த முடியும்? என் கட்சிக்காரர்கள் கொடுத்த சில தொகைகளைத் தவிர மற்றப் பொருள்கள் யாவும் என் சமூக ஊழியத்தை முன்னிட்டே கிடைத்தவை. ஆனால் என் கட்சிக்காரர்கள் வேறு, மற்ற நண்பர்கள் வேறு என்ற வித்தியாசம் எனக்கு இருந்ததில்லை. முக்கியமான கட்சிக்காரர்கள் யாவரும் பொதுஜனத் தொண்டிலும் உதவிசெய்தே வந்தார்கள்.

மேலும் அந்தப் பரிசுகளில் ஐம்பது கினி பெறுமான ஹாரம் ஒன்று கஸ்தூரிபாய்க்குத் தரப்பட்டது. ஆனால் அது கிடைத்ததுங்கூட என் ஊழியத்தின் பலனாகத்தான். எனவே அதை வேறாகப் பிரிக்க முடியாது.

இவைகளில் முக்கியமான பரிசு கிடைத்த அன்று இரவை நான் ஒரு பைத்தியக்காரனைப்போல விழித்திருந்து கழித்தேன். அறையில் குறுக்கும் நெடுக்குமாக அலைந்தேன். ஆனால் அந்தப் புதிர் விடுபடவில்லை. நூற்றுக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள பரிசுகளை வாங்கிக்கொள்ளாமல் இருப்பது கஷ்டமாக இருந்தது.

ஆனால் அதை வாங்கிக் கொள்வது அதையும் விடக் கஷ்டமாக இருந்தது. நான் வேண்டுமானால் இந்தப் பரிசுகளை ஜீர்ணமாக்கிக்கொள்ள முடியும். ஆனால் என் குழந்தைகளும் மனைவியும் எந்த வழிச் செல்வது? அவர்களுக்குத் தொண்டாற்றப் பயிற்சி கிடைத்துவந்தது. தொண்டுக்கு ஊழியம் பெறக்கூடாது என்பதை எப்பொழுதும் அவர்களுக்கு அறிவுறுத்தி வந்தேன். வீட்டில் விலையுயர்ந்த நகை முதலியவற்றை நான் வைத்துக் கொள்ளவில்லை. எளிமை வளர்ந்துவந்தது. இந்த நிலையில் தங்கக் கடிகாரங்களை யார் வைத்துக்கொள்வது? தங்கச் சரடுகளையும் வைர மோதிரங்களையும் யார் அணிவது? நகைப் பைத்தியத்தை விட்டுவிட வேண்டுமென்று நான் அந்தக் காலத்திலேயே ஜனங்களிடம் சொல்லிவந்தேன். இப்போது இந்த நகைகளையும் ரத்தினங்களையும் வைத்துக்கொண்டு நான் என்ன செய்வேன்?

இந்தப் பொருள்களை நான் கட்டாயம் வைத்துக்கொள்ள முடியாது என்ற முடிவுக்கு வந்தேன். பார்ஸி ருஸ்தம்ஜீ முதலியவர்களை இந்தச் சொத்துக்குத் தர்மகர்த்தர்களாக்கி அவர்கள் பேருக்கு ஒரு கடிதம் எழுதிவைத்தேன். காலையில் மனைவியையும் குழந்தைகளையும் கேட்டு ஆலோசித்த பின்பு அந்தப் பளுவை லேசாக்கத் தீர்மானித்தேன்.

மனைவியைச் சமாதானப்படுத்துவது கஷ்டம் என்பது எனக்குத் தெரியும். குழந்தைகளுக்கு விஷயத்தைச் சொல்வதில் கொஞ்சமும் சிரமம் இராது. எனவே அவர்களை எனக்கு வக்கீலாக்கிக் கொள்ளலாம் என்று யோசித்தேன்.

குழந்தைகள் நான் சொன்னதை உடனே புரிந்துகொண்டார்கள். "நமக்கு இந்த நகைகளால் ஒன்றும் பிரயோஜனம் இல்லை. இவற்றை எல்லாம் நாம் திருப்பிக் கொடுத்துவிட

வேண்டும். அப்படி அவசியமாக இருந்தால் நாமே செய்து கொள்ளக் கூடாதா என்ன?" என்று அவர்கள் சொன்னார்கள்.

அதைக் கேட்டு எனக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. "அப்படியானல் 'பா' விடம் இம்மாதிரியே சொல்லி அவளையும் சம்மதிக்கச் செய்வீர்கள் அல்லவா?" என்று கேட்டேன்.

"கட்டாயம்! அவள் இந்த நகைகளை எதுக்கு அணியப் போகிறாள்? அவள் வைத்துக்கொள்ள விரும்பினாலும் எங்களுக்காகத் தானே அப்படிச் செய்வாள்? ஆனால் நாங்களே வேண்டாம் என்று சொல்லும்போது அவள் ஏன் பிடிவாதம் பிடிக்கப் போகிறாள்?"

ஆனால் அநுமானித்ததைவிட இந்த வேலை அதிகக் கஷ்டமாகத்தான் இருந்தது.

"உங்களுக்கும் பையன்களுக்கும் வேண்டாவிட்டால் போகிறது. குழந்தைகளுக்கு என்ன! எதைச் சொன்னாலும் 'சரி' என்கிறார்கள். நீங்கள் அந்த நகைகளை எனக்குக் கொடுக்க வேண்டாம். ஆனால் என் நாட்டுப்பெண்களுக்கு அவை வேண்டாமா என்ன? மேலும் நாளை நிலை எப்படி இருக்குமோ, யார் சொல்ல முடியும்! ஜனங்கள் இவ்வளவு அன்பாகக் கொடுத்த பொருள்களைத் திருப்பிக்கொடுப்பது சரியல்ல."

இவ்விதமாக வாக்கு வெள்ளம் பெருகியது. அதனோடு கண்ணீர் வெள்ளமும் கலந்தது. பையன்கள் திடமாக இருந்தார்கள். நானா இதற்கெல்லாம் அசைகிறவன்!

"முதலில் பையன்களுக்குக் கல்யாணம் ஆகட்டும். நாம் என்னவோ சிறுவயசில் அவர்களுக்குக் கல்யாணம் செய்விக்கப் போவதில்லை. பெரியவர்களானதும் அவர்களுக்கு என்ன இஷ்டமோ செய்யட்டுமே. மேலும், துணிகளுக்கும் நகைகளுக்கும் ஆசைப்படும் நாட்டுப்பெண்ணை நாம் தேடுவானேன்? அப்படி இருந்தும் ஏதாவது செய்யத்தான் வேண்டும் என்றால் நான் எங்கே ஓடிப்போகிறேன்?"

"ஆகா, உங்களை எனக்கு நன்றாகத் தெரியும்! நீங்கள் என் நகைகளைக்கூட எடுத்துக்கொண்டவர்கள் தாமே! என்னையே நகைகள் போட்டுக்கொள்ளக் கூடாது என்று சொல்லும்போது என் நாட்டுப்பெண்களுக்குக் கட்டாயம் வாங்கிக் கொடுப்பீர்கள்! பையன்களைத்தான் இப்போதிலிருந்தே பைராகிகளாக்குகிறீர்கள். இந்த நகைகளை நான் திருப்பிக் கொடுக்க விடமாட்டேன். அது இருக்கட்டும்; எனக்குக் கொடுத்த ஹாரத்தில் உங்களுக்கு உரிமை ஏது?"

" இந்த ஹாரம் நான் செய்த தொண்டுக்காகக் கிடைத்ததா, அல்லது நீ செய்ததற்காகவா ? " என்று கேட்டேன்.

" அப்படித்தான் இருக்கட்டுமே. உங்களுடைய ஊழியம் என்றால் அது என் ஊழியம் இல்லையோ ? என்னிடம் இரவும் பகலும் வேலை வாங்குகிறீர்களே ! அது ஊழியம் அல்லவாக்கும்; என்னை அழப்படுத்தி அயலாரை எல்லாம் வீட்டிலே வைத்துக் கொண்டு என்னை உழைக்கச் சொன்னீர்களே, அது ஒன்றுமே இல்லையோ?"

இந்த அம்புகள் யாவும் கூர்மையாக இருந்தன. அவற்றில் பல என் உள்ளத்தில் தைத்தன. ஆனால் நகைகளைத் திருப்பிக் கொடுக்க எண்ணிய தீர்மானம் தீர்மானந்தான். கடைசியாக வெகுநேரம் பேச்சுக் கொடுத்து ஏதோ ஒருவிதமாக அவளுடைய அங்கீகாரத்தைப் பெற்றேன். 1896-இலும் 1901-இலும் கிடைத்த பரிசுகளைத் திருப்பிக் கொடுத்தேன். அவற்றைத் தர்ம நிதியாக்கி, பொதுஜன ஊழியத்துக்காக என்னுடைய அல்லது தர்மகர்த்தர்களின் இஷ்டப்படி அதை உபயோகிக்கும் நிபந்தனையின் மேல் அந்தப் பொருளைப் பாங்கில் வைத்தேன். இந்த நகைகளை விற்கும் சாக்கை வைத்து நான் எத்தனையோ தடவை பொதுக் காரியங்களுக்குப் பணம் சேர்க்க முடிந்தது. இன்றைக்குக்கூட அந்தத் தொகை அவசரத்துக்கு உதவும் நிதியாக இருப்பதோடு மேன்மேலும் வளர்ந்து வந்திருக்கிறது.

இப்படிச் செய்ததற்காக நான் எப்போதும் வருந்தியதில்லை. நாளடைவில் கஸ்தூரிபாயும் அப்படிச் செய்தது சரியே என்பதை உணர்ந்தாள். இவ்வாறு எங்கள் வாழ்க்கையில் பல ஆசைகளிலிருந்து நாங்கள் தப்பித்துக்கொண்டோம். பொதுஜன ஊழியனுக்குக் கிடைக்கும் பரிசுகள் அவனுடைய சொந்த ஆஸ்தி ஆக முடியாது என்பது என் உறுதியான அபிப்பிராயம்.

நான் தாய்நாட்டுக்குத் திரும்பிவந்த வருஷத்தில் கல்கத்தாவில் நடக்க இருந்த காங்கிரஸில் ஜனங்களுக்குத் தொண்டு செய்யப் போதுமான சந்தர்ப்பம் கிடைத்தது. சுயம்சேவகர்களுக்கு நான் குப்பைகூளங்களைப் பெருக்கவும் தோட்டிவேலை செய்யவும் மாதிரிப் பயிற்சி அளித்தேன். அதனோடு காங்கிரஸின் முக்கியமான காரியதரிசிகளுள் ஒருவரான ஸ்ரீமான் கோஷாலுக்குக் குமாஸ்தாவாகவும் 'எடுபிடி' ஆளாகவும் இருக்கும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது. நான் தாய்நாடு திரும்பி வந்தபின் என்னை எப்போதும் தம் தம்பியாக எண்ணி ஆதரித்த ஸ்வர்க்கீய கோகலேக்கு நீண்டகாலம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கி

றேன். அவருடைய கிருபையினுல்தான் காங்கிரஸில் தென்னுப் பிரிக்காவின் விஷயமாக ஒரு தீர்மானத்தை ஆலோசனைக்குக் கொண்டுவரும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் என் வேலைகள் யாவற்றிலும் ஆழ்ந்த ஊக்கம் எடுத்துக்கொண்டு நான் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்று அவருக்குத் தோன்றிய முக்கியமான பெரியவர்களுக்கு என்னை அறிமுகம் செய்துவைத் தார். அவர் வேலை செய்வதைப் பார்க்க மகிழ்ச்சியாக இருந்த தோடு ஒரு படிப்பினையும் கிடைத்தது. அவர் எதைச் செய்தா லும் அதற்கும் நாட்டின் நலத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருந் தது. நான் பம்பாயிலே நிலைத்து வக்கீல் தொழில் செய்து கொண்டே அவருக்குப் பொதுஜனத் தொண்டில் அதாவது காங் கிரஸ் வேலையில் உதவி செய்யவேண்டும் என்பதில் அவர் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். அவர் கூறிய ஆலோசனையிலே எனக்கு மதிப்பு இருந்தது. ஆனுல் பாரிஸ்டர் தொழிலை நான் வெற்றிகரமாக நடத்தமுடியும் என்பதில் நம்பிக்கை இல்லை. நான் ராஜகோட்டில் தொழிலை ஆரம்பித்து அது சரியாக நடந்துவந்த சமயத்தில், எங்கள் குடும்பத்தின் நன்மையை விரும்பும் நண்பரும் என்னை இங்கிலாந்துக்கு அனுப்பியவருமான ஸ்ரீ கேவல்ராம் தவே, நான் பம்பாய்க்குச் சென்று தொழில் நடத்தவேண்டும் என்று வற்புறுத்தினுர்.

"பொதுஜனத் தொண்டு செய்யப் பிறந்திருக்கும் உன்னை நாங்கள் இங்கே கர்ட்டியாவாடில் புதைக்க விடமாட்டோம். நீ எப்பொழுது போகப்போகிருய் சொல்!" என்று அவர் கேட் டார்.

"நேட்டாலிலிருந்து கொஞ்சம் ரூபாய் பாக்கி வரவேண்டும். அது வந்ததும் போகிறேன்" என்று நான் சொன்னேன்.

இரண்டொரு வாரங்களில் அந்தப் பணம் வந்தது. நான் பம்பாய்க்குப் போனேன். அங்கே 'பெயின் கில்பர்ட் அண்டு ஸமானி' என்பவர்களின் காரியாலயக் கட்டிடத்தில் அறைகளை வாடகைக்கு அமர்த்திக்கொண்டேன்; பம்பாய் வாசம் இனிமேல் ஸ்திரந்தான் என நினைத்தேன்.

காரியாலயத்தைத் தவிர நான் கிர்காமில் வீடும் வைத்துக் கொண்டேன். ஆனுல் இறைவன் என்னை அங்கே ஸ்திரமாக இருக்கவிடவில்லை. வீடு அமர்த்திக்கொண்டு அதிக நாட்கள் ஆகிவிடவில்லை. அதற்குள் என் இரண்டாவது பையனுக்கு டைபாயிட் கண்டது. ஜுரம் இறங்கவே இல்லை. பகல் நேரத்தில் பயமாக இருந்ததோடு இரவு நேரங்களில் பிதற்றல் முதலிய

குணங்களும் தென்பட்டன. இந்த நோய்க்கு முன்னால், சிறு வயசில், அவனுக்கு அம்மையும் கடுமையாகப் போட்டிருந்தது.

டாக்டரைக் கேட்டபோது அவர், "இதற்கு மருந்து கொடுத்து உபயோகமில்லை. இவனுக்குக் கோழி முட்டைகளும் கோழிக்குஞ்சு ரசமும் இப்பொழுது கொடுக்கவேண்டியது அவசியம்" என்று சொன்னார்.

மணிலாலுக்கு அப்பொழுது பத்து வயசு. இதைப்பற்றி அவனிடம் நான் என்ன கேட்பது? பொறுப்புள்ளவன் நான்தான். நானே முடிவு செய்தாகவேண்டும். டாக்டர் பார்ஸி; மிகவும் நல்லவர். "டாக்டர், நாங்கள் எல்லோரும் சைவ உணவு உண்பவர்கள். இவை இரண்டில் எதைக் கொடுப்பதும் எனக்கு விருப்பமில்லை. நீங்கள் வேறு எதையாவது சொல்லுங்களேன்" என்றேன்.

"உங்கள் மகனுடைய உயிர் ஆபத்தில் இருக்கிறது. பாலையும் தண்ணீரையும் கலந்து கொடுக்கலாம். ஆனால் அதனால் பூர்ண குணம் ஏற்படாது. நான் எத்தனையோ ஹிந்துக் குடும்பங்களோடு பழகுகிறேன். நாங்கள் மருந்து என்று எதைக் கொடுத்தாலும் அவர்கள் வாங்கிக்கொள்கிறார்கள். நீங்களும் உங்கள் மகன் விஷயத்தில் இப்படிப் பிடிவாதம் பிடிக்காமல் இருந்தால் நல்லது என்று நான் நினைக்கிறேன்."

"நீங்கள் சொல்வது சரி. நீங்கள் அப்படித்தான் சொல்ல வேண்டும். என் பொறுப்பு மிகப் பெரிது. பையன் பெரியவனாக இருந்தால் நிச்சயமாக அவனைக் கேட்டு அவன் இஷ்டப்படியே விட்டுவிடுவேன். ஆனால் இவ்விஷயத்தில் அவனுக்காக நான் தான் யோசனை செய்யவேண்டும். மனிதனுடைய கொள்கை இம்மாதிரியான சந்தர்ப்பங்களில்தான் சோதிக்கப்படுகிறது என்று நான் நினைக்கிறேன். சரியோ தவறோ, மனிதன் மாமிசம் முதலியவற்றைச் சாப்பிடக்கூடாது என்பது என் கொள்கை. வாழ்க்கைச் சாதனங்களுக்கும் எல்லை உண்டு. வாழும் பொருட்டுக்கூடச் சில குறிப்பிட்ட பொருள்களை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது. என்னுடைய கொள்கையின் எல்லை, என்னையும் என் குடும்பத்தைச் சேர்ந்தவர்களையும் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் மாமிசம் முதலியவற்றை உபயோகிப்பதிலிருந்து தடுக்கிறது. ஆதலால் நீங்கள் காணும் அபாயத்தை நான் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆயினும் தங்களிடம் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன்: உங்களிடம் நான் வைத்தியம் செய்யப்போவதில்லை. ஆனால் இந்தப் பையனின் நாடியையும் இருதயத்தையும் பார்க்க

எனக்குத் தெரியாது. எனக்குக் கொஞ்சம் ஜல சிகிச்சை முறைகள் தெரியும். அவற்றை நான் செய்து பார்க்க விரும்புகிறேன். தாங்கள் வேளை தவருமல் வந்து மணிலாலின் உடம்பைப் பார்த்து அவ்வப்போது ஏற்படும் மாறுதல்களை எனக்குச் சொன்னுல் நான் உங்களுக்கு நன்றி பாராட்டுவேன்.''

நல்லவரான டாக்டர் என் சங்கடத்தை அறிந்துகொண்டார். என் விருப்பப்படி மணிலாலைப் பார்க்க வருவதற்கு ஒப்புக்கொண்டார்.

மணிலால் தன் அபிப்பிராயத்தை உறுதியாகக் கூறத் தகுதியற்றவனுக இருந்தும், டாக்டருக்கும் எனக்கும் நடந்த சம்பாஷணைகளை அவனிடம் சொல்லி அவனுடைய யோசனையைக் கேட்டேன்.

"நீங்கள் சிறிதும் தயங்காமல் ஜல சிகிச்சை செய்யுங்கள். நான் மாமிச ரசம் குடிக்கமாட்டேன். முட்டையும் எனக்கு வேண்டாம்.''

அவனுடைய இந்தப் பேச்சைக் கேட்டு நான் மகிழ்ச்சி அடைந்தேன். அவை இரண்டையும் நான் சாப்பிடச் சொல்லி இருந்தாலும் அவன் சாப்பிட்டிருப்பான் என்பது எனக்குத் தெரியும்.

கியூனியின் ஜல சிகிச்சை முறைகள் எனக்குத் தெரியும். அவற்றை நான் உபயோகித்தும் பார்த்திருந்தேன். நோயில் உபவாசம் இருப்பது மிகவும் நல்லது என்பதும் எனக்குத் தெரியும். கியூனி முறைப்படி நான் மணிலாலுக்கு இடுப்பு ஸ்நானம் செய்விக்க ஆரம்பித்தேன். மூன்று நிமிஷங்களுக்குமேல் அவனைத் தொட்டியில் வைப்பதில்லை. மூன்று நாட்கள் வரையில் வெறும் சாத்துக்குடி ரஸத்தில் தண்ணீர் கலந்துகொடுத்தேன். அதுதான் அவனுக்கு ஆகாரம்.

ஜுரம் இறங்கவில்லை, இரவில் கொஞ்சம் பிதற்றலும் இருந்தது. ஜுரம் 104 டிகிரிவரையில் ஏறிற்று. என் மனம் கலங்கியது: குழந்தையைக் கைவிட்டுவிட்டால் உலகத்தார் என்னை என்ன சொல்வார்கள்? தமையனுர் என்ன சொல்வார்! வேறு டாக்டர்களை ஏன் கூப்பிடக்கூடாது? எவனுவது வைத்தியனைக் கூப்பிட்டால் என்ன? தம்முடைய அரைகுறை அறிவை உபயோகித்துப் பார்க்கப் பெற்ருேருக்கு என்ன உரிமை இருக்கிறது?

இத்தகைய எண்ணங்களோடு, 'மனமே, உனக்கு நீ என்ன செய்வாயோ அதையே மகனுக்கும் செய். இதனுல் கடவுள் சந்தோஷிப்பார். உனக்கு ஜல சிகிச்சையில் நம்பிக்கை இருக்கிறது

மருந்தில் நம்பிக்கை இல்லை. டாக்டர் வந்தாலும் போகிற உயிரைத் திருப்பிக்கொடுக்கமாட்டார். அவர் செய்வதும் எல்லாம் பரிசோதனைகள்தாமே? வாழ்க்கையாகிய நூல் இறைவன் ஒருவனுடைய கையில்தான் இருக்கிறது. கடவுளுடைய பெயரைச் சொல்லி, அவனிடம் நம்பிக்கை வை. உன் வழியை விடாதே' என்ற எண்ணங்களும் தோன்றும்.

மனத்தில் இவ்விதம் போராட்டம் நிகழ்ந்துகொண்டிருந்தது. நான் மணிலாலைப் பக்கத்தில் விட்டுக்கொண்டு படுத்திருந்தேன். நனைத்துப் பிழிந்த துணியினால் அவனைப் போர்ப்பது என்று தீர்மானித்து நான் எழுந்தேன். ஒரு நீண்ட துணியை எடுத்து அதைக் குளிர்ந்த தண்ணீரில் நனைத்துப் பிழிந்து அவன் காலிலிருந்து தலைவரையில் சுற்றிவைத்து அதன்மேல் இரண்டு கம்பளங்களைப் போர்த்தினேன். தலைமேல் நனைத்த துண்டு ஒன்றையும் வைத்தேன். வாணலியைப்போல உடல் காய்ந்துகொண்டிருந்தது. வேர்வையோ துளியும் இல்லை.

நான் களைத்துப் போயிருந்தேன். மணிலாலை அவன் தாயிடம் விட்டு அரைமணி நேரம் திறந்த காற்றில் தெம்பும் அமைதியும் பெறவேண்டி கடற்கரையை நோக்கிச் சென்றேன். மணி பத்து இருக்கும். ஜனங்களின் போக்குவரவு குறைந்திருந்தது. அதை நான் கவனிக்கவில்லை. நான் எண்ணக் கடலில் மூழ்கிய வண்ணமாக இருந்தேன். "கடவுளே, இந்தத் தர்ம சங்கடத்தில் என் மானத்தைக் காப்பாற்று" எனப் பிரார்த்தித்தேன். என் வாய் ராமநாமத்தை ஜபித்துக்கொண்டே இருந்தது. சிறிது நேரம் கழித்து நான் திரும்பிவந்தேன். நெஞ்சு 'திக்திக்' என்று அடித்துக்கொண்டது. வீட்டில் நுழைந்ததுமே, "பாபூ, வந்துவிட்டீர்களா?" என்று மணிலால் குரல் கொடுத்தான்.

"ஆமாம், தம்பி!"

"என்னை இதிலிருந்து எடுங்களேன். சூடு பொறுக்காமல் எனக்கு உயிர் போகிறதே!"

"ஏன், வேர்வை கொட்டுகிறதா என்ன?"

"அப்பா, நான் வேர்வையில் மூழ்கியிருக்கிறேன். இப்பொழுதாவது என்னை எடுங்களேன்."

மணிலாலின் நெற்றியைத் தொட்டேன். அதில் வேர்வைத் துளிகள் முத்துமுத்தாய்ப் பளபளத்தன. ஜுரம் குறைந்திருந்தது. நான் இறைவனுக்கு நன்றி செலுத்தினேன்.

"மணிலால், பயப்படாதே. இனி உன் ஜுரம் ஓடிப்போகும். ஆனால் இன்னும் கொஞ்சம் வேர்வை வந்தால் என்ன?" என்று அவனிடம் சொன்னேன்.

"வேண்டாம் பாபூ! இப்போது என்னை விடுவித்துவிடுங்கள். பிறகு வேண்டுமானால் இன்னொரு தடவை பார்க்கலாம்."

எனக்குத் தைரியம் வந்துவிட்டதால் பேச்சிலேயே சில நிமிஷங்களைக் கழித்தேன். நெற்றியிலிருந்து வேர்வை வெள்ளமாக ஓடியது. நான் போர்வையை எடுத்து உடம்பைத் துடைத்து உலர விட்டேன். பிறகு தகப்பனும் பிள்ளையும் தூங்கினோம்—நன்றாகத் தூங்கினோம்.

காலையில் பார்க்கும்போது மணிலாலின் ஜுரம் நிரம்பவும் குறைந்துவிட்டது. நாற்பது நாட்களுக்குப் பாலையும் தண்ணீரையும் பழங்களையுமே ஆகாரமாகக் கொடுத்தேன். என் பயம் நீங்கிவிட்டது. பிடிவாதமான ஜுரமாக இருந்தும் அதை வசப்படுத்தி ஆயிற்று. இன்று என் புதல்வர்களில் மணிலாலே மற்றவர்களைவிட அதிக ஆரோக்கியமும் வலுவும் பெற்றிருக்கிறான்.

அவன் குணமடைந்தது ராமபிரானின் அருளினாலா, ஜல சிகிச்சையினாலா, சொற்ப உணவினாலா அல்லது வேறு உபாயத்தினாலா என்பதை யார் முடிவு கட்ட முடியும்? ஒவ்வொருவரும் தத்தம் நம்பிக்கைக்கேற்ப இதற்குப் பதில் சொல்லலாம். ஆனால் அந்தச் சமயத்தில் கடவுள்தாம் என் மானத்தைக் காப்பாற்றினார். இப்படித்தான் நான் நம்பினேன்; இன்றும் அப்படியே நம்பிவருகிறேன்.

## 23

## மீண்டும் தென்னாப்பிரிக்கா

நான் பம்பாயில் ஸ்திரமாய் இருக்க நிச்சயித்து மனமும் ஒரு நிலைக்கு வந்துகொண்டிருந்த சமயத்தில், திடீரென்று தென்னாப்பிரிக்காவிலிருந்து தந்தி வந்தது: "சேம்பர்லேன் இங்கே வருகிறார். உடனே புறப்படுங்கள்." நான் வாக்குக் கொடுத்திருந்தது எனக்கு ஞாபகம் இருந்தது. ஆகவே என் ஆபீசைச் சுருட்டி வைத்துவிட்டுப் புறப்பட்டேன்.

தென்னாப்பிரிக்கா போய்ச் சேர்ந்ததுமே அங்கே நான் கண்ட துன்பகரமான அரசியல் நிலைகளை வாசகர்களுக்கு விரித்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை. யுத்தத்தையும், ஆப்பிரிக்காவில் குடியேறிய இந்தியர்கள் செய்த தொண்டுகளையும் ஒருங்கே

மறந்துபோனார்கள். இந்தியர்களின் நிலை நாளுக்குநாள் மோசமாகி வந்தது. அவர்கள்மீது புதிய புதிய ஆபத்துக்களைச் சுமத்தினர். உண்மையிலேயே நான் அங்கு இருக்கும் சுயநாட்டினருக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்றால் தென்னாப்பிரிக்காவில் நான் நீண்ட காலம் தங்கவேண்டும் என்பதைப் போனவுடனே அறிந்துகொண்டேன். நான் ஜோஹான்ஸ்பர்க்கில் காரியாலயம் வைத்துக்கொள்ளத் தீர்மானித்தேன். இங்குமங்கும் தேடிப் பார்த்ததில் நகரத்தில் ஒரு நல்ல இடத்தில் சில அறைகள் வாடகைக்குக் கிடைத்தன.

சமூகத் தொண்டில் ஈடுபட நான் ஒருபுறம் நிச்சயித்ததோடு மறுபுறம் கீதையைப் புதிய நோக்கோடு படிக்கலானேன். என் அகக் கண்கள் திறந்தன.

இந்தத் தடவையும் சில பிரம்மஞான சங்கத்து நண்பர்களோடுகூடத்தான் கீதையைப் படித்தேன். ஆனால் முன்னை விட அதிக ஆழமாகவும் மன ஊக்கத்துடனும் படித்தேன். அதிலுள்ள சுலோகங்களை மனப்பாடம் செய்யவும் முயன்றேன். பதின்மூன்று அத்தியாயங்களை உருப்போட்டதாக எனக்கு ஞாபகம்.

என்னோடுகூடப் படித்தவர்களுக்கு இந்தக் கீதைப் பயிற்சியினால் என்ன பலன் கிடைத்ததோ, அதை அவர்கள்தாம் சொல்ல முடியும். ஆனால் என்வரையில் கீதை ஒழுக்கத்துக்குத் தவறாத வழி காட்டும் நூல் ஆகிவிட்டது. அதை என்னுடைய மதசம்பந்தமான அகராதி என்றே சொல்லலாம். நமக்குத் தெரியாத ஆங்கிலச் சொற்களின் உச்சரிப்பையோ அர்த்தத்தையோ பார்த்துக் கொள்வதற்கு ஆங்கில அகராதியைப் பிரித்துப் பார்ப்பதுபோல, ஒழுக்க சம்பந்தமாகச் சங்கடங்களோ, விடுபடாத புதிர்களோ நேர்ந்தால் அவற்றைக் கீதையின் மூலமாகத் தெளிவுபடுத்திக் கொள்வேன். அதில் இருந்த அபரிக்கிரகம், ஸமபாவம் முதலிய சொற்கள் என்னைக் கவர்ந்தேவிட்டன. 'ஸமபாவத்தை நான் எப்படிப் பெறுவது, அதை எப்படிக் காப்பது? நம்மை அவமானப் படுத்தியவர்கள், லஞ்சம் வாங்கியவர்கள், வழி நடக்கும்போது எதிர்ப்பவர்கள், நேற்று நமக்கு நண்பர்களாக இருந்தவர்கள் - ஆகியவர்களுக்கும், நமக்குப் பெருத்த உபகாரம் செய்த நல்லோர்களுக்கும் இடையே ஒன்றுமே வித்தியாசமே இல்லையா? ஏலாமையைக் கைக்கொள்வது எப்படிச் சாத்தியம்? நம்முடைய இந்த உடலே நமக்குப் பரிக்கிரகம் அல்லவா? மனைவிகளும் குழந்தைகளும் பரிக்கிரகம் அல்லாமல் வேறு என்ன? புத்தகங்கள் நிறைந்த

இந்த அலமாரிகளைக் கொளுத்திவிடட்டுமா? ஆனால் அப்படிச் செய்தால் வீட்டைக் கொளுத்தித் தீர்த்தயாத்திரை செய்வது போல அல்லவா ஆகும்!' என்று இத்தகைய சிந்தனை வெறிகளில் ஆழ்ந்திருந்தேன். உடனே அகத்திலிருந்து, "ஆம், வீடுவாசல்களைச் சாம்பல் ஆக்காமல் தீர்த்தயாத்திரை செய்ய முடியாது" என்ற பதில் கிடைத்தது. ஆங்கிலச் சட்ட ஞானம் இதில் எனக்கு உதவியது. ஸ்நேல் எழுதிய சட்டக் கொள்கைகளைப் பற்றிய விரிவுரை ஞாபகத்துக்கு வந்தது. 'தர்மகர்த்தா' என்ற சொல்லின் அர்த்தத்தைக் கீதையைப் படித்ததால் நன்றாகத் தெரிந்துகொண்டேன். சட்ட நூல்களில் எனக்கு மதிப்பு அதிகமாயிற்று. அதனுள்ளும் எனக்கு மத உண்மைகள் தென்பட்டன. தர்மகர்த்தர்கள் கோடிக்கணக்கான சம்பத்தை வைத்துக்கொள்கிறார்கள். ஆனால் அதில் ஒரு தம்படியைக் கூடச் சொந்தமாக நினைக்க முடியாது. மோக்ஷத்தில் ஆசையுள்ளவனும் அதுபோலத்தான் நடந்துகொள்ளவேண்டும் என்ற பாடத்தை நான் கீதையிலிருந்து கற்றுக்கொண்டேன். அபரிக்கிரகியாகவும் சமநோக்கமுள்ளவனாகவும் இருக்க, உத்தேசமும் இருதயமும் மாறுதலடையவேண்டியது அவசியம் என்ற விஷயம் எனக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெளிவாகியது. பம்பாயில் ஓர் இன்ஷ்யூரென்ஸ் ஏஜெண்டு சொன்னதைக் கேட்டு நான் பதினாயிரம் ரூபாய்க்கு இன்ஷ்யூர் செய்திருந்தேன். மேற்கூறிய எண்ணங்கள் என் மனத்தில் தோன்றியவுடனே பம்பாயில் இருந்த ரேவாசங்கர் பாய்க்கு எழுதினேன். "இன்ஷ்யூரென்ஸ் பாலிஸியை ரத்து செய்துவிடுங்கள். செலுத்திய ரூபாயில் ஏதாவது திரும்பக் கிடைத்தால் சரிதான். இல்லாவிட்டாலும் போகட்டும். என் குழந்தைகளையும் மனைவியையும் அவர்களையும் என்னையும் படைத்த இறைவனே காப்பான்" என்பது அந்தக் கடிதத்தின் கருத்து. தந்தைக்குச் சமமான என் தமையனாருக்கு, "இன்றுவரையில் நான் மீத்து வந்ததை உங்களுக்கு அர்ப்பித்து வந்தேன். இனி என் ஆசையை விட்டுவிடுங்கள். இனி நான் மீத்துவதெல்லாம் இங்கேயே பொதுவேலைகளில் செலவழியும்" என்று எழுதினேன்.

இதே சமயத்தில் (1904) நான் 'இண்டியன் ஒபினியன்' என்ற ஒரு வாரப் பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். அதில் தென்னாப்பிரிக்காவில் குடியேறிய இந்தியர்களின் நலன்களைப்பற்றிய பிரச்னைகள் விவாதிக்கப்பட்டன. பண உதவி இல்லாமல் பத்திரிகை நடக்கமுடியாது என்பதைச் சிறிது

நாட்களிலேயே அறிந்துகொண்டேன். நான் சேமித்த பணத்தை அதற்குச் செலவழித்தேன். நாளடைவில் என்னுடைய ஆஸ்தி முழுவதையும் அதற்கு ஈடுகட்டினேன். இன்று 'யங் இந்தியா'வும், 'நவஜீவனு'ம் என் வாழ்க்கைக்குப் பிரதிபிம்பங்களாக இருப்பதுபோலவே இண்டியன் ஒபினியனும் இருந்தது. அதில் நான் வாரந்தோறும் என் ஆத்மாவைக் கொட்டினேன். சத்தியாக்கிரகம் என்ற பெயரால் நான் உணர்ந்த பொருளைத் தெரிந்துகொள்ள முயன்று வந்தேன். சிறைவாசத்தைத் தவிர்த்துப் பத்து வருஷ காலம் அதாவது 1914 வரையில் இண்டியன் ஒபினியனில் நான் சிந்தனை செய்யாமலோ நிறுத்துப் பார்க்காமலோ எழுதிய ஒரு சொல்லாவது எந்த இதழிலும் போனதில்லை; இந்தப் பத்திரிகை என் புலனடக்கப் பயிற்சிக்கு ஏற்றதாக இருந்தது. அந்தக் கட்டுரைகளின் பயனாக விமரிசகர்களுங்கூடத் தம் பேனாக்களை இழுத்துப் பிடிக்கவேண்டியிருந்தது என்பது எனக்குத் தெரியும். இந்தப் பத்திரிகை இல்லாமலிருந்திருந்தால் சத்தியாக்கிரகப் போர் நடந்திராது. வாசகர்கள் இதைத் தம்முடைய பத்திரிகையாகவே எண்ணினார்கள். சத்தியாக்கிரகப் போரின் உண்மைச் சித்திரமும் தென்னாப்பிரிக்க இந்தியர்களின் நிலையும் இதில் அவர்களுக்குத் தெளிவாகத் தென்பட்டன.

இந்தப் பத்திரிகையில்தான் நான் ஆகார சாஸ்திரத்தைப் பற்றி ஒரு கட்டுரைக் கோவையை எழுதினேன். அது பிறகு புஸ்தகமாக வெளிவந்தது. அதன் ஆங்கில மொழிபெயர்ப்பான 'Guide to Health' என்னும் புத்தகம் கீழ்நாட்டிலும் மேல்நாட்டிலுமுள்ள பல வாசகர்களின் வாழ்க்கையைப் பெரிதும் மாற்றிவிட்டது.

## 24

## ஒரு புத்தகத்தின் அதிசய சக்தி

சில முக்கியமான புத்தகங்கள் என் வாழ்க்கையில் ஆழ்ந்த மாறுதல்களை உண்டாக்கியிருக்கின்றன. ஆனால் என் வாழ்க்கையில் எல்லாவற்றிலும் அதிகப் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்த புத்தகம் ரஸ்கின் எழுதிய 'Unto This Last' என்பது.

*1904*-இல் இண்டியன் ஒபினியன் வியாபாரத்தை ஒழுங்குபடுத்தும்பொருட்டு நான் டர்பன் போய் வந்தேன். மிஸ்டர் எல்பெர்ட் வெஸ்ட் என் ஆங்கில நண்பர். அவர் ஓர் அச்சுக்கூடத்தை நடத்திக்கொண்டிருந்தார். என் பேச்சைக் கேட்டு

அவர் ஒரேயடியாகத் தம் வேலையை விட்டுவிட்டு இண்டியன் ஒபினியன் கணக்கு வழக்குகளைச் சரிப்படுத்துவதற்காக டர்பனுக்குப் போனார். அங்கிருந்து பத்திரிகையின் பொருளாதார நிலை மிகவும் வருந்தத்தக்கதாய் இருக்கிறது என்று எச்சரித்தார்.

வெஸ்ட்டின் இந்தக் கடிதம் கிடைத்ததும் நேட்டாலுக்குப் புறப்பட்டேன். என் வாழ்க்கையில் ஏற்கனவே பிரவேசித்திருந்த மிஸ்டர் போலக் என்னை ஸ்டேஷனுக்குக் கொண்டுவிட வந்தவர், ரஸ்கின் எழுதிய 'Unto This Last' என்ற புத்தகத்தை என் கையில் கொடுத்து, "இந்தப் புத்தகம் படிக்கத் தகுந்தது. உங்களுக்கு இது கட்டாயம் பிடிக்கும்" என்று சொன்னார்.

புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்ததும் அதை முடிக்காமல் கீழே வைக்க முடியவில்லை. அது என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. ஜோஹான்ஸ்பர்க்கிலிருந்து நேட்டாலுக்கு இருபத்து நாலு மணி நேரப் பிரயாணம். வண்டி மாலையில் டர்பன் போய்ச் சேர்ந்தது. அன்று இரவு முழுவதும் எனக்குத் தூக்கமே வரவில்லை. இந்தப் புத்தகத்தில் கூறியுள்ள கொள்கைகளுக்கு ஏற்ப வாழ்க்கையைச் சமைத்துக்கொள்ள வேண்டும் என்ற சிந்தனைவெறி மூண்டது.

என் வாழ்க்கையில் ஏதாவது ஒரு புத்தகம், படித்த மறு நிமிஷத்தில் மகத்துவம் வாய்ந்த உருவான மாறுதலைச் செய்திருக்கிறதென்றால், அது இந்தப் புத்தகந்தான். பிற்காலத்தில் நான் இதைக் குஜராத்தியில் மொழிபெயர்த்தேன். 'ஸர்வோதயம்' என்ற அந்தப் புத்தகம் வெளியாகியும் இருக்கிறது.

என் உள்ளத்தின் ஆழத்தில் பதிந்திருந்த பொருளின் தெளிவான பிரதிபிம்பத்தை நான் ரஸ்கினின் இந்தப் புத்தகத்தில் கண்டேன். அதனால்தான் அது என்மீது ஆட்சி செலுத்தித் தன் கொள்கைகளின்படி என்னை நடந்துகொள்ளச் செய்தது. நம் முன்ளே தூங்கியிருக்கும் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பும் சாமர்த்தியம் எவனிடம் இருக்கிறதோ அவன்தான் கவி. எல்லாக் கவிகளுடைய ஆதிக்கமும் எல்லோர்மீதும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை; ஏனெனில் எல்லோரிடத்திலும் எல்லா நல்லுணர்ச்சிகளும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை.

ஸர்வோதயக் கொள்கைகளை நான் அறிந்த விதம் இப்படி:

(1) எல்லோருடைய நன்மையில் நம்முடைய நன்மை அடங்கியிருக்கிறது.

(2) வக்கீல் தொழிலேயும் நாவிதனுடைய தொழிலேயும் சமமாக மதிக்கவேண்டும்; ஏனெனில் உழைப்பினுல் வாழும் உரிமை இருவருக்கும் சமமானதே.

(3) தொழிலாளியின் வாழ்க்கையும் குடியானவனுடைய வாழ்க்கையும் அதாவது உழைப்புள்ள வாழ்க்கையே உண்மையான வாழ்க்கையாகும்.

முதல் விஷயம் எனக்கு ஏற்கனவே தெரியும். இரண்டாவது எனக்கே லேசாகத் தோன்றியிருந்தது. ஆனுல் மூன்ருவது கொள்கை என் சிந்தனே உலகத்துக்கு வந்ததே இல்லே. முதற் கொள்கையிலே மற்ற இரண்டும் அடங்கியவை என்பதை 'ஸர்வோதயம்' எனக்கு வெட்ட வெளிச்சமாக விளக்கியது. பொழுது விடிந்ததுமே நான் அதன்படி என் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளக் கங்கணம் கட்டிக்கொண்டேன்.

## 25

## போனிக்ஸ் ஸ்தாபனம்

நான் முதல் முதல் வெஸ்டினிடம் இது சம்பந்தமாகப் பேசினேன். ஸர்வோதயக் கொள்கை என் மனத்தில் பதிந்திருப்பதை அவரிடம் சொல்லி, "இண்டியன் ஒபினியனே ஒரு வயற்காட்டுக்கு எடுத்துக் கொண்டுபோனுல் என்ன? அங்கே எல்லோரும் ஒன்ருக இருந்து, சாப்பாட்டுச் செலவைச் சமமாகப் பங்கிட்டுக்கொண்டு, தத்தம் செலவுக்காக எல்லோரும் வயலில் வேலேசெய்து, ஓய்வு வேளேயில் இண்டியன் ஒபினியன் வேலையைச் செய்ய வேண்டும்" என்று யோசனே கூறினேன். வெஸ்ட்டுக்கு இது பிடித்தது. சாப்பாட்டுச் செலவைக் கணக்கிட்டுப் பார்த்தபோது ஒவ்வொருவருக்கும் குறைந்தது 3-பவுன் பிடிக்கும் என்று தெரிந்தது. 'டர்பனுக்கு அருகில் ஏதாவது ஒரு ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் நிலம் தேவை' என்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்தேன். போனிக்ஸ் என்னும் இடத்தில் நிலம் விற்பனேக்கு இருப்பதாகச் செய்தி வந்தது. வெஸ்ட்டும் நானும் நிலத்தைப் பார்க்கப் போனேம். ஏழு நாளேக்குள் இருபது ஏக்கர் நிலத்தை வாங்கிவிட்டோம். அதில் ஒரு சிறு நீரோடையும் இருந்தது. சில மாமரங்களும் கிச்சிலி மரங்களும் இருந்தன. பக்கத்திலேயே 80 ஏக்கர் கொண்ட ஒரு துண்டு இருந்தது. அதில் பழ விருக்ஷங்கள் அதிகமாய் இருந்ததோடு ஒரு குடிசையும் இருந்தது. சில நாள் கழித்து அதையும் வாங்கினேம். இரண்டும் சேர்ந்து ஆயிரம் பவுன்கள் பிடித்தன.

வேஸ்ட் பார்ஸி ருஸ்தம்ஜீ இத்தகைய துணிவான வேலைகளி லெல்லாம் எனக்குத் துணைவராக இருந்தார். அவருக்கு என் ஏற் பாடு பிடித்திருந்தது. அவர் தம் கிடங்கில் கிடந்த இரும்புத் தகடு முதலியவற்றை எங்களுக்கு இனமாகக் கொடுத்தார். என்னோடு போரில் சேர்ந்து உழைத்த எத்தனையோ இந்தியத் தச்சர்களும் கொத்தர்களும் இதற்கு உதவி செய்தார்கள். கட்டிடவேலை ஆரம்பமாயிற்று. ஒரு மாதத்திற்குள் 75 அடி நீளமும் 50 அடி அகலமும் உள்ள கொட்டகை தயாராகிவிட்டது. வெஸ்ட் முதலியோர் உயிருக்குத் துணிந்து தச்சர் முதலியவர்களோடு வசித்தார்கள். போனிக்ஸில் புல் அடர்ந்திருந்தது. மனித நட மாட்டம் அடியோடு இல்லை. ஆதலால் பாம்பு முதலியவற்றின் உபத்திரவமும் ஆபத்தும் இருந்தன. அதை நாங்கள் செப்பனிட்டுக் குடியிருப்பதற்கு ஏற்றதாக ஆக்கினோம். சாமான்களில் பெரும் பகுதியை வண்டிகளில் ஏற்றி ஒரே வாரத்தில் போனிக்ஸ் கொண்டுபோய்ச் சேர்த்தோம். டர்பனிலிருந்து போனிக்ஸ் பதின்மூன்று கல்.

என்னோடு அங்கே வந்திருந்த உறவினர்களையும் வியாபாரத் தில் இருந்த சிலரையும் போனிக்ஸில் சேர்த்துவிட முயன்றேன். பலர் நான் சொன்னதை ஒப்புக்கொண்டார்கள். இவர்கள் எல்லோரிலும் இன்று நான் (இப்போது ஸ்வர்க்கவாசியான) மகன்லால் காந்தியின் பெயரை மட்டும் தேர்ந்தெடுத்து வாசகர் களுக்கு அறிமுகப்படுத்துகிறேன். ஏனெனில் அங்கே வர ஒப்புக் கொண்ட பலர் கொஞ்ச காலம் இருந்துவிட்டு மறுபடி பணம் சம்பாதிக்கும் சுழலில் அகப்பட்டுக்கொண்டார்கள். மகன்லால் காந்தியோ தம் வேலையை விட்டு என்னிடம் வந்தவர் இன்றும் என்னோடு வாழ்கிறார். தம்முடைய அறிவு, தியாகம், சக்தி, பக்தி ஆகியவற்றைக்கொண்டு என் ஆந்தரிகமான சோதனைகளில் எனக்குத் துணைவராக இருக்கிறார். என் ஆதிகாலத்துத் தோழர் களுக்குள்ளே இன்று அவருடைய ஸ்தானம் எல்லாவற்றிலும் முக்கியமானது. மேலும், தாமாகக் கற்றுத் தேர்ச்சிபெற்ற கைத்தொழிலாளர் என்ற முறையில் அவருடைய ஸ்தானம் இணையற்றது என்பது என் அபிப்பிராயம்.

இவ்வாறு 1904-ஆம் வருஷத்தில் போனிக்ஸ் ஸ்தாபனம் ஏற்பட்டது. எத்தனையோ தடைகளும் கஷ்டங்களும் இருந்துங் கூட இந்த ஸ்தாபனமும் இண்டியன் ஒபீனியனும் இன்று வரையில் நடந்துவருகின்றன. ஆனால் இந்த ஸ்தாபனத்தின்

ஆரம்பகாலச் சங்கடங்களும் அந்தக் காலத்து ஆசைகளும் ஏமாற்றங்களும் அறிந்துகொள்ளத்தக்கவை.

போனிக்ஸில் இண்டியன் ஒபினியனின் முதல் இதழை வெளியிடுவது சுலபமாக இல்லை. இரண்டு காரியங்களை நான் ஜாக்கிரதையாக முன்னாலேயே செய்யாமல் இருந்திருந்தால் அந்த இதழ் ஒருவாறு நின்றிருக்கும், அல்லது தாமதமாக வெளிவந்திருக்கும். எஞ்சினைக்கொண்டு ஓடும் யந்திரங்களை இந்த ஸ்தாபனத்தில் வரவழைக்க எனக்கு விருப்பம் குறைவாகத்தான் இருந்தது. விவசாய வேலையை நாம் கையினால் செய்ய விரும்பும்போது அச்சு யந்திரமும் கையால் ஓட்டக்கூடியதாக வாங்கவேண்டும் என்பது என் எண்ணம். ஆனால் அந்தச் சமயத்தில் அது சாத்தியமாகத் தோன்றாததால் எண்ணெய் எஞ்சின் ஒன்று வரவழைத்திருந்தேன். அந்த இடத்தில் ஒருவேளை எஞ்சின் வேலை செய்யாமல் நின்றுவிடுமோ என்ற சந்தேகம் எனக்கு இருந்தது. ஆகவே அம்மாதிரியான அவசரத்துக்கு வேலையை நடத்தக்கூடிய கருவியையும் முன்னாலேயே தயாராக வைத்திருப்பது நலம் என்று வெஸ்டினிடம் சொன்னேன். அவர் கையினால் சுற்றக்கூடிய சக்கரம் ஒன்றை வரவழைத்து, சந்தர்ப்பம் நேரும்போது அதைப் பொருத்தி யந்திரத்தை ஓட்டுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார். இண்டியன் ஒபினியனின் அளவு, தினசரிப் பத்திரிகையைப் போல அகலமும் நீளமுமாக இருந்தது. பெரிய மெஷின் நின்றுவிட்டால் இத்தனை பெரிய அளவுள்ள பத்திரிகையை அச்சிடுவதற்கு வேறு சௌகரியம் இல்லை. பத்திரிகையின் அந்த இதழ் இதனால் நின்றுபோகுமோ என்ற சந்தேகமும் இருந்தது. இந்தச் சங்கடத்தை நீக்குவதற்காகப் பத்திரிகையின் அளவைச் சிறிதாக்கினோம். ஏதாவது தொந்தரவு நேர்ந்தால் 'டிரெடில்' யந்திரத்தைக் காலால் ஓட்டியாவது பத்திரிகையைக் கொஞ்சம் பக்கங்களோடாயினும் கொண்டுவரலாமே.

ஆரம்பத்தில் இண்டியன் ஒபினியன் வெளியாவதற்கு முந்திய நாள் இரவுகளில் நாங்கள் எல்லோரும் கண்விழிக்கவேண்டி இருந்தது. சிறுவர்கள் முதல் கிழவர்கள் வரையில் யாவரும் பத்திரிகை மடிப்பார்கள். இரவு பத்துப் பன்னிரண்டு மணிக்கு இந்த வேலை முடியும். ஆனால் முதல் தடவை நாங்கள் வேலை செய்த இரவை எப்போதும் மறக்கமுடியாது. 'பார'த்தை மெஷின் மீது பொருத்தியாயிற்று; ஆனால் எஞ்சின் இடக்குச் செய்தது. அது ஓட மறுத்துவிட்டது. எஞ்சினை அதன் இடத்தில் பொருத்தி ஓட்ட எஞ்சினியர் ஒருவர் வந்திருந்தார். அவரும் வெஸ்டும்

ஆனவரை முயன்று பார்த்தார்கள். ஆனால் எஞ்சின் இம்மியும் அசையவில்லை. எல்லோரும் கவலையோடு சோர்ந்துபோய் உட்கார்ந்துவிட்டார்கள். கடைசியில் வெஸ்ட் நம்பிக்கையை இழந்தவராய் என்னிடம் வந்தார். அவர் கண்களில் கண்ணீர் ததளித்தது. அவர், "இனி இன்று எஞ்சின் ஓடும் என்ற நம்பிக்கை இல்லை. இந்த வாரம் நாம் பத்திரிகையைச் சமயத்தில் கொண்டுவர முடியாது" என்றார்.

"இதுதான் விஷயமென்றால் நம்முடைய வசத்திலே ஒன்றும் இல்லை. ஆனால் இதற்கு இப்படிக் கண்ணீர்விட வேண்டிய அவசியம் இல்லை. இன்னும் ஏதாவது முயற்சி செய்யக்கூடுமானால் செய்து பாருங்கள். ஆமாம்; கையால் சுற்றும் அந்தச் சக்கரம் நம்மிடம் இருக்கிறதே, அது என்றைக்கு உபயோகப்படப் போகிறது?" என்று கூறி நான் அவரைத் தேற்றினேன்.

"அந்தச் சக்கரத்தைச் சுற்றுவதற்கு நம்மிடம் ஆட்கள் எங்கே? நம்மைப் போன்றவர்களால் அது முடியும் வேலை அல்ல. அதைச் சுற்றுவதற்கு மாறி மாறி நான்கு பேர்கள் வேண்டும். நம்முடைய ஆட்கள் ஏற்கனவே களைத்துப் போயிருக்கிறார்கள்" என்றார் வெஸ்ட்.

கட்டிட வேலை இன்னும் பூர்த்தியாகவில்லை. தச்சர்கள் அச்சுக்கூடத்திலேயே தூங்கிக்கொண்டிருந்தார்கள். நான் அவர்களைச் சுட்டிக் காட்டி, "இந்தத் தச்சர்களிடம் நாம் ஏன் உதவி பெறக்கூடாது? இன்று இரவு முழுவதும் நாம் எல்லோரும் விழித்திருந்து அச்சிட முயலுவோம். அவ்வளவுதான்; இந்தக் கடமை ஒன்றுதான் நாம் செய்யவேண்டியது பாக்கி" என்றேன்.

"தச்சர்களை எழுப்பி அவர்களிடம் உதவி கேட்க எனக்குத் துணிவு இல்லை. களைத்துப் போயிருக்கும் நம் ஆட்களிடந்தான் ஆகட்டும், நான் எப்படி இதைச் சொல்வது?"

"அது என் பொறுப்பு."

"அப்போது ஒருகால் வேலை முடிந்துவிடலாம்."

நான் தச்சர்களை எழுப்பி அவர்களிடம் உதவி கேட்டேன்; அவர்களை வேண்டி வற்புறுத்தும் அவசியமே ஏற்படவில்லை. "பேஷ்! இம்மாதிரியான சமயத்தில் உதவி செய்யாவிட்டால் நாங்களும் மனிதர்களா? நீங்கள் இளைப்பாறுங்கள். நாங்கள் சக்கரத்தைச் சுற்றுகிறோம். இதில் எங்களுக்கு ஒன்றும் கஷ்டமே இல்லை" என்று அவர்கள் சொன்னார்கள். அச்சுக்கூடத்து ஆட்களோ தயாராகவே இருந்தார்கள்.

வெஸ்டின் ஆனந்தத்துக்கு எல்லையே இல்லை. அவர் வேலை செய்துகொண்டே பஜனைப் பாட்டுப் பாட ஆரம்பித்தார். சக்கரத்தைச் சுற்றுவதில் நானும் தச்சர்களோடு கலந்துகொண்டேன். மற்றவர்களும் மாறி மாறி வேலை செய்யலாயினர். பத்திரிகை அச்சாகிக்கொண்டே வந்தது.

காலையில் ஏழு மணி இருக்கும். இன்னும் நிரம்ப வேலை பாக்கி இருந்தது. "இப்பொழுது நாம் எஞ்சினியரை எழுப்பி ஏன் பார்க்கக்கூடாது? வெளிச்சத்தில் அவர் மண்டையை முட்டிக்கொண்டு பார்த்தால் நல்லதாயிற்றே! எஞ்சின் ஓட ஆரம்பித்தால் சமயத்தில் நம்முடைய வேலை முடிந்துவிடும்" என்று வெஸ்டினிடம் சொன்னேன்.

வெஸ்ட் எஞ்சினியரை எழுப்பினார். அவர் எழுந்துவந்து எஞ்சின் அறைக்குள் சென்றார். முடுக்கிவிட்டவுடனே எஞ்சின் ஓட ஆரம்பித்தது. அச்சுக்கூடம் மகிழ்ச்சிப் பெருக்கினால் எதிரொலித்தது. "இது எப்படி? இரவு அத்தனை முயற்சி செய்தும் ஓடவில்லையே. இப்பொழுது கைவைத்ததுமே ஒன்றுமே கோளாறு இல்லாததுபோல ஓட ஆரம்பித்துவிட்டதே!" என்று எல்லாரும் சொன்னார்கள். வெஸ்டோ அல்லது எஞ்சினியரோ, "இதற்குப் பதில் சொல்லுவது கஷ்டம். யந்திரங்களுக்கும் நம்மைப்போலவே ஓய்வு அவசியம் என்று தோன்றுகிறது. சில சமயம் அவற்றின் நிலையும் நம்மைப்போலத்தான் இருக்கிறது" என்று சொன்னார்.

எஞ்சின் ஓடாதது எங்களுக்கு ஏற்பட்ட சோதனை என்றும், சரியான சமயத்தில் அது ஓடியது எங்கள் தூய உழைப்பின் நல்ல பயன் என்றும் எண்ணினேன். இண்டியன் ஒபினியன் குறித்த நேரத்தில் ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்தது. எல்லோருடைய கவலையும் தீர்ந்தது.

எங்களுடைய இந்தப் பிடிவாதத்தின் பயனாகப் பத்திரிகை குறித்த வேளையில் வெளிவரும் என்பது ஜனங்களின் மனத்தில் பதிந்தது. போனிக்ஸில் உழைப்பின் சூழ்நிலை பரவியது. இந்த ஸ்தாபனத்தின் வாழ்க்கையிலே, வேண்டுமென்றே எஞ்சினை விலக்கி, கையினாலேயே சக்கரத்தைச் சுற்றி உறுதியுடன் வேலை செய்த காலம் ஒன்றும் வந்தது. போனிக்ஸ் வாழ்க்கையில் நீதியைக் காப்பாற்றிய மிகவும் உன்னதமான காலம் அதுதான் என்று நான் சொல்ல முடியும்.

இந்த வேலை இன்னும் நிலைப்படாமல் இருக்கும்பொழுதே, கட்டிடம் இன்னும் தயாராகாமல் இருக்கும்பொழுதே, புதிதாக

ஏற்பட்ட இந்தக் குடும்பத்தை விட்டு நான் ஜோஹான்ஸ் பர்க்குக்கு ஓடவேண்டியதாயிற்று. அங்கே போய், போலக்கிடம் இந்த முக்கியமான மாறுதல்களைத் தெரிவித்தேன். தாம் கொடுத்த புத்தகத்தின் இந்தப் பலனைக் கண்டதும் அவருடைய மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

அவர் 'கிரிடிக்' பத்திரிகையின் சொந்தக்காரருக்கு ஒரு மாத நோட்டீஸ் கொடுத்துத் தம் வேலையை ராஜீநாமாச் செய்தார். அங்கிருந்து விடுதலை பெற்று அவர் போனிக்ஸ் வந்து சேர்ந்து எங்கள் குடும்பத்தோடு ஒருவராக வாழலானார்.

ஆனால் நான்தான் அவரை வைத்துக்கொண்டிருக்க முடியவில்லை. ஜோஹான்ஸ்பர்க்கில் காரியாலய வேலைகளின் பளுவை என் ஒருவனால் தாங்க முடியவில்லை. எனவே நான் போலக்கைக் காரியாலயத்தில் வந்து இருந்து தொழிலில் பயிற்சி பெறும்படி கேட்டுக்கொண்டேன். அவர் வக்கீலானதும், கடைசியில் இருவருமே போனிக்ஸுக்குப் போய்விடலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால் என்னுடைய இந்த எண்ணம் ஈடேறவில்லை. நான் போனிக்ஸுக்கே போக முடியாதபடி வேலைகள் வளர்ந்துவிட்டன. என் வாழ்க்கையையும் குடித்தனத்தையும் 'ஸர்வோதய'க் கொள்கையின்படி நடத்த முடிந்ததே என்பதைக் கொண்டே நான் திருப்திப்பட வேண்டியதாயிற்று.

ஒரு பாரிஸ்டரின் வீட்டை எவ்வளவு எளிமையோடு வைத்திருக்க முடியுமோ அந்த அளவுக்கு என் வீட்டை வைத்துக் கொண்டேன். எந்த வேலையானாலும் நம் கையால் செய்வது என்ற பழக்கம் ஏற்பட்டது. அதில் குழந்தைகளையும் சேர்த்துக் கொள்ள முயன்றேன்.

கடையிலிருந்து ரொட்டி வாங்குவதற்குப் பதிலாக வீட்டில் பூரணம் இல்லாது ரொட்டி செய்ய ஆரம்பித்தோம். இந்த ரொட்டிக்கு ஆலையில் அரைத்த மாவு உபயோகம் இல்லை. மேலும் ஆலை மாவுக்குப் பதிலாகக் கையால் அரைத்த மாவை உபயோகிப்பதில் எளிமை, ஆரோக்கியம், பணம் எல்லாம் மிச்சம். எனவே ஏழு பவுன் செலவழித்துக் கையால் மாவு அரைக்கும் இயந்திரம் ஒன்றை வாங்கினேன். இதன் சக்கரம் பளுவாக இருந்ததனால் அதை ஒருவராகச் சுற்றுவது கஷ்டம். இரண்டுபேர் சுலபமாகச் சுற்றலாம். அநேகமாக, போலக்கும் நானும் குழந்தைகளுமாக அதைச் சுற்றுவது வழக்கம். இது குழந்தைகளுக்கு நல்ல தேகப் பயிற்சியாக இருந்தது. வீட்டைச் சுத்தம் செய்வதற்கு ஒரு வேலைக்காரன் இருந்தான். கக்கூஸைச் சுத்தம் செய்ய முனிசி

பாலிடி ஆள் வருவான். ஆனால் கக்கூஸைக் கழுவிச் சுத்தம் செய்வது, ஆபீஸ் அறையை அலம்பிப் பெருக்குவது முதலிய வேலைகளை வேலைக்காரரிடம் வாங்குவதில்லை; அவர்களிடம் இதை எதிர்பார்ப்பதும் இல்லை. இவற்றை நாங்களே செய்துவந்தோம். குழந்தைகளுக்கும் இது நல்ல பயிற்சி ஆயிற்று. இதன் பயனாக, என்னுடைய எந்தப் புதல்வனுக்கும் கக்கூஸைச் சுத்தம் செய்வதில் அருவருப்பு உண்டானதில்லை. சாதாரண ஆரோக்கிய விதிகளையும் அவர்கள் சுலபமாகவே கற்றுக்கொண்டார்கள். ஜோஹான்ஸ்பர்க்கில் வீட்டில் யாரும் நோயாளியாகப் படுத்ததில்லை. அப்படி ஒரு சமயம் யாராவது நோயில் படுத்தால் குழந்தைகளே அவர்களுக்குப் பணிவிடை செய்வார்கள். இந்த வேலையை அவர்கள் மிகவும் ஆனந்தமாகச் செய்தனர். குழந்தைகளின் புத்தகப் படிப்பைப்பற்றி நான் கவலைப்படவில்லை என்று சொல்ல முடியாது. ஆனால் ஒன்று: அதைத் தியாகம் செய்ய மட்டும் நான் சிறிதும் கூச்சப்படவில்லை. இந்தக் குறைக்காக என் புதல்வர்கள் என்னைப்பற்றிப் புகார் செய்யக் கூடும். எத்தனையோ தடவை அவர்கள் தம்முடைய அதிருப்தியை வெளிப்படுத்தியும் இருக்கிறார்கள். அதில் ஓரளவு என் குற்றம் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

அவர்களுக்குப் புத்தகக் கல்வி அளிக்கவேண்டும் என்ற எண்ணம் எனக்கு மிகுதியாக உண்டு; அப்படிச் செய்ய முயன்றும் வந்தேன். ஆனால் இந்த வேலையில் எப்பொழுதும் ஏதாவது ஒரு தடை வந்துகொண்டே இருந்தது. வீட்டில் அவர்களுக்குக் கல்வி கற்பிக்க எவ்வித ஏற்பாடும் செய்யாததால் என்னோடு அவர்களைக் காரியாலயத்துக்கு அழைத்துப் போவேன். காரியாலயம் $2\frac{1}{2}$ கல். காலையும் மாலையும் சேர்ந்து இந்த 5 மைல் நடை அவர்களுக்கும் எனக்கும் தேகப் பயிற்சியாயிற்று. வழியில் நடந்துகொண்டே அவர்களுக்கு ஏதாவது கற்றுக் கொடுக்க முயல்வேன்; அதுவும், எங்களோடு வேறு யாரும் வராமல் இருக்கும்போதுதான். காரியாலயத்தில் கட்சிக்காரர்களோடும் குமாஸ்தாக்களோடும் அவர்கள் பழகுவார்கள். நான் சொன்னால் ஏதாவது படிப்பார்கள்; இங்கும் அங்கும் திரிவார்கள்; கடையிலிருந்து ஏதாவது சாமான் வேண்டுமென்றால் வாங்கி வருவார்கள். மூத்த புதல்வன் ஹரிலாலைத் தவிர மற்றப் பிள்ளைகள் இவ்விதமே வளர்ந்தனர். ஹரிலால் இந்தியாவிலேயே இருந்துவிட்டான். குழந்தைகளின் இலக்கியக் கல்விக்காக நான் தவறாமல் ஒருமணி நேரமாயினும் செலவழித்திருந்திருப்பேனாயின்

அவர்களுக்கு உயர்ந்த கல்வியை அளித்திருக்கலாம்; ஆனால் இது என்னால் சாத்தியப்படவில்லை. அவர்களுக்கும் எனக்கும் இதைப் பற்றிய வருத்தம் இருந்துகொண்டே இருக்கிறது.

என் மூத்த புதல்வனே தன் வயிற்றெரிச்சலை என் முன்பும், பொது ஜனங்களின் முன்பும் வெளிப்படுத்தியிருக்கிறான். மற்றவர்கள் தம் தாராள மனத்தோடு இந்தக் குற்றம் விலக்க முடியாதது என்பதை அறிந்து அதைப் பொறுத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆயினும் இந்தக் குறைக்காக நான் பச்சாத்தாபப்படவில்லை. ஒரு லட்சியத் தந்தையாக நான் இருக்கவில்லையே என்பது மட்டுமே என் வருத்தம். பொதுஜனத் தொண்டுக்காகவே அவர்களுடைய இலக்கியக் கல்வியை ஆகுதி செய்திருக்கிறேன் என்பது என் அபிப்பிராயம். அதன் அடிப்படையில் அறிவீனம் இருந்திருக்கலாம். ஆனால் அது நல்ல எண்ணத்தோடு கூடியது என்று மட்டும் நான் சொல்லமுடியும். அவர்களுடைய ஒழுக்கத்தையும் வாழ்க்கையையும் சமைப்பதற்கு ஏற்றதாகவும் தேவையாகவும் இருந்தவற்றைச் செய்ய நான் எவ்விதக் குறையும் வைக்கவில்லை. இவ்விதப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்வதே பெற்றோர்களின் இன்றியமையாத கடமை என்று நான் எண்ணுகிறேன். நான் இவ்வளவு முயன்றுங்கூட என் புதல்வர்களின் வாழ்க்கையில் குறைகள் தென்பட்டால் அவை தம்பதிகளான எங்களுடைய குறைகளின் பிரதிபிம்பங்களே என்பது என் உறுதியான அபிப்பிராயம்.

பெற்றோர்களின் உடற்கூறுகள் மட்டுமின்றி அவர்களுடைய குண தோஷங்களும் குழந்தைகளுக்குப் பாரம்பரியமாகக் கிடைக்கின்றன. அக்கம் பக்கத்துச் சூழ்நிலைகளுக்கேற்ப இவற்றில் விதவிதமான ஏற்றத் தாழ்வுகள் உண்டாவது இயல்பு. ஆனால் மூதாதையரிடமிருந்து அவர்களுக்குக் கிடைப்பதுதான் அவர்களுக்கு மூலதனமாகும். எத்தனையோ குழந்தைகள் பரம்பரையாகக் கிடைத்த குற்றங்களிலிருந்து தம்மைக் காத்துக்கொள்வதையும் நான் பார்த்திருக்கிறேன். ஆனால் இது ஆத்மாவின் மூல சுபாவமாகும். அந்த ஆத்மாவின் வன்மையே வன்மை!

இவ்வாறு நான் ஒழுங்கு முறையாக வாழ்க்கையை நடத்தியதோடு குழந்தைகளுக்கும் அதே பயிற்சியை அளித்து வந்துகொண்டிருக்கையில், ஜோஹான்ஸ்பர்க்குக் குடித்தனத்தைக் கலைத்து என் மனைவியையும் குழந்தைகளையும் போனிக்ஸில் வாசம் செய்ய அனுப்பும்படியான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. மிஸ்டர் போலக் தமக்காக வேறு ஒரு சிறு வீட்டை வாடகைக்கு எடுத்துக்

கொண்டார். சர்க்கார் தரப்பில் 'ஜுலு கலகம்' என்று சொல்லப்படும் சம்பவமே அது.

# 26

## ஜுலு கலகம்

போயர் யுத்தத்தைப் போலவே ஜுலு கலகத்தின் பொழுதும் நான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தினிடம் பக்திகொண்டு சேவை செய்தேன். ஜுலுக்களிடம் எனக்கு எவ்வித விரோதமும் இல்லை. அவர்கள் எந்த இந்தியருக்கும் தீங்கு செய்ததில்லை. அதை நான் கலகம் என்றுகூடச் சொல்ல முடியாது. ஆனால் அந்தக் காலத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் உலக நன்மைக்காகவே இருக்கிறது என்று எண்ணியிருந்தேன். நான் உள்ளன்போடு அதனிடம் பக்தி கொண்டிருந்தேன். அது வீழ்ச்சியடைவதை நான் விரும்பவில்லை.

என்னை நான் நேட்டால்வாசியாகக் கருதினேன். நேட்டாலுடன் எனக்கு நெருங்கிய தொடர்பு இருந்ததுதான் தெரியுமே. ஆதலால் நான் அங்குள்ள கவர்னருக்கு, அவசியமானால் காயம் பட்டவர்களின் பணிவிடைக்கு இந்தியர்களின் படையொன்றை அழைத்துப் போகத் தயாராக இருப்பதாகக் கடிதம் எழுதினேன். அவர் உடனே அதை ஏற்றுக்கொண்டார். நான் டர்பனுக்குப் போய் ஆள் சேர்த்தேன். நாங்கள் 24 பேர்கள் தயாரானோம். எனக்குத் தாற்காலிகமாக 'ஸார்ஜண்ட் மேஜர்' பதவியும், நான் விரும்பிய இருவருக்கு 'ஸார்ஜண்ட்' பதவியும், ஒருவருக்குக் 'கார்ப்பொரல்' பதவியும் கிடைத்தன.

இந்தப் படை ஆறு வாரம் இடைவிடாமல் வேலை செய்தது. 'கலக'ப் பிரதேசத்தைப் போய்ப் பார்த்தபோது, 'கலகம்' என்று சொல்லும்படி அங்கே ஏதும் நடந்ததாகத் தெரியவில்லை. அது ஒரு வரி கொடா இயக்கத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. விஷயம் எதுவாயினும், என் இதயம் மட்டும் ஜுலுக்களின் பக்கமாக இருந்தது. நாங்கள் முகாமுக்குப் போனதும் காயமடைந்த ஜுலுக்களுக்குப் பணிவிடை செய்யும் வேலையையே எங்களுக்கு முக்கியமாகக் கொடுத்திருப்பதைக் கண்டு எனக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாயிற்று. தலைமை உத்தியோகஸ்தரான அந்த டாக்டர் எங்களுடைய இந்தத்தொண்டை வரவேற்று, "வெள்ளைக் காரர்கள் காயமடைந்த ஜுலுக்களுக்குப் பணிவிடை செய்யத் தயாராக இல்லை. நான் தனியாக என்ன செய்வது? அவர்களுடைய

புண்கள் அழுகிக்கொண்டிருக்கின்றன. நீங்கள் வந்தது நல்ல தாயிற்று. இதை நான் அந்த நிரபராதிகள்மீது ஆண்டவனுக்கு ஏற்பட்ட அருள் என்றே நினைக்கிறேன்" என்று கூறி, காயம் கட்டும் துணிகளையும், கிருமிகளை அழிக்கும் மருந்து நீரையும் என்னிடம் கொடுத்து, காயமடைந்தவர்களிடம் எங்களை அழைத்துச் சென்றார். அவர்கள் எங்களைக் கண்டதும் பரமானந்தம் அடைந்தார்கள்.

எங்களிடம் பணிவிடைக்காக ஒப்பிக்கப்பட்டிருந்த இவர்கள், சண்டையில் காயமடைந்தவர்கள் அல்ல. இவர்களில் ஒரு பகுதியினர் சந்தேகத்தின்மீது கைது செய்யப்பட்டவர்கள். ஜெனரல் அவர்களுக்குக் கசையடி தண்டனை விதித்திருந்தார். அதனால் இவர்களுக்குக் காயமுண்டாகி, சரியான சிகிச்சை இல்லாமல் அவை அழுகிப்போயின. மற்றொரு பகுதியினர் ஜூலூ நண்பர்கள் என்று அழைக்கப்பட்டவர்கள். அவர்கள் நட்பைத் தோற்றுவிக்கும் அடையாளங்களை அணிந்திருந்துங்கூடச் சிப்பாய்களால் தவறுதலாகச் சுடப்பட்டவர்கள். ஆபத்தான இடங்களுக்கு வேகமாக ஓடும் ஒரு படையுடன் எங்களை இணைத்திருந்தார்கள். இரண்டு மூன்று தடவை ஒரே நாளில் நாற்பது மைல் தூரம் நாங்கள் நடக்கவேண்டியிருந்தது. அங்கும் எங்களுக்கு அந்த ஆண்டவன் பணியே கிடைத்தது. தவறுதலாகக் காயமடைந்த ஜூலூ நண்பர்களை டோலிகளில் தூக்கிக்கொண்டு முகாமில் கொண்டுபோய்ச் சேர்த்து அங்கே அவர்களுக்குச் சுச்ருஷைகள் செய்யவேண்டியிருந்தது.

'ஜூலூ இயக்கம்' யுத்தமே அல்ல; அது மனித வேட்டை என்று எனக்குத் தோன்றிற்று. நான் மட்டுமல்ல, வேறு ஆங்கிலேயர்களும் அப்படித்தான் கருதினார்கள். பொழுது விடிந்தவுடனே, சிப்பாய்கள் கிராமங்களில் சென்று துப்பாக்கி வெடி தீர்க்கும் ஓசை எங்கள் காதுகளில் விழும்.

இந்த ஓசையைக் கேட்பதும், இம்மாதிரியான நிலைமையில் இருப்பதும் என் மனசுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தன. ஆனால் அந்தக் கசப்பான அநுபவத்தை நான் பொறுத்துக்கொண்டு ஆண்டவனின் அருளினால் ஜூலூக்களுக்குத் தொண்டு செய்யும் பேறு நமக்குக் கிடைத்ததே என்று ஆறுதல் பெற்றேன். நாங்கள் இந்த வேலைக்கு முன்வராமல் போயிருந்தால் வேறு யாருமே இதற்குத் தயாராக இருந்திருக்க மாட்டார்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரிந்தது. இதை நினைத்துப் பார்த்தபொழுது என் அந்தராத்மாவுக்கு அமைதி கிடைத்தது.

# 27

## ஆயுள் விரதம்

இவ்வாறு என் அந்தராத்மாவுக்கு அமைதி கிடைத்தபோதிலும், என் மனத்திலே சிந்தனையைத் தூண்டும் வேறுவிஷயங்களும் இருந்தன. ஜன சஞ்சாரமற்ற அந்தப் பிரதேசத்தில் காயம் பட்டவரைத் தூக்கிக்கொண்டோ அல்லது வெறுங் கையுடனே மைல் கணக்காக நடக்கும் போதெல்லாம் என் மனம் பலவிதச் சிந்தனைகளிலே ஆழ்ந்துவிடும்.

பிரம்மசரியத்தைப் பற்றிய என் சிந்தனைகள் இங்கேதான் பக்குவமாயின. என் தோழர்களோடு அதைப்பற்றி விவாதித்தேன். கடவுளைக் காண்பதற்குப் பிரம்மசரியம் இன்றியமையாததுதானு என்பது மட்டும் இன்னமும் எனக்குத் தெளிவாகப் புலப்படவில்லை. ஆனால் தொண்டு செய்வதற்கு அது மிகவும் அவசியம் என்பது மட்டும் எனக்கு நன்ருகத் தெரிந்தது. இம் மாதிரியான தொண்டுகளை நான் நாளுக்கு நாள் அதிகமாகச் செய்யவேண்டி யிருக்கும் என்பதை அறிந்தேன். கேளிக்கைகளிலும், சந்தான விருத்தியிலும், மக்களை வளர்ப்பதிலும் ஆழ்ந்திருந்தால் பூர்ணமாகத் தொண்டு செய்ய முடியாது என்பதையும் அறிந்திருந்தேன்.

இரண்டு குதிரைகள்மீது என்னுல் சவாரி செய்ய முடியாது. என் மனைவி இந்தச் சமயத்தில் கர்ப்பவதியாக இருந்திருந்தால் நான் நிச்சிந்தையாக இந்தத் தொண்டில் இறங்கியிருக்க முடியாது. பிரம்மசரியத்தைக் காக்காவிட்டால், சமூக நன்மைக்காக மனிதன் செய்யவேண்டிய முயற்சிக்குக் குடும்ப விருத்தி விரோதமாகப் போகும். ஆனுல் மணமாகியும் ஒருவன் பிரம்மசரியத்தைக் காக்க முடிந்தால், குடும்பத் தொண்டு சமூகத் தொண்டுக்கு விரோதமாக இருக்க முடியாது.

இந்தச் சிந்தனைகளை நான் மனத்திலே ஆழ்த்தி என் சரீரத்தைக் கசக்கிப் பிழிந்துகொண்டிருந்தபொழுது திடீரென்று கலகம் அடங்கிவிட்டது. இனி எங்களுக்கு விடுதலை கிடைக்கும் என்ற செய்தி வந்தது. மறுநாளே எங்களுக்கு வீட்டுக்குப் போகும் உத்தரவு கிடைத்தது. கொஞ்ச நாளைக்கெல்லாம் நாங்கள் எல்லோரும் வீடு போய்ச் சேர்ந்தோம். அதற்குப் பிறகு சில நாட்களுக்கெல்லாம் கவர்னர் இந்தத் தொண்டுக்காக நன்றி

பாராட்டி ஒரு தனிப்பட்ட கடிதத்தை என் பேருக்கு அனுப்பி ஞர்.

வாழ்நாள் முழுவதும் பிரம்மசரியத்தைக் காப்பது என்னும் விரதத்தை நான் அந்தச் சமயத்திலிருந்து ஏற்றுக்கொண்டிருந் தேன். இந்த விரதத்தின் பெருமையையும் கஷ்டத்தையும் நான் அப்பொழுது முற்றும் அறிந்திருக்கவில்லை. அதிலுள்ள கஷ்டங் களை மட்டும் நான் இன்னும் அநுபவித்துக்கொண்டிருக்கிறேன். கூடவே அதன் பெருமையும் நாளுக்கு நாள் என் கருத்தில் வளர்ந்துகொண்டிருக்கிறது. பிரம்மசரியமற்ற வாழ்க்கை எனக்கு வறண்டதாகவும் மிருக ஜன்மமாகவும் தோற்றுகிறது. மகத் தான பயன்களைத் தோற்றுவிக்கும் பிரம்மசரியம், வேடிக்கை விளையாட்டு அல்ல. அது வெறும் தேக சம்பந்தமான பொருளும் அல்ல.

என் புலனடக்கத்தை எதிர்ப்பவையும் அதற்கு ஆசையூட்டு பவையுமான விஷயங்களிலிருந்து விலகுவதாக நான் மாருத பிரதிக்ஞை கொண்டிருந்தேன். அதாவது, விரதத்தை ஏற்பதற்கு விரோதமாக, மனத்தை மயக்கும் காரணங்கள் எத்தனை உண்டோ அவற்றிலே எதற்கும் நான் வசமாகவில்லை. மாருத விரதம் என்பது ஒரு கோட்டையைப் போல. பயங்கரமான மோகங்களினின்றும் கவர்ச்சிகளினின்றும் அது மனிதனைக் காக்கிறது. நம்முடைய பலவீனங்களுக்கும் சஞ்சலங்களுக் கும் தவருத மருந்து அது. "வைராக்கியமில்லாத தியாகம் நிலைக்காதடா!" என்று நிஷ்குலானந்தர் சொன்னுரே, அதுதான் சரி. சாதகனுக இருக்கும் நிலையில் மோகங்களும் மனோ விகாரங் களும் மனிதனைத் தாக்கும்போது விரதம் அவனைக் காப்பதற்கு இன்றியமையாததே.

நான் இந்த விரதத்தை முற்றும் (1906-இல்) ஏற்றுக் கொள்ளாத வரையில் என் மனைவியிடம் இதைப்பற்றி எப்போ தும் ஆலோசனைசெய்ததில்லை. அவள் இதற்கு ஏதும் தடைசொல் லாதது எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அதை நிறைவேற்றிய பெருமையில் பெரும் பகுதி அவளைச் சார்ந்தது. விரதம் ஏற்ற பிறகு நான் கண்ட சுதந்தரத்தையும் ஆனந்தத்தையும் 1900-க்கு முன்னுல் எப்போதும் அநுபவித்ததில்லை. பிறகு ஒரு மாதத்திற் குள்ளேயே 'சத்தியாக்கிரக'த்துக்கு அடிகோலியாயிற்று. பிரம்ம சரிய விரதந்தான் எனக்குத் தெரியாமலே என்னைச் சத்தியாக்கிர கத்துக்கு ஆயத்தமாக்கியது போலும். சத்தியாக்கிரகத் திட்டம் அதற்கு முந்தி என் மூளையில் எப்போதும் எட்டியதில்லை.

அது என் இஷ்டத்தைக் கேட்காமலே தானாக என்முன் வந்து நின்றது. ஆயினும் நான் இதற்கு முன்பு சென்ற வழிக ளெல்லாம் என்னை அந்த நோக்கத்தினிடமே கொண்டு செலுத் தின என்று மட்டும் நான் சொல்ல முடியும். ஜோஹான்ஸ்பர்க் கில் இருக்கும்போது என் வீட்டின் அபாரச் செலவை நான் ஏற்கனவே குறைத்துவிட்டிருந்தேன். போனிக்ஸ் ஸ்தாபனமோ நான் 'பிரம்மசரிய விரத'த்தை ஏற்றுக் கொள்ளத்தான் ஏற் பட்டதோ என்று தோற்றியது.

இதனால் இந்த விரதத்தில் எனக்கு மேன்மேலும் மகிழ்ச்சி வளர்ந்து வந்த போதிலும் இது என் விஷயத்தில் சுலபமாக இருந்தது என்று மட்டும் யாரும் நினைக்கவேண்டாம். இந்தக் கிழ வயசிலுங்கூட இது எவ்வளவு கஷ்டம் என்பதை நான் அறிகிறேன். இந்த விரதத்தைக் காப்பது கத்தி முனையில் நடப்ப தைப் போன்றது என்பதை நாள்தோறும் உணர்ந்துவருகிறேன். ஒவ்வொரு கணமும் விழிப்போடும் ஜாக்கிரதையோடும் இருக்க வேண்டிய அவசியம் எனக்குப் புலப்படுகிறது.

'பிரம்மசரியம்' என்றால் மனம் மொழி மெய்களால் இந்திரி யங்களை அடக்குவது என்று அர்த்தம். பிரம்மசாரியின் வாழ்க் கைக்கும் சுகபோகியின் வாழ்க்கைக்கும் என்ன வித்தியாசம் என்பதை அறிந்துகொள்வது நல்லது. இருவரும் தம் கண்களால் பார்க்கிறார்கள்; ஆனால் பிரம்மசாரி ஆண்டவனைப் பார்க்கிறான். சுகபோகி நாடகங்களையும் சினிமாக்களையும் பார்ப்பதில் ஆழ்ந் திருக்கிறான். இருவரும் காதுகளினால் கேட்கிறார்கள்; ஆனால் பிரம்மசாரி பகவந் நாமத்தைக் கேட்கிறான். அதே சமயத்தில் சுக போகி சிருங்காரப் பாட்டுக்களைக் கேட்பதில் மூழ்கியிருக்கிறான். இருவரும் விழித்திருக்கிறார்கள்; ஆனால் ஒருவன் தன் உள்ளத்தி லுள்ள இறைவனை வழிபடுகிறான். மற்றவன் ஆடல் பாடல்களில் தன்னை மறந்துவிடுகிறான். இருவரும் உணவு அருந்துகிறார்கள்; ஆனால் ஒருவன் உடலை இறைவனுடைய இருப்பிடமாக எண்ணி அதைக் காப்பதற்காக ஏதோ கொஞ்சம் சாப்பிடுகிறான். மற்ற வன் சுவைக்காக வயிற்றிலே பல பொருள்களை நிரப்பி அதை அசுத்தமாகவும் துர்நாற்றம் உள்ளதாகவும் ஆக்குகிறான்.

இம்மாதிரியான பிரம்மசரியத்தைக் காப்பதற்கு எப்போதும் முயற்சியிலே ஈடுபட்டிருக்க வேண்டியது அவசியம். இருப்பினும், கடவுளைப் பிரத்தியக்ஷமாகக் காண்பதற்கென்று பிரம்மசரியத் தைக் காக்க விரும்புகிறவர்கள் தங்கள் முயற்சியோடு கூடவே இறைவனிடம் நம்பிக்கையும் வைத்திருந்தார்களானால், அவர்கள்

நிராசை அடைவதற்கு எவ்விதக் காரணமும் இல்லை. கீதையிலும் அதைத்தானே சொல்லியிருக்கிறார்.

"தம்மைக் கவராத ஜீவனிடமிருந்து விஷயங்கள் தாமே விலகிக்கொள்கின்றன. எனினும் அவற்றினிடமுள்ள சுவையை இவன் மறப்பதில்லை. பரம்பொருளைக் காண்பானாயின் அந்தச் சுவையும் தீர்ந்துவிடும்.

ஆதலால் ஆத்மார்த்தமாக முன்னேற விரும்புகிறவனுக்குக் கடைசியான சாதனம் ராமநாமமும் இறைவனுடைய திருவருளுமே. இந்தியாவுக்கு வந்த பின்புதான் நான் இதை அநுபவத்திலே கண்டேன்.

## 28

## வீட்டில் சத்தியாக்கிரகம்

**1908**-இல் முதல் தடவையாக எனக்குச் சிறையநுபவம் உண்டாயிற்று. சிறையில் கைதிகளுக்கு ஏற்பட்டிருக்கும் பல விதிகள் புலனடக்கம் கொண்டவனோ பிரம்மசாரியோ தன்னிச்சையாக அநுசரிக்க வேண்டியவை என்பதை நான் அப்போது தெரிந்துகொண்டேன். உதாரணமாக, கைதிகள் அஸ்தமனத்திற்கு முன்னால் ஐந்து மணிக்குள் சாப்பிட்டுவிட வேண்டும். அவர்களுக்கு - நீகிரோக்களாயினும் சரி, இந்தியர்களாயினும் சரி - தேநீரோ காபியோ கொடுப்பதில்லை. உப்பு வேண்டுமானால் தனியாக வாங்கிக்கொள்ள வேண்டும். சுவைக்காக எந்தப் பொருளையும் சாப்பிடக் கொடுப்பதில்லை. நான் சிறை டாக்டரிடம் கைதிகளுக்காக 'மசாலா' தரும்படியாகவும் சமைக்கும்பொழுதே உணவில் உப்புக் கலக்கும்படியும் கேட்டுக் கொண்டபோது அவர், "நீங்கள் இங்கே ருசியுள்ள பண்டங்களைச் சாப்பிடுவதற்காக வரவில்லை. ஆரோக்கியத்திற்கு மசாலாப் பொடி அடியோடு தேவையில்லை. ஆரோக்கியம் வேண்டுமென்று உப்பைத் தனியாகக் கலந்தாலும், சமைக்கும்போது கலந்தாலும் எல்லாம் ஒன்றுதான்" என்று பதில் சொன்னார்.

அங்கே ஒரு மாதிரியாக மிகவும் சிரமப்பட்டு உணவிலே தேவையான மாறுதல்களை நாங்கள் செய்வித்தோம். ஆனால் புலனடக்கத்தைக் கருத்திலே வைத்துக்கொண்டு பார்த்தோமானால், இவ்விரண்டு தடைகளும் நல்லவையே என்று தெரிகிறது. வலுக்கட்டாயமாக ஒருவரை விதிகளின்படி நடக்கச் சொன்னால் அதற்குப் பலன் கிடைப்பதில்லை. சுயேச்சையாக இவ்வித

நிர்ப்பந்தங்களை ஏற்றுக்கொண்டால் அது மிகவும் உபயோகமாக இருக்கமுடியும். எனவே சிறையிலிருந்து வெளிவந்தவுடனே நான் இவற்றைக் கைக்கொள்ள ஆரம்பித்தேன். கூடிய வரையில் தேநீர் குடிப்பதை நிறுத்தினேன். அஸ்தமிப்பதற்கு முன்னால் சாப்பிடப் பழகிக்கொண்டேன். இன்று அது எனக்கு இயல்பாகப் போய்விட்டது.

அப்பால் நான் உப்பையும் விட்டுவிடும்படியான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. இந்த ஏற்பாடு சுமார் பத்து வருஷங்கள் ஒழுங்காக நடந்தது. உணவு சம்பந்தமான சில புத்தகங்களில் மனிதனுக்கு உப்பு அவசியமில்லை என்று நான் படித்திருந்தேன். உப்புச் சாப்பிடாதவனுக்கு ஆரோக்கிய முறைப்படி நன்மையே உண்டாகிறது. பிரம்மசரியத்தை அநுஷ்டிப்பவனுக்கும் அதனால் நன்மை உண்டாகும் என்ற அளவுக்கு என் கற்பனை ஓடியது. உடல் இளைத்திருப்பவன் பருப்புச் சாப்பிடக்கூடாது என்று நான் படித்திருந்தேன். அதை அநுபவத்திலும் கண்டிருக்கிறேன். ஆனால் இவ்விரண்டையும் அப்போதே என்னால் விட முடியவில்லை. ஏனெனில் அவை எனக்குப் பிடிக்கும்.

கஸ்தூரி பாய்க்கு ரத்தப் பெருக்கு நோய் இருந்தது. அதற்காக ரண வைத்தியமும் நடந்தது. அதன்பிறகு கொஞ்சநாள் ரத்தப் பெருக்கு நின்றிருந்தும் மறுபடி அது ஆரம்பித்துவிட்டது. இந்தத் தடவை அது எவ்விதத்திலும் நீங்குவதாக இல்லை. ஜல சிகிச்சை முறைகள் பயனற்றுப் போயின. என்னுடைய இந்த முறைகளில் அவளுக்கே அவ்வளவாக நம்பிக்கை இருந்ததில்லை. ஆனால் வெறுப்பும் இருந்ததில்லை. வேறு சிகிச்சை செய்யவும் அவள் வற்புறுத்தவில்லை. என்னுடைய மற்றச் சிகிச்சைகளில் பயன் ஏற்படாமற் போகவே நான் அவளைப் பருப்பையும் உப்பையும் விட்டுவிடச் சொன்னேன். அவளுக்கு அதைத் தெரியும்படி சொல்வதில் என் முழுச் சக்தியையும் செலவழித்தேன். என் பேச்சை உறுதிப்படுத்த, சில புத்தகங்களையும் படித்துக் காட்டினேன். ஆயினும் அவள் அதை ஒப்புக்கொள்ளவில்லை. கடைசியில் அவள் எரிச்சலோடு, "பருப்பையும் உப்பையும் விட்டுவிடும்படி உங்களிடம் யாராவது சொன்னால் நீங்கள்கூட அவற்றை விடமாட்டீர்களே" என்றாள்.

இந்தப் பதிலைக் கேட்டு எனக்கு ஒரு புறம் வருத்தமும் மற்றொரு புறம் ஆனந்தமும் உண்டாயின; ஏனெனில் என் அன்பை வெளிப்படுத்துவதற்கு இதனால் நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. அதே ஆனந்தத்தில், "நீ இப்படி எண்ணுவது பிசகு.

நான் நோயாளியாக இருந்து என்னை இந்தப் பொருள்களை விட்டு விடும்படி வைத்தியர் சொன்னால் நான் இவற்றைக் கட்டாயம் விட்டுவிடுவேன். ஆனால் அவ்வளவேன்! இதோ, உனக்காக இன்றையிலிருந்து பருப்பையும் உப்பையும் ஒரு வருஷத்துக்கு நான் விட்டுவிடுகிறேன். நீ விட்டாலும் சரி, விடாமற் போனாலும் சரி. நான் விட்டுவிட்டேன்" என்று சொன்னேன்.

இதைக் கண்டு என் மனைவிக்கு மிகுந்த பச்சாத்தாபம் உண்டாயிற்று. "என்னை மன்னிக்கவேண்டும். உங்கள் சுபாவம் தெரிந்திருந்தும் இந்தப் பேச்சு என் வாயிலிருந்து வந்துவிட்டது. இனி நான் பருப்பும் உப்பும் சாப்பிடமாட்டேன். நீங்கள் உங்கள் வாக்கை வாபஸ் பெற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் அப்படிச் செய்வது எனக்குப் பெருத்த தண்டனையாகும்" என்று அவள் சொன்னாள்.

"நீ பருப்பையும் உப்பையும் விட்டுவிட்டால் மிகவும் நன்றாக இருக்கும். உனக்கு அதனால் நல்ல பலன் உண்டாகும் என்பது என் நம்பிக்கை. ஆனால் நான் செய்த பிரதிக்ஞை மாறாது. எனக்கும் அதனால் நன்மையே உண்டாகும். எந்த ஒரு காரணத்தினாலும் மனிதன் புலன்களை அடக்கினால் அதனால் அவனுக்கு நன்மையே உண்டாகும். இதைப்பற்றி நீ வற்புறுத்தாதே. என்னை நான் சோதனை செய்துகொள்ளவும் சந்தர்ப்பம் கிடைக்கும். இவற்றை விடவேண்டும் என்ற உன் தீர்மானத்தில் நீ உறுதியாக இருக்கவும் உதவி செய்ய முடியும்" என்றேன். இவ்வளவு சொன்ன பின்பு நான் அவளைச் சமாதானப்படுத்த வேண்டிய அவசியமே இருக்கவில்லை. "நீங்கள் பெரிய பிடிவாதக்காரர். ஒருவர் சொல்வதைக் கேட்பது என்ற பாடமே உங்களுக்குத் தெரியாது" என்று கூறி, கண்ணீர் வடித்துக்கொண்டே அவள் மௌனமானாள்.

இதை நான் வாசகர்களுக்குச் சத்தியாக்கிரகம் என்ற முறையிலே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். என் வாழ்க்கையின் இனிய நினைவுகளில் ஒன்றாக இதை மதிக்கிறேன் என்பதையும் சொல்ல விரும்புகிறேன்.

இதன் பிறகு கஸ்தூரி பாயின் ஆரோக்கியம் நன்கு திருந்த ஆரம்பித்தது. இது உப்பையும் பருப்பையும் தியாகம் செய்ததனால் ஏற்பட்ட பயனா, அல்லது அந்தத் தியாகத்திலிருந்து உணவிலே ஏற்பட்ட மாறுதல்களின் பயனா, அல்லது அதன் பிறகு வேறு விதிகளையும் அவள் அநுசரிக்குமாறு செய்ய நான் ஜாக்கிரதை எடுத்துக்கொண்டதன் பயனா, அல்லது இந்தச் சம்பவத்தி

னால் ஏற்பட்ட மனமலர்ச்சியின் பயனை என்பதை நான் சொல்ல முடியாது. கஸ்தூரிபாயின் வற்றிப்போன உடல் மறுபடி பசுமை பெற்றது என்பது மட்டும் நிச்சயம். ரத்தப் பெருக்கு நின்றது. வைத்திய அரசன் என்ற பெயரால் என்னுடைய மதிப்புச் சிறிது உயர்ந்தது.

# 29

## புலனடக்கம்

கஸ்தூரிபாயின் நோயினால் உணவில் பல மாறுதல்கள் ஏற்பட்டதை முந்தின அத்தியாயத்தில் சொல்லியிருக்கிறேன். அதன் பிறகு பிரம்மசரிய நோக்கோடு அதில் நாளுக்கு நாள் மாறுதல்கள் செய்துகொண்டே வந்தேன்.

முதல் மாறுதல்: பாலை விலக்கியது. பாலிலிருந்து இந்திரிய இச்சைகள் பிறக்கின்றன என்பதை முதல் முதலில் சகோதரர் ராய்சந்திடமிருந்து அறிந்திருந்தேன். சைவ உணவு சம்பந்தமான ஆங்கிலப் புத்தகங்கள் இதையே வலியுறுத்தின. ஆனால் பிரம்ம சரிய விரதத்தை ஏற்றுக்கொள்ளும் வரையில் பாலை விடுவதற்கு என் மனம் துணியவில்லை. உடலைப் பாதுகாப்பதற்குப் பால் அவசியமில்லை என்பதை நான் எப்போதோ அறிந்திருந்தேன். எனினும் அதை ஒரேயடியாக விடுவது கஷ்டமாக இருந்தது. இந்திரியங்களை அடக்கப் பாலை விட்டுவிட வேண்டுமென்று நான் தீவிரமாக உணர்ந்துவந்த சமயத்தில், பசுக்கள் எருமைகள் விஷயத்தில் அவற்றின் சொந்தக்காரர்கள் செய்யும் கொடுமைகள் பற்றி, கல்கத்தாவிலிருந்து வெளியான பிரசுரங்களைப் பார்க்க நேர்ந்தது. இந்தப் பிரசுரங்கள் என் மனத்தைப் பெரிதும் பாதித்தன. இது சம்பந்தமாக மிஸ்டர் கேலன்பேக்குடனும் விவாதித்தேன்.

சத்தியாக்கிரகச் சரித்திரத்தில் மிஸ்டர் கேலன்பேக்கை நான் அறிமுகப்படுத்தி வைத்திருக்கிறேன் என்றாலும் அவரைப்பற்றி இங்கே கொஞ்சம் சொல்லவேண்டியது அவசியம். எங்கள் சந்திப்புத் தற்செயலாக ஏற்பட்டது. அவர் மிஸ்டர் கானின் நண்பர். அவருடைய அந்தரங்கத்தில் வைராக்கியம் குடிகொண்டிருந்ததைக் கண்ட மிஸ்டர் கான், எனக்கு அவரை அறிமுகம் செய்துவைத்தார். முதலில் அவருடைய உல்லாச வாழ்க்கையையும் பெரும்போக்கான செலவையும் கண்டு திடுக்கிட்டேன். ஆனால் முதல் சந்திப்பிலேயே அவர் மத விஷயங்களைப்பற்றி என்னிடம்

கேள்வி கேட்டார். சம்பாஷணையினிடையில் புத்தரைப்பற்றிய பேச்சு சகஜமாக வந்தது. அப்போதிலிருந்து எங்களுக்குள் நெருங்கிய பழக்கம் உண்டாயிற்று. நான் செய்வதையே தாமும் கட்டாயம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவர் மனத்தில் பதிந்தது. அவர் தனியாக இருந்தார். தம் ஒருவருக்காக வீட்டு வாடகையைத் தவிர மாதம் சுமார் 1200 ரூபாய் அவர் செலவழித்து வந்தார். இப்படி இருந்தவர் கடைசியில் மிகவும் எளிய வாழ்க்கையை மேற்கொண்டார். அவருடைய மாதச்செலவு 120 ரூபாய்க்கு வந்துவிட்டது. நான் குடித்தனத்தைக் கலைத்த பின்பும், சிறையிலிருந்து வெளிவந்த பின்பும் நாங்கள் இருவரும் ஒன்ருகவே வசிக்கலானேம். அந்தக் காலத்தில் நாங்கள் கடுமையான வாழ்க்கையையே நடத்தினேம்.

பாலைப்பற்றி நான் அவரிடம் விவாதித்தபோது இருவரும் ஒரே அபிப்பிராயம் கொண்டிருந்தோம். அவர் ஒரு தடவை, "பாலில் நாம் இவ்வளவு குற்றங்களைக் காணும்போது அதை ஏன் விட்டுவிடக் கூடாது? அது இன்றியமையாத பொருள் அல்லவே" என்று சொன்னர். அவருடைய இந்த யோசனையைக் கேட்டு எனக்கு மிகுந்த ஆனந்தமும் ஆச்சரியமும் உண்டாயின. நான் உடனே அவர் பேச்சை ஏற்றுக்கொண்டேன். அதே க்ஷணத்தில் நாங்கள் இருவரும் டால்ஸ்டாய் பண்ணையில் பாலை விலக்கிவிட்டோம். இது 1912-இல் நடந்தது.

இந்தத் தியாகத்தினுல் மட்டும் நாங்கள் திருப்தியடையவில்லை. பால் விட்ட சில நாளைக்கெல்லாம் பழங்களைக்கொண்டே வாழ்வதென்று தீர்மானித்தோம். அதிலும் மிகவும் மலிவான பழங்களையே சாப்பிடுவது என்று நிச்சயித்தோம். ஏழைகளைப் போல வாழ்க்கை நடத்த வேண்டும் என்பது எங்கள் ஆசை. பழ உணவில் அநேகமாகீ நெருப்பு மூட்ட வேண்டிய அவசியமே இல்லை. பச்சை வேர்க்கடலை, வாழைப்பழம், பேரீச்சம்பழம், எலுமிச்சம்பழம், ஆலிவ் எண்ணெய் இவையே எங்கள் சாதாரண உணவுப் பொருள்கள் ஆயின.

பிரம்மசரியத்தைக் காக்க விரும்புகிறவர்களுக்கு இங்கே நான் ஓர் எச்சரிக்கை செய்யவேண்டும். பிரம்மசரியத்துக்கும் உணவு உபவாசங்களுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருப்பதாக நான் சொன்னபோதிலும் அதற்கு முக்கியமான ஆதாரம் நம்முடைய மனமே என்பது நிச்சயம். மாசுள்ள மனம் உபவாசத்தினுல் தூய்மை பெறுவதில்லை. உணவினுல் அது மாறிவிடுவதில்லை. மனத்திலுள்ள மாசு, சிந்தனையினுலும் இறைவனைத் தியானிப்ப

தாலும், கடைசியில் அவனுடைய அருளினாலுமே நீங்குகிறது. எனினும் மனத்துக்கும் உடலுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. வேட்கை கொண்ட மனம் தனக்கு அநுகூலமான சாப்பாட்டைத் தேடுவதிலே முனைந்திருக்கும். வேட்கையுள்ள மனம் பலவித மான சுவைகளையும் சுக போகங்களையும் தேடிக்கொண்டே இருக்கிறது. பிறகு அந்தச் சுவைகளும் சுகபோகங்களும் மனத்தை ஆளுகின்றன. இந்த அளவுக்கு உணவைக் கட்டுப் படுத்துவதும் உபவாசம் இருப்பதும் கட்டாயமாகத் தேவை.

புலன்களை அடக்கும் நோக்கத்தோடு நான் உபவாசங்கள் இருக்க ஆரம்பித்தேன். அது ஆவணி மாதம். அந்த வருஷம் ரம்ஜான் மாதமும் ஆவணியும் ஒன்றாக வந்தன. காந்தி வம்சத்தில் வைஷ்ணவ விரதங்களோடு சைவ விரதங்களையும் அநுஷ்டிப்பது வழக்கம். எங்கள் பரிவாரத்தினர் விஷ்ணு கோயில்களுக்குப் போவது போலவே சிவன் கோயில்களுக்கும் போவது உண்டு. சிராவண மாதத்தில் வருஷந்தோறும் குடும்பத்தில் யாராவது ஒரு வர் பிரதோஷ விரதத்தை அநுஷ்டித்து வருவார். எனவே நான் இந்தத் தடவை சிராவண மாத விரதத்தை வைத்துக்கொள்ளத் தீர்மானித்தேன்.

இந்த முக்கியமான சோதனைகள் டால்ஸ்டாய் ஆசிரமத்தில் ஆரம்பமாயின. சத்தியாக்கிரகம் செய்து சிறை சென்றவர்களின் குடும்பங்களைத் திரட்டிக்கொண்டு நானும் கேலன்பேக்கும் அங்கே வசித்துவந்தோம். அந்தக் கூட்டத்தில் சிறுவர்களும் இளைஞர்களுங்கூட இருந்தார்கள். அவர்களுக்காக ஒரு பள்ளிக் கூடம் நடத்தினோம். அந்த இளைஞர்களில் நாலைந்து முகம்மதி யர்களும் இருந்தனர். அவர்கள் மத சம்பந்தமான நோன்பு களை அநுஷ்டிப்பதற்கு நான் உதவி செய்ததோடு ஊக்கமும் அளித்தேன். நமாஸ் முதலியவற்றிற்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுத்தேன். ஆசிரமத்தில் பார்ஸிகளும் கிறிஸ்துவர்க ளுங்கூட இருந்தார்கள். யாவரும் தத்தம் மதங்களுக்கு ஏற்றபடி ஒழுகுவதற்கு ஊக்கம் அளிக்கவேண்டும் என்பது விதி. ஆதலின் ரம்ஜான் மாதம் வந்தபோது முஸ்லிம் இளைஞர்களை நான் உபவா சம் இருக்கத் தூண்டினேன். நான்தான் பிரதோஷ விரதத்தை ஏற்றுக்கொண்டிருந்தேனே. இன்னும், ஹிந்துக்களையும் பார்ஸி களையும் கிறிஸ்தவர்களையுங்கூட முகம்மதிய இளைஞர்களோடு சேர்ந்து விரதம் இருக்கச் சொன்னேன். புலனடக்கத்தில் யாவ ரும் சேர்ந்துகொள்வது போற்றத்தகுந்தது என்று அவர்களுக்கு அறிவுறுத்தினேன். ஆசிரமவாசிகளில் பலர் என் பேச்சை ஒப்புக்

கொண்டார்கள். ஹிந்துக்களும் பார்ஸிகளும் முகம்மதியத் தோழர்களை முழுதும் பின்பற்றவில்லை. அது அவசியமும் அல்ல. முகம்மதியர்கள்' சூரியாஸ்தமனத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த பொழுது மற்றவர்கள் அதற்கு முன்னால் சாப்பிட்டுவிடுவார்கள். அதனால் அவர்கள் முஸ்லிம் தோழர்களுக்குப் பரிமாறவும் அவர்களுக்காகச் சில முக்கியப் பண்டங்களையும் தயாரிக்கவும் முடிந்தது. அன்றியும் விரத நாட்களில் காலையில் சூரியோதயத்துக்கு முன்னால் முஸ்லிம்கள் சாப்பிட்டு வந்தார்கள். ஆனால் மற்றவர்கள் அப்படிச் செய்யவில்லை. முஸ்லிம்கள் பகலில்கூடத் தண்ணீர் குடிக்காமல் இருந்தார்கள்; மற்றவர்களோ வேண்டிய போதெல்லாம் தண்ணீர் அருந்தினர்.

இந்தச் சோதனைகளினால், புலனடக்கத்தை நோக்கிச் செல்லும் மனமுடையவனுக்கு உணவுக் கட்டுப்பாடும் உபவாசமும் மிகவும் உதவியாக இருக்கின்றன என்பதை அநுபவத்திலே கண்டேன்.

## 30

### வக்கீல் வாழ்க்கையில் சில நினைவுகள்

தென்னாப்பிரிக்காவில் நான் வக்கீல் தொழில் செய்தபொழுது எனக்கு ஏற்பட்ட அநுபவங்களின் சில நினைவுகளை இங்கே எழுத விரும்புகிறேன். நான் படித்துவந்த காலத்தில் பொய் சொல்லாமல் வக்கீல் தொழில் நடக்காது என்று கேள்விப்பட்டிருந்தேன். இது என் விஷயத்தில் பலிக்கவில்லை. ஏனெனில் நான் பொய் சொல்லிப் பணம் சம்பாதிக்கவோ உயர்ந்த பதவிகளைப் பெறவோ விரும்பவில்லை.

வக்கீல் தொழில் செய்யும்போது நான் எப்போதும் பொய்யை உபயோகித்ததில்லை என்பது என் ஞாபகம். அந்தத் தொழிலின் ஒரு பெரும் பகுதியை நான் ஜன சேவைக்காகவே அர்ப்பணம் செய்திருந்தேன். நான் அதற்காகக் கைச் செலவைவிட அதிகமாக ஒன்றும் வாங்கிக்கொண்டதில்லை. சில சமயங்களில் அதைக்கூட விட்டிருக்கிறேன். 'வழக்கு, பொய்யாக இருந்தால் என்னிடம் வராதே. சாக்ஷிகளைத் தயார் செய்யும் வேலையில் என்னை நம்பாதே' என்று கட்சிக்காரர்களிடம் நான் முன்னதாகவே சொல்லிவிடுவது வழக்கம். போகப் போக என் மதிப்பு வளர்ந்தது. எவனும் என்னிடம் பொய் வழக்கைக் கொண்டுவருவதே இல்லை. என் கட்சிக்காரர்களில் சிலர் தங்களு

டைய உண்மையான வழக்குகளையே என்னிடம் கொண்டுவருவார்கள். சிறிது குற்றம் இருந்தாலும் அவற்றை வேறு வக்கீல்களிடம் கொண்டுபோவார்கள்.

ஜோஹான்ஸ்பர்க்கில் நடந்த ஒரு சம்பவம் ஞாபகம் வருகிறது. நான் ஒரு வழக்கை நடத்திக்கொண்டிருந்தேன். வழக்கு நடந்துகொண் டிருக்கும்பொழுதுதான் கட்சிக்காரன் என்னை ஏமாற்றியிருப்பதை அறிந்தேன். சாக்ஷிக் கூண்டில் அவன் ரொம்பவும் பயந்துபோனான். நான் விவாதம் செய்யாமலே, "இந்த வழக்கைத் தள்ளிவிடுங்கள்" என்று மாஜிஸ்டிரேட்டிடம் சொன்னேன். எதிர் வக்கீலுக்கு இதனால் பெருத்த ஆச்சரியம் உண்டாயிற்று. ஆனால் மாஜிஸ்டிரேட்டுக்குச் சந்தோஷம் உண்டாயிற்று. இந்தச் சம்பவத்தினால் என் வக்கீல் தொழில் எவ்விதத்திலும் கெட்டுப் போகவில்லை. இன்னும் கேட்டால், அதனால் என் தொழில் பின்னும் சுலபமாகிவிட்டது. உண்மையைக் கடைப்பிடித்த என் தன்மை என் கூட்டாளிகளான வக்கீல்களின் மனத்திலும் நன்கு பதிந்தது. என் புகழும் ஓங்கியது. நிறத்துவேஷம் நிரம்பிய அந்தச் சூழ்நிலையிலுங்கூட நான் சில வழக்குகளில் அவர்களுடைய அன்புக்குப் பாத்திரமானேன்.

பார்ஸி ருஸ்தம்ஜீயின் பெயர் தென்னாப்பிரிக்க இந்தியர்களிடையே வீட்டுக்கு வீடு பரவியிருந்தது. பொதுஜன வேலைகளில் பல நாட்களாக அவர் எனக்குக் கூட்டாளியாக இருந்தவர். ஒரு தடவை அவருக்குப் பெரிய ஆபத்து வந்தது. அவர் தம் வியாபார சம்பந்தமான எத்தனையோ விஷயங்களை என்னிடம் சொல்லி வந்திருந்தபோதிலும் ஒரு விஷயத்தைமட்டும் என்னிடம் சொல்லாமல் ஒளித்து வைத்திருந்தார். பம்பாயிலிருந்தும் கல்கத்தாவிலிருந்தும் இவர் வரவழைத்த சாமான்களுக்குச் சுங்கவரி கொடாமல் திருட்டுத்தனம் செய்துவந்தார். எல்லா அதிகாரிகளோடும் அவருக்கு நெருங்கிய பழக்கம் உண்டு. ஆதலால் யாரும் அவர்மீது சந்தேகம் கொள்ளவில்லை.

ஆனால் ஒரு தடவை அவருடைய இந்தத் திருட்டைக் கண்டுபிடித்தார்கள். அப்போது அவர் என்னிடம் ஓடிவந்தார். அவர் கண்களில் நீர் பெருகியது. என்னிடம், "அண்ணா, நான் உங்களை ஏமாற்றினேன். என் பாவம் இன்று வெளியாகிவிட்டது. நான் சுங்கவரி கொடுக்காமல் திருட்டுத்தனமாகச் சாமான்களை இறக்குமதி செய்கிறேன். இதை உங்களிடம் சொல்லாமல் ஒளித்து வைத்திருந்தேன். இப்போது அதற்காக வருந்துகிறேன்" என்றார்.

நான் அவருக்குத் தைரியமும் ஆறுதலும் சொல்லி, "என் வழிதான் உங்களுக்குத் தெரியுமே. உங்களை விடுவிப்பதோ விடுவிக்காமல் இருப்பதோ இறைவன் கையிலே இருக்கிறது. நீங்கள் உங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டால்தான் நான் உங்களை விடுவிக்க முடியும்."

"உங்கள் முன்னால் நான் ஒப்புக்கொண்டது போதாதா?" என்று ருஸ்தம்ஜீ ஸேட் கேட்டார்.

"நீங்கள் அரசாங்கத்துக்குக் குற்றமிழைத்துவிட்டு என் முன்னால் அதை ஒப்புக்கொள்வதால் என்ன உபயோகம்?" என்று நிதானமாகச் சொன்னேன். நாங்கள் அவருடைய வக்கீலையும் கலந்து பேசினோம். அவருக்கு என் ஏற்பாடு பிடிக்கவில்லை. ஆனால் பார்ஸி ருஸ்தம்ஜீ என் ஆலோசனைப்படி நடப்பதுதான் நல்லது என்று கருதினார். "நான் சுங்க அதிகாரியையும் அட்டர்னி ஜெனரலையும் கண்டு பேசப்போகிறேன். இந்த வழக்கை நடத்தும் பொறுப்பு அவர்கள் இருவருடையதே. பார்ஸி ருஸ்தம்ஜீக்கு அபராதம் விதித்துவிடுங்கள் என்று அவர்களுக்கு ஆலோசனை சொன்னேன். அவர்கள் அதற்கு ஒப்புக்கொள்ளாவிட்டால் நீங்கள் சிறை செல்லவேண்டியிருக்கும்" என்று சொன்னேன். "சிறை செல்வதிலே வெட்கப்படவேண்டிய விஷயம் இல்லை. திருடுவதுதான் வெட்கப்படத்தக்க விஷயம்" என்பதையும் அவருக்கு அறிவுறுத்தினேன். ருஸ்தம்ஜீ இவை எல்லாவற்றையும் புரிந்துகொண்டாரா என்பதை என்னால் சொல்லமுடியாது. ஆனால் அவர் மகா தைரியசாலி.

"நான்தான் உங்களிடம் சொல்லிவிட்டேனே. என் தலை உங்கள் கையில் இருக்கிறது. உங்களுக்கு எது சரி என்று தோன்றுகிறதோ செய்யுங்கள்" என்று அவர் கூறினார்.

நான் இந்த வழக்கில் என்னுடைய முழுக் கலைத்திறமையையும் சௌஜன்யத்தையும் உபயோகித்தேன். இரண்டு ஆபீஸர்களையும் நேரில் கண்டு அவர்களிடம் திருட்டுச் சம்பந்தமான எல்லா விஷயங்களையும் சற்றும் பயமில்லாமல் கூறினேன்.

சத்தியத்தில் நான் கொண்டிருந்த அன்பை அவர்கள் கண்டுகொண்டார்கள் என்றுதான் சொல்லவேண்டும். நான் அவர்களிடமிருந்து எதையும் ஒளித்துவைக்க விரும்பவில்லை என்பதை அவர்கள் முன்னால் நிரூபிக்க முடிந்தது.

ருஸ்தம்ஜீயின்மீது வழக்குத் தொடரவில்லை. அவர் எவ்வளவு திருடியிருப்பதாக ஒப்புக்கொண்டிருந்தாரோ அதற்கு இரண்

டத்தனை தொகையை அவரிடமிருந்து பெற்றுக்கொண்டு வழக்கைத் தொடராமலிருக்க உத்தரவு பிறந்தது.

ருஸ்தம்ஜீ இந்தச் சுங்கவரித் திருட்டு விவரத்தை ஒரு காகிதத்தில் எழுதிக் கண்ணுடிபோட்டுத் தமது காரியாலயத்தில் மாட்டினர். தம்முடைய சந்ததியாரும் மற்ற வியாபாரத் தோழர்களும் இப்படிச் செய்யாமலிருக்க அவர் இவ்வித எச்சரிக்கை செய்தார்.

# 31

## சத்தியாக்கிரகத்தின் பிறப்பு

ஜூலு கலகத்தில் நான் ஏற்றுக்கொண்ட வேலைகளை முடித்துவிட்டு, போனிக்ஸில் இருந்த என் கூட்டாளிகளோடு என்னுடைய திட்டங்களைப் பற்றியும் வாழ்க்கை லக்ஷ்யங்களைப் பற்றியும் விவாதித்துக்கொண்டிருந்த சமயத்தில், 1926 ஆகஸ்டு 22-தேதியிட்ட 'டிரான்ஸ்வால் கவர்ன்மெண்ட் கெஜட் எக்ஸ்ட்ரா ஆர்டினரி'யில் ஓர் அவசரச் சட்டத்தின் மசோதா அச்சாகி இருப்பதாகவும், தென்னுப்பிரிக்காவில் குடியேறிய இந்தியர்களை ஒழிப்பதே அதன் நோக்கமென்றும் செய்தி கிடைத்தது. அதன்படி எட்டு அல்லது அதற்கு மேல் வயசுள்ள ஒவ்வோர் இந்தியனும் ஆணுயினும் சரி, பெண்ணுயினும் சரி - டிரான்ஸ்வாலில் வசிக்க வேண்டுமானுல் ஏஷியாடிக் ரிஜிஸ்டரில் தன் பெயரைப் பதிவு செய்வித்து, ரிஜிஸ்டர் செய்ததற்கு அநுமதிச்சீட்டு வாங்கிக்கொள்ள வேண்டும். இந்தச் சீட்டுக்களை வாங்கிக்கொள்ளும்போது தன்னுடைய பழைய சீட்டுக்களை அதிகாரியிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். பெயரைப் பதிவு செய்வதற்குக் கோரும் விண்ணப்பத்தில் தன் பெயர், இடம், சாதி, வயசு முதலியவற்றை எழுதவேண்டும். பதிவு செய்யும் அதிகாரி விண்ணப்பதாரின் அடையாளங்களை எழுதிக்கொண்டு அவர்களுடைய எல்லா விரல்களுடைய முத்திரையையும் எடுத்துக்கொள்வார். குறிப்பிட்ட தேதிக்குள் தம்மைப் பதிவு செய்துகொள்ளாதவர்கள் டிரான்ஸ்வாலில் குடியிருக்கும் உரிமையை இழப்பார்கள். விண்ணப்பம் செய்யத் தவறுவதும் சட்டப்படி குற்றமாகக் கருதப்பட்டு, அதற்காகக் குற்றவாளியைச் சிறைக்கு அனுப்பலாம். அல்லது அபராதமும் விதிக்கலாம். கோர்ட்டார் விரும்பினுல் நாடு கடத்தும் தண்டனையையும் கொடுக்கலாம்.

மறுநாள் சில முக்கியமான இந்தியர்களை ஒன்று திரட்டி, நான் இந்தச் சட்டத்தை எழுத்துவாரியாக அவர்களுக்கு விளக்கி

னேன். என் மனத்தில் பட்ட விஷயந்தான் அவர்கள் மனத்திலும் பட்டது. எல்லோரும் அந்த ஆழ்ந்த நிலைமையைப் புரிந்து கொண்டார்கள். ஒரு பொதுக்கூட்டம் போடுவதாகத் தீர்மான மாயிற்று. 1906, செப்டம்பர் 11-ஆம் தேதி கூட்டம் கூடியது. அதில் நிறைவேறிய தீர்மானங்களுள் மிகவும் முக்கியமானது நான்காவது தீர்மானம். அது மிகவும் பிரசித்தமானது. இந்தத் தீர்மானத்தை நான் கூட்டத்தில் நன்கு விளக்கினேன். 'இந்த மசோதாவை எதிர்ப்பதற்கு எல்லா உபாயங்களையும் கைக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்தும் அது நிறைவேறிவிட் டால் இந்தியர்கள் அதற்குக் கீழ்ப்படியக் கூடாது. இந்த அவ மதிப்பின் பலனாக எவ்வளவு துன்பங்கள் நேர்ந்தாலும் அவற் றைப் பொறுத்துக்கொள்ளவேண்டும்' என்பது அந்தத் தீர்மானத் தின் கருத்து. இந்த இயக்கத்தை அந்த நாளில் சாத்துவிக எதிர்ப்பு (Passive Resistance) என்று சொல்லி வந்தார்கள். பிற்காலத்தில் இதைச் சத்தியாக்கிரகம் என்றனர்.

எங்கள் இயக்கத்துக்கு மாறாக, அந்த மசோதா நிறைவேறி விட்டது. நாங்கள் மறியல் செய்தோம்; பொதுஜன அபிப் பிராயமும் அந்த மசோதாவுக்கு எதிராக இருந்தது; ஆயினுங் கூடச் சில இந்தியர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்தே தீர்த் தார்கள். ஆனால் ஆகாயத்தையும் பூமியையும் ஒன்றாக்கியுங்கூட, 500 பேருக்கு மேல் ரிஜிஸ்டர் செய்துகொள்பவர்கள் கிடைக்கா ததைக் கண்ட ஆசிய இலாக்காக்காரர்கள் ஜனங்களைப் பிடித்துக் கைது செய்ய ஆரம்பித்தார்கள். ஜர்மிஸ்டனில் நிறைய இந்தியர் கள் இருந்தனர். அவர்களுள் ராமசுந்தரன் என்று ஒருவன். அவன் பெரிய வாசாலகன்; அசகாய சூரன். அவனைக் கைது செய்ததுமே, ஜர்மிஸ்டனில் இருந்த உயர்ந்த வகுப்பினர் மட்டும் அவனை அறிந்துகொண்டிருந்தது போக, இப்பொழுது தென் னாப்பிரிக்கா முழுவதிலும் அவன் பெயர் அடிபடலாயிற்று. கோர்ட்டிலுங்கூட ஒரு சமூகத்தின் பிரதிநிதிக்கு - தனிப்பட்ட ஒரு குற்றவாளிக்கு - நடப்பது போன்ற ஆசார உபசாரங்கள் நடந்தன. ஆவல் மிகுதியினால் இந்தியர்கள் கோர்ட்டில் கசகச வென்று நிரம்பியிருந்தார்கள். ராமசுந்தரனுக்கு ஒரு மாதம் சாதாரணச் சிறைத் தண்டனை கிடைத்தது. அவனை ஜோஹான்ஸ் பர்க்குச் சிறையில் ஐரோப்பிய வார்டில் தனி அறையிலே வைத் தார்கள். அவன் சிறைப்பட்ட நாளை ஜனங்கள் தடபுடலாகக் கொண்டாடினார்கள்.

ஆனால் ராமசுந்தரன் செல்லாக்காசுக்கும் உதவாதவனானன். பொது ஜனங்களிடமிருந்தும் - சிறையதிகாரிகளிடமிருந்தும் உயர்ந்த தொண்டைப் பெற்றுங்கூட அவனுக்குச் சிறைவாசம் துன்பகரமாக இருந்தது. டிரான்ஸ்வாலுக்கும் இயக்கத்துக்கும் கடைசித் தடவையாக ஒரு கும்பிடு போட்டுவிட்டு அவன் தன் வழியே நடந்தான்.

ராமசுந்தரனுடைய இந்த வரலாற்றை அவனுடைய குற்றத்தைக் காட்டுவதற்காக இங்கே நான் எழுதவில்லை. இதிலிருந்து நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்பதுதான் என் கருத்து. ஒரு பவித்திரமான இயக்கத்தையோ போரையோ நடத்துபவர்கள் தூய மனிதர்களை மட்டுமே அதில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

# 32

## சிறையில்

ராமசுந்தரனைக் கைது செய்ததனால் சர்க்காருக்குச் சிறிதும் அநுகூலம் உண்டாகவில்லை. அதற்குப் பதிலாக ஜனங்களின் உற்சாகம் மேன்மேலும் வளர்ந்தது. ஆசிய இலாக்காவின் அதிகாரிகள் இண்டியன் ஒபினியனில் வெளியாகும் கட்டுரைகளைக் கவனத்தோடு படித்துவந்தார்கள். சத்தியாக்கிரகப் போர் சம்பந்தமாக எந்த விஷயத்தையும் அதில் சொல்லாமல் விட்டுவைக்கவில்லை. இந்திய சமூகத்தின் போக்கு, இயக்கத்தின் வலிமை, தளர்ச்சி முதலிய எல்லாவற்றையும் இந்தப் பத்திரிகையின் மூலம் அறிய முடிந்தது. எனவே, சில முக்கியமான தலைவர்களைக் கைது செய்யாதவரையில் போரைச் சிதைக்க முடியாது என்று அவர்கள் தீர்மானித்தனர். டிஸம்பர் 1907-இல் பல தலைவர்களுக்குக் கோர்ட்டில் ஆஜராகும்படி ஸம்மன் கிடைத்தது. அவர்கள் யாவரும் டிஸம்பர் 28-ஆம் தேதி சனிக்கிழமை கோர்ட்டில் ஆஜராயினர். ஆசிய இலாக்கா சட்டப்படி அவர்கள் தம் பெயர்களைப் பதிவு செய்யாததற்காக அவர்கள்மீது ஏன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்கூடாது என்னும் கேள்விக்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டியிருந்தது. மாஜிஸ்டிரேட் ஒவ்வொருவருடைய வழக்கையும் தனியே பிரித்து விசாரித்து எல்லாக் குற்றவாளிகளுக்கும், சிலர் 48 மணி காலத்துக்குள்ளும், சிலர் 7 அல்லது 14 நாளைக்குள்ளும் டிரான்ஸ்வாலை விட்டு ஓடிப்போய்விட வேண்டும் என்று தீர்ப்புக் கூறினர். 1908, ஜனவரி 10-ஆம் தேதி அந்தத்

தவணை முடிந்தது. அன்றைத் தினமே எங்களுக்குத் தண்டனை விதிப்பதற்காகக் கோர்ட்டில் கூப்பிட்டார்கள். எங்களில் யாரும் நொண்டிச் சமாதானம் சொல்ல வந்தவர்களல்ல. குறித்த காலத்துக்குள் டிரான்ஸ்வாலை விட்டுப் போகாமல் சட்ட மறுப்புச் செய்ததை நாங்கள் யாவரும் ஒப்புக்கொள்வதாக இருந்தோம்.

கோர்ட்டில் நான் கொடுத்த வாக்குமூலத்தில் எனக்குக் கடுமையிலும் கடுமையான தண்டனையைக் கொடுக்கும்படி மாஜிஸ்டிரேட்டினிடம் கேட்டேன். ஆயினும் அவர் எனக்கு இரண்டு மாதச் சாதாரணத் தண்டனையை விதித்தார். நூற்றுக் கணக்கான தடவை வக்கீலாக நின்று வக்கீல்களோடு உட்கார்ந்த அந்தக் கோர்ட்டில், அன்று நான் குற்றவாளியின் கூண்டிலே நின்றிருந்ததை நினைத்தபோது கொஞ்சம் விசித்திரமாகத்தான் இருந்தது. ஆனால் வக்கீல்களோடு உட்காருவதில் எனக்கு உண்டாகும் மரியாதையைவிட அன்று அந்தக் கூண்டில் நின்றதனால் அதிக உயர்வு கிடைத்ததாக நான் எண்ணியது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது.

நூற்றுக்கணக்கான இந்திய சகோதரர்களுக்கும் வக்கீல்களுக்கும் நண்பர்களுக்கும் முன்னால் நான் கோர்ட்டிலே நின்றிருந்தேன். ஆனால் தீர்ப்புக் கூறிய மறுகணத்தில் போலீஸாரிடம் ஒப்படைக்கப் பட்டேன. அங்கே நான் தனியனானேன். ஒரு போலீஸ்காரன் என்னை அங்கே ஒரு விசுப்பலகையில் உட்காரச் சொல்லிவிட்டுக் கதவைத் தாழிட்டுச் சென்றான். இந்த இடத்தில் என் மனம் கலங்கியது. நான் ஆழ்ந்த சிந்தனைகளில் மூழ்கித் தவித்தேன்: 'வக்கீல் தொழில் எங்கே போயிற்று? வீடு வாசல்கள் எங்கே? அந்தக் கூட்டங்கள் என்ன ஆயின? அவை யாவும் கனவா?' இன்று நான் கைதியாக இருக்கிறேன். இந்த இரண்டு மாதங்களில் என்னவெல்லாம் நடக்குமோ? முழுத் தண்டனையையும் கழிக்கத்தான் வேண்டியிருக்குமோ? ஜனங்கள் விடாமல் ஒருவர்பின் ஒருவராக உள்ளே வந்தால் இங்கே இரண்டு மாதங்கள் இருக்கவேண்டி இராது. அவர்கள் வராவிட்டால் இந்த இரண்டு மாதங்களை எப்படிக் கழிப்பது?'

இதை எழுதும்போது பிடிக்கும் நேரத்தில் நூற்றில் ஒரு பங்குக்கும் குறைந்த அவகாசத்துள் என் மனத்தில் இப்படி எத்தனையோ கேள்விகள் எழுந்தன. அவற்றைக் கண்டு என் தலை வெட்கத்தினால் குனிந்தது.

"அடே, இதென்ன பொய்யான பெருமிதம்! நீ சிறையை அரண்மனை என்று சொல்லவில்லையா? அந்தக் கொலைச்சட்டத்தை எதிர்க்கும்போது, என்ன ஆபத்துக்கள் வந்தாலும் அவற்றைத் துன்பமாக எண்ணாமல் இன்பமாகவே கருத வேண்டும் என்று கூறவில்லையா? அதை எதிர்த்து உடலையும் பொருளையும் அர்ப்பணம் செய்வதுதானே சத்தியாக்கிரகத்தின் நிறைவு! அந்த ஞானமெல்லாம் இப்போது எங்கே?"

இந்த எண்ணம் தோன்றியவுடனே நான் மீண்டும் உணர்வு பெற்றேன். என் முட்டாள்தனத்தைக் கண்டு எனக்குள் சிரித்துக்கொண்டேன். இனி மற்றச் சகோதரர்களுக்கு என்ன தண்டனை கிடைக்குமோ, அவர்களை என்னோடு கூடத்தான் வைப்பார்களோ, அல்லது தனியாகத்தான் விடுவார்களோ என்பவை போன்ற விவகார யோசனைகளில் நான் ஆழ்ந்திருந்தபோது கதவு திறந்தது. போலீஸ் அதிகாரி என்னிடம் வந்து, "என்னோடு புறப்படு" என்று சொன்னான். நான் புறப்பட்டேன். என்னை முன்னால் விட்டு அவன் பின்னால் வந்தான். மூடிய சிறைவண்டியின் அருகில் என்னைக் கொண்டுபோய் விட்டு அதில் உட்காரச் சொன்னான். நான் உட்கார்ந்ததுமே வண்டி ஜோஹான்ஸ்பர்க்குச் சிறையை நோக்கிச் சென்றது.

சிறைக்கு வந்ததும் என் உடைகளை வாங்கிக்கொண்டார்கள். என் பேர் ஊரை எழுதிக்கொண்டு ஒரு விசாலமான அறையில் என்னைக் கொண்டுவிட்டார்கள். அங்கே நான் சிறிது நேரம் இருப்பதற்குள் என் நண்பர்கள் சிரித்துக்கொண்டும் பேசிக்கொண்டும் அங்கே வந்து சேர்ந்தார்கள். நான் வந்த பிறகு அவர்களுடைய வழக்கு எப்படி நடந்தது என்ற விவரங்களை அவர்கள் சொன்னார்கள். எங்கள் எல்லோரையும் ஒரே சிறையில் ஒரே பெரிய அறையில் விட்டு வைத்தார்கள். இதனால் எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாயிற்று.

## 33

### சிறையில் ஆரம்ப அநுபவங்கள்

ஆறு மணிக்கு எங்கள் அறைக் கதவை மூடிவிட்டார்கள். அங்கே சிறை அறைகளின் கதவுக்கு இரும்புக் கம்பிகள் இல்லை. அவை ஒரேயடியாக மூடியிருக்கும். நேர் மேலே சுவரில் காற்றுக்காக ஒரு ஜன்னல் வைத்திருப்பார்கள். ஆதலால் ஒரு பெட்டியில் அடைபட்டிருப்பதைப்போல எங்களுக்குத் தோன்றியது.

மறுநாளிலிருந்து சத்தியாக்கிரகக் கைதிகள் கும்பல் கும்பலாக வரலாயினர். அவர்கள் எல்லோரும் வேண்டுமென்றே கைது ஆனவர்கள். அவர்களில் பெரும்பாலோர் தள்ளு வண்டிகளில் சாமான் விற்பவர்கள். தென்னாப்பிரிக்காவில் ஒவ்வொரு தள்ளு வண்டிக்காரனும் - அவன் வெள்ளைக்காரனாயினும் சரி, கறுப்பு மனிதனாயினும் சரி சாமான்கள் விற்பதற்கு அநுமதிச் சீட்டு வாங்கி அதை எப்போதும் வைத்திருக்க வேண்டும். போலீஸார் கேட்கும்போது அதைக் காண்பிக்க வேண்டும். அடிக்கடி எவனாவது ஒரு போலீஸ்காரன் அநுமதிச் சீட்டைக் கேட்கத்தான் செய்வான். அது கிடைக்காவிட்டால் உடனே அந்த ஆசாமி கைது. தள்ளு வண்டிக்காரர்கள் இந்த வேலையில் முன்னேறினார்கள். அவர்களுக்குக் கைது ஆவதும் சுலபம். அநுமதிச் சீட்டைக் காண்பிக்காவிட்டால் உடனே கைது. இவ்விதம் கைது செய்யப்பட்டு, ஒரு வாரத்துக்குள்ளே சுமார் 100 சத்தியாக்கிரகக் கைதிகள் குவிந்தார்கள். மேன்மேலும் வந்துகொண்டே இருந்தார்கள். எனவே செய்தித் தாள் இல்லாமலே எங்களுக்குச் செய்திகள் கிடைத்து வந்தன. இந்தச் சகோதரர்கள் தினமும் புதிய புதிய செய்திகள் கொண்டுவருவார்கள். சத்தியாக்கிரகிகள் ஏராளமாகக் கைதுசெய்யப்படவே இப்போது அவர்களுக்குக் கடுங்காவல் தண்டனை விதிக்கலானார்கள்.

ஜோஹான்ஸ்பர்க்குச் சிறையில் சாதாரணக் கைதிகளுக்குக் காலையில் மக்காச் சோளக்கூழ் கொடுத்தார்கள். கூழில் உப்பு இராது. ஒவ்வொரு கைதிக்கும் அதைத் தனியே கொடுப்பார்கள். பகல் 12 மணிக்கு, கால் படி சோறும், கொஞ்சம் உப்பும், இரண்டு கரண்டி நெய்யோடு கால் சேர் எடையுள்ள கடைரொட்டியும் கிடைத்துவந்தன. சாயங்காலம் சோளக் கஞ்சியும் கொஞ்சம் உருளைக்கிழங்குக் கறியும் கிடைத்தன. உருளைக்கிழங்குகள் சிறியனவாக இருந்தால் இரண்டும், பெரியனவாக இருந்தால் ஒன்றும் கிடைக்கும். இதனால் யாருக்கும் வயிறு நிரம்பவில்லை. அரிசியைத் தளர வடிப்பார்கள். சிறை டாக்டரிடம் கொஞ்சம் மசாலாக்கள் வேண்டுமென்று கேட்டோம். இந்தியாவில் உள்ள சிறைகளிலும் மசாலாக்கள் கொடுப்பது உண்டு என்று சொனனேம். டாக்டர் கடுங் கோபத்தோடு, "இது இந்தியா அல்ல; கைதிகளுக்குச் சுவை ஏதுக்கு? மசாலா கிடைக்காது" என்று பதில் சொன்னார். பிறகு நாங்கள் பருப்புக் கேட்டோம். எங்களுக்குக் கிடைத்துவந்த உணவில் தசைகளைப் போஷிக்கக்கூடிய பொருள் ஏதும் இல்லை. இதைக் கேட்ட

டாக்டர், "கைதிகள் ஆரோக்கிய சம்பந்தமாக டாக்டர்களோடு வாதாடக்கூடாது. தசைகளைப் போஷிக்கும் உணவும் உங்களுக்குக் கிடைக்கிறது; வாரத்தில் இரண்டு தடவை சோளத்துக்குப் பதிலாக மாலைவேளையில் பட்டாணி கொடுக்கிறோம்" என்று சொன்னார். ஒரு வாரம் அல்லது ஒரு பக்ஷத்துக்குள் வெவ்வேறு குணமுள்ள உணவை வெவ்வேறு சமயத்தில் ஒரு மொத்தமாக ஏற்றுக்கொண்டு மனிதனின் குடல் அந்தச் சத்தை இழுத்துக் கொள்ளக் கூடுமானால் டாக்டர் சொன்ன வாதம் சரியானதே. டாக்டர் எங்கள் பேச்சை எவ்விதத்திலும் கேட்க விரும்பவில்லை என்பதுதான் விஷயம். ஆனால் ஸூப்பரின்டென்டண்ட் நாங்களே உணவு சமைத்துக்கொள்ளும் யோசனையை அங்கீகரித்தார். தம்பி நாயுடுவை எங்கள் சமையல் நிபுணராக்கினோம். சமையற் கட்டில் அவர் செய்யும் சச்சரவுகள் எத்தனையோ. கறி குறைவாகக் கிடைத்தால் பின்னும் கேட்பார். மற்றப் பொருள்களின் விஷயமும் இப்படித்தான். பகற் சாப்பாட்டைச் சமைத்துக் கொள்ளும் பொறுப்பு மட்டுமே எங்களிடம் இருந்தது. இந்தச் சுதந்தரம் கிடைத்த பின்பு உணவு கொஞ்சம் திருப்திகரமாகக் கிடைத்தது.

ஆனால் இந்தச் சௌகரியங்கள் கிடைத்தாலும் சரி; கிடைக்காவிட்டாலும் சரி, இந்தச் சிறைத் தண்டனையைச் சுகமாகவே கழித்துவிடவேண்டும் என்று எல்லோரும் தீர்மானித்திருந்தோம். சத்தியாக்கிரகக் கைதிகளின் எண்ணிக்கை 150 வரையில் வளர்ந்தது.

இவ்வாறு சுமார் 15 நாட்கள் கழிந்திருக்கும். அதற்குள் புதிய கைதிகள் சர்க்காரோடு சமாதானப் பேச்சுக்கள் நடந்து கொண்டிருப்பதாகச் செய்தி கொணர்ந்தார்கள். ஜெனரல் ஸ்மட்ஸைச் சந்திக்க என்னைக் கூப்பிட்டனுப்பினார்கள். "இந்தியர்கள் சுயேச்சையாகத் தங்கள் அநுமதிச் சீட்டுக்களை மாற்றிக்கொள்ள வேண்டும். அவர்கள்மீது எவ்விதமான சட்ட நிபந்தனையும் இராது. புதிய அநுமதிச் சீட்டு இந்தியர்களின் ஆலோசனையைக் கொண்டு தயாரிக்கப்படும். இந்தியர்கள் தாமாகவே இதை ஒப்புக்கொண்டால் இந்தக் கடுமையான சட்டம் ரத்தாகிவிடும். எல்லாக் கைதிகளும் விடுபடுவார்கள்" என்று ஏற்பாடு செய்வதாக எனக்குக் காட்டினார்கள். சத்தியாக்கிரகி என்ற முறையில் நான் இந்தச் சமாதானத்தை ஒப்புக்கொள்ளாமல் இருக்கமுடியவில்லை. முடிவாக, கைதிகள் விடுதலை பெற்றனர். சமாதானத்தின் நிபந்தனைகள் என்ன என்பதை என் நாட்டுச் சகோதரர்களுக்கு அறிவிப்பது என் வேலையாயிற்று.

# 34

## நினைவில் மிளிரும் சம்பவம் - 1

நான் நேரே ஜோஹான்ஸ்பர்க்குக்குப் போனேன். அன்று இரவே 11-12 மணிக்குக் கூட்டம் கூடியது. கூட்டத்தைப் பற்றி அறிவிப்பதற்கு நேரம் மிகக் குறைவாக இருந்தது. இரவு வெகு நேரமாகிவிட்டது. அப்படி இருந்தும் சுமார் 1000 பேர் வந்திருந்தார்கள். கூட்டத்தில் இரண்டு பட்டாணியரைத் தவிர வேறு யாரும் சமரசத்தை எதிர்க்கவில்லை. சுயேச்சையாகக்கூட விரல்களின் முத்திரையைப் பதிப்பது பட்டாணியர்களுக்குப் பிடிக்கவில்லை.

1908, பிப்ரவரி 10-ஆம் தேதி நாங்கள் எத்தனையோ பேர் அனுமதிச் சீட்டு வாங்குவதற்குப் புறப்படத் தயாராயிருந்தோம். அவர்கள் தாமாக அனுமதிச் சீட்டை வாங்கிக்கொள்ள வேண்டும் என்று நன்றாகத் தெரியும்படி சொன்னேன். முதல் நாள் முக்கியமான சிலரே அனுமதிச் சீட்டு வாங்கிக்கொள்வது என்று முடிவாயிற்று. அதற்கு மூன்று காரணங்கள்: ஜனங்களின் மனத்திலிருந்து பயத்தை ஓட்டுவது முதற் காரணம். ஆசிய இலாக்கா உத்தியோகஸ்தர்கள் நாணயமாகவும் பெருந்தன்மையாகவும் வேலையைச் செய்கிறார்களா இல்லையா என்று பார்ப்பது இரண்டாவது. மூன்றாவது, சமூகத்தினரை ஒழுங்குபடுத்துவது.

என் காரியாலயமே சத்தியாக்கிரகக் காரியாலயமாயிருந்தது. நான் அங்கே போனபோது ஆபீஸ் கட்டிடத்துக்கு வெளியே மீர் ஆலமும் அவனுடைய நண்பர்களும் நிற்பதைக் கண்டேன். மீர் ஆலம் என்னுடைய பழைய கட்சிக்காரன். தன் சொந்த விஷயங்கள் எல்லாவற்றிலும் அவன் என் ஆலோசனையைக் கேட்பது உண்டு. அவன் ஆறு அடிக்குமேல் உயரமான இளைஞன். இரட்டை நாடியான சரீரம். அன்றுதான் முதல்முதலாக அவன் ஆபீஸுக்கு வெளியே நிற்பதைக் கண்டேன். சாதாரணமாக அவன் உள்ளே போய் உட்காருவது வழக்கம். எங்கள் கண்கள் சந்தித்தன. என்னை அவன் ஸலாம் செய்யாத முதல் சந்தர்ப்பம் அதுதான். என் வழக்கப்படி, "என்ன அப்பா சௌக்கியமா?" என்று கேட்டேன். பதிலுக்கு, "சௌக்கியமாகத்தான் இருக்கிறேன்" என்று அவன் சொன்னதாக எனக்கு லேசான ஞாபகம். ஆனால் அவன் முகம் எப்போதும்போல மலர்ந்ததாக இல்லை.

நான் இதைக் கண்டு என் மனத்துக்குள் குறித்துக்கொண்டேன். ஏதோ கலாட்டா நடக்கப்போகிறது என்பதையும் அப்போதே ஊகித்துக்கொண்டேன். நான் ஆபீஸுக்குள் நுழைந்தேன். சீக்கிரமே தலைவரான ஈஸப் மியான் மற்ற நண்பர்களோடு வந்து சேர்ந்தார். நாங்கள் யாவரும் ஏஷியாடிக் ஆபீஸை நோக்கிப் புறப்பட்டோம். மீர் ஆலமும் அவனுடைய தோழர்களும் பின்னால் வந்தனர்.

ஏஷியாடிக் ஆபீஸ் கட்டிடம் என் காரியாலயத்திலிருந்து ஒரு மைலுக்கும் குறைவான தூரந்தான். அது விசாலமான ஒரு மைதானத்தில் இருந்தது. அங்கே வரும்போது நாங்கள் ஒரு பெரிய சாலையைக் கடந்து செல்லவேண்டியிருந்தது. ஆபீஸ் ஐந்து கஜ தூரத்தில் இருக்கும்போது மீர் ஆலம் என் பக்கவாட்டில் வந்து, "நீ எங்கே போகிறாய்?" என்று கேட்டான்.

"பத்து விரல்களின் முத்திரையைப் பதித்து அநுமதிச் சீட்டு வாங்க விரும்புகிறேன். நீயும் வந்தால் பத்து விரல்களின் முத்திரையை நீ பதிக்கவேண்டியிராது. உன்னுடைய அநுமதிச்சீட்டை முதலில் வாங்கிவிட்டு, பிறகு என் விரல்களைப் பதித்துச் சீட்டு வாங்கிக்கொள்வேன்" என்றேன்.

இதை நான் சொல்லிக்கொண்டிருக்கும்போதே என் தலையில் பின்னாலிருந்து தடியடி வந்து விழுந்தது. நான் நினைவிழந்து தலைகுப்புற விழுந்தேன். "அடே ராமா!" என்ற குரல் என் வாயிலிருந்து வெளிவந்தது.

இதற்குப் பிறகு என்ன நடந்ததோ எனக்குத் தெரியாது. மீர் ஆலமும் அவனுடைய தோழர்களும் மேல்மேலும் என்னைத் தடியால் அடித்து உதைத்தார்கள். நாலுபுறமும் கூக்குரல் எழுந்தது. வழிப்போக்கர்களான வெள்ளைக்காரர்கள் சூழ்ந்து கொண்டனர். மீர் ஆலமும் அவனுடைய தோழர்களும் ஓடினார்கள். ஆனால் வெள்ளையர் அவர்களைப் பிடித்துக்கொண்டனர். அதற்குள் போலீஸும் வந்து சேர்ந்தது. போலீஸார் அவர்களை வசப்படுத்திக்கொண்டனர். பக்கத்தில் ஒரு வெள்ளையனுடைய ஆபீஸ் இருந்தது. அங்கே என்னைத் தூக்கிக்கொண்டு போனார்கள். சிறிது நேரம் கழித்து எனக்கு நினைவு வந்தபொழுது ரெவரெண்டு டோக் என்னைக் குனிந்து பார்ப்பதைக் கண்டேன். "இப்பொழுது எப்படி இருக்கிறது?" என்று அவர் கேட்டார்.

நான் சிரித்துக்கொண்டே, "நான் நன்றாகத்தான் இருக்கிறேன். ஆனால் என் பற்களிலும் விலா எலும்புகளிலும் வலி இருக்கிறது. மீர் ஆலம் எங்கே?" என்று கேட்டேன்.

''அவனும் அவன் சகாக்களும் கைது ஆகிவிட்டனர்'' என்ற பதில் கிடைத்தது.

''அவர்களை விடுவிக்க வேண்டுமே!'' என்றேன்.

''அதெல்லாம் நடக்கும். இங்கே நீங்கள் முன்பின் பழக்கமில்லாத ஒருவருடைய ஆபீஸில் கிடக்கிறீர்கள். உங்கள் உதடும் தாடையும் கிழிந்துபோயிருக்கின்றன. போலீஸார் உங்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல விரும்புகிறார்கள். ஆனால் நீங்கள் என் வீட்டுக்கு வந்தால் என் மனைவியும் நானும் எங்களால் முடிந்தவரையில் உங்களுக்குப் பணிவிடை செய்வோம்'' என்று டோக் சொன்னார்.

''என்னை உங்கள் வீட்டுக்கு அழைத்துச் செல்லுங்கள். போலீஸார் செய்த உதவிக்காக அவர்களுக்கு என் சார்பில் நன்றி கூறுங்கள். நான் உங்கள் வீட்டுக்குப் போக விரும்புவதாக அவர்களிடம் சொல்லுங்கள்'' என்றேன்.

இதற்குள் ஏஷியாடிக் ஆபீஸ் அதிகாரியான மிஸ்டர் சம்னியும் வந்து சேர்ந்தார். அவர் என்னை ஒரு வண்டியிலே போட்டு இந்தப் பாதிரியாரின் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். டாக்டருக்கு ஆள் போயிற்று. அதன் நடுவில் நான் மிஸ்டர் சம்னியிடம், ''நான் உங்கள் ஆபீஸுக்கு வந்து, பத்து விரல்களின் முத்திரையைப் பதித்து, எல்லோருக்கும் முன்னால் அநுமதிச் சீட்டு வாங்கலாம் என்று ஆசைப்பட்டேன். ஆண்டவன் அதை விரும்பவில்லை. இப்போது தயவுசெய்து இங்கேயே உங்கள் 'பேப்பர்'களை வரவழைத்து என்னை ரிஜிஸ்டர் செய்துகொள்ளுங்கள். எனக்கு முன்னால் நீங்கள் யாரையும் ரிஜிஸ்டர் செய்யமாட்டீர்கள் என்று நம்புகிறேன்'' என்றேன்.

''என்ன அப்படி அவசரம்? இதோ டாக்டர் வந்துவிடுவார். உங்கள் உடம்பு கொஞ்சம் சரியாகட்டும். பிறகு எல்லாம் நடக்கட்டும். மற்றவர்களுக்கு அநுமதிச் சீட்டுக் கொடுத்தாலுங்கூட உங்கள் பெயர்தான் எல்லோருக்கும் முன்னால் இருக்கும்.''

''அப்படி நடக்காது. நான் உயிரோடு இருந்து, ஆண்டவன் விரும்பினால், நான்தான் எல்லோருக்கும் முன்னதாக அநுமதிச் சீட்டு வாங்கிக்கொள்வேன் என்பது என் பிரதிக்ஞை. அதனால் தான் நான் இப்படிப் பிடிவாதம் செய்கிறேன். நீங்கள் கட்டுக்களைக் கொண்டுவாருங்கள்.''

மிஸ்டர் சம்னி போய், கட்டுக்களைக் கொண்டுவந்தார்.

அடுத்தபடியாக நான் அட்டர்னி ஜெனரல் அதாவது சர்க்கார் வக்கீலுக்கு, 'மீர் ஆலமும் அவனுடைய தோழர்களும்

என்னைத் தாக்கியதற்காக அவர்களை நான் குற்றவாளியாக எண்ணவில்லை. எது எப்படி இருந்தாலும் அவர்கள்மீது கிரிமினல் வழக்குத் தொடரக்கூடாது என்பது என் விருப்பம். எனக்காக அவர்களை விடுவிப்பீர்களென நம்புகிறேன்' என்று தந்தி அடித்தேன். இதன் பயனாக மீர் ஆலமும் அவன் சகாக்களும் விடுபட்டனர்.

ஆனால் ஜோஹான்ஸ்டர்க்கு வெள்ளையர்கள் அட்டர்னி ஜெனரலுக்கு, "குற்றவாளிகளுக்குத் தண்டனை அளிப்பது பற்றியோ அளிக்காதிருப்பது பற்றியோ காந்தியின் அபிப்பிராயம் எப்படி இருந்தாலும் சரி, அவை தென்னாப்பிரிக்காவில் செல்லமாட்டா. அவர் அடிபட்டவர் ஆதலால் அவர் வேண்டுமானால் அவர்களை ஒன்றும் செய்யாமல் விட்டுவிடலாம். ஆனால் குற்றவாளிகள் அவரைத் தம் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் அடிக்கவில்லை. குற்றம் பொது ரஸ்தாவில் நடந்திருக்கிறது. இது ஒரு பொதுஜனக் குற்றம். இதற்கு அத்தாட்சி சொல்ல எத்தனையோ ஆங்கிலேயர்கள் இருக்கிறார்கள். ஆதலால் குற்றவாளிகளை விசாரணை செய்யவேண்டியது அவசியம்" என்று ஒரு நீண்ட கடிதம் எழுதினார்கள். இதன்மேல் சர்க்கார் வக்கீல், மீர் ஆலத்தையும் அவனுடைய ஒரு தோழனையும் கைது செய்வித்தார். அவர்களுக்கு ஆறு ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை கிடைத்தது. ஆனால் ஒன்று : என்னைச் சாட்சியாகக் கூப்பிடவில்லை.

# 35

## நினைவில் மிளிரும் சம்பவம் - 2

மிஸ்டர் சம்னி கட்டுக்களை எடுத்துவரப் போனபோது டாக்டர் வந்து சேர்ந்தார். அவர் என் உடலைப் பரிசோதித்துப் பார்த்தார். கிழிந்து போன என் உதட்டுக்குத் தையல் போட்டார். விலா எலும்புகளில் தேய்க்க மருந்து கொடுத்தார். உதட்டில் தையல் படாமல் இருக்கும்படி மெதுவாகப் பேச அநுமதி கொடுத்தார். அதனால் என் பேச்சு நின்றிருந்தது. கையால் சமிக்ஞை மட்டுமே செய்ய முடிந்தது.

சமூகத்தின் பெயரால் குஜராத்தியில் ஒரு கடிதத்தை எழுதித் தலைவர் மூலம் வெளியிடுவதற்கு அனுப்பினேன். அது வருமாறு :

"நான் நல்ல நிலையில் இருக்கிறேன். டோக் தம்பதிகள் எனக்காக உயிரைக் கொடுத்து வருகிறார்கள். வெகு சீக்கிரத்தில்

என் வேலைகளைப் பார்க்கும் சக்தி எனக்கு வந்துவிடும். என்னைத் தாக்கியவர்கள்மீது எனக்குச் சிறிதும் கோபம் இல்லை. அறிவீனத்தினால் அவர்கள் அப்படிச் செய்திருக்கிறார்கள். அவர்கள்மீது எவ்வித வழக்கும் தொடரக்கூடாது. நம் சகோதரர்கள் யாவரும் அமைதியாக இருப்பார்களாயின் இந்தச் சம்பவமும் நமக்கு நன்மை பயப்பதாகவே இருக்கும்.

"ஹிந்துக்கள் தம் மனத்தில் கோபத்துக்குச் சிறிதும் இடம் தரலாகாது. இந்தச் சம்பவத்தினால் ஹிந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்குமிடையே மனஸ்தாபமின்றி அன்பு மட்டும் வளர வேண்டும் என்பது என் விருப்பம். இறைவனிடம் நான் கோருவதும் இதுதான்.

"நான் அடிபட நேர்ந்தது. இன்னமும் அடிபட நேர்ந்தாலுங்கூட நான் சொல்லக்கூடிய ஆலோசனை இதுதான்: நம்மில் பலரும் பத்து விரல்களின் முத்திரையைப் பதிய வைக்க எல்லோருமாகச் சேர்ந்து முயலுங்கள். இதில்தான் சமூகத்துக்கு நன்மை, ஏழைகளுக்கு நன்மை. அவர்களின் பாதுகாப்பும் இதில்தான் அடங்கியிருக்கிறது.

"நாம் உண்மையான சத்தியாக்கிரகிகளாக இருந்தோமாயின் அடிபடுவதற்கோ வருங்காலத்தில் நம்பிக்கைத் துரோகம் நேருமோ என்ற சந்தேகத்துக்கோ சற்றும் பயப்படமாட்டோம். பத்து விரல்கள் சம்பந்தமான பேச்சையே வைத்துக்கொண்டு பிடிவாதம் பிடிப்பவர்கள் தவறு செய்பவர்கள்.

"'சமூகத்துக்கு நன்மை செய்யவேண்டும்; அதை உண்மைப் பாதையில் கொண்டு செலுத்தவேண்டும்; என்னுடைய ரத்தத்தினால் ஹிந்துக்களையும் முகம்மதியர்களையும் ஒன்றுபடுத்த வேண்டும்' என்பதே நான் இறைவனிடம் செய்யும் பிரார்த்தனை."

மிஸ்டர் சம்னி கட்டுக்களை எடுத்துக்கொண்டு திரும்பினார். மிகவும் சிரமப்பட்டு விரல்களைக் காகிதத்தில் பதித்தேன். அப்பொழுது நான் அவர் கண்களில் கண்ணீரைக் கண்டேன். அவருக்கு விரோதமாகத்தான், மிகவும் கடுமையான கட்டுரைகளை நான் எழுதவேண்டி நேர்ந்திருந்தது. ஆனால் அந்தச் சமயத்தில், சந்தர்ப்பம் நேரும்போது மனிதனுடைய உள்ளம் எவ்வளவு மிருதுவாகக் கூடும் என்ற காட்சி என் கண்முன்னால் நின்றது. அந்தச் சடங்கில் அதிக நேரம் பிடிக்கவில்லை. ஆயினும் மிஸ்டர் டோக்கும் அவருடைய மனைவியாரும் நான் சீக்கிரமே அமைதியாகவும் சௌஸ்தமாகவும் படுத்திருக்க வேண்டுமென்று ஆத்திரப்பட்டார்கள். அடிபட்டதற்குப் பின் இருந்த என் மன நிலையைக் கண்டு

அவர்களுக்கு வருத்தம் உண்டாயிற்று. என் ஆரோக்கியம் இதனுல் கெட்டுப் போகுமோ என்று அவர்கள் பயந்தனர். எனவே சங்கேதத்தினுலும் வேறு உபாயங்களினுலும் என் கட்டிலுக்கு அருகில் இருந்த எல்லாரையும் அவர்கள் தூரத்தில் அழைத்துச் சென்றனர். நான் எழுத்து வேலை முதலியவற்றைச் செய்யக் கூடாது என்று தடுத்தனர். தூங்குவதற்கு முன்னுல் மன அமைதி பெறும்பொருட்டு அவர்களுடைய பெண் ஆலிவ் - அப்போது சிறுமியாக இருந்தவள் - எனக்கு மிகவும் பிரியமான 'Lead kindly light' என்ற ஆங்கில பஜனையைப் பாட வேண்டும் என்று நான் விரும்பினேன். என் கருத்தை எழுதித் தெரிவித்தேன். எனது இந்த விருப்பத்தை டோக் பெரிதும் பாராட்டினுர். இதை எழுதும்போது அந்தக் காட்சிகள் யாவும் என் கண்முன்னுல் நிற்கின்றன. ஆலிவ் பாடிய அந்தத் தெய்விகப் பாட்டின் இன்னிசைகள் இப்போதும் என் காதுகளில் சுழலுகின்றன.

# 36

## மறுபடி சத்தியாக்கிரகம்

இந்தியர்கள் தாமாக முன்வந்து பதிவு செய்துகொண்டார்கள். அதனுல் டிரான்ஸ்வால் சர்க்காருக்கும் சந்தோஷம் உண்டாயிற்று. இனிமேல் சர்க்காரின் முறை. 'கறுப்புச் சட்ட'த்தை ரத்து செய்யவேண்டியது அதன் வேலை. அது அப்படிச் செய்திருந்தால் சத்தியாக்கிரகப் போர் முடிந்திருக்கும். அந்தக் 'கறுப்புச் சட்ட'த்தை ரத்து செய்வதற்கு மாருக ஜெனரல் ஸ்மட்ஸ் ஒரு புதிய தோரணையைக் கைக்கொண்டார். அவர் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதன்படி ஒரு பக்கம் கறுப்புச் சட்டம் அமலில் இருந்தது; மறுபக்கம் இந்தியர்கள் தாமாக வாங்கிக்கொண்ட அநுமதிச் சீட்டுக்கள் சட்ட பூர்வமானவை ஆயின. 'இதுவரையில் சீட்டு வாங்கிக்கொண்ட இந்தியர்கள் விஷயத்தில் கறுப்புச் சட்டம் செல்லுபடியாகாது' என்ற ஒரு வாக்கியத்தையும் அவர் அதில் சேர்த்திருந்தார்.

இந்த மசோதாவைப் படித்ததும் எனக்குத் திக்பிரமை தோன்றியது.

ஜெனரல் ஸ்மட்ஸுக்கு ஒரு கடிதம் எழுதினேன். ஆனுல், தம்மைச் சிக்கலிலே ஆழ்த்தும் இம்மாதிரியான விஷயங்களுக்கு அநேகமாகப் பதில் கொடாமல் இருப்பதுதான் அரசியல்வாதிகளின் போக்கு. அப்படியாக அவர்கள் பதில் கொடுத்தாலும்

அது சுற்றி வளைத்துத்தான் இருக்கும். அப்புறம் டிரான்ஸ்வால் சர்க்காருக்கு நாங்கள் தீவிரமாக ஒரு கடிதம் எழுதினோம்: "ஒப்பந்தப்படி 'ஏஷியாடிக் சட்ட'த்தை ரத்து செய்யாமல் இருந்தாலோ அல்லது அப்படிச் செய்யும் விஷயமாகச் சர்க்காரின் தீர்மானத்தைப் பற்றிய செய்தி குறித்த சமயத்துக்கு முன்னால் எங்கள் சபைக்குக் கிடைக்காவிட்டாலோ, சபை தான் குவித்து வைத்திருக்கும் அநுமதிச் சீட்டுக்கள் யாவற்றையும் கொளுத்தி விடும். இப்படிச் செய்யும்போது என்ன கஷ்டங்கள் நேர்ந்தாலும் அவற்றை அது வணக்கத்தோடும் உறுதியாகவும் பொறுத்துக்கொள்ளும்."

இந்த 'அல்டிமேட்டம்' அதாவது இறுதிக் கடிதத்துக்குக் கடைசியான காலவரை, அந்த இரண்டாவது ஏஷியாடிக் சட்டம் என்றைக்கு நிறைவேறப் போவதாக இருந்ததோ அதே நாள்தான். வரையறை முடிந்து இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு அநுமதிச் சீட்டுக்களை எரிக்கும் பொதுக் கொண்டாட்டத்துக்காக ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடாயிற்று. எதிர்பாராதபடி ஒருவேளை அநுகூலமான பதிலை அரசாங்கம் அனுப்பினாலும் அந்தக் கூட்டம் வீணாகாது; அந்த நிலையில் சர்க்காரின் அநுகூலமான தீர்மானத்தை அந்தக் கூட்டத்தின் மூலம் வெளிப்படுத்தலாம் என்று சத்தியாக்கிரகக் கமிட்டியார் எண்ணியிருந்தார்கள்.

கூட்டம் ஆரம்பமாகும் சமயம். ஒரு சுயம்சேவகன் ஸைக்கிளில் வந்து சேர்ந்தான். அவன் கையில் ஒரு தந்தி இருந்தது. அது அரசாங்கத்தின் பதில். சமூகத்தின் தீர்மானத்துக்கு வருத்தம் தெரிவித்து, தன் முடிவை மாற்ற முடியாது என்று சர்க்கார் அறிவித்தது. கூட்டத்தில் தந்தியைப் படித்துக் காட்டினோம். ஜனங்கள் அதைப் பெரிதும் வரவேற்றனர். இறுதிக் கடிதத்தில் இருந்த கோரிக்கைகளை அரசாங்கம் ஒப்புக்கொண்டுவிட்டால் அநுமதிச் சீட்டுக்களை எரிக்கும் மங்களமான சந்தர்ப்பம் தவறிப்போகுமே என்று அவர்கள் கருதினாற்போல இருந்தது.

கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் ஆரம்பமாயிற்று. தலைவர் ஜனங்களுக்கு எச்சரிக்கைப்படுத்தி முழு நிலைமையையும் விளக்கினார். அந்தச் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற தீர்மானங்கள் நிறைவேறின.

இதுவரையில் கமிட்டியாரிடம் 2000-க்கு மேற்பட்ட சீட்டுக்கள் எரிப்பதற்காக வந்திருந்தன. அந்தக் கட்டைத் தூக்கி ஒரு பெரிய வாணலியில் பரப்பினேன். அதன்மேல் மண்ணெண்ணெ

யைத் தெளித்தேன்; கீறிவைத்தேன் தீக்குச்சியை. ஒரேயடியாக ஜனக்கூட்டம் முழுவதும் எழுந்து நின்றது. சீட்டுக்கள் எரியும் வரையில் அவர்கள் கைகொட்டி ஆர்ப்பரித்து மைதானத்தை எதிரொலிக்கச் செய்தனர். பலர் இன்னமுங்கூடத் தம் சீட்டுக்களைத் தம்மிடமே வைத்திருந்தனர். இப்போது அவை மேடைமீது பொழிந்தன. அவற்றையும் வாணலியில் எரிக்கவிட்டோம்.

ஆங்கிலப் பத்திரிகைகளின் நிருபர்களும் இந்தக் கூட்டத்துக்கு வந்திருந்தார்கள். அந்தக் காட்சி முழுவதும் அவர்கள் மனத்தில் நன்கு பதிந்தது. அவர்கள் தங்கள் பத்திரிகைகளுக்குக் கூட்டத்தின் முழு விவரத்தையும் அனுப்பினார்கள்.

(இரண்டாவது) ஏஷியாடிக் சட்டம் நிறைவேறிய அதே சட்டசபைக் கூட்டத்தில் ஜெனரல் ஸ்மட்ஸ் மற்றொரு மசோதாவைக் கொண்டுவந்தார். அதன் பெயர்: 'இமிக்கிரண்ட்ஸ் ரெஸ்டிரிக்ஷன் பில்' அதாவது குடியேற்றத்தைத் தடுக்கும் சட்டம். புதிதாக எந்த இந்தியனும் மறைமுகமாக அங்கே நுழைய முடியாதபடி வெகு தந்திரமாக அது தயாரிக்கப்பட்டிருந்தது.

அதை எதிர்ப்பது சமூகத்துக்கு மிகவும் அவசியமாக இருந்தது. அவர்களுடைய உரிமையை வெட்டி எறியும் புதிய கோடரிக்காம்பு அது. இரண்டு வருஷங்களாக அருகில் உள்ள நேட்டாலிலிருந்து பல சத்தியாக்கிரகிகள் தம் இஷ்டத்தோடு டிரான்ஸ்வாலில் நுழைந்திருந்தார்கள். அவர்களை வோக்ஸரஸ்ட் சிறையில் வைத்திருந்தார்கள். இந்த நேட்டால் நண்பர்களுக்கு உதவி செய்ய விரும்பி உற்சாகம் மிகுந்த மற்றும் பலர் - இவர்கள் அநுமதிச் சீட்டுக்களை எரித்தவர்கள் - கடைத்தெருவில் கறிகாய்க் கூடைகளை வரிசையாகப் பரப்பினார்கள். இதற்கு அநுமதிச்சீட்டுத் தேவை. எனவே அவர்கள் கைது செய்யப்பட்டனர். ஒரு சமயம் வோக்ஸரஸ்ட் சிறையில் இந்தியர்களின் எண்ணிக்கை 75 வரைக்கும் போயிற்று. இந்தச் சத்தியாக்கிரகிகளின் கூட்டம் அரசாங்கத்துக்குப் பெருத்த தொந்தரவாக இருந்தது. சிறைவாசம் விதித்தும் அவர்கள் பின்வாங்காமற் போகவே, அவர்களுக்குச் சிறைத் தண்டனை விதிப்பதற்குப் பதிலாக நாடு கடத்தலாயினர். இதனால் இந்தியர்கள் ஓரளவு பலவீனர்களாயினர் என்பது நிச்சயம். ஆயினும் பலபேர் மிகவும் உறுதியோடும் மகிழ்ச்சியோடும் இருந்து போரை நடத்திவந்தார்கள்.

# 37

## டால்ஸ்டாய் ஆசிரமம்

இதுவரையில் (1910-ஆம் வருஷம்) சிறை செல்பவர்களின் குடும்பங்களுக்கு மாதந்தோறும் பணம் கொடுத்துப் போஷித்து வந்தோம். இது மிகவும் அதிருப்திகரமாக இருந்ததோடு பொதுப்பணத்தைத் துர்விநியோகம் செய்வதாகவும் இருந்தது. ஆனால் விடாமல் சிறைக்குச் செல்பவர்கள் இடைநாட்களில் எங்கே தங்குவது என்பதும் சிக்கலாகவே இருந்தது. ஏனெனில் அவர்களை யாரும் வேலைக்கு வைத்துக்கொள்வதில்லை. இந்த இரண்டு சங்கடங்களுக்கும் ஒரே வழிதான் இருந்தது. அதாவது எல்லாச் சத்தியாக்கிரகிகளும் அவர்களுடைய குடும்பங்களும் ஒரு மொத்தமாக இருந்துகொண்டு ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்போலத் தமக்குள் ஒத்து வேலை செய்வது. இதற்காக, மிஸ்டர் கேலன்பேக் தம்முடைய 1100 ஏகர் விஸ்தீர்ணமுள்ள நிலத்தை எங்களுக்கு இனமாகக் கொடுத்தார். அவர் ஜெர்மானியர். கட்டிடவேலைகளில் நிபுணர். என்னிடம் அவருக்கு நட்பு. இந்த நிலத்தில் சுமார் 1000 பழவிருக்ஷங்கள் இருந்தன. அதன் மூலையில் ஒரு சிறு குன்று; அதன்மீது சிறிய வீடு ஒன்று. இரண்டு கிணறுகள். தெள்ளிய நீர் பாயும் சின்னஞ்சிறு அருவி. லாலி ரெயில்வே ஸ்டேஷன் அங்கிருந்து ஒரு மைல். ஜோஹான்ஸ்பர்க்கு 21 மைல். இந்த நிலத்தில் வீடுகட்டிச் சத்தியாக்கிரகக் குடும்பங்களைக் குடியேற்ற நிச்சயித்தேன். இந்த வயலில் கிச்சிலி மரங்களும் மாமரங்களும் இலந்தை மரங்களும் ஏராளமாக இருந்தன. பருவகாலத்தில் சத்தியாக்கிரகிகள் வயிறு நிரம்பச் சாப்பிட்டுங்கூடப் பழங்கள் மீந்துபோகும். அருவி, நாங்கள் இருந்த இடத்திலிருந்து 500 கஜ தூரத்தில் இருந்தது. வீட்டு வேலைகளோ வயல் வேலைகளோ அல்லது வீடு கட்டுவதோ எவ்விதமான வேலைக்கும் வேலைக்காரர்கள் வைத்துக்கொள்ளக்கூடாது என்று விதித்திருந்தோம். எனவே கக்கூஸ் கழுவுவதிலிருந்து சமையல் வரையில் எல்லா வேலைகளையும் ஒவ்வொரு குடும்பத்தாரும் செய்யவேண்டியிருந்தது. குடும்பங்களையும் கூடவே வைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் ஆரம்பத்திலிருந்தே பெண்களையும் ஆண்களையும் தனித்தனியாகவே வைப்பது என்பது கோட்பாடு. வீடுகளையும் தனித்தனியாக இடைவெளி விட்டுக்

கட்டினோம். அப்போதைக்கு, 10 பெண்களும் 60 ஆண்களும் வசிக்கத்தக்க வீடுகளைக் கட்டத் தீர்மானித்தோம். மிஸ்டர் கேலன்பேக் வசிப்பதற்காக ஒரு வீடும் அதனோடு கூடவே ஒரு பள்ளிக்கூடமும் கட்டவேண்டியிருந்தன. இவற்றைத் தவிர, தச்சுப் பட்டறை, சக்கிலியர் கூடம் முதலியவற்றிற்காகவும் தனியே கட்டிடம் அமைப்பது அவசியமாக இருந்தது.

இங்கே குடியிருப்பதற்கு வரப்போகிறவர்களில் குஜராத்தியர், மதராஸிகள், ஆந்திரர், வட இந்தியர் ஆகிய யாவரும் இருந்தனர். அவர்களில் ஹிந்துக்களும் முகம்மதியர்களும் பார்ஸிகளும் கிறிஸ்தவர்களும் இருந்தார்கள். சுமார் 40 இளைஞர்கள், 2 - 3 கிழவர்கள், 5 பெண்மணிகள், 25 - 30 குழந்தைகள்; அவர்களில் 4 - 5 பெண் குழந்தைகள். இந்த ஆசிரமத்துக்கு வந்ததும் பலவீனர்கள் பலசாலிகளாயினர். எல்லோருக்கும் உழைக்கும் பழக்கம் ஏற்பட்டது. ஏதாவது ஒரு வேலையை முன்னிட்டு ஒவ்வொருவரும் ஜோஹான்ஸ்பர்க்குக்குப் போகவேண்டியதாயிருந்தது. குழந்தைகளும் அங்கே உலாவிவர ஆசைப்பட்டனர். எனக்கும் வேலைவெட்டிகளுக்காக அங்கே போக வேண்டி இருக்கும். பொதுக் காரியங்களுக்காகப் போகிறவர்களே ரெயிலில் செல்லலாம் என்று விதித்திருந்தோம். உலாவ மட்டும் போகிறவர்கள் கால்நடையாகவே செல்லவேண்டும். வழிக்கு ஏதாவது சிற்றுண்டி எடுத்துக்கொண்டு போகலாம். நகரத்தில் தம் சாப்பாட்டுக்காக யாரும் செலவு செய்யக்கூடாது. இத்தனை கடுமையான விதிகளை ஏற்படுத்தாமற் போயிருந்தால், எந்தப் பணத்தை மீத்துவதற்காக நாங்கள் வனவாசத்துக் கஷ்டங்களை மேற்கொண்டிருந்தோமோ அது ரெயில் செலவிலும் பட்டணத்தில் சிற்றுண்டிச் செலவுக்குமே சரியாகப் போயிருக்கும். வீட்டிலிருந்து நாங்கள் எடுத்துச் செல்லும் சிற்றுண்டிகளும் சாதாரணமானவையே. வீட்டில் அரைத்துச் சலிக்காத கோதுமை மாவில் செய்த பருமனான ரொட்டி, வேர்க்கடலையில் வீட்டிலேயே செய்த வெண்ணெய், கிச்சிலித் தோல் ஊறுகாய் இவைதாம். மாவரைக்க, கையால் சுற்றும் இரும்பு இயந்திரம் வாங்கியிருந்தோம். வேர்க்கடலையை வறுத்து அரைத்தால் வெண்ணெய் ஆகிவிடும். இந்த வெண்ணெயின் மதிப்பு, பாலில் செய்த வெண்ணெயில் $\frac{1}{4}$ பாகம். கிச்சிலி மரங்கள் ஆசிரமத்திலேயே இருந்தன. ஆசிரமத்தில் நாங்கள் பசும்பால் வாங்குவது அரிது. அநேகமாக டப்பிப் பாலைக் கொண்டே காரியம் நடத்தினோம்.

நடைக்காக ஜோஹான்ஸ்பர்க்குக்குப் போக விரும்புகிறவர்கள் வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு தடவை போய் அன்றே திரும்பிவருவார்கள். இடையே உள்ள தூரம் 21 மைல் என்று முன்னமே சொல்லியிருக்கிறேன். நடந்து செல்லும் இந்தப் பழக்கத்தினுல் நூற்றுக்கணக்கான ரூபாய் மிச்சமானதோடு நடப்பவர்களுக்கும் பெருத்த லாபம் உண்டாயிற்று: நடக்கும் புதுப்பழக்கம் பலருக்கு ஏற்பட்டது. இப்படிப் போகிறவர்கள் இரவு 2 மணிக்கு எழுந்திருந்து 2½ மணிக்குப் புறப்படவேண்டும் என்பது விதி. குறைந்த பக்ஷ நேரத்தில் போய்ச் சேருகிறவர்களுக்கு 4 மணி 18 நிமிஷநேரம் பிடிக்கும். சத்தியாக்கிரகக் குடும்பங்களை உழைப்பாளிகளாக ஆக்கவேண்டும்; அவர்கள் பணத்தை மிச்சப்படுத்தவேண்டும்; நாங்கள் முடிவாகத் தற்பொறுப்பு உள்ளவர்கள் ஆகவேண்டும் என்பதே எங்கள் கொள்கை. இதை எங்களால் செய்ய முடிந்தால் எவ்வளவு நாளைக்கு வேண்டுமாயினும் போரை நடத்தலாம் என்றும் எண்ணினேம்.

நாங்கள் செருப்புத் தொழிற்சாலையும் ஆரம்பித்தோம். அருகிலேயே ஜெர்மன் காத்தலிக் பாதிரிகளின் மடம் ஒன்று இருந்தது. அங்கே செருப்புத் தைக்கக் கற்றுக்கொடுத்து வந்தார்கள். மிஸ்டர் கேலன்பேக் அந்த மடத்தில் போய்ச் செருப்புத் தைக்கக் கற்றுக்கொண்டு எனக்கும் மற்றத் தோழர்களுக்குங்கூட அதைக் கற்றுக்கொடுத்தார். நானே டஜன் கணக்கான செருப்புக்களைத் தயாரித்திருக்கிறேன். என் சிஷ்யர்களில் பலர் இந்தக் கலையில் என்னைத் தாண்டி வெகுதூரம் போய்விட்டார்கள். நாங்கள் அந்தச் செருப்புக்களை எங்கள் நண்பர்களுக்கு விற்பதும் உண்டு. தச்சு வேலையையும் ஆரம்பித்து, பெஞ்சிலிருந்து பெட்டிவரையில் சில்லறைச் சாமான்களை நாங்களே தயாரித்துக்கொண்டோம். ஆசிரமத்துக்குப் பள்ளிக்கூடம் தேவை. இது எல்லாவற்றிலும் கஷ்டமான வேலையாக இருந்தது. இன்னமும் அது தன் லட்சியத்தை எட்டவில்லை. படிப்பிக்கும் பொறுப்பு முக்கியமாக மிஸ்டர் கேலன்பேக்கையும் என்னையும் சார்ந்திருந்தது. பள்ளிக்கூட வேலை நடுப்பகல் கழித்துத்தான். வேலை செய்து செய்து நாங்கள் இருவரும் மிகவும் களைத்துப் போயிருப்போம். வெகு நேரம் வரையில் அவருக்கும் தூக்கத்தால் தலை ஆடும். நானும் கண்களைத் தண்ணீரால் துடைத்துக்கொள்வேன். குழந்தைகளோடு விளையாடி அவர்களுடைய சோம்பலையும் எங்கள் சோம்பலையும் விரட்டப் பார்ப்போம். ஆனுல் பல தடவை இந்த முயற்சி பயனற்றதாகவே இருந்தது. உடலுக்குத் தேவையான ஓய்வு

கொடுக்கத்தான் வேண்டியிருந்தது. இது மிகவும் சிறிய சாதாரணமான விக்கினந்தான். ஏனெனில், குறட்டை விட்டுக்கொண்டிருந்த போதிலும் நாங்கள் வகுப்பை நடத்திவந்தோம். ஆனால் முக்கியமான கஷ்டம் வேறு: தமிழ், தெலுங்கு, குஜராத்தி ஆகிய மூன்று பாஷைகளைப் பேசுகிறவர்களுக்கு ஒரு மொத்தமாக எதைக் கற்றுக்கொடுப்பது, எப்படிக் கற்றுக்கொடுப்பது? தாய்மொழியின் மூலமாகக் கல்வி கற்பிக்கும் ஆசை எங்களுக்கு நிச்சயமாக இருந்தது. தமிழாவது எனக்குக் கொஞ்சம் தெரியும்; தெலுங்கோ சுட்டுப் போட்டாலும் தெரியாது. இந்த நிலையில் தனியாக ஒரு வாத்தியார் என்ன செய்ய முடியும்?

ஆனால் இந்தக் கல்விச் சோதனை வீணாகவில்லை. பையன்கள் எப்பொழுதும் பொறுமையை இழந்து நான் பார்த்ததில்லை. ஒருவர் மற்றொருவருடைய மதத்திலும், பழக்க வழக்கங்கள் விஷயத்திலும் மரியாதை பாகவும் நாகரிகமாகவும் இருக்கக் கற்றுக்கொண்டார்கள். உழைப்பாளிகளாகவும் ஆயினர். இன்றுங்கூட அந்தப் பிள்ளைகளில் எனக்குத் தெரிந்தவர்களின் வேலைகளைப் பார்க்கும்போது, டால்ஸ்டாய் ஆசிரமத்தில் அவர்கள் கற்றுக்கொண்டது வீண்போகவில்லை என்றே தோன்றுகிறது. அரைகுறையாக இருந்தாலும் அது சிந்தனை நிறைந்ததும் மத சம்பந்தமுமான பரிசோதனையாக இருந்தது. டால்ஸ்டாய் ஆசிரமத்து இனிமை ததும்பும் ஞாபகங்களில் கல்விப் பரிசோதனை சம்பந்தமான இந்த ஞாபகம் எவ்விதத்திலும் இனிமையில் குறைந்ததல்ல.

## 38

### நல்லவர்களும் கெட்டவர்களும்

டால்ஸ்டாய் ஆசிரமத்தில் மிஸ்டர் கேலன்பேக் என்முன்னால் ஒரு பிரச்னையைக் கொணர்ந்தார். அதற்குமுன் நான் அதைப்பற்றி எப்போதும் யோசித்ததில்லை. ஆசிரமத்தில் எத்தனையோ பையன்கள் பெரிய உபத்திரவக்காரர்கள், துடுக்குத்தனம் உள்ளவர்கள். பலருக்கு ஊர் சுற்றும் பழக்கமும் உண்டு. அவர்களோடு என் மூன்று பிள்ளைகளும் இருந்தார்கள். என் பிள்ளைகளைப்போலவே நான் வளர்த்துவந்த மற்றப் பையன்களும் இருந்தனர். ஆயினும், அந்தச் சோதாப் பையன்களும் என் பையன்களும் இப்படி ஒன்றாக இருக்கக்கூடாது என்ற விஷயத்தில் மிஸ்டர் கேலன்பேக்கின் கவனம் சென்றது. ஒரு நாள் அவர், "உங்களுடைய இந்தத்

தோரணை எனக்கு அடியோடு சரியாகப்படவில்லை. இவர்களோடு உங்கள் பையன்கள் இருந்தால் அதற்கு விபரீதமான பலனே ஏற்படும். இந்த ஊர்சுற்றும் பையன்களின் சகவாசத்தில் இவர்கள் கெடாமல் எப்படி இருப்பார்கள்?'' என்று கேட்டார்.

இதைக் கேட்டு நான் சிந்தனையில் ஆழ்ந்தேனா இல்லையா என்பது இப்பொழுது ஞாபகம் இல்லை. ஆனால் நான் கொடுத்த பதில் ஞாபகம் இருக்கிறது. "என் புதல்வர்களுக்கும் இந்த ஊர்சுற்றும் பையன்களுக்கும் இடையே நான் எப்படி வித்தியாசம் பாராட்ட முடியும்? இருதிறத்தாரின் பொறுப்பும் இப்போது என்னைச் சார்ந்தது. இந்த இளைஞர்கள் நான் கூப்பிட்டு இங்கே வந்திருக்கிறார்கள். நான் பணம் கொடுத்துவிட்டால் இவர்கள் இன்றைக்கே ஜோஹான்ஸ்பர்க்குக்குப் போய், பழையபடி இருக்க ஆரம்பிப்பார்கள். இவர்களுடைய பெற்றோர்கள் இவர்கள் இங்கே வந்து எனக்குப் பெருத்த உபகாரம் செய்திருப்பதாக நினைத்தால் அதில் ஆச்சரியம் ஏதும் இல்லை. இங்கே வந்து இவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் அசௌகரியங்களை நீங்களும் நானும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்த விஷயத்தில் என் கடமை எனக்குத் தெளிவாகத் தென்படுகிறது. இவர்களை நான் இங்கேயே வைத்திருக்கவேண்டும். என் புதல்வர்களும் இவர்களோடு கூடத்தான் இருப்பார்கள். மற்றவர்களைவிடத் தாம் உயர்ந்தவர்கள் என்ற வித்தியாச மனப்பான்மையை இன்றையிலிருந்தே என் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கவேண்டுமா? இம்மாதிரியான எண்ணத்தை அவர்களுடைய மூளையில் புகுத்துவது அவர்களை விபரீதமான பாதையில் கொண்டு சேர்ப்பதாகும். இந்த நிலையிலேயே இருப்பதனால் அவர்கள் வாழ்க்கை உறுதிப்படும். தாமாகவே நல்லதையும் கெட்டதையும் ஆராயத் தொடங்குவார்கள். அவர்களிடத்தில் உண்மையில் ஏதாவது குணம் இருந்தால் அது அவர்கள் சகாக்களிடத்திலும் பிரதிபலிக்கும் என்று நாம் ஏன் எண்ணக்கூடாது? என்ன இருந்தாலும் சரி, அவர்களை நான் ஒதுக்கிவைக்க முடியாது. இப்படிச் செய்வதனால் ஏதாவது விபரீதம் நேர்ந்தால் அதற்கு நான் தயாராக இருக்கவேண்டும்'' என்று பதில் சொன்னேன். இதைக் கேட்டதும் அவர் தலை ஆட்டியதோடு நின்றுவிட்டார்.

இந்தப் பரீக்ஷையினால் கெட்ட பயன் நேர்ந்ததென்று சொல்ல முடியாது. என் புதல்வர்களுக்கு இதனால் கொஞ்சமாவது நஷ்டம் ஏற்பட்டதாக நான் கருதவில்லை. லாபம் உண்டானதை மட்டும் நான் பார்த்திருக்கிறேன். அவர்களிடம் அகந்தையின்

அம்சம் ஏதாவது இருந்திருக்குமாயின் அது ஒரேயடியாகப் போய் விட்டது. அவர்கள் எல்லோருடனும் கலந்து வாழக் கற்றுக் கொண்டனர். அவர்கள் அந்தச் சோதனையில் புடம் வைத்த தங்கமாயினர்.

இதனாலும் இத்தகைய மற்ற அநுபவங்களினாலும், பெற்றோர்களின் சரியான மேற்பார்வை இருக்குமானால் அவர்களுடைய நல்ல பிள்ளைகளும் கெட்ட பிள்ளைகளும் ஒன்றாக இருந்து படிப்பதனால் நல்ல பிள்ளைகளுக்கு யாதொரு நஷ்டமும் ஏற்படாது என்பது என் கொள்கையாயிற்று. பையன்களைப் பெட்டிக்குள் அடைத்து வைத்திருப்பதனால் அவர்கள் சுத்தமாகவே இருப்பார்கள்; வெளியே விடுவதனால் கெட்டுப்போவார்கள் என்பது ஒன்றும் நியமம் அல்ல. பலவிதமான பையன்களும் பெண்களும் ஒன்றாக இருந்து படிக்கும் இடத்தில் பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் கடுமையான சோதனைக்கு உள்ளாகிறார்கள் என்பது மட்டும் நிச்சயம். அவர்கள் மிகுந்த ஜாக்கிரதையோடும் விழிப்போடும் இருக்கவேண்டும்.

இவ்வாறு பையன்களையும் பெண்களையும் நேர்மையாகவும் நாணயமாகவும் போஷித்துப் படிக்கவைப்பதில் எத்தனை கஷ்டங்கள் இருக்கின்றன, எத்தகைய இடையூறுகள் இருக்கின்றன என்பதை நாளுக்கு நாள் உணரலானேன். உபாத்தியாயர் என்ற முறையிலும் போஷிப்பவன் என்ற முறையிலும் நான் அவர்களுடைய உள்ளத்தில் பிரவேசிக்க வேண்டியிருந்தது. அவர்களுடைய இன்ப துன்பங்களில் பங்கு கொள்ளவேண்டியிருந்தது. அவர்களுடைய வாழ்க்கைச் சிக்கல்களை விடுவிக்கவேண்டியிருந்தது. அவர்களுடைய பொங்கும் இளமை அலைகளை நேரான பாதையில் கொண்டுபோக வேண்டியிருந்தது.

கைதிகளில் பலரும் விடுதலையான பின்பு டால்ஸ்டாய் ஆசிரமத்தில் கொஞ்சம் பேர்களே இருந்தார்கள். அவர்கள் முக்கியமாகப் போனிக்ஸ்வாசிகள். ஆகவே நான் ஆசிரமத்தைப் போனிக்ஸுக்கு மாற்றினேன். போனிக்ஸில் எனக்குக் கடுமையான சோதனை நேர்ந்தது. மிகுந்திருந்த இந்த ஆசிரமவாசிகளை டால்ஸ்டாய் ஆசிரமத்திலிருந்து போனிக்ஸில் கொண்டு சேர்த்து விட்டு நான் ஜோஹான்ஸ்பர்க்குக்குப் போனேன். நான் போய்க் கொஞ்ச நாட்களே ஆகியிருக்கும்; அதற்குள் இரண்டுபேர் பயங்கரமாக வீழ்ச்சியடைந்த செய்தி எனக்குக் கிடைத்தது. சத்தியாக்கிரகத்தைப் போன்ற மகத்தான போரில் எங்காவது வெற்றியின்மைபோல ஏதாவது தென்பட்டால் என் மனம் நோவ

துண்டு; ஆனால் இந்தச் சம்பவம் எனக்குப் பேரிடியாக இருந்தது! என் மனம் புண்பட்டது. அன்றே நான் போனிக்ஸுக்குப் புறப்பட்டேன். மிஸ்டர் கேலன்பேக்கும் என்னோடு வருவதற்குப் பிடிவாதம் பிடித்தார். இரக்கப்படத்தக்க என் நிலையை அவர் அறிந்துகொண்டார். ஆதலின் என்னைத் தனியாகப் போகவிட அடியோடு மறுத்துவிட்டார். இந்த வீழ்ச்சிச் செய்தி எனக்கு அவர் மூலமாகத்தான் கிடைத்தது. இந்த நிலையில் என் கடமை என்ன என்பதை வழியிலேயே நான் யோசித்துவைத்திருந்தேன்; தீர்மானமும் செய்துவிட்டேன் என்றே சொல்லலாம். நம்முடைய பாதுகாப்பில் இருப்பவர்களின் வீழ்ச்சிக்கு, ஏதாவது ஓர் அம்சத்தில், அவர்களுடைய போஷகர்களும் உபாத்தியாயர்களுமான நாம் நிச்சயமாகப் பொறுப்புள்ளவர்கள் என்று என் மனம் கூறியது. இந்தத் துர்ச்சம்பவத்தின் விஷயத்திலோ என் பொறுப்பு எனக்கு மிகவும் தெளிவாகத் தென்பட்டது. என் மனைவி ஏற்கனவே என்னை எச்சரித்திருந்தாள்; ஆனால் நான் சுபாவமாகவே நம்பிக்கையுள்ளவன். அதனால் அவளுடைய எச்சரிக்கையைக் கவனிக்கவில்லை. இந்த வீழ்ச்சிக்காக நான் ஏதாவது பிராயச்சித்தம் செய்தால்தான் என் மனத்தில் உள்ள வேதனையை இந்த வீழ்ச்சியடைந்தவர்கள் அறியக்கூடும்; இதன் மூலமாகத்தான் அவர்கள் தம் குற்றத்தை அறிந்து அந்தப் பிழையின் தீவிரத்தை ஒருவாறு உணரமுடியும் என்று எனக்குத் தோன்றியது. இந்தக் காரணத்தை முன்னிட்டு நான் 7-நாட்களுக்கு உபவாசமும், 4½-மாத காலம் ஒரு வேளைச் சாப்பாடும் கொள்ள முடிவு செய்தேன். மிஸ்டர் கேலன்பேக் என்னைத் தடுக்க எவ்வளவோ முயன்றும் அவரால் ஒன்றும் சாயவில்லை. கடைசியில் இந்தப் பிராயச்சித்தம் சரியானதே என்பதை அவர் ஒப்புக்கொண்டு தாமும் என்னோடு விரதம் இருக்கப் பிடிவாதம் பிடித்தார். அவருடைய அன்பை என்னால் தடுக்க முடியவில்லை. இந்த முடிவுக்கு வந்தவுடனே என் உள்ளம் லேசாகிவிட்டது. எனக்கு அமைதி கிடைத்தது. குற்றம் செய்தவர்கள்மீது எனக்கு உண்டான கோபம் விலகியது. அவர்கள்பால் எனக்கு இரக்கமே சுரந்தது.

இவ்வண்ணம் ரெயிலிலேயே என் மனத்தை லேசாக்கிக்கொண்டு போனிக்ஸ் போய்ச் சேர்ந்தேன். மேலும் அறியவேண்டியிருந்த விஷயங்களை விசாரித்துத் தெரிந்துகொண்டேன். என்னுடைய இந்த உபவாசத்தினால் எல்லோருக்கும் மிகுந்த துன்பம் உண்டாயிற்று; எனினும் அதனால் சூழ்நிலை தூயதாயிற்று.

இந்தப் பாவத்தின் பயங்கரத்தன்மையை யாவரும் உணர்ந்தனர். மாணவ மாணவிகளோடு என்னுடைய தொடர்பு பின்னும் உறுதியாகவும் சுலபமாகவும் ஆயிற்று.

இத்தகைய துர்ச்சம்பவத்தின் காரணமாகவே சிறிது காலத்துக்குப் பிறகு, நான் மறுபடி 14 உபவாசங்கள் இருக்கவேண்டி நேர்ந்தது. அதன் பலன் எதிர்பார்த்ததைவிட நன்ருக இருந்தது என்றே நான் நினைக்கிறேன். ஆனால் இந்த உதாரணங்களைக் கொண்டு சிஷ்யர்களின் ஒவ்வொரு குற்றத்துக்காகவும் உபாத்தியாயர்கள் எப்போதும் உபவாசம் முதலியவற்றை மேற்கொள்ளத்தான் வேண்டும் என்று நான் நிரூபிக்க விரும்பவில்லை. சந்தர்ப்பம் நேரும்போது பிராயச்சித்தமாக இவ்வித உபவாசங்கள் இருக்கத் தேவையான அவசியம் இருக்கிறது. ஆனால் அதற்கு ஏற்ற விவேகமும் உரிமையும் வேண்டும் என்று மட்டும் நிச்சயமாகக் கருதுகிறேன். உபாத்தியாயர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே தூய அன்புத் தளை இல்லாத இடத்தில், தம் மாணவர் செய்த குற்றங்களினால் உபாத்தியாயருக்கு உண்மையான மனப்புண் ஏற்படாத இடத்தில், உபாத்தியாயர்பால் மாணவன் மனத்தில் மதிப்பு இல்லாத இடத்தில், உபவாசம் பயனற்றது. ஒருவேளை அது ஆபத்தை விளைப்பதாகவும் இருக்கக்கூடும். ஆனால் இவ்வித உபவாசம் அல்லது ஒருவேளைச் சாப்பாட்டின் விஷயத்தில் என்ன சந்தேகம் இருந்தாலும் சரி; மாணவர்களின் குற்றங்களுக்காக உபாத்தியாயர் நிச்சயமாக ஓரளவு பொறுப்புள்ளவர் என்பதில் மட்டும் சந்தேகமே இல்லை.

# 39

## சகோதரிகளின் பங்கு - 1

**1912** - ஆம் வருஷம் குளிர்காலத்தில் கோகலே தென்னுப்பிரிக்காவுக்கு வந்தார். அவர் வந்ததன் நோக்கம், சர்க்காருக்கும் சத்தியாக்கிரகிகளுக்குமிடையே சமாதானம் செய்துவைப்பது. ஜெனரல் போத்தாவைச் சந்தித்த பின்பு, எல்லாம் சரியாகப் போகும் என்று அவர் எங்களுக்கு நம்பிக்கை யூட்டினார். "அடுத்த வருஷம் கறுப்புச் சட்டம் ரத்தாகிவிடும். 3-பவுன் வரியும் தள்ளுபடியாகிவிடும்" என்று அவர் சொன்னார்.

மறு வருஷம் வந்தது; ஆனால் எங்கள் நோக்கம் நிறைவேறவில்லை. 1913-இல் டால்ஸ்டாய் ஆசிரமவாசிகள் சத்தியாக்கிரகத்

துக்குத் தயாராக வேண்டியிருந்தது. 3-பவுன் வரியை நீக்கச் செய்வதுதான் அதன் உத்தேசம்.

பெண்மணிகள் தம் கணவர்களோடு சிறை செல்ல ஆவலாகவே இருந்துங்கூட, நாங்கள் இதுவரை அவர்களைச் சத்தியாக்கிரகத்தில் சிறை செல்வதிலிருந்து தடுத்து வைத்திருந்தோம். ஆனால் இப்போது நடந்த சம்பவத்தைப் பார்க்கும்போது இறைவன் கண்காணாத உருவத்தில் இந்தியர்களின் வெற்றிக்காக என்னவோ சில சாதனங்களைத் தயாரிப்பது போலவும், தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த வெள்ளையர்கள் இழைத்த அநீதிகளை மிகத் தெளிவாக அவர் விளக்க விரும்பியது போலவும் தோற்றியது. கோர்ட்டில் வந்த ஒரு வழக்கில் தென்னாப்பிரிக்கச் சட்டத்தில் கிறிஸ்தவ மதப்படி நடக்கும் மணச் சடங்குக்குத்தான் இடம் உண்டு; அதாவது மணப்பதிவு அதிகாரியின் ரிஜிஸ்டரில் பதிவு செய்த விவாகத்தைத் தவிர மற்ற எவ்வித விவாகத்திற்கும் அந்த நாட்டில் இடமில்லை என்று அந்த நியாயாதிபதி தீர்ப்புக் கூறினார். இந்தப் பயங்கரமான தீர்ப்பின்படி ஹிந்துக்கள், முஸ்லிம்கள், பார்ஸிகள் ஆகியவர்களின் விவாகங்களெல்லாம் தள்ளுபடியாகக் கருதப்பட்டன. அந்தத் தீர்ப்பின் அபிப்பிராயப்படி, தென்னாப்பிரிக்காவில் மணமான பல இந்தியப் பெண்கள் தர்மபத்தினி என்ற வகுப்பிலே இருப்பவர்களாக இல்லை. அவர்கள் நேரடியாக வைப்பாட்டிகள் என்றே கருதப்பட்டனர். பெண்களுக்கு இவ்வித அவமானம் நேர்ந்த பிறகு பொறுமையோடு எப்படி இருக்க முடியும்? எனவே பெண்மணிகள் சத்தியாக்கிரகத்தில் சேருவதை எங்களால் தடுக்க முடியவில்லை. சத்தியாக்கிரகப் போரில் கலந்துகொள்ள அவர்களுக்கு அழைப்பு அனுப்புவது என்று தீர்மானம் ஆயிற்று. முதல் முதலில் டால்ஸ்டாய் ஆசிரமத்தில் வாழ்ந்துவந்த சகோதரிகளுக்கே அழைப்பு அனுப்பினோம்.

அவர்கள் ஏற்கனவே சத்தியாக்கிரகத்தில் சேர்வதற்குத் துடித்துக்கொண்டிருந்தனர். போரில் எதிர்ப்படும் எல்லாக் கஷ்டங்களையும் ஆபத்துக்களையும் அவர்களுக்குப் படம்போல எடுத்துக் காட்டினேன். உணவு, உடை, தூக்கம் முதலிய எல்லாவற்றிலும் அவர்கள் பராதீனமாகவே இருக்கவேண்டியிருக்கும் என்பதைச் சொன்னேன். சிறையில் கடுமையாக உழைக்க வேண்டும், துணி துவைக்கவேண்டும், சிறையதிகாரிகள் அவமானப் படுத்துவார்கள் என்ற இவை முதலான விஷயங்களையும் எச்சரித்தேன். ஆனால் அந்தச் சகோதரிகள் எதற்கும் பயப்படவில்லை. அவர்கள் எல்லோருமே வீரப்பெண்கள். அவர்களில் ஒருத்தி

கர்ப்பவதியாக இருந்தாள். பச்சைக் குழந்தைக்காரிகள் பலர். அவர்களும்கூடப் போரில் சேரப் பிடிவாதம் பிடித்தனர். நேட்டாலிலிருந்து அநுமதிச் சீட்டு இல்லாமல் டிரான்ஸ்வாலுக்குப் போவது குற்றமாகக் கருதப்பட்டதுபோலவே, டிரான்ஸ்வாலிலிருந்து நேட்டாலுக்கு அவ்விதமே வருகிறவர்களும் குற்றவாளிகளாகக் கருதப்பட்டனர். இந்தப் பெண்மணிகளை எல்லையைத் தாண்டி அழைத்துப்போய் அநுமதிச்சீட்டு இல்லாமல் பிரவேசித்த குற்றத்திற்காகக் கைதுசெய்விப்பது என்றும், இதன் நடுவில் கைது செய்துவிடப்பட்ட சகோதரிகளை நேட்டாலுக்குத் திருப்பி அனுப்புவது என்றும் தீர்மானம் ஆயிற்று. திரும்பிவரும்போது அவர்கள் கைது ஆகிவிட்டால் ரொம்பவும் சரி. அப்படி இல்லையானால், அவர்கள் நேட்டாலில் உள்ள நிலக்கரிச் சுரங்கங்களுக்கு- அவற்றின் கேந்திர ஸ்தானமான நியூ காஸிலுக்குப் - போய் அங்குள்ள தொழிலாளர்களைச் சுரங்க வேலையை விட்டு வரச் சொல்ல வேண்டும். இந்தத் தொழிலாளிகள் பெரும்பாலும் சென்னை மாகாணத்தைச் சார்ந்த தமிழர்களும் தெலுங்கர்களுமே.

இதன்பிறகு நான் போனிக்ஸுக்குப் போனேன். அங்கே எல்லோருடனும் உட்கார்ந்து பேசினேன். போனிக்ஸில் வசிக்கும் சகோதரிகளோடு இதைப்பற்றி முன்னால் பேசிக்கொள்வது அவசியமாயிருந்தது. சகோதரிகளைச் சிறைக்கு அனுப்புவது பயங்கரமான விஷயம் என்பதை நான் அறிந்திருந்தேன். போனிக்ஸில் வாழும் சகோதரிகளில் பெரும்பாலோர் குஜராத்திகள். ஆகலால் டிரான்ஸ்வால் சகோதரிகளைப்போல அவர்கள் துணிவும் அநுபவமும் உள்ளவர்கள் என்று சொல்ல முடியாது. மேலும் அவர்களில் பலர் என் உறவினர்கள்; என் தாக்ஷிண்யத்திற்காகச் சிறைசெல்ல ஒப்புக்கொண்டு, குறித்த நேரத்தில் பயந்து போனதாலோ அல்லது சிறை சென்றபின்பு அங்குள்ள கஷ்டங்களைத் தாங்காமலோ அவர்கள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டால் எனக்கு எவ்வளவு வருத்தமாக இருக்கும்? போரும் ஒரேயடியாகத் தளர்ந்து போகும். இவற்றையெல்லாம் யோசித்துக்கொள்வது அவசியமாக இருந்தது. என் மனைவியை மட்டும் நான் எப்போதுமே தூண்டக்கூடாது என்று தீர்மானித்திருந்தேன். நான் தூண்டினால் அவள் 'மாட்டேன்' என்று சொல்லமாட்டாள். 'சரி' என்று அவள் ஒப்புக்கொண்டாலும், அந்தச் 'சரி'க்கு எவ்வளவு மதிப்புக் கொடுக்கலாம் என்பதும் நிச்சயமில்லை. இத்தகைய அபாயகரமான வேளையில் அவரவர்கள் தாமாகவே செய்யும் வேலையை ஏற்றுக்கொள்வதுதான் நன்மையாக இருந்தது.

அதனால்தான் நான் மற்றச் சகோதரிகளோடு இதைப் பற்றிப் பேசினேன்.

டிரான்ஸ்வால் சகோதரிகளைப்போலவே அவர்களும் உடனே கங்கணம் கட்டிக்கொண்டு சிறை செல்ல ஆயத்தமாயினர். எவ்விதமான துன்பத்தையும் பொறுத்துக்கொண்டு சிறை யாத்திரையை முடிப்பதாக அவர்கள் எனக்கு நம்பிக்கை உண்டாக்கினார்கள். இந்த விஷயங்களின் சாராம்சத்தை அறிந்துகொண்ட என் மனைவியும் என்னிடம் வந்து, "நீங்கள் இதைப்பற்றி என்னிடம் பேசாமலிருப்பது எனக்கு வருத்தமாக இருக்கிறது. சிறை செல்ல முடியாதபடி என்னிடம் என்ன குறை இருக்கிறது? இந்தச் சகோதரிகளுக்கு எந்த வழியில் போக நீங்கள் ஆலோசனை சொல்கிறீர்களோ அதே வழியில் நானும் போக விரும்புகிறேன்" என்றாள்.

"உன் மனதை நான் எப்படித் துன்புறுத்துவது? இதில் அவநம்பிக்கை என்ற பேச்சே இல்லை. உன்னுடைய இந்தப் பதிலைக் கேட்டே எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது. ஆனால் நான் சொல்லி நீ சிறைக்குப் போனாய் என்ற விஷயத்தை நினைத்துப் பார்ப்பதுகூட எனக்குப் பிடிக்கவில்லை. இம்மாதிரியான வேலையை அவரவர்கள் தத்தம் தைரியத்தைக்கொண்டே செய்யவேண்டும். நான் உன்னிடம் சொல்லி அதைக் கேட்பதற்காக நீ இயல்பாகவே சிறைக்குச் சென்றாலும், கோர்ட்டில் நிற்கும்போது உன் கைகால்கள் நடுக்கமெடுத்தாலோ, நீ தைரியமிழந்துவிட்டாலோ, சிறைக் கஷ்டங்களை உன்னால் தாங்க முடியாவிட்டாலோ என் நிலைமை என்ன ஆகும்? உலகத்தில் நாம் தலைநிமிர்ந்து எப்படி நிற்க முடியும்?" என்றேன்.

"தைரியத்தை இழந்து நான் விடுபட்டு வந்தால் நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ள வேண்டாம். நீங்களும் நம் குழந்தைகளும் அந்தக் கஷ்டங்களைப் பொறுத்துக்கொள்ள முடியும்; நான் ஒருத்திதான் அவற்றைப் பொறுத்துக்கொள்ள முடியாது என்று நீங்கள் எந்தக் காரணத்தினால் மனசிலாவது நினைக்கலாம்? என்னை நீங்கள் இந்தப் போரில் சேர்த்துக்கொள்ளத்தான் வேண்டும்."

"அப்படியானால் நான் உன்னைச் சேர்த்துக் கொள்ளத்தான் வேண்டும். என்னுடைய நிபந்தனைகள் உனக்குத் தெரியுமே. என் சுபாவமும் தெரியும். இப்பொழுதே தேவையான யோசனைகளைச் செய்துகொள். முழு யோசனையும் செய்த பின்பு, சேர வேண்டாம் என்று உனக்குத் தோன்றினால் நீ விடுபடலாம்,

முன்னால் கால் வைக்கு முன்னமே உன் தீர்மானத்தை மாற்றிக் கொள்வதில் எதற்கும் வெட்கப்பட வேண்டியதில்லை.

அவள், "நான் ஒன்றும் யோசிக்க வேண்டியதில்லை. என் தீர்மானம் உறுதியானது" என்றாள்.

போனிக்ஸில் மற்றும் பலர் குடியிருந்தனர். அவர்களையும் நான் இந்தப் பிரச்னையைப்பற்றித் தாமாக யோசித்துக் கொள்ளச் சொன்னேன். போர் விரைவாக முடிந்தாலும் சரி, நாள் கழித்து முடிந்தாலும் சரி; போனிக்ஸ் இருந்தாலும் சரி, அது தரைமட்டமாயினும் சரி; சிறை செல்பவர்கள் உடல் நலத்துடன் இருந்தாலும் சரி, நோயாளிகளாயினும் சரி; யாரும் பின்வாங்கக் கூடாது என்பது போன்ற நிபந்தனைகளை நான் எல்லோருக்கும் அடிக்கடி உறுத்தி உறுத்திச் சொன்னேன். எல்லோரும் தயாராயினர். போனிக்ஸ் ஸ்தாபனத்துக்கு வெளியில் இருந்தவர்களில் பார்ஸி ருஸ்தம்ஜீ ஒருவரே இதில் கலந்துகொண்டார். அவரை எல்லோரும் அன்பினால் 'காகாஜீ' (சிற்றப்பா) என்று அழைத்தனர். அவரிடமிருந்து நான் இதையெல்லாம் ஒளித்து வைக்க முடியாது. அவரும் பின்வாங்குகிறவரல்ல. முன்னாலும் அவர் சத்தியாக்கிரகத்தில் சிறை சென்றிருந்தார். இப்பொழுது இரண்டாவது தடவையும் தயாரானார்.

நாங்கள் நினைத்தபடியே எல்லாம் நடந்தது. டிரான்ஸ்வாலில் கைது ஆகாத சகோதரிகள் ஏமாற்றமடைந்து நேட்டாலுக்குத் திரும்பினர். இங்கேயும் போலீஸார் அவர்களைக் கைது செய்யவில்லை. எனவே அவர்கள் நியூகாஸிலுக்குச் சென்று அங்கே தம் வேலையைத் தொடங்கினர். மின்னல் வீச்சைப்போல அதனால் பளிச்சென்று மாறுதல் ஏற்பட்டது. 3-பவுன் வரியைப் பற்றிய விஷயம் தொழிலாளிகளின் மனத்தை மாற்றியது. அவ்வளவு தான்; அவர்கள் தம் வேலையை விட்டு வெளிவந்தனர்.

இதற்குமேல் அந்த வீரச் சகோதரிகளைச் சர்க்கார் சும்மா விட்டு வைக்குமா? அவர்களுக்குத் தலா 3-மாதத் தண்டனை கிடைத்தது.

# 40

## சகோதரிகளின் பங்கு - 2

அந்தப் பெண்மணிகளின் வீரத்தை வர்ணிப்பது எளிதல்ல. அவர்கள் யாவரும் நேட்டாலின் ராஜதானியான மேரிட்ஸ்பர்க்கில் உள்ள சிறையில் வைக்கப்பட்டனர். அங்கே அவர்களுக்குக் கஷ்டங்களையும் நிரம்பக் கொடுத்தார்கள். அவர்களுடைய உணவைப்பற்றியோ சிறிதும் கவலை எடுத்துக்கொள்ளவில்லை.

அவர்களுக்குத் துணி வெளுக்கும் வேலையைக் கொடுத்தார்கள். வெளியிலிருந்து சாப்பாடு வரவழைக்கக் கூடாது என்று கடுமையாகத் தடுத்திருந்தனர். அந்தத் தடையுத்தரவு கடைசி வரையில் நிலைத்திருந்தது. ஒரு தனி விதமான உணவையே அருந்துவது என்று கஸ்தூரிபாய் (என் மனைவி) விரதம் கொண்டிருந்தாள். மிகவும் சிரமப்பட்டு அவளுக்கு அந்த உணவைக் கொடுக்க அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர். ஆனால் கிடைத்த பண்டங்களோ சாப்பிடக்கூடியனவாக இல்லை. ஆலிவ் எண்ணெய் அவளுக்கு முக்கியமாக வேண்டும். முதலில் அதைக் கொடுக்கவே இல்லை; அப்புறம் கொடுத்தபோது அது பழையதாகவும் கெட்டுப்போனதாகவும் இருந்தது. நாங்கள் எங்கள் செலவில் சாப்பாடு வரவழைத்துக்கொள்ள அநுமதி கோரியபோது, "இது ஹோட்டல் அல்ல. கிடைப்பதைத்தான் சாப்பிட வேண்டும்" என்று பதில் கிடைத்தது. அவள் சிறையிலிருந்து விடுபட்டபோது உடம்பில் எலும்புகளே மிஞ்சியிருந்தன. மிகவும் சிரமப்பட்டு அவள் பிழைத்தாள்.

மற்றொரு சகோதரி கடுமையான ஜுரத்தோடு வெளியே வந்தாள். வெளியே வந்த சில நாட்களுக்குள்ளேயே அது அவளை இறைவன் வீட்டுக்கு அழைத்துப்போயிற்று. அதை நான் எப்படி மறக்க முடியும்? வள்ளியம்மா, ஆர். முனுசாமி முதலியாரின் பெண், பதினாறு வயசுச் சிறுமி. நான் அவளைப் பார்க்கச் சென்றபோது படுக்கையை விட்டு எழுந்திருக்கக்கூட அவளால் முடியவில்லை. நல்ல உயரமாதலால் விறகுபோன்ற அவள் உடல் மிகவும் பயங்கரமாகத் தென்பட்டது. "வள்ளியம்மா, சிறை சென்றதில் உனக்கு வருத்தம் இல்லையே?" என்று கேட்டேன்.

"வருத்தம் ஏன்? என்னை மறுபடி கைது செய்தால் இந்த க்ஷணத்திலே சிறை செல்லத் தயாராக இருக்கிறேன்."

"அப்படிச் செய்யும்பொழுது சாவு வந்துவிட்டால்?"

"பேஷாக வரட்டுமே! தாய் நாட்டுக்காகச் சாவது யாருக்குத்தான் பிடிக்காது?"

இந்தச் சம்பாஷணை நடந்த சிறிது நாட்களுக்கெல்லாம் வள்ளியம்மா இவ்வுலகை விட்டு நீங்கினாள். அவள் உடல் மறைந்தது; ஆனால் அவள் தன் பெயரை அழிவற்றதாக்கிச் சென்றாள். இந்தச் சகோதரிகளின் பலி முற்றும் தூயதாக இருந்தது. அவர்கள் சிறைக்குச் சென்றது அவர்களுடைய உள்ளத்தின் கூக்குரலாக இருந்தது; தூய வேள்வியாக இருந்தது. இத்தகைய தூய உள்ளத்தின் பிரார்த்தனையைத்தான் இறைவன் கேட்பான். வேள்வியின் தூய்மையிலேதான் அதன் வெற்றி இருக்கிறது. கடவுள் பக்திப் பசியுள்ளவர். பக்தியோடு அதாவது தன்னலமற்ற தன்மையோடு அர்ப்பணம் செய்த இலையாயினும் பூவாயினும் நீராயினும் அது அவருக்குப் பிரியமாகிறது. அதை அவர் அன்போடு ஏற்றுக்கொண்டு கோடி கோடி மடங்கு பலனைக் கொடுக்கிறார். குசேலனின் ஒரு பிடி அவலுக்குப் பிரதியாக அவனுடைய வருஷக்கணக்கான பசி ஓடிப் போயிற்று. பலபேர் சிறைக்குச் சென்றதால் எந்தப் பயனும் கிடைக்காமலே இருந்தாலுங்கூட, ஒரு தூய ஆத்மாவின் பக்தி நிரம்பிய சமர்ப்பணம் ஒருபோதும் பயனற்றதாக இருக்கமுடியாது. தென்னாப்பிரிக்காவில் யார் யாருடைய வேள்வி பயனடைந்ததோ யார் சொல்ல முடியும்? ஆனால் வள்ளியம்மாவின் வேள்வி நிச்சயமாகப் பயன் பெற்றது என்பதை மட்டும் நாம் தீர்மானமாக அறிவோம்.

தாய் நாட்டின் வேள்வியில், உலக வேள்வியில், எண்ணிறந்த ஆத்மாக்கள் பலி கொடுக்கப்பட்டிருக்கின்றன, கொடுக்கப்படுகின்றன, கொடுக்கப்படும். இதுதான் சரியானதுங்கூட. ஏனெனில் முற்றும் தூய்மையான பொருள் எது என்பது யாருக்கும் தெரியாது. ஆனால், தமக்குள்ளே ஒருவனாவது தூயவனாக இருப்பானாயின் அவனுடைய வேள்வி, பயனை விளைப்பதற்குப் போதுமானது என்பதுமட்டும் சத்தியாக்கிரகிகளுக்கு நிச்சயமாகத் தெரியும். பூமி ஸத்தியத்தின் பலத்தினால் நிலைத்திருக்கிறது; 'அஸத்'-'அஸத்தியம்' என்றால் 'இல்லை' என்று பொருள்; 'ஸத்'-'ஸத்தியம்' என்றால் 'உண்டு'. அஸத், அதாவது உள்ளதே இல்லாத இடத்தில் அதன் வெற்றி எங்கிருந்து வரும்? இனி, ஸத் அதாவது இருக்கிற ஒரு பொருளை யார் அழிக்க முடியும்? இதில்தான் சத்தியாக்கிரகத்தின் கொள்கை அடங்கியிருக்கிறது.

# 41

## தொழிலாளிகளுங்கூட

சகோதரிகள் இவ்வாறு கைது ஆனதைக் கண்டு தொழிலாளர்கள் ஆச்சரியகரமாக மாறினார்கள். நியூகாஸிலுக்கு அக்கம்பக்கத்திலுள்ள சுரங்கங்களில் வேலை செய்யும் தொழிலாளிகள் தம்முடைய ஆயுதங்களை வீசி எறிந்தனர். கூட்டம் கூட்டமாக அவர்கள் நகரத்துக்குள் வரலாயினர். இந்தச் செய்தி கிடைத்ததுமே நான் போனிக்ஸை விட்டு நியூகாஸில் போய்ச் சேர்ந்தேன்.

இந்தத் தொழிலாளிகளுக்கு வீடு வாசல்கள் இருப்பதில்லை. எஜமானர்கள்தாம் இவர்களுக்கு வீடு கட்டி, சாலைகளிலே விளக்குப் போட்டு, தண்ணீர் வரக் குழாய்கள் வைப்பது வழக்கம். அதாவது தொழிலாளி எவ்விதத்திலும் பராதீனமாக வாழ்பவன்.

வேலை நிறுத்தம் செய்த இந்தத் தொழிலாளிகள் என்னிடம் பல முறையீடுகளோடு வந்தார்கள். சுரங்க முதலாளிகள் சாலை விளக்குகளை அப்புறப்படுத்திவிட்டதாக ஒருவன் சொன்னான். அவர்கள் தண்ணீரை நிறுத்திவிட்டதாக மற்றொருவன் சொன்னான். வேலைநிறுத்தம் செய்த தொழிலாளிகளின் சாமான்களை அறைகளிலிருந்து முதலாளிகள் வெளியே வீசி எறிவதாகப் பலர் சொன்னார்கள். ஒரு பட்டாணியச் சகோதரனை சையத் இப்ராஹீம் என்பவன் எனக்குத் தன் முதுகைக் காட்டி, "இதோ என்னை எப்படி அடித்திருக்கிறார்கள், பாருங்கள்! உங்களுக்காகத்தான் நான் அந்தப் போக்கிரியை விட்டுவிட்டேன். ஏனென்றால், அதுதானே உங்கள் உத்தரவு? இல்லாவிட்டால் நான் பட்டாணியன்! பட்டாணியன் எப்போதும் அடிபடுவதில்லை; அவன் அடிப்பதில்தான் பேர் வாங்கியவன்" என்றான்.

"தம்பீ, நீ செய்தது ரொம்பவும் சரி. இதைத்தான் நான் உண்மையான வீரம் என்று சொல்கிறேன். உன்னைப்போன்றவர்களின் பலத்தைக் கொண்டுதான் நாம் ஜயிப்போம்" என்று நான் பதில் சொன்னேன்.

தொழிலாளிகள் ஐந்துபேர் பத்துப் பேர் அல்ல, நூற்றுக் கணக்கானவர்கள். நூற்றுக் கணக்கானவர்கள் ஆயிரக் கணக்கானவர்கள் ஆவதற்கும் நேரம் பி . . பதாக இல்லை. அதுதான் ஆயிற்று. அவர்களுக்கு நான் எங்கிருந்து வீடு கொண்டு வருவது? சாப்பாட்டுக்கும் தண்ணீருக்கும் என்ன ஏற்பாடு செய்

வது? கணந்தோறும் வளர்ந்துகொண்டிருக்கும் இத்தனை பெரிய ஜன சமூகத்தை ஒரே இடத்தில் எந்தத் தொழிலும் இல்லாமல் விட்டுவைப்பது பயங்கரமான ஒரு செயல் என்பது நிச்சயம்.

எனக்கு இதற்கேற்ற உபாயம் ஒன்று தோன்றியது. போனிக்ஸ் வாசிகளைப்போல இவர்களையும் டிரான்ஸ்வாலுக்கு அழைத்துக்கொண்டு போய்ச் சிறைக்குள் ஏன் உட்கார வைக்கக் கூடாது? சுமார் ஐயாயிரம் பேர் கூடியிருந்தார்கள். அவர்கள் எல்லோரையும் நான் ரெயிலில் அழைத்துக் கொண்டு போக முடியாது. அவ்வளவு பணம் நான் எங்கிருந்து கொண்டுவருவது? மேலும் அப்படிச் செய்வதனால் ஜனங்களைச் சோதிக்கும் வேலையும் நடைபெறாது. நியூகாஸிலிலிருந்து டிரான்ஸ்வாலின் எல்லை 36-கல். நேட்டாலின் எல்லைப்புறத்துக் கிராமம் சார்ல்ஸ் டவுன்; டிரான்ஸ்வாலின் எல்லைப்புறத்துக் கிராமம் வோக்ஸரஸ்ட். முடிவில், நடந்தே யாத்திரை செய்ய நிச்சயித்தோம். தொழிலாளர்களோடும் கலந்து யோசித்தேன். அவர்கள் நடுவில் பெண்களும் குழந்தைகளுங்கூட இருந்தார்கள். பலர் நடப்பதற்குச் சாக்குப் போக்குகள் சொன்னார்கள். உள்ளத்தை உறுதியாக்கிக் கொள்வதைத் தவிர என்னிடம் வேறு எவ்வித உபாயமும் இல்லை. சுரங்கங்களுக்குத் திரும்பிப் போக விரும்புகிறவர்கள் போகலாம் என்று அவர்களிடம் சொன்னேன். ஆனால் எவனும் திரும்பிப் போகத் தயாராக இல்லை. முடமாக இருந்தவர்களை ரெயிலில் அனுப்புவதாகத் தீர்மானம் ஆயிற்று. மீதிப் பேர் யாவரும் சார்ல்ஸ் டவுன் வரையில் நடக்கத் தயாராயினர். இரண்டு நாட்களில் இந்த வழியைக் கடக்க வேண்டியிருந்தது. இதனால் கடைசியில் எல்லோரும் மகிழ்ச்சியடைந்தனர். நியூகாஸிலில் இருந்த வெள்ளைக்காரர்களுக்குக் காலரா பயம்; ஆகவே அவர்கள் செய்ய எண்ணியிருந்த ஏற்பாட்டையும் கைவிட்டனர். நாங்களும் அவர்களுடைய அந்த ஏற்பாட்டுச் சங்கடங்களிலிருந்து விடுபட்டோம்.

யாத்திரைக்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்த பொழுது சுரங்க முதலாளிகளிடமிருந்து அழைப்பு வந்தது. நான் டர்பன் போனேன். 3-பவுன் வரிக்கும் சுரங்கங்களுக்கும் எவ்விதத்திலாவது சம்பந்தம் உண்டு என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. இந்த வரியை நீக்குவதற்காக அவர்கள் சர்க்காருக்கு விண்ணப்பம் செய்யவேண்டும் என்ற விஷயத்தில் நான் அவர்களை என் வழிக்குக் கொண்டுவர முடியவில்லை. அந்த நிலையில் நான் நியூகாஸிலுக்குத் திரும்பினேன். தொழிலாளிகள் நாலு புறத்தி

விருந்தும் வெள்ளம்போலக் குழுமி வந்தனர். நான் அவர்களுக்கு எல்லா விஷயங்களையும் விவரமாகச் சொன்னேன். "நீங்கள் திரும்பிப்போக விரும்பினால் போகலாம்" என்றும் கூறினேன். முதலாளிகளின் மிரட்டல் பேச்சையும் சொன்னேன். எதிர்காலத்தில் நேர இருக்கும் ஆபத்துக்களைப் படம் பிடித்துக் காட்டியதோடு, "இந்தப் போர் எப்போது முடியும் என்பது நிச்சயமில்லை" என்றும் எச்சரித்தேன். சிறைக் கஷ்டங்களையும் எடுத்துக் கூறினேன். எவ்வளவோ சொல்லியும் அவர்கள் தங்கள் தீர்மானத்திலிருந்து அசையவில்லை.

"நீங்கள் போரிடத் தயாராக இருக்கும் வரையில் நாங்களும் பின்னால் காலடி எடுத்து வைக்கமாட்டோம். துன்பங்களைப் பற்றி எங்களுக்கு முழுவதும் தெரியும். எங்களைப் பற்றிக் கவலை வேண்டாம்" என்ற அச்சமற்ற பதில் எனக்குக் கிடைத்தது.

இனி யாத்திரை ஆரம்பிக்க வேண்டியதுதான். மறுநாள் (அதாவது: 28, அக்டோபர் 1913) விடிகாலையில் புறப்பட வேண்டும் என்ற செய்தியை ஒரு நாள் மாலையில் நான் தொழிலாளிகளுக்கு அறிவித்தேன். வழியில் போகும்போது அவர்கள் அநுசரிக்க வேண்டிய விதிகளையும் சொன்னேன். 5000, 6000 பேர் கொண்ட ஒரு கும்பலைச் சமாதானப்படுத்தி வைத்துக்கொள்வது வேடிக்கை அல்ல. வழியில் அவர்களுக்கு $2\frac{1}{2}$ பவுண்டு எடையுள்ள ரொட்டியும் கொஞ்சம் சர்க்கரையும் தவிர வேறு உணவு கிடைப்பது சாத்தியமில்லை என்றும், வழியில் இந்திய வியாபாரிகள் ஏதாவது கொடுத்தால் வாங்கிக் கொள்வோம், அப்படி இல்லாவிட்டால் அந்த ரொட்டியையும் சர்க்கரையையும் கொண்டே திருப்தியடைய வேண்டும் என்றும் அவர்களிடம் சொல்லிவிட்டேன். போயர் யுத்தத்திலும் ஜுலூ கலகத்திலும் எனக்கு உண்டான அநுபவங்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் பெரிதும் பயன்பட்டன. தேவைக்கு அதிகமாக யாரும் துணிகள் எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதும் நிபந்தனை. வழியில் யாருடைய பொருளையும் தொடக்கூடாது. அதிகாரிகளோ அல்லது வேறு ஆங்கிலேயர்களோ வழியில் சந்தித்தாலும், வைதாலும், அடித்தாலும் எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ள வேண்டும். போலீஸார் கைது செய்ய விரும்பினால் பேசாமல் பணிந்து விட வேண்டும். நான் கைது ஆகிவிட்டாலும் ஜனங்கள் இவ்வண்ணமே யாத்திரை செய்துகொண்டு போக வேண்டும். இவற்றை எல்லாம் அவர்களுக்குப் புரியும்படி சொன்னதோடு, எனக்குப் பின்னால் வரிசையாக யார் யார் என் ஸ்தானத்தை

எடுத்துக்கொண்டு வேலையை நடத்தவேண்டும் என்பதையும் அறிவித்தேன்.

ஜனங்கள் யாவற்றையும் அறிந்துகொண்டார்கள். எங்கள் கூட்டம் சௌக்கியமாகச் சார்ல்ஸ் டவுன் போய்ச் சேர்ந்தது. அங்கே வியாபாரிகள் பெருத்த உதவி செய்தார்கள். தங்கள் வீடுகளைத் திறந்துவிட்டார்கள். மசூதிக் கட்டிடத்துக்குள் சமையலுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். நாங்கள் யாத்திரை புறப்பட்ட போது அந்த ஊர் வரும் வரைக்குந்தான் உணவு கொடுத்திருந்தோம். சார்ல்ஸ் டவுனில் நாங்கள் சில நாள் தங்க வேண்டியிருந்ததால் சமையலுக்கு ஏனங்கள் வேண்டியிருந்தன. வியாபாரிகள் சந்தோஷமாக அவற்றையும் கொடுத்தார்கள். அரிசி முதலானவை எங்களிடம் ஏற்கனவே போதுமான அளவு இருந்தன; இருந்தும் வியாபாரிகள் மேலும் கொடுத்தார்கள்.

சார்ல்ஸ் டவுன் ஒரு சின்னஞ் சிறிய கிராமம். அப்போது அதன் ஜனத்தொகை மிஞ்சிப் போனால் 1000 இருக்கும். அந்த ஊரில் இப்படி ஆயிரக்கணக்கான மனிதர்களை அடைப்பது கஷ்டமாக இருந்தது. ஆகவே குழந்தைகளையும் பெண்மணிகளையும் மட்டும் வீட்டுக்குள்ளே விட்டுவைத்து, மீதிப் பேர் திறந்த மைதானத்தில் தங்கினார்கள்.

எங்கள் மனிதர்களைத் துப்புரவாக இருக்கப் பழக்குவது மிகவும் சிரமமாக இருந்தது. ஆனால் என் தோழர்கள் என்னுடைய இந்த வேலையைச் சுலபமாக்கிவிட்டனர். தலைவன் முக்கிய வேலைக்காரனாகி, பிறருக்கு உத்தரவு போடுவதற்கு முன்னால், அவன் தானே வேலை செய்ய ஆரம்பித்துவிட்டால் எவ்வளவோ வேலை நடந்துவிடும் என்பது எப்போதும் என் அநுபவம். தலைவன் தன் உடலைச் சிறிதாவது உழைத்தால் மற்றவர்களும் அவ்வாறே செய்ய ஆரம்பிப்பார்கள். முக்கியமாக இந்தச் சந்தர்ப்பத்தில் நான் அதை உணர்ந்தேன். நானும் என் தோழர்களும் பெருக்குதல், குப்பைகூளங்களை எடுத்து எறிவது முதலிய வேலைகளைச் செய்ய எப்போதும் சிறிதும் பின்வாங்கியதில்லை. அதனால் மற்றவர்கள் அதே வேலைகளை உற்சாகமாகச் செய்யலானார்கள். நம்முடைய கையை நாம் அசைக்க முடியாவிட்டால் பிறருக்கு உத்தரவே போட்டுக்கொண்டிருப்பதனால் என்ன லாபம்? எல்லோருமே ஸர்தார்களாகிப் பிறர்மீது ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தால் ஒரு வேலையும் நடக்காது. ஆனால் ஸர்தாரே சேவகனாக இருக்குமிடத்தில் பிறர் ஸர்தாராவதற்கு உரிமை கொண்டாட முடியாது.

பருப்பும் சாதமும் உணவாகக் கொடுக்கப்பட்டன. கறிகாய் களும் நிரம்பக் கிடைத்தன. ஆனால் அவற்றைத் தனியே சமைப் பதற்கு ஏனம் இல்லை என்பது ஒன்று; அவ்வளவு பொழுது வேண்டும் என்பது மற்றொன்று. எனவே கறிகாய்களைப் பருப்போடு கலந்துவிட்டோம். 24 மணி நேரமும் சமையல்; பசி உள்ளவர்கள் இரவும் பகலும் வந்த வண்ணமாகவே இருந்தனர். நியூகாஸிலில் எந்தத் தொழிலாளியும் இனி வசிக்க வேண்டிய தேவை இருக்க வில்லை. வழி எல்லோருக்கும் தெரிந்திருந்ததால் சுரங்கத்தி லிருந்து புறப்பட்டவுடனே ஒவ்வொருவனும் நேராகச் சார்ல்ஸ் டவுன் வந்துசேருவான்.

மனிதனுடைய தைரியத்தையும் பொறுமையையும்பற்றி நான் சிந்திக்கும்போது இறைவனின் பெருமை என்முன்னால் நிற்கிறது. சமையல் செய்பவர்களின் தலைவன் நான்தான். ஒரு நாளைக்குப் பருப்பிலே தண்ணீர் அதிகமாகப் போகும். சில சமயம் அது வேகவே வேகாது. சில சமயம் கறிகாய் பச்சையாக இருக்கும். மற்றொரு சமயம் சோறு அளிந்து போய்விடும். இத்தகைய உணவை விரும்புகிறவர்களை நான் உலகில் குறைவாகவே பார்த் திருக்கிறேன். தென்னாப்பிரிக்காவில் உள்ள சிறையில், குறிப்பிட்ட நேரத்திற்குக் கொஞ்சம் முன்பின்னாக உணவு கிடைத்தாலும் அல்லது வேகாத உணவு கிடைத்தாலும் கற்றுணர்ந்தவர்கள் என்று கருதப்படும் நல்ல மனிதர்களெல்லாம் கோபித்துக்கொள் வதை நான் பார்த்திருக்கிறேன்.

சமையல் செய்வதைவிடப் பரிமாறும் வேலை பின்னும் கஷ்ட மாக இருந்தது. அது என் ஒருவனுடைய பொறுப்பில்தான் இருந்தது. வெந்ததும் வேகாததுமான சோற்றுக்கு உத்தரவாதி யும் நான்தான். சில சமயம் சாப்பிடுபவர்கள் அதிகமாகவும் உணவு குறைவாகவும் இருக்கும்போது உணவைக் குறைவாகப் பங்கிட்டு நான் ஜனங்களைச் சமாதானப்படுத்த வேண்டியிருந்தது. உணவு குறைவாகக் கிடைக்கும்போது சகோதரிகள் என்னைத் தீவிரமாகப் பார்ப்பார்கள். என் நோக்கத்தை அறிந்ததுமே அவர்கள் சிரித்துக்கொண்டே போய்விடுவார்கள். இந்தக் காட்சியை நான் எப்போதுமே மறக்க முடியாது. "எனக்கு வேறு வழி இல்லை. சமைத்த சோறு என்னிடம் கொஞ்சமாக இருக்கிறது. வாங்கிக்கொள்பவர்கள் அதிகமாகிவிட்டார்கள். ஆகையால் இப்போது எல்லோருக்கும் கொஞ்சம் கொஞ்சமாகக் கிடைக்கும்படி நான் கொடுக்கவேண்டும்" என்று சொல்வேன். இதைக் கேட்டதுமே சந்தோஷம் என்று சொல்லிவிட்டு அவர்கள் போய்விடுவார்கள்.

## 42

## எங்கள் யாத்திரை - 1

சார்ல்ஸ் டவுனை விட்டுப் புறப்படும் சமயம் வந்தது. "நாங்கள் டிரான்ஸ்வாலில் குடியேறுவதற்காக வரவில்லை. சர்க்கார் தங்கள் வாக்குறுதியை நிறைவேற்றுததற்குப் பதிலாக எங்களுடைய இந்தப் பிரவேசம் செயலோடு கூடிய முறையீடாகும். எங்களுடைய தற்பெருமைக்கு ஏற்பட்ட இழுக்கினால், எங்கள் உள்ளத்தில் உண்டாகும் துன்பத்தின் அடையாளம் இது. நீங்கள் இங்கேயே எங்களைச் சார்ல்ஸ் டவுனில் கைது செய்தால் நாங்கள் நிச்சிந்தையாக இருப்போம். நீங்கள் அப்படிச் செய்யாமல் இருந்து எங்களில் யாராவது பேசாமல் அமைதியாக டிரான்ஸ்வாலில் நுழைந்துவிட்டால் அதற்கு நாங்கள் ஜவாப்தாரியல்ல. எங்கள் போரில் மறைத்துவைக்கக்கூடிய பொருள் எதுவும் இல்லை. இதில் யாருடைய சொந்தச் சுயநலமும் இல்லை. எவனாவது ஒளிவு மறைவாகப் பிரவேசித்தால் அது எங்களுக்குப் பிரியமான செய்கையல்ல. ஆனால் ஆயிரக்கணக்கான பேரிடம் வேலை வாங்கும் இடத்தில், அன்பைத் தவிர வேறு எவ்விதப் பந்தனமும் இல்லாத இடத்தில், நாங்கள் யாருடைய செயலுக்கும் பொறுப்பாளியாக இருக்க முடியாது. இதனோடு, நீங்கள் 3 பவுன் வரியை நீக்கிவிட்டால் ஒப்பந்தத் தொழிலாளிகள் யாவரும் மறுபடி வேலைக்குத் திரும்பிப்போவதோடு வேலை நிறுத்தமும் முடிந்துபோகும் என்பதையும் நீங்கள் அறிந்துகொள்ளுங்கள். இந்தியர்களின் மற்றக் கஷ்டங்களை விலக்குவதற்கு நாங்கள் அவர்களை எங்கள் சத்தியாக்கிரகத்தில் சேர்த்துக்கொள்ள மாட்டோம்" என்று நான் சர்க்காருக்கு எழுதியிருந்தேன்.

இந்தக் கடிதத்தின் காரணமாகவும் நாங்கள் நிச்சயமற்ற நிலையிலே இருந்தோம். சர்க்கார் எங்களை எப்பொழுது கைது செய்யும் என்பது நிலை இல்லை. ஆனால் இதுபோன்ற நெருக்கடியான சந்தர்ப்பத்தில் சர்க்காரின் பதிலை நாட்கள் கணக்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்க முடியாது. ஆகவே, சர்க்கார் இங்கேயே எங்களைக் கைது செய்யாவிட்டால் உடனே டிரான்ஸ்வாலில் பிரவேசித்துவிடுவது என்று நாங்கள் நிச்சயித்தோம். வழியிலும் எங்களைப் பிடிக்காவிட்டால் ஒரு நாளைக்கு 20-இலிருந்து 24 கல் விழுக்காடு இந்தக் கூட்டம் 8 நாள் வரையில் யாத்திரை செய்ய

வேண்டியது. 8 நாட்களில் டால்ஸ்டாய் ஆசிரமம் போய்ச் சேரு வதாக ஏற்பாடு. பிறகு போர் முடியும் வரையில் எல்லோரும் அங்கேயே இருந்து வேலைசெய்து தத்தம் பிழைப்புக்கு வழி செய்துகொள்ள வேண்டியது என்றும் யோசித்திருந்தோம். மிஸ்டர் கேலன்பேக் எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத் திருந்தார். இந்த யாத்திரிகர்களின் உதவியைக் கொண்டே அங்கு மண்வீடுகள் கட்டத் தீர்மானித்திருந்தோம். அதுவரையில் சிறு கூடாரங்களை அமைத்துக் கிழவர்களையும் பலவீனர்களையும் அவற்றில் விட்டுவைப்பதாகத் திட்டம் போட்டிருந்தோம். கொழுக்கு மழுக்கான ஆண்பிள்ளைகள் யாவருமே வெளியில் படுத்துத் தூங்க முடியும். மழைக்காலம் ஆரம்பமாவதற்கு இருந் தது என்பதுதான் ஒரு கஷ்டம். ஆதலால் மழைக் காலத்துக்குள் எல்லோருக்கும் அவசியமாக இருப்பிடம் வேண்டியிருந்தது. ஆனால் அதற்குள்ளே இந்தச் சச்சரவு தீர்ந்து போகும் என்று மிஸ்டர் கேலன்பேக் நம்பியிருந்தார்.

ஜன சமூகத்தின் யாத்திரைக்கு வேறு ஆயத்தங்களும் செய் தோம். சார்லஸ் டவுனில் இருந்த டாக்டர் பிரிஸ்கோ மிகவும் நல்லவர். அவர் எங்களிடம் மிகுந்த அநுதாபம் கொண்டவர். வழியில் உபயோகப்படக்கூடிய மருந்துகள் அடங்கிய ஒரு சிறு பெட்டியை அவர் எனக்குக் கொடுத்தார். என்னைப் போன்ற வனும் உபயோகிக்கக்கூடிய சில கருவிகளையும் கொடுத்தார். இதை நாங்களே தூக்கிக்கொண்டு போனோம். எங்கள் படை யோடு வண்டி முதலியன இல்லை. ஒரே சமயத்தில் 100 பேருக்குப் பயன்படக்கூடிய மருந்துகள் மட்டுமே நாங்கள் வைத்துக்கொண் டோம். இதனால் எங்களுக்கு ஒன்றும் அசௌகரியம் ஏற்பட வில்லை. ஏனெனில் நாள்தோறும் சாயங்காலம் ஏதாவது ஒரு கிராமத்தின் அருகில் நாங்கள் தங்கவேண்டி யிருந்ததால், ஏதா வது ஒரு மருந்து காலியானதுமே உடனே அங்கிருந்து புதிதாக வாங்க முடிந்தது. இரண்டாவது, நாங்கள் எங்களோடு நோயாளியையோ முடமான ஆசாமியையோ வைத்துக்கொள்வ தில்லை. அவர்களை வழியிலேயே விட்டுச் செல்வது வழக்கம்.

சாப்பாட்டுக்குக் கடை ரொட்டியையும் சர்க்கரையையும் தவிர வேறு என்ன கிடைக்க முடியும்? ஆனால் அந்த ரொட்டியை யுங்கூட எட்டு நாளைக்கு நாங்கள் எப்படி வைத்துக்கொள்வது? நாள்தோறும் அதை ஜனங்களுக்குப் பங்கிடவேண்டும். நாங்கள் தங்குமிடம் ஒவ்வொன்றிலும் எங்களுக்கு யாராவது ரொட்டி அனுப்புவதுதான் இதற்கு ஏற்ற வழி. அதை யார் செய்வார்

கள்? இந்திய ரொட்டிக்காரர்கள் அங்கே இல்லை. மேலும் கிராமந்தோறும் இவ்வாறு கடை ரொட்டி செய்பவர்களும் இல்லை. கிராமங்களுக்கு நகரங்களிலிருந்துதான் ரொட்டிகள் போகும். ரொட்டிக்காரர்கள் ஒழுங்காக ரொட்டிகளைச் சமைத்து, ரெயில்காரர்கள் சரியான சமயத்தில் அதை எங்களிடம் கொண்டுசேர்த்தால் அது சௌகரியமாக இருக்கும்.

சார்ல்ஸ் டவுனைவிட வோக்ஸரஸ்ட் இரண்டு மடங்கு பெரியது. அங்கே ஒரு பெரிய ரொட்டிக் கடை இருந்தது. எங்களுக்கு ரொட்டிகள் கொண்டு சேர்ப்பிக்கும் பொறுப்பை அந்த ரொட்டிக்காரன் ஆனந்தமாக ஏற்றுக்கொண்டான். எங்கள் கஷ்டத்தைக் கண்டு, கடை விலைக்குமேல் அதிகப் பணம் வாங்கிக்கொள்ளவும் அவன் முயலவில்லை. ரொட்டிகளையும் நல்ல மாவில் சமைத்து அவற்றை ஒழுங்காக ரெயிலடிக்கு அனுப்புவான். ரெயில்காரர்களும் (அவர்கள் வெள்ளையர்கள்தாம்) நாணயமாக அவற்றை எங்களிடம் கொண்டு சேர்ப்பார்கள். இன்னும் கேட்டால் இதில் அவர்கள் விசேஷ ஜாக்கிரதையும் பந்தோபஸ்தும் எடுத்துக்கொண்டார்கள். அவர்கள் எங்களுக்காக எத்தனையோ சௌகரியங்களும் செய்தார்கள். எங்களுக்கு யாரோடும் பகை இல்லை என்பதையும் யாருக்கும் தீங்கு செய்வது எங்கள் நோக்கம் அல்ல என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். நாங்கள் கஷ்டங்களைப் பொறுத்துக்கொண்டு எங்களுக்கு ஏற்பட்ட அநீதியை முறையிடவேண்டி இந்த இயக்கத்தை ஆரம்பித்தோம். எனவே எங்கள் சுற்றுப்புறத்துச் சூழ்நிலையும் தூயதாயிற்று; ஆகிக்கொண்டிருந்தது. மனித வர்க்கத்தின் அன்பு வெளிப்பட்டது. கிறிஸ்தவர்கள், பார்ஸிகள், முகம்மதியர்கள், ஹிந்துக்கள், யூதர்கள் முதலிய நாம் யாவரும் சகோதரர்களே என்பதை எல்லோரும் உணர்ந்தார்கள்.

இவ்வாறு பிரயாணத்திற்கு ஆயத்தமானதும், நான் மறுபடி ஒரு முறை சமாதானத்துக்கு முயன்றேன். கடிதம், தந்தி முதலியவற்றை ஏற்கனவே அனுப்பியிருந்தேன். இப்போது நான் டெலிபோனில் ஜெனரல் ஸ்மட்ஸோடு பேசினேன். அரை நிமிஷத்தில் பதில் வந்தது: "ஜெனரல் ஸ்மட்ஸ் உங்களோடு எவ்விதச் சம்பந்தமும் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. உங்களுக்கு என்ன தோன்றுகிறதோ செய்யுங்கள்." அதோடு டெலிபோன் நின்றது. இது எதிர்பாராத விஷயமல்ல. ஆயினும் இவ்வளவு முரட்டுத்தனத்தை நான் கட்டாயமாக எதிர்பார்க்கவில்லை. மறுநாள் (6, நவம்பர் 1913) குறித்த சமயத்தில் காலை ஆறரை

மணிக்கு நாங்கள் பிரார்த்தனை செய்தோம். இறைவனின் திரு நாமத்தைச் சொல்லி யாத்திரையைத் தொடங்கினோம். இந்த யாத்திரையில் எங்களோடு 2037 ஆண்களும், 127 பெண்களும், 57 குழந்தைகளும் இருந்தனர்.

## 43

### எங்கள் யாத்திரை - 2

சார்ல்ஸ் டவுனிலிருந்து ஒரு மைல் தூரத்தில் வோக்ஸரஸ்ட் அருவி ஓடியது. அதைத் தாண்டினால் டிரான்ஸ்வால் போய்ச் சேருவோம். இந்த அருவிக்கு அக்கரையில் குதிரைகள்மேல் போலீஸ் படை நின்றிருந்தது. எல்லோருக்கும் முன்னால் நான் அதனிடம் சென்றேன். நான் அங்கிருந்து சமிக்ஞை செய்ததுமே ஜனங்கள் உடனே அருவியைத் தாண்டிவிட வேண்டும் என்று சொல்லியிருந்தேன். ஆனால் நான் போலீஸாரிடம் பேசிக்கொண்டிருக்கும்போதே ஜனங்கள் முன்னால் பாய்ந்து அருவியைத் தாண்டி வந்தனர். குதிரைப்படை அவர்கள் முன்னால் நின்றது. ஆனால் அந்தக் கூட்டம் இதனால் எல்லாம் தடுக்கக் கூடியதாக இல்லை. போலீஸார் எங்களைப் பிடிக்க விரும்பவில்லை. நான் ஜனங்களை அமைதியாக இருக்கச்சொல்லி அவர்களை ஒரே வரிசையில் போகச் சொன்னேன். ஐந்தாறு நிமிஷத்தில் எல்லோரும் சாந்தமாயினர். நாங்கள் டிரான்ஸ்வாலில் யாத்திரை செய்ய ஆரம்பித்தோம்.

வோக்ஸரஸ்டிலுள்ள வெள்ளையர்கள் இரண்டு நாட்களுக்கு முன்னாலேயே ஒரு கூட்டம் கூட்டி அதில் எங்களைப் பலவிதமாகப் பயமுறுத்தி இருந்தார்கள். 'இந்தியர்கள் டிரான்ஸ்வாலுக்குள் பிரவேசித்தால் நாங்கள் அவர்களைக் குண்டு போட்டுச் சுட்டுவிடுவோம்' என்றுகூடப் பலர் சொன்னார்கள். இந்தக் கூட்டத்தில் மிஸ்டர் கேலன்பேக் வெள்ளையர்களைச் சமாதானப்படுத்தப் போயிருந்தார். ஆனால் அவர் பேச்சை எவனும் கேட்கவே விரும்பவில்லை.

இந்தக் கூட்டத்தைப் பற்றிய செய்தி எங்களுக்குக் கிடைத்திருந்தது. நாங்கள் அந்தச் சந்தர்ப்பத்துக்குத் தயாராகவே இருந்தோம். வெள்ளையர்களின் உபத்திரவத்தைத் தடுப்பதற்காகத்தான் போலீஸாரைக் கூப்பிட்டு நிறுத்தியிருக்க வேண்டும். எது எப்படியாயினும் சரி, எங்கள் ஊர்வலம் அமைதியாக முகாமுக்குப் போய்ச் சேர்ந்தது. எந்த வெள்ளையனும் சிறிதும் துஷ்டத்தனம் செய்யவில்லை என்பது எனக்கு ஞாபகம் இருக்கிறது.

எல்லோரும் இந்தப் புதிய ஆச்சரியத்தைப் பார்க்க வெளியே வந்தார்கள். அவர்களில் பலருடைய கண்களில் நட்பு மிளிர்ந்தது.

எங்கள் முதல் முகாம் பாம்போர்டு. அது வோக்ஸரஸ்டி லிருந்து 8 மைல். மாலை சுமார் ஐந்து மணிக்கு நாங்கள் அங்கே போய்ச் சேர்ந்தோம். ரொட்டியையும் சர்க்கரையையும் சாப் பிட்டுவிட்டு எல்லோரும் திறந்த வெளியில் படுத்திருந்தனர். சிலர் பஜனை செய்துகொண்டும் சிலர் பேசிக்கொண்டும் இருந்தனர். பெண்களில் பலரும் களைத்துப் போய் இருந்தனர். குழந்தைகளை இடுப்பிலே எடுத்துக்கொண்டு அவர்கள் தைரியமாக நடந்து வந் திருந்தனர். ஆனால் இனி அவர்களால் மேலே நடக்கமுடியும் என்று தோற்றவில்லை. எனவே என் முந்திய எச்சரிக்கைப்படி அவர்களை நான் ஓர் இந்தியரின் கடையிலே விட்டேன். நாங்கள் டால்ஸ்டாய் ஆசிரமம் போனதும் அவர்களை அங்கே அனுப்ப வேண்டும் என்றும், நாங்கள் கைது ஆகிவிட்டால் அவர்களை அவர்கள் வீட்டுக்கு அனுப்பிவிட வேண்டும் என்றும் கடைக்கார ரிடம் சொன்னேன்.

இரவு ஆக ஆக அமைதி வளர்ந்தது. நானும் தூங்குவதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்தேன். அதற்குள் ஏதோ 'சடக் சடக்' என்ற சப்தம் கேட்டது. ராந்தலைக் கையால் தாங்கிக் கொண்டு ஒரு போலீஸ் அதிகாரி என்முன் நிற்பதைக் கண்டேன். இதன் கருத்து எனக்குப் புரிந்தது. நான் ஒன்றும் முன்னேற்பாடு செய்ய வேண்டியிருக்கவில்லை.

"என்னிடம் உங்கள்பேரில் வாரண்ட் இருக்கிறது. உங்களை நான் கைது செய்யவேண்டும்" என்று அந்த அதிகாரி சொன் னார்.

"எப்பொழுது?" என்று கேட்டேன்.

"இப்பொழுதே."

"என்னை எங்கே அழைத்துக்கொண்டு போகப் போகிறீர் கள்?"

"இப்பொழுது அருகிலுள்ள ஸ்டேஷனுக்கு. வண்டி வந்த துமே வோக்ஸரஸ்டுக்கு."

"அப்படியானால் நான் யாரையும் எழுப்பாமலே உங்களுடன வருகிறேன். ஆனால் என்னுடைய ஒரு தோழருக்குச் சில ஏற்பாடுகளைச் சொல்லிவிடுகிறேனே?"

"பேஷாக!"

அருகிலேயே தூங்கிக்கொண்டிருந்த பி. கே. நாயுடுவை எழுப்பி அவரிடம் நான் கைது ஆன விஷயத்தைச் சொன்னேன்.

பொழுது விடிவதற்கு முன்பு ஜனங்களை எழுப்பவேண்டாம் என்றும், விடிந்ததுமே முறைப்படி சூரியோதயத்துக்கு முன்னால் பிரயாணத்தைத் தொடங்கிவிட வேண்டும் என்றும், இளைப்பாறி ரொட்டிப் பங்கிடும் சமயத்தில்தான் நான் கைது ஆன செய்தியை அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும் என்றும், இதன் நடுவில் அவர்கள் எது கேட்டாலும் தக்கபடி பதில் சொல்லவேண்டுமென் றும், சர்க்கார் இந்தக் கூட்டத்தைக் கைது செய்ய விரும்பினால் அவர்கள் கைதாகிவிடவேண்டும் என்றும், கைது செய்யாவிட் டால் அவர்கள் மேன்மேலும் பிரயாணம் செய்துகொண்டிருக்க வேண்டும் என்றும் கூறினேன். அவரே கைது ஆகிவிட்டால் என்ன செய்யவேண்டும் என்பதையும் தெரிவித்தேன். வோக்ஸ ரஸ்டில் மிஸ்டர் கேலன்பேக்கும் இருந்தார். நான் போலீஸ் அதிகாரியோடு சென்றேன்.

பொழுது விடிந்தது. வோக்ஸரஸ்ட்டுக்குப் போகும் ரெயிலில் நாங்கள் உட்கார்ந்தோம். வோக்ஸரஸ்ட் கோர்ட்டில் வழக்கு நடந்தது. சர்க்கார் வக்கீல் தேதியை ஒத்திப்போட மனுக் கொடுத்தார். ஏனெனில் அவரிடம் அத்தாட்சி ஏதும் தயாராக இல்லை. தேதி ஒத்தி வைக்கப்பட்டது. நான் ஜாமீன் மனுக் கொடுத்தேன். “என்னிடம் 2000 ஆண்களும், 122 பெண்களும், 50 குழந்தைகளும் அடங்கிய கூட்டம் இருக்கிறது. அடுத்த தேதிக் குள் நான் அவர்களை ஒரு குறிப்பிட்ட இடத்துக்குக் கொண்டு போய்விட்டு மறுபடி ஆஜராக முடியும்” என்று காரணம் சொன் னேன். சர்க்கார் வக்கீல் இதை எதிர்த்தார். மாஜிஸ்டிரேட்டுக்கு வேறு வழி இல்லை. ஏனெனில் என்மீது சுமத்தியிருந்த குற்றத்தில் ஆஜர் ஜாமீனை அங்கீகரிக்க முடியாதபடி ஒன்றும் இல்லை. 50 பவுனுக்கு ஒரு முச்சலிக்கா எழுதி வாங்கிக்கொண்டு அவன் என்னை விட்டுவிட்டான். மிஸ்டர் கேலன்பேக் எனக்காகத் தயா ராக மோட்டார் வைத்திருந்தார். நான் உடனே அந்தக் கூட்டத் தில் கலந்துகொண்டேன்.

நாங்கள் மறுபடியும் முன்னேறினோம். ஆனால் என்னைச் சுதந் தரமாக விட்டுவைத்து, சர்க்கார் எப்படிச் சுகமாக இருக்கமுடியும்? எனவே 8-ஆம் தேதியே மறுபடி இரண்டாந்தடவை ஸ்டாண் டர்டன்னில் என்னைப் பிடித்தார்கள். முன்னிலும் இது கொஞ் சம் பெரிய இடம். வெகு விசித்திரமாக என்னை இங்கே கைது செய்தார்கள். நான் ஜனங்களுக்கு ரொட்டி பங்கிட்டுக்கொண் டிருந்தேன். அங்கிருந்த கடைக்காரர்கள் எங்களுக்கு இனாமாகச் சில ஊறுகாய் டப்பிகள் கொடுத்திருந்தனர். அதைப் பங்கிடு

வதில் அன்று அதிக நேரமாகிவிட்டது. இதனிடையே மாஜிஸ்டிரேட் என்னிடம் வந்து நின்றான். பரிமாறும் வேலை முடிந்ததுமே அவன் என்னை ஒருபுறமாகக் கூப்பிட்டான். எனக்கு அவனைத் தெரியும். எனவே அவன் ஏதோ பேசப்போகிறான் என்று நினைத்தேன். ஆனால் அவன் சிரித்துக்கொண்டே, "நீங்கள் என் கைதி" என்றான்.

"அப்படியானால் என் மதிப்பு உயர்ந்துவிட்டது. போலீஸுக்குப் பதிலாக நேராக மாஜிஸ்டிரேட்டே என்னைக் கைதுசெய்ய வரவேண்டியிருக்கிறது. ஆனால் என்மீது இப்போதே வழக்கு நடத்துங்களேன்" என்றேன்.

"என்கூட வாருங்கள். கோர்ட்டு நடந்துகொண்டிருக்கிறது" என்றான் அவன்.

ஜனங்களிடம் பிரயாணத்தைத் தொடரச் சொல்லிவிட்டு நான் அவனோடு புறப்பட்டேன். நான் கோர்ட்டு அறைக்குள் நுழைந்தபோது என்னுடைய சில தோழர்களும் கைது ஆகி இருப்பதைக் கண்டேன்.

உடனே என்னைக் கோர்ட்டில் நிறுத்தினார்கள். என்னை விடுவிப்பதற்கு நான் வோக்ஸரஸ்ட்டில் சொன்ன அதே காரணங்களைத் திருப்பிச் சொன்னேன். இங்கும் சர்க்கார் வக்கீல் எதிர்த்தான். 50 பவுன் கொடுத்து ஜாமீன் கேட்டதும் 21உ வரைக்கும் என்னை விட்டுவிட்டார்கள்.

வியாபாரிகள் எனக்காகவே வண்டியைத் தயாராக வைத்திருந்தார்கள். எங்கள் கூட்டம் 3 மைல் தூரங்கூடப் போகவில்லை. அதற்குள் நான் போய்க் கலந்துகொண்டேன். இந்தத் தடவை அவர்களும் நானும் 'இனி எல்லோரும் டால்ஸ்டாய் ஆசிரமம் போய்ச் சேர்ந்துவிடுவோம்' என்று நினைத்தோம். ஆனால், இவ்வாறு நினைத்தது தவறாயிற்று. நான் கைது ஆவது ஜனங்களுக்குப் பழக்கமாகப் போய்விட்டதே; இது போதாதா? என்னுடைய 5 தோழர்கள் சிறையிலேயே இருந்தனர். நாங்கள் ஜோஹான்ஸ்பர்க்கை நெருங்கிக்கொண்டிருந்தோம். வழி முழுவதையும் எட்டு நாளில் கடப்பதாகத் தீர்மானித்திருந்தது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கும். எங்கள் தீர்மானப்படியே நாள்தோறும் நடந்துவந்து இப்போது நாலுநாள் பிரயாணமும் பாக்கி இருந்தது. ஆனால் எங்கள் உற்சாகம் வளர வளர இந்த இந்தியத் தாக்குதலை எப்படித் தடுப்பது என்று சர்க்கார் மேன்மேலும் கவலை கொண்டது. நாங்கள் குறிப்பிட்ட இடத்துக்குப் போய்ச் சேர்ந்த பின்பு அது எங்களைப் பிடித்தால், அதனால் அதனுடைய

பலவீனமும் அசட்டுத்தனமும் வெளியாகுமல்லவா? எனவே, பிடிக்க வேண்டுமென்றால் குறிப்பிட்ட இடத்துக்குப் போய்ச் சேருமுன்பே ஏன் பிடித்துவிடக்கூடாது என்று ஒருவேளை அது யோசித்திருக்கும்.

எங்களோடு போனிக்ஸில் இருந்த ஹென்றி போலக் இந்தியாவுக்கு வந்து, இந்தியர்களுக்கும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கும் தென்னாப்பிரிக்க நிலையை எடுத்துச் சொல்லத் தமக்கு உதவி செய்ய வேண்டும் என்று இதே சமயத்தில் கோகலே தந்தி அடித்திருந்தார். இதன்படி நாங்கள் போலக்கை இந்தியாவுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தோம். அவர் போகலாம் என்று அவருக்கு எழுதினேன். ஆனால் போவதற்கு முன்பு அவர் என்னோடு நேரில் கலந்து என்னிடம் எல்லா விவரங்களையும் கேட்டுக்கொள்ள விரும்பினார். இதற்காக இந்தப் பிரயாணத்திலேயே என்னைச் சந்திக்க அநுமதி கோரினார். "கைது ஆகும் ஆபத்தை ஏற்றுக் கொள்ள விரும்பினால் புறப்பட்டு வாருங்கள்" என்று அவருக்குத் தந்தி மூலம் பதில் கொடுத்தேன்.

அந்த ஆபத்தை ஏற்றுக்கொண்டாவது என்னைக் கேட்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, ஸ்டாண்டர்டனுக்கும் கிரேலிங்ஸ்டெட்டுக்கும் நடுவில் டீக்வர்த் என்னும் இடத்தில் 9-ஆம் தேதி மிஸ்டர் போலக் எங்களைச் சந்தித்தார். பகல் 3 மணி இருக்கும். எங்கள் பேச்சு இன்னும் நடந்துகொண்டே இருந்தது. மிஸ்டர் போலக்கும் நானும் கூட்டத்துக்கு முன்னால் போய்க் கொண்டிருந்தோம். சில நண்பர்களும் எங்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தனர். மிஸ்டர் போலக் சாயந்தரம் டர்பனுக்குப் போகும் வண்டியைப் பிடிக்க வேண்டியிருந்தது. ஆனால் நாங்கள் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது. எங்கள் பேச்சு நிகழ்ந்துகொண்டிருந்தபோது ஒரு குதிரை வண்டி முன்னால் வந்து நின்றது. அதில் டிரான்ஸ்வாலில் உள்ள இமிக்ரேஷன் (குடியேற்ற) ஆபீஸின் தலைமை அதிகாரியான மிஸ்டர் சம்னியும் ஒரு போலீஸ் ஆபீஸரும் இருந்தனர். இருவரும் கீழே இறங்கினர். போலீஸ் ஆபீஸர் என்னைத் தொலைவிலே அழைத்துப் போய், "நான் உங்களைக் கைது செய்கிறேன்" என்றார்.

இவ்வாறு நான்கு நாளைக்குள் மூன்று தடவை என்னைப் பிடித்தார்கள். "இந்தக் கூட்டத்தை என்ன செய்வது?" என்று நான் கேட்டேன்.

"அதை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்" என்று அவர் சொன்னார்.

நான் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை. கூட்டத்தோடு போகும்படி மிஸ்டர் போலக்கிடம் சொன்னேன். நான் கைது ஆன செய்தியைக் கூட்டத்துக்குச் சொல்வதற்குத்தான் எனக்கு அவகாசம் கொடுத்தார்கள். ஜனங்களிடம் அமைதியாக இருக்கும்படி நான் சொல்ல ஆரம்பித்தேன். அதற்குள் அதிகாரி என்னை இடைமறித்துத் தடுத்து, "நீங்கள் இப்பொழுது கைதி. பிரசங்கம் செய்ய முடியாது" என்ருர்.

என் நிலையை உணர்ந்துகொண்டேன். நான் பேச்சை நிறுத்தி வண்டியில் ஏறியவுடனே, வண்டிக்காரனை வேகமாக வண்டியை ஓட்டும்படி அதிகாரி சொன்ஞர். கணப்பொழுதில் கூட்டம் என் கண்களினின்றும் மறைந்துவிட்டது.

என்னை அவர்கள் முதலில் கிரேலிங்ஸ்டெட்டுக்கும் அங்கிருந்து பெல்போர் வழியாக ஹீடல்பர்க்குக்கும் அழைத்துப் போனுர்கள். அங்கே நான் இரவைக் கழித்தேன்.

எங்கள் கூட்டமும் மிஸ்டர் போலக்கின் தலைமையில் முன்னேறி, இரவு முழுவதும் கிரேலிங்ஸ்டெட்டில் தங்கியது. 10-ஆம் தேதி காலை 9 மணிக்குக் கூட்டமும் பெல்போர் வந்தடைந்தது. அங்கே மூன்று ஸ்பெஷல் வண்டிகள் அவர்களை நேட்டாலுக்குக் கொண்டுபோய்விடத் தயாராய் நின்றிருந்தன. "காந்தியைக் கூப்பிடுங்கள். அவர் சொன்னால் நாங்கள் கைது ஆவோம்; ரெயிலில் உட்காருவோம்" என்று சிலர் பிடிவாதம் பிடித்தனர். மிஸ்டர் போலக்கும், காச்லியா ஸேட்டும், "நம்முடைய யாத்திரையின் நோக்கம் முடிவாகச் சிறை செல்வதுதானே?" என்று சமாதானப் படுத்தினுர்கள். யாத்திரிகர்கள் அவர்கள் பேச்சுக்கு இணங்கினர். எல்லோருமாக அமைதியோடு ரெயிலில் அமர்ந்தனர்.

# 44

## சத்தியாக்கிரகத்தின் வெற்றி

என்னை மறுபடியும் கோர்ட்டில் கொண்டு வந்து நிறுத்தினுர்கள். இந்தத் தடவை டண்டியிலிருந்து ஜாரியான ஒரு வாரண்டின்படி நான் கைது ஆகியிருந்ததனுல் என்னை அன்றே டண்டிக்கு அழைத்துப் போனுர்கள்.

மிஸ்டர் போலக்கை பெல்போரில் கைது செய்யவே இல்லை. அதனேடு அவர் செய்த உதவிக்காக அதிகாரிகள் அவருக்கு நன்றி பாராட்டினுர்கள். ஆனுல் அவர் ரெயிலில் உட்காருவதற்கு இருந்தபோது சார்ல்ஸ் டவுனில் அவரைக் கைது செய்தார்கள்.

மிஸ்டர் கேலன்பேக்கும் தப்ப முடியவில்லை. அவ்விரு நண்பர்களையும் வோக்ஸரஸ்ட் சிறையில் அடைத்தார்கள்.

11-ஆம் தேதி டண்டியில் என்மீது வழக்கு நடந்தது. எனக்கு 9 மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தனர். போதாக் குறைக்கு, டிரான்ஸ்வாலில் பிரவேசிக்க ஜனங்களைத் தூண்டி அவர்களுக்கு ஆசை காட்டிய குற்றத்துக்காக வோக்ஸரஸ்ட்டில் என் மீது வழக்கு நடத்துவது இன்னும் பாக்கியாக இருந்தது. ஆகவே 13-ஆம் தேதி என்னை வோக்ஸரஸ்ட்டுக்கு இட்டுச் சென்றனர். அங்கே சிறையில் கேலன்பேக்கையும் போலக்கையும் கண்டு எனக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று.

14-ஆம் தேதி நாங்கள் மூவரும் வோக்ஸரஸ்ட் கோர்ட்டில் நின்றோம். எங்கள் மூவருக்கும் 3 மாதம் விழுக்காடு சிறைத் தண்டனை கிடைத்தது. வோக்ஸரஸ்ட் சிறையில் மேன்மேலும் புதிய கைதிகள் வந்துகொண்டிருந்ததனால், வெளியே நடக்கும் சம்பவங்களைப்பற்றிய செய்திகள் எங்களுக்குக் கிடைத்துவந்தன. அதனால் சில நாட்களை ஆனந்தமாகக் கழித்தோம். இந்தச் சத்தியாக்கிரகக் கைதிகளில் ஹர்பத்சிங் என்னும் பெயருள்ள ஒரு கிழவனும் இருந்தான். அவன் வயசு 75-க்கு மேல் இருக்கும். அவன் எங்கும் சுரங்கங்களில் வேலை செய்வதில்லை. பல வருஷங்களுக்கு முந்தியே அவன் தன் ஒப்பந்தத்தை முடித்துவிட்டதால் அவன் வேலை நிறுத்தத்தில் சேர்ந்தவனல்ல. நான் கைது ஆனவுடனே ஜனங்களின் ஆவேசம் மிகுந்தது. நிறையப் பேர் நேட்டாலிலிருந்து டிரான்ஸ்வாலுக்குள் பிரவேசித்துக் கைது ஆக ஆரம்பித்தனர். ஹர்பத்சிங்கும் இவர்களில் ஒருவன்.

ஒரு நாள் நான் சிறையில், "நீங்கள் ஏன் ஜெயிலுக்கு வந்தீர்கள்? உங்களைப் போன்ற கிழவர்களை நான் ஜெயிலுக்குப் போகச் சொல்லவில்லையே?" என்று ஹர்பத்சிங்கைக் கேட்டேன்.

"நீங்களும் உங்களுடைய மனைவியாரும் உங்கள் குழந்தைகளுங்கூட எங்களுக்காகச் சிறை புகுந்தபோது நான் எப்படி வெளியே இருக்க முடியும்?" என்று அவன் பதில் சொன்னான்.

"ஆனால் சிறைக் கஷ்டங்களை உங்களால் சகிக்கமுடியாதே. நீங்கள் சிறையை விட்டுப் போய்விட்டால் நல்லது. உங்களை விடுவிக்க நான் முயல்கிறேனே?"

"நான் கட்டாயமாக ஜெயிலை விட்டுப் போகமாட்டேன். என்றாவது ஒரு நாள், இன்றோ நாளையோ, நான் சாகத்தான் வேண்டும். இங்கே சிறைக்குள்ளேயே சாகக்கூடிய பேறு எனக்கு ஏது?"

இந்த மாருத நம்பிக்கையை நான் எப்படி அசைப்பது? கல்வியறிவற்ற அந்தப் பெரியோனின் முன்பு என் தலை சிரத்தையினுல் வணங்கியது. ஹர்பத்சிங்கின் ஆவல் நிறைவேறியது. அவன் சிறையிலேயே 5, ஜனவரி 1914-இல் இறந்தான். நூற்றுக்கணக்கான இந்தியர்களின் முன்னுல் ஹிந்து முறைப்படி மரியாதையோடு அவனுடைய சடலத்தைத் தீயிட்டோம். அந்தப் போரில் ஹர்பத்சிங்கைப் போன்றவர்கள் ஒருவர் இருவரல்ல, பலர் இருந்தனர். ஆனுல் சிறையில் சாகும் பேறு பெற்றவன் ஹர்பத்சிங் ஒருவனே. ஆதலால் தென்னுப்பிரிக்கச் சத்தியாக்கிரகத்தின் சரித்திரத்தில் ஹர்பத்சிங்கின் பெயர் மதிப்போடு எடுத்துக் கூறவேண்டியதாகும்.

இனி, யாத்திரை செய்தவர்களைக் கவனிப்போம். ஸ்பெஷல் வண்டிகள் அவர்களைத் திரும்ப நேட்டாலில் கொண்டுபோய் விட்டன. அங்கே அவர்களைச் சிறையில் அடைத்தார்கள். சுரங்கங்களுக்கு அக்கம்பக்கத்தில் அரசாங்கத்தார் சுற்றுப்புற மதில்களைக் கட்டினுர்கள். டண்டி, நியூகாஸில் சிறைகளின் ஒரு பகுதியாக அவற்றை விதித்து, அங்கேயே தொழிலாளிகளிடம் வேலை வாங்கினுர்கள். இந்தக் கேவலமான அடிமைத்தனத்தை எதிர்த்து இந்தியாவில் தீவிரமான ரோஷம் பிறந்தது.

நோயாளியாக இருந்துங்கூட, கோகலே தனிப்பட்ட முறையில் இந்த விஷயத்தில் பெரிதும் முயன்ருர். இந்தச் சமயத்தில்தான் (டிஸம்பர், 1913) வைஸ்ராய் லார்டு ஹார்டிஞ்ச், தென்னுப்பிரிக்காவிலும் இங்கிலாந்திலும் எங்கே பார்த்தாலும் பரபரப்பை உண்டாக்கிய அந்தப் பிரசித்தமான பிரசங்கத்தைச் செய்தார். சாம்ராஜ்யத்தில் உள்ள மற்ற இடங்களைப்பற்றி வைஸ்ராய் விமரிசனம் செய்யாமல் இருப்பது வழக்கமாக இருந்தது. ஆனுல் லார்டு ஹார்டிஞ்சோ கடுமையான விமரிசனம் செய்திருந்தார். அதுமட்டுமின்றி அவர் சத்தியாக்கிரகிகளை முழுக்க முழுக்க ஆதரித்தும் பேசினுர். சாத்துவிக எதிர்ப்பைக்கூட வரவேற்றுப் பேசிவிட்டார். அவருடைய இந்தத் துணிகரமான செயல் எல்லா விதத்திலும் நல்ல பயனைத் தந்தது. ஒரு விசாரணைக் கமிட்டி ஏற்படுத்தினர். அதில் இந்தியர் யாரும் அங்கத்தினராக இல்லை. ஜெனரல் ஸ்மட்ஸோடு கடிதப் போக்கு வரவு செய்ததில், சத்தியாக்கிரக இயக்கத்தை நிறுத்திவைத்தால்கூட எங்கள் நோக்கம் நிறைவேறிவிடும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது. அந்தக் கமிட்டியின் அறிக்கை வெளியாவதற்கு முன்னுலேயே யூனியன் சர்க்கார் கெஜட்டில் அரசாங்கத்தார்

இந்தியர் சகாய மசோதாவை (Indian Relief Bill) வெளியிட்டனர். அதன் பயனாக நாள் கழித்தாவது ஏதோ சமாதானம் ஏற்பட்டது. அந்த மசோதாவின்படி, (1) மூன்று பவுன் வரி தள்ளுபடி ஆயிற்று. (2) இந்தியாவில் சட்டபூர்வமாகக் கருதப்படும் எல்லா விவாக முறைகளும் ஆப்பிரிக்காவிலும் சட்டபூர்வமாகக் கருதப்பட்டன. (3) ஒவ்வொரு நபருக்கும் பெருவிரல் கையடையாளம் வாங்கிக்கொண்டு கொடுக்கப்படும் சீட்டை, யூனியனின் எல்லையில் அவன் நுழைவதற்கு அநுமதிச் சீட்டாக மாற்றி விதித்தனர்.

இவ்வாறு 8 வருஷங்களுக்குப் பிறகு இந்தப் பிரம்மாண்டமான சத்தியாக்கிரகம் முடிந்தது. தென்னாப்பிரிக்க இந்தியர்களுக்கு இனிமேல் கொஞ்சம் அந்தஸ்து கிடைக்கும் என்று தோன்றிற்று. நான் 18, ஜூலை 1914-இல் தாய்நாட்டுக்குப் புறப்பட்டு வழியில் இங்கிலாந்தில் கோகலேயைச் சந்திப்பதற்காக இங்கிலாந்து செல்லும் கப்பலில் உட்கார்ந்தேன். என் உள்ளத்தில் உல்லாசமும் துன்பமும் மாறி மாறி நிழலிட்டன. 'இத்தனை வருஷங்களுக்குப் பிறகு தாய்நாடு திரும்புகிறேன். கோகலே வழிகாட்ட நாட்டுக்குத் தொண்டு செய்யப்போகிறேன்' என்று எண்ணியிருந்ததில் உல்லாசம். வாழ்க்கையில் 21 வருஷங்கள் வாழ்ந்த, எண்ணிறந்த இனியனவும் கசப்புமான அநுபவங்களைப் பயந்த, என் வாழ்க்கை வேலைக்கு அடிகோலிய அந்தத் தென்னாப்பிரிக்காவை விட்டு மிகுந்த வருத்தத்தோடும் வேதனையோடும் நான் புறப்பட்டுக்கொண்டிருந்ததில் துன்பம்.

# 45

## கோகலேயைச் சந்திக்க

சத்தியாக்கிரகப் போர் முடிந்த பின்பு கோகலேயின் விருப்பப்படி இங்கிலாந்து வழியாகத் தாய்நாட்டுக்கு நான் புறப்பட்ட செய்தியை முன்னால் சொல்லியிருக்கிறேன். என்னோடு கஸ்தூரிபாயும் கேலன்பேக்கும் இருந்தனர். சத்தியாக்கிரகப் போர் நடந்துவந்த நாட்களில் நான் ரெயிலில் மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்ய ஆரம்பித்திருந்தேன். ஆதலால் கப்பலிலும் மூன்றும் வகுப்பு டிக்கட்டுகள் வாங்கினேன். ஆனால் இந்த மூன்றும் வகுப்பு டிக்கட்டுக்கும் நம் நாட்டு மூன்றும்வகுப்பு டிக்கட்டுக்கும் பெருத்த வித்தியாசம் உண்டு. நம் நாட்டில் தூங்குவதற்கோ உட்காருவதற்கோகூட இடம் கிடைப்பது சிரமம். துப்புரவைப்பற்றியோ

பேசவே வேண்டியதில்லை. ஆனால் இதற்கு மாறாக இவ்விடத்துக் கப்பல்களில் போதுமான இடம் கிடைத்ததோடு சுகாதாரக் கவனிப்பும் இருந்தது. கப்பல் கம்பெனியார் எங்களுக்குப் பின்னும் சில விசேஷ சௌகரியங்களைச் செய்து கொடுத்தனர். எங்களை யாரும் தொந்தரவுபடுத்தாமல் இருக்க ஒரு கக்கூஸுக்குப் பூட்டு போட்டுச் சாவியை என்னிடம் கொடுத்தனர். நாங்கள் பழ உணவுக்காரர்களாதலால் தளதளவென்ற இனிய பழங்களையும் பதம் செய்த பழங்களையும் எங்களுக்குத் தரும்படி உக்கிராணக்காரருக்கு உத்தரவு இட்டிருந்தார்கள். சாதாரணமாக மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளுக்குப் பழம் குறைவாகவே கிடைக்கும். உலர்ந்த பழங்களோ அடியோடு கிடைக்கமாட்டா. இந்த வசதிகளின் பயனாக, நாங்கள் கடலில் மிகவும் அமைதியாக 18 நாட்களைக் கழிக்க முடிந்தது.

இந்தப் பிரயாணத்தில் நிகழ்ந்த சில சம்பவங்கள் குறிப்பிடத் தக்கவை. மிஸ்டர் கேலன்பேக்குக்குத் தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் வைத்துக்கொள்வதில் அசாத்தியப் பித்து. இரண்டொரு விலையுயர்ந்த கண்ணாடிகளை அவர் தம்மிடம் வைத்திருந்தார். ஆனால் இதைக் குறித்து நாள்தோறும் எங்களுக்குள் விவாதம் நடக்கும். 'நம்முடைய லக்ஷ்யத்திற்கும் நாம் அடைய விரும்பும் எளிய வாழ்க்கைக்கும் இது ஏற்றதல்ல' என்பதை அவருக்கு அறிவுறுத்த முயன்றேன். ஒரு நாள் நாங்கள் இருவரும் இதைப் பற்றிச் சூடாக விவாதித்துக்கொண்டிருந்தோம். அப்போது நாங்கள் இருவரும் எங்கள் 'கேபின்' ஜன்னலின் அருகில் நின்றிருந்தோம். "உங்களுக்கும் எனக்குமிடையே இத்தகைய சச்சரவுகள் உண்டாவதைவிட இந்தத் தூர திருஷ்டிக் கண்ணாடியைக் கடலில் எறிந்துவிடுவது நல்லதல்லவா?" என்றேன்.

"கட்டாயம். இந்தச் சச்சரவுக்கு வேராகிய இதை எறிந்தே விடுங்கள்" என்று மிஸ்டர் கேலன்பேக் பதில் சொன்னார்.

"இதோ பாருங்கள், எறிந்தேவிடப் போகிறேன்."

"நான் உண்மையாகவே சொல்லுகிறேன். எறிந்துவிடுங்கள்" என்று அவர் தடங்கலின்றிப் பதில் சொன்னார்.

உடனே அந்தக் கண்ணாடியைக் கடலில் வீசி எறிந்தேன். அது சுமார் 7 பவுன் பெறுமானமுள்ளது. ஆனால் அதன் மதிப்பு, அதன் விலையில் அல்ல; மிஸ்டர் கேலன்பேக்குக்கு அதனிடம் இருந்த பற்றில் அடங்கியிருந்தது. அப்படி இருந்தும் அவர் தம் மனத்தில் இதைப்பற்றி எப்பொழுதும் வருந்தியதில்லை. அவருக்கும் எனக்குமிடையே இத்தகைய சம்பவங்கள் பல நடந்திருக்கின்

றன. மாதிரிக்காக இதை மட்டும் வாசகர்களுக்குத் தெரிவித்திருக்கிறேன்.

நாங்கள் இருவரும் சத்திய நோக்கோடு நடக்க முயன்றுவந்தோம். ஆதலால் எங்களுடைய இந்தத் தொடர்பின் பயனாக நாங்கள் நாள்தோறும் ஏதாயினும் ஒரு புதிய விஷயத்தைக் கற்றுக்கொள்வோம். சத்தியத்தைப் பின்பற்றும்போது எங்களுடைய சினம், தன்னலம், பகைமை முதலியவை தாமாகவே அடங்கிப் போயின. அவை அப்படி அடங்காவிட்டால் சத்தியத்தை அடைவது முடியாது. விருப்பு வெறுப்புக்கள் நிரம்பியவன் நேர்மையுள்ளவனாக இருக்கலாம். வாயினால் எப்பொழுதும் உண்மையையே பேசலாம். ஆனால் தூய சத்தியத்தை அவன் அடைந்து விட முடியாது. சத்தியத்தைத் தேடுவது என்றால் விருப்பு வெறுப்பு முதலிய இரட்டைகளிலிருந்து ஒரேயடியாக விடுதலை பெறுவது என்று பொருள்.

இந்தப் பிரயாணத்தைத் தொடங்குவதற்கு முன்பு டால்ஸ்டாய் ஆசிரமவாசிகளின் பலவீனமான நடத்தையினால் நான் 7 நாட்களும், 14 நாட்களும் உபவாசம் இருந்திருந்தேன். இதை நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இந்த உபவாசங்கள் இருந்ததனால் இன்னமும் எனக்கு முழுப் பலம் வரவில்லை. கப்பலில் மேல் தளத்தில் நன்றாக உலாவி, போதுமான அளவு சாப்பிடவும் அதை ஜரித்துக்கொள்ளவும் முயன்றுவந்தேன். ஆனால் நான் அதிகமாக உலாவ உலாவ என் குதிகால்களில் அதிக வலி உண்டாயிற்று. சீமைக்குப் போய்ச் சேர்ந்ததும் இந்த நோய் பின்னும் அதிகமாகிவிட்டது. அங்கே டாக்டர் ஜீவராஜ் மேஹதாவைக் காண நேர்ந்தது. உபவாசத்தையும் இந்த நோயையும் பற்றிய வரலாற்றைக் கேட்டு, "நீங்கள் சிறிது காலம் ஓய்வு எடுத்துக் கொள்ளாவிட்டால் உங்கள் கால்கள் எப்போதைக்கும் சுரணையற்றதாகப் போகுமோ என்று அஞ்சுகிறேன்" என்று அவர் சொன்னார். பல நாள் உபவாசத்தினால் இழந்த வலிவைச் சீக்கிரம் பெறுவதற்கோ அல்லது அதிகமாகச் சாப்பிடுவதற்கோ ஆசைப்படக்கூடாது என்பது அப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது. உபவாசம் இருப்பதைவிட அதை விடும் சமயத்தில் அதிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இதில்தான் அதிகப் புலனடக்கம் தேவை.

மகாயுத்தம் தொடங்கப் போகும் செய்தி எங்களுக்கு மதீராவில் கிடைத்தது. இங்கிலீஷ் கால்வாய்க்குப் போய்ச் சேர்ந்ததுமே, "யுத்தம் ஆரம்பமாகிவிட்டது" என்ற செய்தி வந்தது.

எனவே எங்களைத் தடுத்துவிட்டனர். கடலில் அங்கங்கே ரகசிய வழிகள் ஏற்படுத்தியிருந்தனர். அவற்றைத் தாண்டி நாங்கள் ஸௌதாம்ப்டன் போய்ச் சேர இரண்டொரு நாள் தாமதமாயிற்று. ஆகஸ்டு 4-ஆம் தேதி யுத்த ஆரம்பம் அறிவிக்கப்பட்டது. நாங்கள் 6-ஆம் தேதி சீமை சேர்ந்தோம்.

# 46

## யுத்தத்தில் பங்கு

சீமை சேர்ந்ததும் கோகலே பாரிஸில் தங்கிவிட்டதாகவும் பாரிஸுக்கும் லண்டனுக்கும் போக்குவரவு நின்றுவிட்டதாகவும் அவர் எப்பொழுது வருவார் என்று சொல்ல முடியாது என்றும் தகவல் கிடைத்தது. தேக ஆரோக்கியத்தைக் கருதி, கோகலே பிரான்ஸுக்குப் போயிருந்தார். நடுவில் யுத்தம் மூண்டதால் அங்கேயே தங்கிவிட்டார். அவரைப் பாராமல் நான் இந்தியாவுக்குத் திரும்ப விரும்பவில்லை. அவர் எப்பொழுது வருவார் என்பதை எவராலும் சொல்ல முடியவில்லை.

இதன் நடுவில் நான் என்ன செய்வது? இந்த யுத்தம் சம்பந்தமாக என் கடமை என்ன என்ற பிரச்னைகள் எழுந்தன. என் சிறைக் கூட்டாளியும் சத்தியாக்கிரகியும் ஆன ஸோராப்ஜீ அட்ஜணியா சீமையில் பாரிஸ்டர் பரீக்ஷைக்குப் படித்துக்கொண்டிருந்தார். அவரை ஒரு சிறந்த சத்தியாக்கிரகி என்ற முறையில் இங்கிலாந்தில் பாரிஸ்டராவதற்கு அனுப்பி, அங்கிருந்து அவர் தென்னாப்பிரிக்காவுக்குத் திரும்பி வந்ததும் என் ஸ்தானத்தை ஏற்றுக்கொள்வதாக ஏற்பாடு செய்திருந்தோம். அவர் செலவுக்கு டாக்டர் பிராணஜீவன்தாஸ் மேஹ்தா பணம் கொடுத்துவந்தார். அவரோடும் அவர் மூலமாக டாக்டர் ஜீவராஜ் மேஹ்தா முதலியவர்களோடும் இதைப்பற்றி யோசனை செய்தேன். ஜீவராஜ் மேஹ்தா அப்போது சீமையில் படித்துக்கொண்டிருந்தார். இங்கிலாந்தில் அப்பொழுது இருந்த இந்தியர்களை ஒரு கூட்டத்தில் ஒன்று கூட்டி அவர்கள் முன்னால் என் யோசனைகளைத் தெரிவித்தேன். 'சீமையில் வசிக்கும் இந்தியர்கள் இந்த யுத்தத்தில் பங்கு எடுத்துக்கொள்ளவேண்டும். ஆங்கில மாணவர்கள் யுத்த ஊழியம் செய்வதாகத் தம் தீர்மானத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இந்தியர்களான நாமும் அதைவிட அதிகமாகப் பங்கு கொள்ளாமல் இருக்கக் கூடாது' என்பது என் கட்சி. இதற்கு விரோதமாக அந்தக் கூட்டத்தில் பல காரணங்களை எடுத்துக்

கூறினர்கள். 'நம் நிலைமைக்கும் ஆங்கிலேயரின் நிலைமைக்கு மிடையே யானைக்கும் குதிரைக்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது. ஒருவன் அடிமை; மற்ெருருவன் ஆண்டை. இந்த நிலையில் அடிமை தன் ஆண்டையின் ஆபத்தில் தன்னிச்சையாக அவனுக்கு எப்படி உதவி செய்ய முடியும்? மேலும் அடிமைத்தனத்திலிருந்து விடுபட விரும்பும் அடிமை ஆண்டையின் ஆபத்தைப் பயன்படுத்திக்கொண்டு தன் விடுதலையைத் தேட முயலுவதுதானே அவனது கடமை?' என்று அவர்கள் வாதித்தார்கள். இந்த வாதம் அந்தச் சமயத்தில் என் மனத்தில் எப்படிப் பதியும்? இருவருடைய நிலைகளிலும் பெருத்த வித்தியாசம் இருந்ததை நான் அறிந்திருந்தபோதிலும், நம்முடைய நிலைமை கேவலம் ஓர் அடிமையினுடையது போன்றது அல்ல என்று எனக்குத் தோன்றியது. அந்தக் காலத்தில் நான், ஆங்கில ஆட்சி முறையைவிட ஆங்கில அதிகாரிகளிடமே அதிகக் குற்றம் இருந்ததாகவும் அந்தக் குற்றத்தை நாம் அன்பினுல் போக்க முடியும் என்றும் எண்ணியிருந்தேன். ஆங்கிலேயர் மூலமாகவும் அவர்களுடைய உதவியினுலும் நம்முடைய நிலையைச் சீர்திருத்த விரும்பினுல் அவர்களுக்கு ஆபத்தில் உதவி செய்து நம் நிலையைச் சரிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது என் நினைப்பு. பிரிட்டிஷ் ஆட்சிமுறையைக் குற்றம் நிரம்பியதாகவே கருதினேன். ஆனுல் இன்றுபோல அப்பொழுது அது எனக்குப் பொறுக்க முடியாததாகத் தோன்றவில்லை. எனவே இன்று எவ்விதம் தற்போதைய ஆட்சி முறையில் எனக்கு நம்பிக்கை போய்விட்டதோ, இன்று நான் எப்படி ஆங்கில அரசாட்சிக்கு உதவ முடியாதோ, அதுபோலவே அந்தக் காலத்தில் இந்த ஆட்சி முறையில் மட்டுமின்றி ஆங்கில அதிகாரிகளிடத்திலுங்கூட நம்பிக்கையற்றுப்போயிருந்த அவர்கள் உதவி செய்ய எப்படித் தயாராக இருந்திருக்க முடியும்?

குடிமக்களின் கோரிக்கையைத் தீவிரமாக வெளியிடவும் ஆட்சி முறையைச் சீர்திருத்துவதற்குக் கூக்குரலிடவும் இந்தச் சமயமே மிகவும் அநுகூலமானது என்று அவர்கள் எண்ணினர். ஆங்கிலேயர்கள் ஆபத்தான சமயத்தில் இருக்கும்போது நம்முடைய கோரிக்கைகளை வெளியிடுவது உசிதமல்லவென்றும், யுத்தம் நடக்கும் வரையில் நம்முடைய கோரிக்கைகளை ஒத்தி வைப்பதாகிய புலனடக்கத்திலே பெருந்தன்மையும் தீர்க்க திருஷ்டியும் அடங்கியுள்ளன என்றும் நான் எண்ணினேன். ஆதலால் நான் என் தீர்மானத்திலேயே உறுதியாக இருந்து, யுத்தத்தில் தொண்டு செய்யத் தாமாக முன்வருபவர்கள் என்னிடம் தங்கள் பெயரைக்

கொடுக்கலாம் என்றும் சொன்னேன். நிறையப் பேர் முன்வந்தார்கள். அவர்களில் அநேகமாக எல்லா மாகாணங்களையும் எல்லா மதங்களையும் சேர்ந்தவர்கள் இருந்தார்கள்.

பிறகு லார்டு க்ரூவுக்கு ஒரு கடிதம் எழுதினேன். 'காயம் பட்ட சிப்பாய்களுக்குத் தொண்டு செய்யப் பயிற்சி அளிக்கும் தேவை நேர்ந்தால் இந்தியர்களாகிய நாங்கள் பயிற்சி பெறத் தயாராக இருக்கிறோம்' என்ற எங்கள் எண்ணத்தை அதில் தெரிவித்திருந்தேன். சிறிது ஆலோசனை செய்த பின்பு லார்டு க்ரு எங்கள் தீர்மானத்தை வரவேற்று, நெருக்கடியான அந்தச் சந்தர்ப்பத்தில் சாம்ராஜ்யத்துக்கு உதவி செய்ய ஆயத்தமாக இருந்ததற்காக எங்களுக்கு வந்தனம் தெரிவித்தார்.

என்னிடம் பெயர் கொடுத்தவர்கள் எல்லோரும், பிரசித்த டாக்டரான காண்ட்லியின் மேற்பார்வையில் காயம்பட்டவர்களுக்குப் பணிவிடை செய்யும் ஆரம்பப் பயிற்சியைத் தொடங்கினர். 6 வாரத்துக்கு ஒரு பயிற்சி முறை வைத்திருந்தனர். அதற்குள்ளே பிரதம சிகிச்சைக்கு வேண்டிய எல்லா முறைகளையும் கற்றுக் கொடுத்தனர். நாங்கள் சுமார் 80 தொண்டர்கள் இந்தப் பயிற்சி முறையில் சேர்ந்திருந்தோம். 6 வாரங்களுக்குப் பிறகு பரீக்ஷை நடந்தபோது அதில் ஒரே ஆசாமி மட்டும் தவறினார். தேர்ச்சியடைந்தவர்களுக்குச் சர்க்கார் தரப்பில் கவாய்த்து முதலியவை பழக்க ஏற்பாடாயிற்று. கர்னல் பேகரிடம் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவர் எங்கள் கோஷ்டிக்கும் தலைவரானார்.

அப்போது லண்டன் காட்சி பார்க்கத் தகுந்ததாக இருந்தது. யுத்தத்தினால் ஜனங்கள் பயந்து போகவில்லை. எல்லோரும் தம்மால் இயன்ற உதவியைச் செய்யக் குழுமி வந்தனர். உடல்வலிவு பெற்ற இளைஞர்கள் சேனையில் பயிற்சி பெற ஆரம்பித்தனர். பலவீனர்களான கிழவர்களும் பெண்களுங்கூடச் சும்மா உட்கார்ந்திருக்கவில்லை. அவர்களுக்கும் வேலை இருந்தது. அவர்கள் போரில் காயமடைந்த வீரர்களுக்குத் துணிகள் வெட்டித் தைக்கும் வேலையைச் செய்தார்கள். அங்கே 'லைஸியம்' என்ற பெண்கள் சங்கம் ஒன்று இருக்கிறது. அதன் அங்கத்தினர்கள் சேனைக்குத் தேவையான உடைகளைக் கூடுமான அளவு தைத்துக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தார்கள். ஸரோஜினி தேவியும் இதன் அங்கத்தினராக இருந்தார். அவர் மிகவும் உற்சாகத்தோடு இதில் வேலை செய்தார். முதல் முதலாக அவரோடு எனக்கு அறிமுகம் ஏற்பட்டது. கத்தரித்திருந்த துணிகளின் ஒரு குவியலை

என் முன்னுல் வைத்து, "உங்களால் எவ்வளவு தைக்க முடியுமோ அவ்வளவு தைத்து என்னிடம் கொடுங்கள்" என்று அவர் சொன்னுர். நான் அவருடைய விருப்பத்துக்கு இசைந்து, காயமடைந்தவர்களுக்குப் பணிவிடை செய்துவந்த அந்த நாட்களில், என்னுல் முடிந்த அளவு உடைகளைத் தைத்து அவரிடம் கொடுத்தேன்.

இவ்வாறு என் கடமையை உணர்ந்து நான் போரில் ஈடுபட்டேனுயினும் அதில் நேராகப் பங்கு எடுத்துக்கொள்ளும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. அதற்கு மாருக அந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் நான் சத்தியாக்கிரகம் செய்ய வேண்டிய வேளையும் வந்தது.

## 47

### கோகலேயின் தாராளம்

சீமையில் எனக்கு விலா எலும்பு நோய் வந்தது. இந்த நோயின் போது கோகலே சீமைக்கு வந்துவிட்டார். அவரிடம் கேலன் பேக்கும் நானும் அடிக்கடி போய்வந்தோம். அவரோடு அநேகமாக யுத்தத்தைப் பற்றிய பேச்சுக்களே பேசினேம். ஜெர்மனியின் பூகோளம் கேலன்பேக்குக்கு வாய்ப்பாடம். அவர் ஐரோப்பிய யாத்திரையும் நிறையச் செய்திருந்தார். ஆதலால், படம் வரைந்து போர் நடக்கும் இடங்களைக் கோகலேக்குக் காட்டுவார்.

நான் நோயாளியானபோது அதுவும் எங்கள் பேச்சுக்கு ஒரு விஷயமாயிற்று. என் உணவுப் பரிசோதனைகள் அப்போதும் நடந்துவந்தன. அப்போது நான் பச்சை வேர்க்கடலை, வாழைக் காய், வாழைப்பழம், எலுமிச்சம்பழம், ஆலிவ் எண்ணெய், தக்காளி, அத்திப்பழம் முதலியவற்றைச் சாப்பிட்டுவந்தேன். பால், தானியம், பருப்பு இவற்றை அடியோடு விலக்கிவந்தேன். ஜீவராஜ் மேஹதா என் உடம்பைப் பார்த்துவந்தார். நான் பாலும் தானியங்களும் சாப்பிட வேண்டுமென்று அவர் வற்புறுத்தினுர். இந்த முறையீடு கோகலே வரைக்கும் போயிற்று. பழ உணவு சம்பந்தமான என் வாதங்களில் அவருக்கு மதிப்பில்லை. ஆரோக்கியத்தைக் காப்பதற்கு டாக்டர் என்ன என்ன சொல்கிருரோ அதையெல்லாம் சாப்பிட வேண்டும் என்பது அவர் அபிப்பிராயம்.

கோகலேயின் வற்புறுத்தலைக் கேட்காதிருப்பது எனக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது. அவர் மிகவும் அதிகமாக வற்புறுத்திய

போது நான் யோசனை செய்வதற்கு 24 மணி அவகாசம் கேட்டேன். கேலன்பேக்கும் நானும் வீடு திரும்பினோம். வழியில் நான் அவரிடம் இப்போது என் கடமை என்ன என்பதுபற்றி விவாதித்தேன். என் சோதனைகளில் அவர் எனக்குக் கூட்டாளியாக இருந்தார். அவருக்கு இந்தச் சோதனை பிடித்திருந்ததாயினும் ஆரோக்கியத்திற்காக நான் அதை விட்டுவிடுவது நல்லது என்று அவர் குறிப்பிட்டார். இனி, என் அந்தராத்மாவின் ஒலியைக் கேட்டு முடிவு செய்வதே பாக்கியாக இருந்தது.

இரவு முழுவதும் நான் சிந்தனையில் மூழ்கியிருந்தேன். நான் என் உணவுப் பரிசோதனைகளை எல்லாம் விட்டுவிட்டால் என்னுடைய எல்லாச் சிந்தனைகளும் அபிப்பிராயங்களும் அழிந்து போகும். அந்தச் சிந்தனைகளில் பிழை இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. எனவே, எந்த அளவுக்குக் கோகலேயின் அன்புக்கு உட்படுவது என் கடமை, அல்லது ஆரோக்கியத்தைக் காப்பதற்கு இந்தப் பரிசோதனைகளை எந்த விதத்தில் விடவேண்டும் என்பது பிரச்னையாயிற்று. பாரமார்த்திக நோக்கத்தோடு தேவையான அளவுக்குப் பரிசோதனைகளை வைத்துக்கொண்டு, மற்ற விஷயங்களில் டாக்டரின் சொற்படி நடப்பது என்று கடைசியில் தீர்மானித்தேன். நான் பாலை நிறுத்தியதில் பாரமார்த்திக நோக்கமே முக்கியமாக இருந்தது. கல்கத்தாவில் பசுக்களையும் எருதுகளையும் ஹிம்ஸை செய்து, கடைசிச் சொட்டு வரையில் பாலைக் கறக்கும் அந்தக் காட்சி என் கண் முன்னால் நின்றது. மாமிசத்தைப் போலவே மிருகத்தின் பாலும் மனிதனுக்கு உணவாக முடியாது என்ற எண்ணமும் எனக்கு இருந்தது. ஆதலால் பாலைத் துறந்திருந்த என் பழைய தீர்மானத்தில் இப்போது உறுதி கொண்டு நான் காலையில் எழுந்தேன். இந்தத் தீர்மானத்தினால் என் மனம் மிகவும் லேசாகிவிட்டது. ஆனால் கோகலேயிடம் பயம் மட்டும் இருந்தது. என் தீர்மானத்தைக் கலைக்க அவர் முயல மாட்டார் என்ற நம்பிக்கையும் கூடவே இருந்தது.

மாலையில் 'நேஷனல் லிபரல் கிளப்'பில் நாங்கள் அவரைச் சந்திக்கப் போனதுமே, "என்ன, டாக்டர் சொன்னபடியே நடக்கத் தீர்மானித்திருக்கிறீர்கள் அல்லவா?" என்று அவர் கேட்டார்.

நான் மெதுவாகப் பதில் சொன்னேன்: "மற்ற விஷயங்களை எல்லாம் நான் ஒப்புக்கொள்வேன். ஆனால் இந்த ஒன்றில் மட்டும் என்னை வற்புறுத்தாதீர்கள். பால், பாலில் செய்த பண்டங்கள், மாமிசம் இவற்றை மட்டும் நான் சாப்பிடமாட்டேன். இவற்றை

உட்கொள்ளாததனால் எனக்குச் சாவு நேர்ந்தாலும் அதை வரவேற்பது என் கடமை."

"இது உங்கள் முடிவான தீர்மானமா?" என்று கோகலே கேட்டார்.

"அதைத் தவிர நான் வேறு பதில் சொல்ல முடியாது என்று நினைக்கிறேன். இதனால் உங்களுக்கு வருத்தம் உண்டாகும் என்பது தெரியும். ஆனால் என்னை மன்னிக்கவேண்டும்."

கோகலே சிறிது துன்பத்துடனும், ஆனால் மிகுந்த அன்புடனும், "உங்களுடைய இந்த முடிவு எனக்குப் பிடிக்கவில்லை. இதில் ஆத்மார்த்தமான விஷயம் ஏதும் இருப்பதாக எனக்குத் தென்படவில்லை. ஆனால் இனி இதைப்பற்றி உங்களை வற்புறுத்த மாட்டேன்" என்று கூறிக்கொண்டே, ஜீவராஜ் மேஹதாவைப் பார்த்து, "காந்தியை இனிமேல் தொந்தரவு படுத்தாதீர்கள். அவர் வைத்துக் கொண்டிருக்கும் எல்லைக்குள்ளே அவர் உட்கொள்ளக்கூடிய பொருளை மட்டும் கொடுங்கள்" என்றார்.

டாக்டர் தம்முடைய அதிருப்தியை வெளிப்படுத்தினார். ஆனால் வேறு வழியில்லாததால் என்னைக் காராமணிக் குழம்புச் சாப்பிடச் சொன்னார். "அதில் பெருங்காயம் சேர்த்துக்கொள்ளுங்கள்" என்றும் சொன்னார். அதற்கு ஒப்புக்கொண்டேன். இரண்டொரு நாள் அந்தக் குழம்பைச் சாப்பிட்டேன். அதனால் என் வலி அதிகமாயிற்று. எனக்கு அது ஒத்துக்கொள்ளவில்லை. மறுபடி பழ உணவுக்குத் திரும்பினேன். வெளிச் சிகிச்சை மட்டும் டாக்டர் தமக்குத் தோன்றியவாறு செய்தார். இதனால் ஓரளவு குணமாக இருந்தும் அவர் என் கட்டுப்பாடுகளைக் கண்டு கோபித்துக்கொள்வார். இதனிடையில் லண்டனில் அக்டோபர் நவம்பர் பனியைப் பொறுக்க மாட்டாமல் கோகலே இந்தியாவுக்குப் புறப்பட்டார்.

உணவில் மாறுதல் செய்ததனாலும் சில வெளிச் சிகிச்சைகளினாலும் என் வலி தீர்ந்துவிட்டதாயினும் நோய் மட்டும் ஒழியவில்லை. ஜாக்கிரதையாக இருக்கவேண்டிய அவசியம் இப்போதும் இருந்தது. இன்னமும் படுக்கையில் படுத்தபடியே இருந்தேன். டாக்டர் மேஹதா இடையிடையே வந்து என்னைப் பார்த்துப்போவார். அவர் போகும்போதெல்லாம், "நான் சொல்வதுபோல நடந்துகொண்டால் உங்களுக்கு விரைவில் குணமாகும்" என்று சொல்வார்.

இதெல்லாம் நடந்துகொண்டிருந்தபோது ஒரு நாள் மிஸ்டர் ராபர்ட்ஸ் என் வீட்டுக்கு வந்தார். "நீங்கள் ஊருக்குப் போய் விடுங்கள்" என்று என்னை வற்புறுத்தினார்.

"இந்த நிலையில் நீங்கள் நேட்லிக்குக்* கட்டாயமாகப் போக முடியாது. கடுமையான குளிர்காலம் இனிமேல்தான் இருக்கிறது. நீங்கள் இந்தியாவுக்குப் போனால் குணமாகிவிடும் என்று நான் நிச்சயமாகச் சொல்கிறேன். உங்களுக்குக் குணமான பின்பும் யுத்தம் நீடித்திருந்தால் உதவிசெய்வதற்கு இன்னும் எத்தனையோ சந்தர்ப்பங்கள் கிடைக்கும். அப்படி இல்லையென்றாலும் நீங்கள் இப்போது செய்திருப்பது ஒன்றும் குறைவல்ல என்று நான் நினைக்கிறேன்" என்றார் அவர்.

அவருடைய ஆலோசனை எனக்கு நல்லதாகப்பட்டது. நான் இந்தியாவுக்குத் திரும்ப ஏற்பாடு செய்தேன்.

# 48

## இந்தியாவுக்குத் திரும்புதல்

மிஸ்டர் கேலன்பேக் இந்தியாவுக்கு வரும் தீர்மானத்தோடு என்னுடன் வந்திருந்தார். சீமையில் நாங்கள் ஒன்றாகவே இருந்தோம். யுத்தம் ஆரம்பமானதால் ஜெர்மானியர்கள்மீது கடுமையான காவல் இருந்தது. கேலன்பேக் எங்களோடு வர முடியுமா முடியாதா என்ற விஷயத்திலும் எங்களுக்குச் சந்தேகம் இருந்தது. அவருக்காகப் பிரயாண அநுமதிச் சீட்டு வாங்கப் பெரிதும் முயன்றேன். மிஸ்டர் ராபர்ட்ஸ் அவருக்குப் பிரயாணச் சீட்டுக் கொடுக்க ஒப்புக்கொண்டிருந்தார். அவர் செய்தி முழுவதையும் தந்தி மூலம் வைஸ்ராய்க்குத் தெரிவித்தார். உடனே லார்டு ஹார்டிஞ்சின் நேர்மையும் வறட்சியுமான பதில் வந்தது: "நான் வருந்துகிறேன். இந்தச் சமயத்தில் எவ்வித ஆபத்தையும் ஏற்றுக்கொள்ள நான் தயாரல்ல." இந்தப் பதில் நியாயமானதே என்பதை நாங்கள் யாவரும் உணர்ந்தோம். அதிலும், கேலன்பேக்கின் பிரிவினால் எனக்குத் துன்பம் உண்டானது இருக்கட்டும்; என்னைவிட அவர் அதிகமாக வருந்தியதைக் கண்டேன். அவர் இந்தியாவுக்கு வந்திருக்கக்கூடுமானால் இன்று ஒரு சிறந்த விவசாயியாகவும் நெசவுத் தொழிலாளியாகவும் எளிய வாழ்க்கையை நடத்திக்கொண்டிருப்பார். இப்போது அவர்

*காந்தி தம் கோஷ்டியுடன் காயமடைந்தவர்களின் சுச்ருஷைக்குப் போகவேண்டியிருந்த ஓர் ஆஸ்பத்திரியின் பெயர்.

தென்னுப்பிரிக்காவில் தமது பழைய வாழ்க்கையை நடத்திக் கொண்டு கட்டிட வேலை செய்துவருகிருர்.

நாங்கள் மூன்ரும் வகுப்பு டிக்கெட்டு வாங்க முயன்ருேம். ஆனுல் பி. அண்டு ஓ. கப்பல்களில் மூன்ரும் வகுப்பு டிக்கட்டுகள் இல்லாததால் இரண்டாம் வகுப்புச் சீட்டே வாங்க வேண்டிய தாயிற்று. தென்னுப்பிரிக்காவிலிருந்து நாங்கள் பல பழ உணவு களைக் கட்டிக்கொண்டு வந்திருந்தோம். கப்பல்களில் அவை கிடைக்கமாட்டா. அவற்றை நாங்கள் எடுத்துக்கொண்டோம். மற்றப் பொருள்கள்தாம் கப்பலிலேயே கிடைக்குமே.

டாக்டர் மேஹதா விலா எலும்புகளுக்குப் பிளாஸ்திரி போட்டுக் கட்டியிருந்தார். அந்தக் கட்டு அப்படியே இருக்க வேண்டும் என்று அவர் சொல்லியிருந்தார். 2 நாளைக்குமேல் அந்தத் தொந்தரவைப் பொறுக்க முடியாமல், மிகவும் சிரமப்பட்டு அந்தக் கட்டை நீக்கிவிட்டு, ஸ்நானம் செய்யவும் ஆரம்பித்தேன். வற்றல் பழங்களையும் கனிகளையும் தவிர வேறு எதுவும் சாப்பிடு வதில்லை. இதனுல் உடம்பு நாளுக்கு நாள் குணப்பட்டது. சூயஸ் கால்வாய்க்கு வந்து சேர்ந்தபோது முற்றும் குணமாகிவிட்டது. இதனுல் உடல் இளைத்துப் போயிருந்தாலும் நோயைப் பற்றிய பயம் ஒழிந்துவிட்டது. நான் நாள்தோறும் தேகாப்பியாசத்தை மெதுவாக அதிகப்படுத்தினேன். சம சீதோஷ்ணமான காற்றி ஞல்தான் ஆரோக்கியத்தில் இந்த நன்மையான மாறுதல் ஏற்பட் டது என்று நினைக்கிறேன்.

பழைய அநுபவத்தினுலோ அல்லது வேறு காரணத்தினுலோ தெரியவில்லை, இந்தக் கப்பலில் ஆங்கிலப் பிரயாணிகளுக்கும் நமக்கும் இடையில் வித்தியாசம் இருப்பதைக் கண்டேன். இந்த வித்தியாசத்தைத் தென்னுப்பிரிக்காவிலிருந்து போனபோதுகூட நான் பார்த்ததில்லை. அங்கும் வித்தியாசம் இருந்தது. ஆனுல் இந்த வித்தியாசம் வேறு விதமாகத் தோற்றியது. சில ஆங்கி லேயர்களோடு நான் பேசினேன். ஆனுல் குசலப்பிரச்னைக்குமேல் அது ஓடவில்லை. இது உள்ளன்போடு பழகும் சந்திப்பு அல்ல. ஆனுல் தென்னுப்பிரிக்கக் கப்பலிலும் தென்னுப்பிரிக்காவிலும் உள்ளன்போடு பழக முடிந்தது. இந்தப் பக்கத்துக் கப்பல்களில் ஆங்கிலேயரின் உள்ளத்தில், 'நாம் ஆள்பவர்கள்' என்ற மனப் பான்மையும், இந்தியர்களின் மனத்தில், 'நாம் அந்நியருக்கு அடி மைகள்' என்ற மனப்பான்மையும் தெரிந்தோ தெரியாமலோ வேலை செய்துவந்தமையே இந்த வித்தியாசத்திற்குக் காரணம் என்று நான் கருதினேன்.

இந்தச் சூழ்நிலையிலிருந்து விரைவில் விடுபட்டு ஊர்போய்ச் சேர நான் ஆத்திரப்பட்டேன். ஏடன் வந்ததும் அநேகமாக வீடு வந்து சேர்ந்துவிட்டதாகவே தோன்றியது. ஏடன்காரர்களோடு தென்னாப்பிரிக்காவிலேயே எங்களுக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருந்தது. சகோதரர் கைகோபாத் காவஸ்ஜீ தின்ஷா டர்பனுக்கு வந்திருந்தவர். ஆதலால் அவரோடும் அவர் மனைவியோடும் நான் நன்றாகப் பழகியிருந்தேன். சிறிது நாட்களிலேயே நாங்கள் பம்பாய் வந்து சேர்ந்தோம். 1905-இல் நான் திரும்பவேண்டிய நாட்டுக்குப் பத்து வருஷங்கள் கழித்து வந்தபோது, என் மனம் பரமானந்தம் அடைந்தது. பம்பாயில் கோகலே என்னை வரவேற்க ஏற்பாடுகள் செய்திருந்தார். அவருக்கு உடம்பு சரியில்லாமலிருந்தும் பம்பாய் வந்திருந்தார். அவரைச் சந்தித்து அவருடைய வாழ்க்கையில் கலந்து என் தலைச் சுமையை இறக்கிக் கவலையற்றிருக்க வேண்டும் என்ற மன எழுச்சியோடு பம்பாய் போய்ச் சேர்ந்தேன். ஆனால் கடவுள் வேறு எதையோ தம் மனத்தில் எண்ணியிருந்தார். 'நாம் ஒன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும்.'

# 49

## கோகலேயுடன் பூனாவில்

**நா**ன் பம்பாய் போய்ச் சேர்ந்தவுடனே, பம்பாய் கவர்னர் என்னைப் பார்க்க விரும்புவதாகவும், பூனாவுக்கு வருவதற்கு முன்பு நான் அவரைப் பார்த்துவிட்டு வந்தால் நல்லது என்றும் கோகலே எனக்குத் தகவல் அனுப்பினார். எனவே நான் கவர்னரைப் பார்க்கப் போனேன். சாதாரணமாகப் பேசிய பின்பு அவர் என்னிடம், "நான் உங்களிடமிருந்து ஒரு வாக்குப் பெற விரும்புகிறேன். சர்க்கார் சம்பந்தமாக நீங்கள் எங்காவது ஏதாவது இயக்கம் நடத்த நேர்ந்தால் அதற்கு முன்னால் என்னைக் கண்டு பேசிக்கொள்வது நல்லது என்று நான் நினைக்கிறேன்" என்று சொன்னார்.

"இந்த வாக்குக் கொடுப்பது எனக்கு மிக எளிது. ஏனெனில் சத்தியாக்கிரகி என்ற முறையில் என்னுடைய திட்டமே இதுதான். ஒருவருக்கு எதிராக ஏதாவது செய்யுமுன்பு, அவருடைய கருத்தை நானாக அவரிடமிருந்து தெரிந்துகொண்டு, என்னால் முடிந்தவரையில் அவருக்கு அநுகூலமாக இருக்க முயல்வதே அந்தத் திட்டம். தென்னாப்பிரிக்காவில் நான் எப்போதும்

இந்தத் திட்டப்படி நடந்துகொண்டிருக்கிறேன். இங்கும் அப்படியே செய்யலாம் என்று நினைக்கிறேன்" என்று பதில் சொன்னேன்.

லார்டு வில்லிங்டன் இதற்காக எனக்கு நன்றி கூறிவிட்டு, "நீங்கள் எப்போது வேண்டுமானாலும் உடனே என்னை வந்து பார்க்கலாம். அரசாங்கத்தார் வேண்டுமென்று எவ்வித அநியாயமும் செய்ய விரும்பமாட்டார்கள் என்பதை நீங்களே பார்ப்பீர்கள்" என்றார்.

"இந்த நம்பிக்கையைக் கொண்டுதான் நான் வாழ்கிறேன்" என்று பதில் சொன்னேன்.

பிறகு பூனா போய்ச் சேர்ந்தேன். அவ்விடத்து நினைவுகளையெல்லாம் எழுதுவது என் சாமர்த்தியத்துக்குப் புறம்பானது. கோகலேயும் இந்திய ஊழியர் சங்கத்தின் அங்கத்தினர்களும் என்னை அன்புவெள்ளத்தில் முழுக்காட்டினார்கள். அங்கத்தினர்கள் யாவரையும் அவர் பூனாவுக்குக் கூப்பிட்டிருந்ததாக ஞாபகம். அவர்களோடு நான் மனம் விட்டுப் பேசினேன். நான் சங்கத்தின் அங்கத்தினனாக வேண்டும் என்பது கோகலேயின் தீவிரமான அபிலாஷை. எனக்கும் அந்த ஆசை இருந்தது. ஆனால் சங்க அங்கத்தினர்கள், லட்சியத்திலும் வேலை முறையிலும் சங்கமும் நானும் வேறுபட்டிருப்பதாகக் கருதினார்கள். ஆதலால் நான் அங்கத்தினன் ஆவதா, வேண்டாமா என்பது அவருக்குச் சங்கடமாகிவிட்டது. என் கொள்கையில் திடமாக இருப்பது என் சுபாவமாக இருந்ததுபோலவே, பிறருடைய கொள்கைகளைக் காத்து அவர்களோடு கலந்துகொள்ளும் இயல்பும் எனக்கு இருந்தது என்று கோகலே கருதினார். "ஆனால் எங்கள் தோழர்கள் பிறரோடு கலந்துகொள்ளும் உங்கள் குணத்தை இன்னும் அறிந்துகொள்ளவில்லை. அவர்கள் தங்கள் கொள்கைகளில் திடமாக நிற்கும் சுதந்தர புருஷர்கள்; முடிவான நோக்கமுடையவர்கள். அவர்கள் உங்களை அங்கத்தினராக ஒப்புக்கொள்வார்கள் என்றே எதிர்பார்க்கிறேன். அப்படி அவர்கள் செய்யாமற் போனாலும் உங்களிடம் அவர்களுக்கு அன்போ மதிப்போ குறைவாக இருப்பதாக நீங்கள் அடியோடு நினைக்கவேண்டாம். உங்களிடம் தமக்குள்ள அன்பு சிதையாமல் இருக்கவேண்டுமே என்றுதான் அவர்கள் எவ்வித அபாயத்தையும் ஏற்றுக்கொள்ள அஞ்சுகிறார்கள். நீங்கள் சட்டப்படி சங்க அங்கத்தினராக இருந்தாலும் இராமற்போனாலும் நான் உங்களை அங்கத்தினராகவே பாவித்து நடந்துகொள்வேன்" என்றார் அவர்.

என் எண்ணத்தை அவரிடம் தெரிவித்தேன். சங்க அங்கத்தினனாக ஆனாலும் ஆகாவிட்டாலும் நான் ஓர் ஆசிரமத்தை ஸ்தாபித்து, போனிக்ஸ் கூட்டாளிகளை அதில் வரவழைத்து வைத்து, அங்கேயே நிலைத்துவிட விரும்பினேன். நான் குஜராத்தியானதால் குஜராத் மூலமாகத் தொண்டுசெய்யும் மூலதனம் என்னிடம் அதிகமாக இருக்கவேண்டும் என்ற கருத்தோடு குஜராத்திலேயே எங்காவது அந்த ஆசிரமத்தை ஸ்தாபிக்க விரும்பினேன். கோகலேக்கு இந்த யோசனை பிடித்தது. "கட்டாயம் இந்த ஆசிரமத்தை ஆரம்பியுங்கள். சங்க அங்கத்தினர்களோடு நிகழ்ந்துள்ள பேச்சின் முடிவு என்னவாயினும், உங்கள் ஆசிரமத்துக்குத் தேவையான பணத்துக்கு நான் ஏற்பாடு செய்துவிடுகிறேன். அதை நான் என் ஆசிரமமாகவே கருதுவேன்" என்றார்.

இதைக் கேட்டு என் உள்ளம் பூரித்தது. சந்தா கேட்டு வாங்கும் தொந்தரவிலிருந்து விடுபட்டது பெரு மகிழ்ச்சியாக இருந்தது. இனி நான் ஒருவனாக என் பொறுப்பில் எதையும் செய்ய முடியாது; ஒவ்வொரு சிக்கலுக்கும் எனக்கு வழிகாட்டுகிறவர் இங்கே இருக்கிறார் என்ற நம்பிக்கையினால் என் தலைச்சுமை இறங்கியதுபோலத் தோற்றியது.

கோகலே (காலஞ்சென்ற) டாக்டர் தேவ் அவர்களை அழைத்து, "நம்முடைய சங்கக் கணக்கில் காந்திக்காக ஒரு பேரேடு போட்டு, அவருடைய ஆசிரமத்துக்கும் பொதுக் காரியங்களுக்கும் எவ்வளவு தொகை கேட்டாலும் கொடுங்கள்" என்று சொல்லிவிட்டார்.

பிறகு பூனாவை விட்டுச் சாந்தி நிகேதனத்துக்குப் போக ஆயத்தம் செய்துகொண்டிருந்தேன். நான் புறப்படுவதற்கு முந்திய இரவு கோகலே முக்கியமான நண்பர்களைக் கூப்பிட்டு எனக்குப் பிடித்த மாதிரியில் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்தார். அதில் நான் சாப்பிடக்கூடிய உணவுப் பொருள்களை அதாவது பழ உணவுகளை வரவழைத்திருந்தார். அவருடைய அறையிலிருந்து சிறிது தூரத்தில்தான் விருந்து நடந்தது. அதுவரையில் கூட அவர் நடந்துவரக்கூடிய நிலையில் இல்லை. ஆனால் என்னிடம் அவருக்கு இருந்த அன்பு அவரைத் தடுத்து வைக்குமா? அவர் பிடிவாதமாக வந்தார். மூர்ச்சை வந்ததால் அவர் திரும்பவேண்டியதாயிற்று. இப்படி அவருக்கு அடிக்கடி மூர்ச்சை வருவது வழக்கம். ஆதலால் விருந்தில் எவ்விதமான பரபரப்பும் நேரலாகாது என்று சொல்லி அனுப்பினார். விருந்து என்றால் என்ன! சங்கத்து ஆசிரமத்தில் விருந்தினர் விடுதிக்கு அருகில்

இருந்த மைதானத்தில் ஜமுக்காளத்தைப் பரப்பி நாங்கள் எல்லோரும் உட்கார்ந்து, பச்சை வேர்க்கடலை, உலர்ந்த பேரீச்சம் பழம் முதலியவற்றைத் தின்றுகொண்டு அன்போடு அளவளாவிக்கொண்டு ஒருவர் மற்றவருடைய உள்ளத்தை அதிகமாகப் புரிந்துகொள்ள முயன்றுகொண்டிருந்தோம். ஆனால் கோகலேயின் இந்த மூர்ச்சை என் வாழ்க்கையில் சாதாரணமான சம்பவமாக இல்லை.

## 50

### மிரட்டலா?

பம்பாயிலிருந்து, விதவையான என் மதனியையும் மற்ற உறவினர்களையும் பார்க்க நான் ராஜகோட்டுக்கும் போர்பந்தருக்கும் போக வேண்டியிருந்தது. ஆகையால் ராஜகோட்டுக்குப் போனேன். தென்னாப்பிரிக்காவில் சத்தியாக்கிரக இயக்கம் தொடங்கியதிலிருந்து ஒப்பந்தத் தொழிலாளியைப் போலவே நானும் உடையணிந்துவந்தேன். என்னைப்போல் உடையுடுத்துபவர்களைப் பார்த்தால் சாதாரணமாக ஏழைகளிலே ஒருவன் என்றே நினைப்பார்கள். அப்போது வீரம்காமிலும் வட்வாணிலும் பிளேக் இருந்ததனால் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளைப் பரிசோதித்து வந்தனர். எனக்கு அப்போது லேசான ஜுரம் இருந்தது. பரிசோதனை செய்துவந்த அதிகாரி என் கையைப் பிடித்துப்பார்த்தபோது அது சூடாகத் தென்படவே, நான் ராஜகோட்டுக்குச் சென்று டாக்டரைப் பார்க்கவேண்டுமென்று உத்தரவிட்டு என் பெயரைக் குறித்துக்கொண்டான்.

பம்பாயிலிருந்து ஒருவேளை யாராவது தந்தியோ கடிதமோ அனுப்பினார்கள் போலிருக்கிறது. அதனால் வட்வாண் ஸ்டேஷனில், அங்கே பிரசித்தமான பொது ஜனத் தொண்டராகிய தையற்கார மோதீலால் என்னைப் பார்க்க வந்தார். அவர் என்னிடம் வீரம்காமில் நடந்த வரி விசாரணையைப் பற்றியும் அது சம்பந்தமாக நடக்கும் கொடுமைகளைப் பற்றியும் பேசினார். எனக்கு ஜுரம் ஏறிக்கொண்டே இருந்தது. அவரோடு பேசும் விருப்பம் குறைவாக இருந்தது. நான் சுருக்கமாக, "நீங்கள் சிறை செல்லத் தயாராக இருக்கிறீர்களா?" என்று கேட்டேன். சிந்தனை செய்யாமலே உற்சாக வெறியில் 'சரி' என்று ஒப்புக்கொள்ளும் இளைஞர்களில் ஒருவராக அப்போது நான் மோதீலாலை எண்ணியிருந்தேன். ஆனால் அவர் மிகுந்த உறுதியோடு,

"அப்படியே, நாங்கள் கட்டாயம் சிறைக்குப் போவோம். ஆனால் நீங்கள் எங்களுக்குத் தலைவராக இருக்கவேண்டும். காட்டியா வாட்காரன் என்ற முறையில் உங்கள்மீது எனக்கு முதல் உரிமை உண்டு. இப்போது நான் உங்களைத் தடுக்க முடியாது. ஆனால் திரும்பிவரும்போது நீங்கள் வட்வாணில் கட்டாயமாக இறங்கத்தான் வேண்டும். இங்குள்ள இளைஞர்களின் வேலையையும் உற்சாகத்தையும் கண்டு நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள். எப்போது வேண்டுமானாலும் உங்கள் சேனையில் எங்களைச் சேர்த்துக் கொள்ளலாம்'' என்றார்.

ராஜகோட்டுக்குப் போய்ச் சேர்ந்ததுமே மறுநாள் காலையில் அந்த உத்தரவுப்படி ஆஸ்பத்திரிக்குப் போனேன். அங்கே நான் யாருக்கும் புதியவனல்ல. என்னைக் கண்டு டாக்டர் வெட்கப்பட்டார். அந்தப் பரிசோதனை இன்ஸ்பெக்டரைக் கோபித்துக் கொள்ளலானார். அவர் கோபிப்பதற்கு எந்தக் காரணமும் இருப்பதாக எனக்குப் புலப்படவில்லை. அவன் தன் கடமையைத்தானே செய்திருந்தான்? முதலாவது, அவனுக்கு என்னைத் தெரியாது. இரண்டாவது, தெரிந்திருந்தாலுங்கூட மேலதிகாரியின் உத்தரவை நிறைவேற்றுவதுதானே அவன் பொறுப்பு? ஆனால் நானோ பிரசித்தமான ஆசாமி. எனவே ராஜகோட்டில் நான் பரிசோதனைக்காகப் போவது இருக்க, ஜனங்கள் என் வீட்டுக்கு வந்து என்னை விசாரிக்கலானார்கள்.

காட்டியாவாடில் நான் போன இடங்களிலெல்லாம் வீரம்காம் சுங்கவரித் தொல்லையைப் பற்றிய புகார்களே என் காதில் விழுந்தன. ஆதலால் லார்ட் வில்லிங்டன் எனக்குக் கொடுத்திருந்த அழைப்பை உடனே பயன்படுத்தினேன். இது விஷயமாகக் கிடைக்கக்கூடிய பிரசுரங்கள் எல்லாவற்றையும் படித்தேன். அந்தப் புகார்களில் உண்மை இருப்பதைக் கண்டேன். அந்தத் தொல்லையை நீக்குவதற்குப் பம்பாய் சர்க்காரோடு கடிதப்போக்குவரவு செய்தேன். கவர்னருடைய காரியதரிசியைப் பார்த்தேன். லார்டு வில்லிங்டனையும் கண்டு பேசினேன். அவர் அநுதாபம் தெரிவித்தார். "டில்லி அரசாங்கத்தினால்தான் இவ்வளவு கோளாறும்" என்று சொன்னார். "எங்கள் கையில் இருந்தால் இந்தச் சுங்கவரியை எப்போதோ எடுத்துவிட்டிருப்போமே. நீங்கள் இந்திய அரசாங்கத்தினிடம் உங்கள் புகாரை எழுதிக்கேளுங்கள்" என்றார் காரியதரிசி.

இந்திய அரசாங்கத்துக்கும் எழுதினேன். ஆனால் அங்கிருந்து என் கடிதம் கிடைத்த விவரத்தைத் தவிர வேறு ஏதும் பதில் வர

வில்லை. பின்னல் நான் லார்டு செம்ஸ்போர்டைப் பார்க்கநேரிட்ட போது அதாவது 2, 3 வருஷம் கடிதப் போக்குவரத்துச் செய்த பின்பு அதற்கு வழி பிறந்தது. லார்ட் செம்ஸ்போர்டிடம் இதைப்பற்றி நான் சொன்னபோது அவர் ஆச்சரியப்பட்டார். வீரம்காம் விஷயத்தைப்பற்றி அவருக்கு ஒன்றுமே தெரியாது. என் பேச்சை நிதானமாகக் கேட்டு அப்போதே டெலிபோன் செய்து வீரம்காம் சம்பந்தமான தஸ்தாவேஜிகளை வரவழைத்தார். "இதற்கு விரோதமாக அதிகாரிகள் ஏதும் சொல்லாவிட்டால் நான் இந்தச் சுங்க வரியை ரத்து செய்துவிடுகிறேன்" என்று வாக்குறுதி கொடுத்தார். இந்தச் சம்பவம் நேர்ந்த சில நாட்களுக்கெல்லாம் சுங்கவரி ரத்தான செய்தியைப் பத்திரிகைகளில் படித்தேன்.

இந்த வெற்றியை நான் சத்தியாக்கிரகத்தின் அஸ்திவாரமாக எண்ணினேன். ஏனெனில் வீரம்காம் சம்பந்தமாகப் பேச்சு வந்த போது பம்பாய் சர்க்காரின் காரியதரிசி, பக்ஸ்ராவில் இதைப் பற்றி நான் செய்த பிரசங்கத்தின் நகல் தம்மிடம் இருப்பதாகவும், அதில் நான் சத்தியாக்கிரகத்தைக் குறிப்பிட்டிருப்பதாகவும் தம்முடைய அதிருப்தியை என்னிடம் தெரிவித்தார். "இதை நீங்கள் மிரட்டல் இல்லை என்கிறீர்களா? பலசாலியான ஒரு சர்க்கார் இம்மாதிரி மிரட்டல்களையெல்லாம் லக்ஷ்யம் செய்யுமா?" என்று அவர் என்னைக் கேட்டார்.

"இது மிரட்டலல்ல. பொது மக்களுக்குப் பயிற்சி அளிக்கும் வழி இது. ஜனங்கள் தம்முடைய கஷ்டங்களைப் போக்கிக்கொள்வதற்குத் தகுந்த உபாயங்கள் யாவற்றையும் சொல்வது என் போன்றவர்களின் கடமை. சுதந்தரத்தை விரும்பும் மக்களிடம் தம்மைக் காத்துக்கொள்ளும் கடைசியான மாற்று அவசியம் இருக்கவேண்டும். பொதுவாக இவ்வித மாற்றுக்கள் ஹிம்சையையே ஆதாரமாகக் கொண்டவை. ஆனல் சத்தியாக்கிரகம் தூய அஹிம்சையைக் கொண்ட ஆயுதம். அதன் உபயோகத்தையும் எல்லையையும் ஜனங்களுக்கு விளக்குவது என் கடமை என்று நினைக்கிறேன். ஆங்கில அரசாங்கம் வலிமை வாய்ந்தது என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. ஆனல் சத்தியாக்கிரகம் எல்லாவற்றிற்கும் மேலான ஆயுதம் என்பதிலும் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை" என்று பதில் சொன்னேன்.

இதைக் கேட்டதும் கெட்டிக்காரரான அந்தக் காரியதரிசி தலையை ஆட்டிக்கொண்டே, "பார்க்கலாம்" என்றார்.

## 51

### சாந்தி நிகேதனம்

ராஜகோட்டிலிருந்து நான் சாந்தி நிகேதனம் சென்றேன். அங்கு உபாத்தியாயர்களும் மாணவர்களும் என்மீது அன்பைப் பொழிந்தனர். வரவேற்பில் எளிமையும் கலையும் அன்பும் அழகாகக் கலந்திருந்தன. அங்கே முதல் தடவையாகக் காகா காலேல்கரோடு எனக்கு அறிமுகம் ஏற்பட்டது.

சாந்தி நிகேதனத்தில் எங்கள் கோஷ்டிக்குத் தனி இடம் கொடுத்திருந்தார்கள். அங்கே மகன்லால் காந்தி அந்தக் கோஷ்டியினரை மேற்பார்வை பார்த்துக்கொண்டு போனிக்ஸ் ஆசிரமத்து விதிகளையெல்லாம் அவர்கள் நுட்பமாக அநுசரிக்கும்படி செய்தார். சாந்தி நிகேதனத்தில் தம் அன்பினாலும் விடா முயற்சியினாலும் வேலைத் திறத்தினாலும் அவர் தமது நறுமணத்தைப் பரப்பியதைக் கண்டேன். ஆண்ட்ரூஸும் அங்கே இருந்தார். பியர்ஸனும் இருந்தார்.

என் இயல்புக்கு ஏற்ப நான் மாணவர்களோடும் உபாத்தியாயர்களோடும் கலந்து ஒன்றிப்போனேன். உடற் பயிற்சியைப் பற்றியும் வேலையைப் பற்றியும் விவாதித்தேன். அங்கிருந்த சமையற்கூடத்தில் சுயமாகச் சமைக்கவும் பாத்திரங்கள் தேய்க்கவும் பரிசோதனைகள் ஆரம்பமாயின. வங்காள உணவில் சில மாறுதல்கள் செய்யும் நோக்கத்தோடு ஒரு சிறு பாடசாலையை ஒதுக்கி வைத்தனர்.

சாந்தி நிகேதனத்தில் கொஞ்ச நாள் தங்கவேண்டும் என்பது என் திட்டம். ஆனால் விதி என்னை வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்றது. நான் அங்கே ஒரு வாரம் இருந்திருப்பேனோ என்னவோ; அதற்குள் பூனாவிலிருந்து கோகலே உடல் நீத்த தந்தி கிடைத்தது. சாந்தி நிகேதனம் முழுவதும் சோகத்தில் ஆழ்ந்து கிடந்தது. எல்லோரும் துக்கம் விசாரிக்க என்னிடம் வந்தனர். அன்றே நான் பூனாவுக்குப் புறப்பட்டேன். மனைவியையும் மகன்லாலையும் கூட அழைத்துக்கொண்டேன். மீதிப்பேர் யாவரும் சாந்தி நிகேதனத்திலேயே தங்கினர்.

ஆண்ட்ரூஸ் பர்த்வான் வரையில் என்னோடு வந்தார். "இந்தியாவில் சத்தியாக்கிரகம் செய்யும் வேளை வரும் என்று தங்களுக்

குத் தோன்றுகிறதா? அப்படியானால் அது எப்பொழுது வரும்?'' என்று அவர் என்னைக் கேட்டார்.

''அதைச் சொல்வது கஷ்டம். இப்போது ஒரு வருஷ காலம் நான் ஒன்றும் செய்ய விரும்பவில்லை. நான் ஓராண்டு முழுவதும் சுற்றுவதாகவும் பொதுவான எந்தப் பிரச்னையிலும் என் சிந்தனைகளை வெளிப்படுத்தாமல் இருப்பதாகவும் கோகலேக்கு வாக்களித்திருக்கிறேன். நான் அந்த வாக்கை அப்படியே காக்க விரும்புகிறேன். அதற்குப் பிறகுங்கூட, எந்தப் பிரச்னை விஷயத்திலும் நான் ஏதாவது சொல்லவேண்டிய தேவை இல்லாதவரையில் ஒன்றும் பேசமாட்டேன். ஆதலால் இன்னும் ஐந்து வருஷங்களுக்கு எனக்குத் தெரிந்தவரையில் சத்தியாக்கிரகம் செய்வதற்கு எவ்விதச் சந்தர்ப்பமும் நேராது'' என்று விடை கூறினேன்.

இங்கே ஒரு விஷயத்தை நான் சொல்ல வேண்டியது அவசியம். 'இந்திய சுயராஜ்யம்' என்னும் நூலில் நான் வெளியிட்ட சிந்தனைகளைக் கண்டு கோகலே என்னைப் பரிகசித்ததோடு, ''ஒரு வருஷ காலம் நீ இந்தியாவில் இருந்து பார்த்தால், உன்னுடைய இந்தச் சிந்தனைகள் யாவும் தாமாகவே தணிந்துபோகும்'' என்று சொல்லிவந்தார்.

## 52

### மூன்றும் வகுப்பிலுள்ள சங்கடங்கள்

பார்த்வாள் போனதும் நாங்கள் மூன்றும் வகுப்பு டிக்கட்டுகள் வாங்க விரும்பினோம். ஆனால் டிக்கட்டு வாங்குவதில் பெரிய சங்கடம் ஏற்பட்டது. டிக்கட்டுக் கேட்டபோது, ''மூன்றும் வகுப்புப் பிரயாணிக்கு முன்னாலேயே டிக்கட்டுக் கிடைக்காது'' என்ற விடை கிடைத்தது. நான் ஸ்டேஷன் மாஸ்டரிடம் போனேன். எவனாவது அங்கே என்னைப் போகவிட்டால்தானே? எவனோ ஒருவன் என் மீது இரக்கப்பட்டு, ''ஸ்டேஷன் மாஸ்டர் அதோ இருக்கிறார்'' என்று சொன்னான். அவரிடம் கேட்டதற்கும் அதே பதில்தான் கிடைத்தது. ஜன்னல் திறந்ததும் டிக்கட்டு வாங்கப் போனேன். ஆயினும் டிக்கட்டுக் கிடைப்பது எளிதாக இல்லை. கட்டுமஸ்தான பிரயாணிகள் என்னைப் போன்றவர்களைப் பின்னால் இடித்துத் தள்ளிவிட்டு முன்னால் பாய்ந்தார்கள். கடைசியில் ஏதோ ஒரு வழியாக டிக்கட்டுக் கிடைத்தது.

வண்டி வந்தது. அதிலும் பலசாலிகளாக இருந்தவர்கள் நுழைந்துகொண்டார்கள். இறங்குகிறவர்களுடைய மண்டை

களும் ஏறுகிறவர்களுடைய மண்டைகளும் முட்டிக்கொண்டன. இடியும் குத்துமாக இருந்தன. இதில் நான் எப்படிக் கலந்து கொள்வது? எனவே நாங்கள் மூவரும் இடத்துக்கு இடம் அலைந் தோம். 'இங்கே இடம் இல்லை' என்ற பதிலே எங்கும் கிடைத்தது. அப்போது நான் 'கார்டி'னிடம் போனேன். "இடம் கிடைத்தால் உட்காரு. இல்லாவிட்டால் வேறு வண்டியில் போ" என்று அவன் பதில் சொன்னான். "எனக்கு அவசரமான காரியம்" என்று வணக்கமாக வேண்டினேன். கார்டுக்கு இதைக் கேட்க அவகாசம் இல்லை. நான் எல்லாவிதத்திலும் தோற்றுப்போனேன். "எங்கே இடம் கிடைத்தாலும் உட்கார்ந்துவிடு" என்று மகன்லாலிடம் சொன்னேன். மூன்றும் வகுப்பு டிக்கட்டை வைத்துக்கொண்டே என் மனைவியுடன் இண்டர் வகுப்பில் நுழைந்தேன். அப்போது கார்டு என்னைப் பார்த்துவிட்டான்.

ஆஸன்ஸோல் ஸ்டேஷனில் கார்டு என்னிடம் இண்டர் வகுப்புக் கட்டணம் வாங்க வந்தான். "எனக்கு இடம் காட்டுவது உங்களுடைய கடமை. அங்கே இடம் கிடைக்காததால் நான் இங்கே உட்கார்ந்தேன். மூன்றும் வகுப்பில் எனக்கு இடம் காட்டுங்கள். நான் அங்கே போகத் தயாராயிருக்கிறேன்" என்றேன்.

"என்னோடு நீ வாதம் செய்யாதே. என்னிடம் இடம் இல்லை. அதிகக் கட்டணம் கொடுக்காவிட்டால் நீ வண்டியிலிருந்து இறங்க வேண்டியிருக்கும்" என்றான் அவன்.

எனக்கு எப்படியும் அவசரமாகப் பூனாவுக்குப் போகவேண்டி யிருந்தது. அவனோடு சண்டைபோட எனக்கு அவகாசமும் இல்லை, வசதியும் இல்லை. வேறு வழியின்றி அதிகக் கட்டணம் செலுத்தினேன். அவன் என்னிடம் நேராகப் பூனாவரையில் இண்டர் வகுப்புக் கட்டணத்தை வசூல் செய்துவிட்டான். இந்த அநீதி என் மனத்தை உறுத்தியது.

காலையில் நாங்கள் முகல்ஸராய் வந்துசேர்ந்தோம். மகன்லா லுக்கு மூன்றும் வகுப்பில் இடம் கிடைத்துவிட்டது. அங்கிருந்த டிக்கட்டு கலெக்டரிடம் முழு விவரத்தையும் சொல்லி அவனிட மிருந்து ஓர் அத்தாட்சிக் கடிதம் கேட்டேன். அவன் கொடுக்க மறுத்துவிட்டான். நான் ரெயில்வே அதிகாரிக்கு அதிகக் கட்ட ணத்தைத் திருப்பிக்கொடுக்கும்படி விண்ணப்பம் செய்துகொண் டேன். அவரிடமிருந்து, "அத்தாட்சிக் கடிதம் இல்லாமல் அதிகக் கட்டணத்தை நாங்கள் திருப்பிக்கொடுப்பது வழக்கம் இல்லை,

ஆனால் இது உங்கள் விஷயமாதலால் திருப்பிக் கொடுக்கிறோம். பர்த்வானிலிருந்து முகல்ஸராய் வரைக்குமுள்ள அதிகக் கட்டணத்தை மட்டும் திருப்பிக்கொடுக்க முடியாது" என்ற கருத்து அடங்கிய பதில் கிடைத்தது.

இதற்குப் பிறகு மூன்றாம் வகுப்புப் பிரயாணங்களில் எனக்கு நேர்ந்த அநுபவங்களை ஒரு புத்தகமாக எழுதலாம். இந்தச் சந்தர்ப்பத்துக்கு வேண்டிய அளவு அவற்றைக் குறிப்பிட்ட பிறகு, இந்த அத்தியாயத்தில் அவற்றை விவரிக்கவேண்டியதில்லை. உடல் நிலை சரியாக இல்லாத காரணத்தால் என் மூன்றாம் வகுப்புப் பிரயாணம் தடைப்பட்டுப்போனது, எனக்கு எப்போதும் உறுத்துகிறது; உறுத்திக்கொண்டே இருக்கும்.* மூன்றாம் வகுப்புப் பிரயாணத்தில் ரெயில்வே உத்தியோகஸ்தர்களுக்குக் 'குலாம் போடுவது' ஒரு புறம் இருக்க, பிரயாணிகளின் முரட்டுத்தனம், அசுத்தம், தன்னலம், அறியாமை இவற்றினால் உண்டாகும் அநுபவங்களும் குறைவாக இருப்பதில்லை. பெரும்பாலும் தாம் முரட்டுத்தனமாக நடந்துகொள்வதையோ, அசுத்தம் செய்வதையோ, சுயநலத்தைச் சாதித்துக்கொள்வதையோ பிரயாணிகள் அறிவதே இல்லை என்பதுதான் வருந்தத் தக்க விஷயம். தாம் செய்வதெல்லாம் இயல்பானதே என்று அவர்கள் கருதுகிறார்கள்: சீர்திருத்தவாதிகள் என்று சொல்லப்படும் நாமும் இந்த விஷயங்களை அடியோடு சட்டை செய்வதில்லை.

மிகவும் களைத்துப்போய் ஏதோ ஒருவிதமாக நாங்கள் கல்யாண் ஜங்ஷன் போய்ச் சேர்ந்தோம். ஸ்நானத்துக்கு ஏற்பாடு செய்யலானேன். மகன்லாலும் நானும் ஸ்டேஷன் குழாயிலிருந்து தண்ணீர் நிரப்பி ஸ்நானம் செய்தோம். என் மனைவிக்கு நான் தக்க ஏற்பாடு செய்ய முயன்றுகொண்டிருக்கையில், இந்திய ஊழியர் சங்கத்தைச் சார்ந்த சகோதரர் கௌல் எங்களை அறிந்துகொண்டார். அவரும் பூனாவுக்குப் போகிறவர். அவர் என் மனைவியைக் குறிப்பிட்டு, "இவரை ஸ்நானம் செய்ய இரண்டாம் வகுப்பு அறைக்கு அழைத்துச் செல்வதுதான் சரி" என்றார். அவருடைய இந்த நல்லதனத்தைப் பயன்படுத்திக்கொள்ள எனக்குக் கூச்சமாக இருந்தது. என் மனைவிக்கு இரண்டாம் வகுப்பு அறையைப் பயன்படுத்திக்கொள்ளும் உரிமை இல்லை என்பது எனக்குத் தெரிந்திருந்தது. இருந்தும், இந்தப் பொருத்தமற்ற செய்கையில்

* இப்போது நீண்ட காலமாக, காந்தியடிகள் மூன்றாம் வகுப்பில்தான் பிரயாணம் செய்துவருகிறார்.

நான் அசட்டையாக இருந்துவிட்டேன். சத்தியத்தை வழிபடுபவன், சத்தியத்தை இந்த அளவுக்குத் தாண்டுவது கூட அழகல்ல. அங்கே போய் ஸ்நானம் செய்யவேண்டும் என்று மனைவி வற்புறுத்தவில்லை. ஆனால் கணவனின் மோகமாகிய பொற் கிண்ணம் உண்மையை மறைத்துவிட்டது.

# 53

## என் முயற்சி

பூனாவுக்குப் போய் உத்தரக் கிரியைகள் முதலியவை முடிந்ததும், 'சங்கத்தின் வேலையை இனி எப்படி நடத்துவது? நான் அதன் அங்கத்தினன் ஆவதா, கூடாதா?' என்று நாங்கள் யாவரும் யோசிக்கலானோம். இந்தச் சமயத்தில் என் தலையில் ஒரு பெரிய பொறுப்பு விழுந்திருந்தது. கோகலே உயிரோடு இருந்தபோது நான் சங்கத்தில் சேரவேண்டிய தேவையே இருக்கவில்லை. அவருடைய உத்தரவுக்கும் விருப்பத்துக்கும் அடங்கி இருக்கத்தான் நான் விரும்பினேன்: அந்த நிலை எனக்கும் பிடித்திருந்தது; ஏனெனில் இந்தியாவைப் போன்ற கொந்தளிக்கும் கடலில் குதிக்கும் போது, திறமை வாய்ந்த ஒரு மீகாமனுடைய உதவி எனக்குத் தேவையாக இருந்தது. கோகலேயைப் போன்ற மீகாமனின் நிழலில் நான் நல்ல பாதுகாப்பில் இருப்பதாகக் கருதினேன்.

இனி நான் சங்கத்தில் சேர்வதற்குக் கட்டாயம் முயலத்தான் வேண்டும் என்று என் மனம் கூறியது. கோகலேயின் ஆத்மா இதைத்தான் விரும்பும் என்று எண்ணினேன். நான் சிறிதும் கூச்சமின்றி உறுதியாகப் பிரயத்தனம் செய்தேன். அப்போது சங்க அங்கத்தினர்கள் யாவரும் அங்கே கூடியிருந்தனர். நான் அவர்களைச் சமாதானப்படுத்தி என் விஷயமாக அவர்களுக்கு இருந்த பயத்தை நீக்குவதற்கு ஆனவரை முயன்று பார்த்தேன். ஆனால் இந்த விஷயத்தில் அங்கத்தினர்களிடையே அபிப்பிராய பேதம் இருந்ததைக் கண்டேன். என்னைச் சங்கத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சிலர் சொல்ல, மற்றவர்கள் உறுதியோடு அதை எதிர்த்தனர். ஆனால் இரு சாராரின் உள்ளத்திலும் என்னிடம் இருந்த அன்புக்குக் குறைவில்லை. ஆனால் ஒன்று: என்னிடம் இருந்த அன்பைவிடச் சங்கத்தினிடம் அவர்களுக்கு இருந்த பக்தி ஒருவேளை மிஞ்சியிருக்கலாம்; எந்த நிலையிலும் அது என்னிடம் இருந்த அன்பைவிடக் குறைவாக இல்லை.

ஆதலால் எங்களிடையே நிகழ்ந்த விவாதங்கள் யாவும் இனியனவாகவே இருந்தன. வெறும் கொள்கையின்மீதே அவை எழுந்தவை. என்னை எதிர்த்த நண்பர்கள், தம்முடைய சிந்தனைகளுக்கும் என் சிந்தனைகளுக்குமிடையே ஆகாயத்துக்கும் பூமிக்குமுள்ள வித்தியாசம் இருப்பதாகக் கருதினார்கள். இதற்கு மேலும் அவர்கள் நினைத்தது என்னவென்றால், கோகலே எந்த நோக்கங்களுக்காகச் சங்கத்தை ஏற்படுத்தினாரோ அவற்றுக்கே நான் வருவதால் ஆபத்து வந்துவிடுமோ என்பதுதான். இயல்பாகவே இது அவர்கள் பொறுத்துக்கொள்ளக்கூடிய விஷயமாக இல்லை. நீண்ட வாக்குவாதத்திற்குப் பின்பு நாங்கள் எங்கள் இருப்பிடம் சென்றோம். சங்கத்தின் அடுத்த கூட்டம் வரைக்கும் கடைசி முடிவை அங்கத்தினர்கள் ஒத்திவைத்தார்கள்.

வீட்டுக்குத் திரும்பும்பொழுது நான் பெரிய சிந்தனைச் சுழலில் ஆழ்ந்தேன். பெரும்பான்மையான வாக்குகளின் பலத்தைக் கொண்டு நான் சங்கத்தில் சேருவது சரியா? கோகலேயிடம் எனக்குள்ள பக்தியை இது நிறைவேற்றியதாகுமா? பெரும்பான்மையோரின் வாக்கு எனக்கு எதிராக இருந்தால் சங்கத்தின் நிலைமையில் இடைஞ்சலை உண்டாக்க நான்தானே காரணமாக இருப்பேன்? சங்க அங்கத்தினர்களிடையே என்னைச் சேர்த்துக்கொள்ளும் விஷயத்தில் அபிப்பிராய பேதம் இருக்கும் வரையில், அதில் சேரும் பிடிவாதத்தை நானாக விட்டுவிடவேண்டும் என்பதும், இவ்விதமாக எதிர்க் கட்சியைத் தர்மசங்கடமான நிலையிலிருந்து விடுவிக்கவேண்டும் என்பதும் எனக்குத் தெளிவாகத் தென்பட்டன. சங்கத்தினிடமும் கோகலேயினிடமும் எனக்குள்ள பக்தியை வெளியிடுவதற்கு இதுதான் ஏற்ற வழியாக இருந்தது. அந்த ராத்மாவில் இந்த முடிவு ஏற்பட்டதுமே, நான் மறுகணத்தில் ஸ்ரீமான் சாஸ்திரியாருக்கு, "என்னை அங்கத்தினனுக்குவதற்காக நீங்கள் கூட்டம் கூட்டவேண்டாம்" என்று கடிதம் எழுதினேன். எதிரிக் கட்சிக்கு என்னுடைய இந்த முடிவு மிகவும் பிடித்தது. அவர்கள் தர்மசங்கடத்திலிருந்து தப்பினார்கள். அவர்களுக்கும் எனக்கும் இருந்த அன்பு பின்னும் உறுதியாயிற்று. சங்கத்தில் சேரும் விண்ணப்பத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, நான் சங்கத்தின் உண்மையான அங்கத்தினன் ஆனேன்.

சட்டப்படி நான் சங்க அங்கத்தினன் ஆகாதது சரியே என்று எனக்கு இப்போது அநுபவத்திலிருந்து தெரிகிறது. என்னை எதிர்த்தவர்கள் யாவரும் சரியான காரியமே செய்திருந்தார்கள். அவர்கள் கொள்கைகளுக்கும் என் கொள்கைகளுக்கும் வித்தியா

சம் இருப்பதை அநுபவம் காட்டியது. ஆனால் இந்தக் கொள்கை வித்தியாசங்களை அறிந்திருந்தும், எங்கள் ஆந்தரிக அன்புக்கு இடையூறுவது மனஸ்தாபமாவது எப்போதும் உண்டானதில்லை. கொள்கை வித்தியாசம் இருந்துங்கூட நாங்கள் சகோதரர்களாக வும் நண்பர்களாகவும் இருக்கிறோம். சங்கக் கட்டிடம் எனக்கு ஒரு யாத்திரை ஸ்தலமாகிவிட்டது. உலக நோக்கத்தின்படி நான் அதன் அங்கத்தினனாக இல்லையாயினும், ஆத்மார்த்தமாகப் பார்க் கும்போது நான் அங்கத்தினன்தான். உலக வழக்கிலுள்ள தொடர்பைவிட ஆத்மார்த்தமான தொடர்பு அதிக மதிப்பு வாய்ந் தது. ஆத்மிகமான தொடர்பு இல்லாத உலக வழக்கிலுள்ள தொடர்பு உயிரற்ற உடலைப் போன்றது.

# 54

## ஆசிரம ஸ்தாபனம்

சத்தியாக்கிரக ஆசிரமம் 25, மே 1915-இல் நிறுவப்பெற்றது. நான் ஹரித்துவாரத்தில் குடில் அமைத்துக்கொள்ளவேண்டும் என்பது ஸ்வாமி சிரத்தானந்தரின் அபிப்பிராயம். வைத்தியநாத க்ஷேத் திரத்தில் டேராப் போட்டுக்கொள்ளவேண்டும் என்பது கல்கத் தாவிலுள்ள சில நண்பர்களின் விருப்பம். ராஜகோட்டில் இருக்க வேண்டும் என்று இன்னும் சில நண்பர்கள் வற்புறுத்தினார்கள்.

ஆனால் நான் அஹமதாபாத் வழியாகச் சென்றபோது, பெரும் பாலான நண்பர்கள், "நீங்கள் இங்கேயே தங்கிவிடுங்கள்" என் றார்கள். ஆசிரமச் செலவையும் அவர்கள் தங்கள் பொறுப்பில் ஏற்றுக்கொண்டனர். ஆசிரமத்திற்கேற்ற வீட்டையும் தாங்களே தேடிக் கொடுப்பதாகச் சமாதானம் கூறினர். எனவே நான் அஹமதாபாத்தில் நிலைத்துவிட்டேன். குஜராத்தியாக இருந்த தனால் குஜராத்தி மொழியின் வாயிலாகத் தாய்நாட்டுக்கு அதிக அளவில் தொண்டு செய்ய முடியும் என்று நான் எண்ணியிருந் தேன். அஹமதாபாத் முற்காலத்தில் கைத்தறி நெசவுக்குப் பெயர் பெற்ற இடமாதலால் ராட்டை வேலையும் இங்கே நன்றாக நடக்கும்; குஜராத்தின் தலைநகரமாதலால் இங்குள்ள பணக்கா ரர்கள் அதிகப் பண உதவி செய்ய முடியும் என்ற எண்ணங்க ளும் இருந்தன.

அஹமதாபாத் நண்பர்களுடன் ஆசிரம விஷயமாகப் பேசிய பொழுது தீண்டாதவர்கள் பிரச்னையும் வந்தது. "தகுதியுடைய தீண்டாத சகோதரர் யாராவது ஆசிரமத்தில் சேர விரும்பி

ஞல், அவரை நான் கட்டாயம் சேர்த்துக்கொள்வேன்" என்று அவர்களிடம் தெளிவாகச் சொன்னேன்.

"உங்களுடைய நிபந்தனைகளுக்கேற்ப நடந்து கொள்ளும் தீண்டாதவர் அப்படியொன்றும் வழியிலே இறைந்து கிடக்க வில்லை" என்று சொல்லி ஒரு வைஷ்ணவ நண்பர் தம் மனத்தைச் சமாதானப்படுத்திக்கொண்டார். கடைசியில் அஹமதாபாத்தில் தங்குவதாக முடிவாயிற்று. பிறகு நாங்கள் வீடு தேடலானோம். ஸ்ரீ ஜீவன்லால் பாரிஸ்டரின் வீட்டை வாடகைக்குப் பேசி முடித் தோம். அது கோசரப் என்ற இடத்தில் இருக்கிறது. என்னை அஹமதாபாத்தில் நிலைக்க வைத்தவர்களில் முன்னணியில் இருப்ப வர் அவர்தாம்.

இதன் பிறகு ஆசிரமத்திற்குப் பெயர் வைக்கும் பிரச்னை எழுந்தது. நண்பர்களோடு கலந்து ஆலோசித்தேன். ஸேவாசிர மம், தபோவனம் முதலிய பெயர்களைச் சொன்னார்கள். ஸேவா சிரமம் என்ற பெயர் எங்களுக்குப் பிடித்திருந்தது; ஆனால் அதி லிருந்து சேவை முறை இன்னதென்பது விளங்கவில்லை. தபோ வனம் என்ற பெயரை நாங்கள் எப்படி ஒப்புக்கொள்வது? தவம் எங்களுக்குப் பிரியமாக இருந்தபோதிலும் அந்தப் பெயர் எங்க ளுக்குப் பளுவாகத் தோன்றிற்று. எங்களுடைய நோக்கம் சத்தி யத்தை ஆராய்வது; அதில் ஆக்கிரகம் (உறுதி) வைத்துக்கொள் வது; தென்னாப்பிரிக்காவில் நாங்கள் பயன்படுத்திய முறையைப் பாரத நாட்டினருக்கு அறிவிப்பது. அதன் சக்தியும் ஆதிக்கமும் எந்த அளவுக்குப் பரவக்கூடும் என்பதையும் நாங்கள் ஆராய வேண்டியிருந்தது. எனவே நானும் என் தோழர்களும் சத்தியாக் கிரக ஆசிரமம் என்ற பெயரைத் தேர்ந்தெடுத்தோம். அந்தப் பெயரில் சேவை, அதன் முறை ஆகிய இரண்டின் கருத்தும் தானே அடங்கிவிட்டது.

ஆசிரமத்தை நடத்துவதற்குச் சட்டதிட்டங்கள் தேவையாக இருந்தன. நாங்கள் நகல் விதிகள் தயாரித்துப் பல இடங்களி லிருந்து அபிப்பிராயம் கேட்டிருந்தோம். எங்களுக்கு வந்த அபிப்பிராயங்கள் பலவற்றிற்குள் ஸர் குருதாஸ் பானர்ஜியின் அபிப்பிராயம் எனக்கு ஞாபகம் இருக்கிறது. ஆசிரமவிதிகள் அவ ருக்குப் பிடித்திருந்தன. அதில் இருந்த விரதங்களோடு வணக்க மாகிய விரதத்தையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். நம் இளைஞர்கள் குழுவில் வணக்கம் குறைவாக இருப்பதாக அவருடைய கடிதம் சூசிப்பித்தது. பார்க்கும் இடத்தி லெல்லாம் வணக்கம் இல்லாமையை நானும் உணர்ந்து வந்திருந்

தேன். ஆனால் விரதத்தில் வணக்கத்துக்கு இடங்கொடுப்பதால் வணக்கமே இல்லாமற் போய்விடுமோ என்று தோன்றிற்று. வணக்கம் என்றால் சூனிய நிலை என்று அர்த்தம்.

சூனிய நிலையைப் பெறுவதற்கு வேறு விரதங்கள் உள்ளன. சூனிய நிலை மோக்ஷ நிலையாகும். மோக்ஷத்தை விரும்புகிறவனுடைய அல்லது தொண்டனுடைய ஒவ்வொரு செயலிலும் வணக்கம் அதாவது அகங்காரமற்ற தன்மை இல்லாவிடில் அவன் மோக்ஷத்தை விரும்புகிறவன் அல்ல, தொண்டன் அல்ல; அவன் சுயநலமுள்ளவன், அகங்காரமுள்ளவன்.

ஆசிரமத்தில் அப்பொழுது சுமார் பதின்மூன்று தமிழர்கள் இருந்தனர். என்னோடு தென்னாப்பிரிக்காவிலிருந்து தமிழ் இளைஞர்கள் ஐவர் வந்திருந்தனர். இவர்களோடு இந்த வட்டாரத்திலிருந்து சுமார் இருபத்தைந்து பேர்களும் சேர்ந்து ஆசிரமம் ஆரம்பமாயிற்று. எல்லோரும் ஒரே சாப்பாட்டுக் கூடத்தில் உணவருந்தினர். யாவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போல வாழ்க்கை நடத்த முயன்றுவந்தோம்.

## 55

### சோதனை

ஆசிரமம் ஸ்தாபித்த சில நாட்களுக்குள்ளேயே நாங்கள் எதிர்பாராத ஒரு சோதனை வந்தது. ஒரு நாள் எனக்குச் சகோதரர் அமிருதலால் டக்கரிடமிருந்து, "நாணயமுள்ள ஓர் ஏழை ஹரிஜனக் குடும்பம் தங்கள் ஆசிரமத்தில் வந்து இருக்க விரும்புகிறது. தாங்கள் அவர்களுக்கு இடம் கொடுக்க முடியுமா?" என்று கடிதம் வந்தது.

கடிதத்தைப் படித்து நான் திடுக்கிட்டேன். ஏனெனில் டக்கர் பாப்பா போன்றவர்களின் சிபாரிசோடு ஒரு ஹரிஜனக் குடும்பம் இவ்வளவு சீக்கிரத்தில் வரும் என்று அடியோடு எதிர்பார்த்திருக்கவில்லை. என் தோழர்களுக்கு அந்தக் கடிதத்தைக் காட்டினேன். அவர்கள் அதை வரவேற்றார்கள். அந்தக் குடும்பத்தினர் ஆசிரம விதிகளின்படி நடந்துகொள்ளத் தயாராக இருந்தால் நாங்கள் அவர்களை வைத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்" என்று சகோதரர் அமிருதலாலுக்குக் கடிதம் எழுதினேன்.

தூதாபாயும், அவர் மனைவி தானீபஹனும், பால்முகச் சிறுமியான லக்ஷ்மியும் ஆசிரமத்துக்கு வந்தனர். தூதாபாய் பம்பாயில் உபாத்தியாயராக இருந்தவர். ஆசிரம விதிகளின்படி நடந்து

கொள்ள அவர் தயாராக இருந்தார். எனவே, அவரை ஆசிரமத்தில் சேர்த்துக்கொண்டோம். ஆனால் உதவி செய்யும் நண்பர்கள் சமூகத்தில் இதனால் பெரிய கலவரம் ஏற்பட்டது. பங்களாவின் சொந்தக்காரருடைய பகுதியைச் சேர்ந்த கிணற்றிலிருந்து தண்ணீர் எடுப்பது சங்கடமாகிவிட்டது. கவலை இறைப்பவனுக்குக் கூட எங்கள் தண்ணீர் மேலே தெறித்தால் தீட்டு வந்துவிடும். அவன் எங்களைத் திட்ட ஆரம்பித்தான். தூதாபாயையும் அவன் தொந்தரவுபடுத்தினான். 'திட்டுக்களைப் பொறுத்துக் கொண்டு மன உறுதியோடு தண்ணீர் இழுத்து நிரப்பவேண்டும்' என்று எல்லோரிடமும் சொல்லிவைத்தேன். நாங்கள் பேசாமல் திட்டுக்களைக் கேட்டுக்கொள்வதைக் கண்டு, கவலை ஓட்டுகிறவனுக்கு வெட்கம் உண்டாயிற்று. அவன் எங்கள் ஜோலிக்கு வருவதை விட்டுவிட்டான். ஆயினும் பண உதவி கிடைப்பது இதனால் நின்றுபோயிற்று. ஆசிரம விதிகளின்படி ஒழுகும் தீண்டாதவர்கள் பிரவேசிப்பதைப்பற்றி முன்னாலேயே எதிர்ப்பைக் கொண்டுவந்த சகோதரர்கள், ஆசிரமத்தில் தீண்டாதவன் ஒருவன் வந்துவிடுவான் என்று எதிர்பார்க்கவில்லை. பண உதவி ஒருபுறம் நின்றுபோக, மறுபுறம் எங்களைச் சாதியிலிருந்து தள்ளிவிட்ட வதந்தி என் காதில் விழுந்தது. 'நம்மைச் சாதியைவிட்டுத் தள்ளினாலும் சரி, எங்கிருந்தும் பண உதவி கிடைக்காமற் போனாலும் சரி, நபம் அஹமதாபாத்தைவிட்டு நகரக்கூடாது. தீண்டாதவர்களின் சேரியில் போய் வசிப்போம். அங்கே கிடைப்பதைக் கொண்டோ அல்லது ஏதாவது தொழில் செய்தோ சமாளித்துக் கொள்வோம்' என்று என் நண்பர்களோடு கலந்து யோசனை செய்து வைத்திருந்தேன்.

"அடுத்த மாத ஆசிரமச் செலவுக்கு நம்மிடம் பணம் இராது" என்று மகன்லால் ஒரு நாள் எனக்கு அறிவித்தார். "அப்படியானால் நாம் சேரியில் சென்று வசிப்போம்" என்று தைரியமாய்ப் பதில் சொன்னேன்.

இது எனக்கு முதல் தடவையாக வந்த ஆபத்து அல்ல. ஆபத்து நேர்ந்தபோதெல்லாம் கடைசியில் அந்தச் சியாமளரூபன் எங்கிருந்தாவது-உதவியை அனுப்பியே வந்திருக்கிறான்.

மகன்லால் இதை அறிவித்த சில நாட்களுக்கெல்லாம், காலை நேரத்தில் ஒரு பையன் வந்து வெளியே ஒரு மோட்டார் நின்றிருப்பதாகவும், ஒரு ஸேட் என்னைக் கூப்பிடுவதாகவும் தகவல் சொன்னான். நான் மோட்டாரின் அருகில் சென்றேன். "நான் ஆசிர

மத்துக்கு ஏதோ கொஞ்சம் உதவி செய்ய விரும்புகிறேன். நீங்கள் வாங்கிக்கொள்வீர்களா?'' என்று ஸேட் என்னைக் கேட்டார்.

''ஓ, நீங்கள் கொடுத்தால் நான் கட்டாயம் வாங்கிக்கொள்வேன். இப்போது அது எனக்குத் தேவையாகவும் இருக்கிறது.''

''நாளைக்கு இதே சமயத்தில் நான் வந்தால் உங்களை ஆசிரமத்திலேயே பார்க்கலாம் அல்லவா?''

''பார்க்கலாம்.''

ஸேட் தம் வீட்டுக்குப் போனார். மறுநாள் குறித்த நேரத்தில் ஹார்ன் சப்தம் கேட்டது. குழந்தைகள் எனக்குத் தகவல் கொடுத்தனர். அந்த ஸேட் உள்ளே வரவில்லை. நான்தான் அவரைப் பார்க்கப் போனேன். என் கையில் 13,000 ரூபாய்க்கு நோட்டுக்களை வைத்துவிட்டு அவர் புறப்பட்டுவிட்டார். இந்த உதவியை நான் அடியோடு எதிர்பார்க்கவில்லை. உதவி செய்த இந்த மாதிரியும் புதிதாக இருப்பதைக் கண்டேன். இதற்கு முன்னால் அவர் ஆசிரமத்தில் எப்போதும் காலடி எடுத்து வைத்ததில்லை. ஒரு தடவை அவரை முன்னாலேயே பார்த்திருந்ததாக எனக்கு ஞாபகம் இருக்கிறது. அவர் ஆசிரமத்துக்குள் வரவும் இல்லை; ஒன்றும் கேட்கவும் இல்லை. வெளியிலிருந்தே ரூபாய் கொடுத்துவிட்டுப் போனார். எனக்கு இத்தகைய முதல் அநுபவம் இதுதான். இந்த உதவியினால் தீண்டாதவர்களின் சேரிக்குப் போகும் யோசனை அப்போதைக்கு நின்றிருந்தது. சுமார் ஒரு வருஷச் செலவுக்கு வேண்டிய பணம் எனக்குக் கிடைத்திருந்தது.

ஆனால் வெளியில் இருந்தாற்போலவே ஆசிரமத்துக்குள்ளும் கலவரம் ஏற்பட்டது. தென்னாப்பிரிக்காவில் தீண்டாதவர் முதலியோர் என் வீட்டுக்கு வந்து போவதும் உணவருந்துவதும் வழக்கமாயினும், இந்த இடத்தில் தீண்டாதவர் குடும்பம் வந்ததும், வந்து வசித்ததும் என் மனைவிக்கும் மற்றப் பெண்களுக்கும் பிடிக்கவில்லை. தானிபஹனிடம் அவர்களுக்கு அருவருப்பு இல்லை என்றாலும், சிறப்பாக இம்மாதிரி விஷயங்களில் விழிப்பாக இருக்கும் என் நுட்பமான கண்களும் கூர்மையான செவிகளும், அவர்களுடைய அசட்டையைப் பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் இருந்தன. பண உதவி நின்றுபோனதால் நான் பயப்படவும் இல்லை; கவலைப்படவும் இல்லை. ஆனால் இந்த உள் கலகம் சிரமமாக இருந்தது. தானிபஹன் சாதாரணப் பெண். தூதாபாயின் படிப்பும் சாதாரணந்தான். ஆனால் அவர் அதிக அறிவாளி. அவர் வாழ்க்கை எனக்குப் பிடித்திருந்தது. சில சமயம் அவருக்குக் கோபம் வந்துவிடுமாயினும் பொதுவாக அவருடைய பொறு

மையைப்பற்றி என் மனத்தில் நல்ல அபிப்பிராயமே ஏற்பட்டிருந்தது. "அற்ப அவமானங்களை நாம் சகித்துக்கொள்ளவேண்டும்" என்று தூதாபாயிடம் சொன்னேன். அவர் அதைப் புரிந்து கொண்டு தம் மனைவியையும் சகித்துக்கொள்ளத் தூண்டினார்.

இந்தக் குடும்பத்தை ஆசிரமத்தில் வைத்துக்கொண்டதனால் ஆசிரமம் பல விஷயங்களைக் கற்றுக்கொண்டது. ஆசிரமத்தில் தீண்டாமைக்கு இடமில்லை என்பது ஆரம்பகாலத்திலேயே நன்கு தெளிவாகிவிட்டதால் ஆசிரமத்துக்கு வரம்பு ஏற்பட்டுவிட்டதோடு இந்த முறையில் அதன் வேலை மிகவும் எளிதாகிவிட்டது. இவ்வளவு இருந்தும், ஆசிரமச் செலவு வளர்ந்துங்கூட, உயர் வகுப்பு ஹிந்துக்களே அதிக உதவி செய்துவந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, தீண்டாமையின் வேர் நன்றாக ஆட்டம் கொடுத்துவிட்டது என்று தெளிவாகப் புலப்படுகிறது.

## 56

## ஒப்பந்தக் கூலிமுறை ஒழிந்தது

உட்புயல்களினின்றும் வெளிப்புயல்களினின்றும் தப்பிய இந்தப் புது ஆசிரமத்தை விட்டு, இப்போது நாம் ஒப்பந்தக் கூலிமுறையைப் பற்றி யோசிக்கவேண்டிய சந்தர்ப்பம் வந்திருக்கிறது. ஐந்து வருஷத்துக்கோ அல்லது அதற்குக் குறைவாகவோ வேலை செய்வதாக ஒப்பந்தம் எழுதிக்கொடுத்து இந்தியாவிலிருந்து வெளி நாட்டுக்குப் போகிறவனுக்கு ஒப்பந்தத் தொழிலாளி என்று பெயர். நேட்டாலில் இவ்விதத் தொழிலாளிகளின்மீது விதித்திருந்த 3-பவுன் தலைவரியை 1914-இல் எடுத்துவிட்டார்கள்; ஆயினும் இந்தக் கூலிமுறை மட்டும் இன்னமும் நின்றபாடில்லை. 1916-இல் பாரதபூஷணரான பண்டித மாளவீயர் இந்தப் பிரச்னையைச் சட்டசபையில் கிளப்பினார். லார்டு ஹார்டிஞ்ச் அவருடைய தீர்மானத்தை ஒப்புக்கொண்டு, "இந்த முறையை 'உரிய காலத்தில்' எடுத்துவிடுவதாக மன்னர்பிரான் சார்பில் வாக்குறுதி கிடைத்திருக்கிறது" என்று அறிவித்தார். 'இந்தக் கூலிமுறையை உடனே ஒழித்துவிட முடிவு செய்யவேண்டும்' என்பது என் தெளிவான அபிப்பிராயம். இந்தியா தன் அஜாக்கிரதையினால் இந்த வழக்கத்தை ஆண்டுகள் கணக்காகப் பொறுத்துவந்திருக்கிறது; ஆயினும் இதை இப்பொழுது ஒழித்துவிடும் அளவுக்கு ஜனங்களிடம் விழிப்பு ஏற்பட்டிருப்பதை நான் கண்டேன். இதுசம்பந்தமாகப் பல தலைவர்களோடு பேசி

னேன். சில பத்திரிகைகளில் இதைப்பற்றி எழுதினேன். பொது ஜன அபிப்பிராயம் இந்தப் பழக்கத்தை ஒழித்துவிடும் சார்பிலே இருப்பதைக் கண்டேன். 'இதில் சத்தியாக்கிரகம் ஏதாவது உபயோகப்படுமா?' என்ற கேள்வி என் மனத்தில் எழுந்தது. அதை உபயோகிக்கும் விஷயத்தில் எனக்குச் சிறிதும் சந்தேகம் இருக்கவில்லை; எப்படிப் பயன்படுத்துவது என்பதுதான் எனக்குப் புலப்படவில்லை.

இதனிடையில் 'உரிய காலத்தில்' என்ற சொற்களின் கருத்தையும் வைஸ்ராய் தெளிவுபடுத்தினர். "மற்றோர் ஏற்பாடு செய்வதற்கு எவ்வளவு காலம் பிடிக்குமோ அவ்வளவு காலத்திற்குள் இந்த முறையை வேரோடு ஒழித்துவிடுவோம்" என்பது அவருடைய வியாக்கியானம். இதன்படி பிப்ரவரி, 1917-இல் பண்டித மாளவியர் ஒப்பந்தக் கூலிமுறையை உடனே ஒழிக்க மசோதா கொண்டுவர மத்திய சட்டசபையின் அநுமதியை வேண்டினர். வைஸ்ராய் அதை மறுத்துவிட்டார். இதுவிஷயமாக நான் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்ய ஆரம்பித்தேன்.

சுற்றுப் பயணம் பம்பாயிலிருந்து தொடங்கியது. ஏகாதிபத்தியப் பிரஜா உரிமைச் சங்கத்தின் ஆதரவில் ஒரு கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றவேண்டியிருந்த தீர்மானங்களைத் தயாரிப்பதற்காக ஒரு கமிட்டி ஏற்பட்டது. ஒப்பந்தக் கூலிமுறையை ஒழித்துவிடவேண்டும் என்று அந்தத் தீர்மானம் கோரியது. ஆனால் எப்பொழுது ஒழிப்பது என்பது கேள்வி. இவ்விஷயமாக மூன்று யோசனைகள் தோன்றின: (1) 'கூடிய சீக்கிரத்தில்', (2) 'ஜூலை 31-ஆம் தேதிக்குள்', (3) 'உடனே'. ஜூலை 31-ஆம் தேதிக்குள் என்ற யோசனை என்னுடையது. நான் ஒரு தேதியைக் குறிப்பிடவேண்டியிருந்தது. அந்தத் தவணைக்குள் ஒன்றும் நடக்காவிட்டால், அதற்குமேல் என்ன செய்வது, என்ன செய்ய முடியும் என்று சிந்தித்து முடிவுகட்டலாமே. 'உடனே' என்பது ஸர் லல்லூபாய் சொன்ன யோசனை. "31-ஆம் தேதிக்குள் என்று சொல்வதைவிட, உடனே என்று சொல்வதால் 'வெகு விரைவில்' என்ற கருத்து வருகிறது" என்று அவர் சொன்னர். "உடனே என்ற சொல்லின் கருத்தை ஜனங்கள் புரிந்துகொள்ளமாட்டார்கள். அவர்களிடமிருந்து வேலை வாங்கிக்கொள்ளவேண்டுமானுல் தீர்மானமான ஒரு சொல்லை உபயோகிக்கவேண்டும். உடனே என்பதற்கு எல்லோரும் தத்தம் இஷ்டப்படி பொருள் கொள்ளமுடியும். அதற்கு

அரசாங்கத்தார் ஓர் அர்த்தம் செய்வார்கள். ஜனங்கள் வேறு அர்த்தம் செய்வார்கள். ஆனால் ஜூலை 31-க்குள் என்பதற்கு யாவரும் ஒரே அர்த்தம் செய்வார்கள். அந்தத் தேதிவரையில் ஒன்றும் முடிவாகாவிட்டால் அதற்குமேல் என்ன செய்வது என்பதை நாம் ஆலோசிக்க முடியும்" என்று அவருக்குச் சமாதானம் சொல்ல முயன்றேன். எனது இந்த வாதம் டாக்டர் ரீடுக்கு உடனே பொருத்தமாகப் பட்டது. கடைசியில் ஸர் லல்லூபாய்க்கும் அது பிடித்தது. தீர்மானத்தில் அந்தத் தேதியையே குறிப்பிட்டோம். கூட்டத்தில் அந்தத் தீர்மானம் நிறைவேறியது. எல்லா இடங்களிலும் 'ஜூலை 31' என்ற காலவரையறை முழங்கியது.

அந்தச் சமயத்தில் நான் தனியாகவே பிரயாணம் செய்ததனால் எனக்கு அபூர்வமான அநுபவங்கள் ஏற்பட்டன. ரகசியப் போலீஸார் என்னைத் தொடர்ந்துகொண்டே இருந்தனர். ஆனால் அவர்களோடு நான் சச்சரவு செய்யவேண்டிய தேவையே இருக்கவில்லை. என்னிடம் மறைத்துவைத்துக்கொள்ளக்கூடியது ஏதும் இல்லாததால் அவர்களும் என்னைத் தொந்தரவுபடுத்தவில்லை. நானும் அவர்களைத் தொந்தரவு செய்யவில்லை. நல்ல வேளையாக அப்பொழுது மகாத்மா என்று நான் முத்திரை குத்தப்படவில்லை. ஆனால் ஜனங்கள் என்னை அறிந்திருந்த இடங்களில் இந்தப் பெயரைச் சொல்லியே கூச்சலிட்டுவந்தார்கள்.

ஒரு தடவை ரெயிலில் போகையில் ரகசியப் போலீஸார் பல ஸ்டேஷன்களில் என் டிக்கட்டைப் பார்க்க வந்து நம்பரைக் குறித்துக்கொண்டார்கள். அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் உடனே பதில் சொன்னேன். என்னோடு பிரயாணம் செய்தவர்கள் என்னை ஒரு நேர்மையான சாது அல்லது பக்கீர் என்று எண்ணினார்கள். இரண்டு மூன்று ஸ்டேஷன்களில் அவர்கள் என்னைத் தொடர்ந்துவந்ததைக் கண்ட பிரயாணிகள் கோபங்கொண்டு அந்தப் போலீஸ் அதிகாரிகளைத் திட்டி, "பாவம்! இந்தச் சாதுவை வீணாக ஏன் துன்புறுத்துகிறீர்கள்?" என்று அதட்டினார்கள். என்னிடம், "இந்தத் துஷ்டர்களுக்கு டிக்கட்டைக் காட்டாதே" என்று சொன்னார்கள்.

"அவர்கள் டிக்கட்டைப் பார்ப்பதனால் எனக்கு ஒரு கஷ்டமும் இல்லை. அவர்கள் தம் கடமையைச் செய்கிறார்கள். அதனால் எனக்கு எவ்விதத் துன்பமும் இல்லை" என்று அந்தப் பிரயாணிகளிடம் நிதானமாகச் சொன்னேன். அவர்கள் மனத்தில் என் பேச்சுப் பதியவில்லை. அவர்கள் என்மீது பின்னும் இரக்கம்

கொண்டு, "நிரபராதிகளைக்கூட இவர்கள் கஷ்டப்படுத்துவதைப் பாருங்கள்!" என்று தமக்குள் சொல்லிக்கொண்டார்கள்.

லாகூரிலிருந்து டில்லி வரையில் ரெயிலில் இருந்த கும்பலினுலும் கஷ்டங்களினுலும் எனக்கு மிகவும் கசப்பான அநுபவம் ஏற்பட்டது. கராச்சியிலிருந்து லாகூர் வழியாகக் கல்கத்தா சென்றேன். லாகூரில் வண்டி மாற்ற வேண்டியிருந்தது. இங்கே வண்டியில் ஏற என் சாமர்த்தியம் பயன்படவில்லை. பிரயாணிகள் பலாத்காரமாக இடித்துத் தள்ளிக்கொண்டு வந்தார்கள். கதவு பூட்டியிருந்தால் ஜன்னல் வழியாக உள்ளே குதிப்பார்கள். நான் குறிப்பிட்ட தேதியில் கல்கத்தா போய்ச் சேரவேண்டியது அவசியமாயிருந்தது. இந்த வண்டி தவறிவிட்டால் நான் அங்கே போய்ச் சேரமுடியாது. இடம் கிடைக்கும் என்ற ஆசையை நான் விட்டுவிட்டேன். எனக்கு எவனும் வண்டியில் இடம் கொடுக்கவில்லை. கடைசியில் நான் இடம் தேடுவதைக் கண்ட ஒரு போர்ட்டர், "பன்னிரண்டணுக் கொடுத்தால் உன்னை ஏற்றிவிடுகிறேன்" என்று சொன்னுன். "இடம் தேடிக்கொடுத்தால் கட்டாயம் கொடுக்கிறேன்" என்று சொன்னேன். அந்தப் போர்ட்டர், பாவம்! அந்தப் பிரயாணிகளிடம் கெஞ்சிக் கூத்தாடியும் யாரும் எனக்கு இடம் தரத் தயாராயில்லை. வண்டி புறப்படும் சமயம். அப்போது சில பிரயாணிகள், "இங்கே இடம் இல்லை; ஆனுல் உள்ளே தள்ள முடியுமானுல் தள்ளிவிடு. நின்றுகொண்டு வரட்டும்" என்று சொன்னுர்கள். "என்ன ஐயா?" என்று போர்ட்டர் என்னைக் கேட்டான். "சரி தள்ளிவிடு!" என்று சொன்னேன். அவன் என்னைத் தூக்கி ஜன்னல் வழியாக உள்ளே தள்ளினுன். நான் வண்டியில் நுழைந்தேன். அவன் பன்னிரண்டணுச் சம்பாதித்தான். அன்றிரவை நான் மிகவும் சிரமத்தோடு கழித்தேன். மற்றப் பிரயாணிகள் எப்படியோ ஒரு விதமாக உட்கார்ந்துவிட்டார்கள். ஆனுல் நான் மேல்தட்டின் சங்கிலியைப் பிடித்துக்கொண்டு நின்றுகொண்டே இருந்தேன். இடையிடையே பிரயாணிகள், "அடே, ஏன் நிற்கிருய்? உட்காருவதற்கென்ன?" என்று விரட்டுவார்கள். "உட்கார இடமில்லை" என்று பல தடவை சொல்லியும் அவர்களுக்கு நான் நிற்பதுகூடச் சகிக்கவில்லை. தாங்கள் மட்டும் மேல்தட்டில் தாராளமாகக் காலை நீட்டிப் படுத்திருந்தும் என்னை அவர்கள் தொந்தரவு செய்து வந்தார்கள். அவர்கள் என்னைக் கேட்டபோதெல்லாம் நான் சாந்தமாகப் பதில் சொன்னேன். இதனுல் அவர்கள் கொஞ்சம் தணிந்து, என் பேர் ஊர் முதலியவற்றைக் கேட்கலானுர்கள். நான் என் பெயரைச் சொன்னபோது

அவர்கள் பெரிதும் வெட்கமுற்றார்கள். என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு உடனே இடம் கொடுத்தார்கள். 'பொறுத் திருந்தவன் பூமி ஆள்வான்' என்ற பழமொழி எனக்கு ஞாபகம் வந்தது அப்போது நான் மிகவும் களைத்துப் போயிருந்தேன். என் தலை சுற்றியது. உட்காருவதற்கு உண்மையாகவே இடம் தேவையாக இருந்த சமயத்தில், இறைவன் அதற்கு வேண்டிய சௌகரியத்தைச் செய்து கொடுத்தான்.

இவ்வாறு உதை இடிகள் பட்டுக்கொண்டு, குறித்த நேரத்தில் கல்கத்தா போய்ச் சேர்ந்தேன். காஸிம் பஜார் மகாராஜா தம் அரண்மனையில் தங்கும்படி எனக்கு அழைப்பு அனுப்பியிருந்தார். கல்கத்தாவில் நடந்த பொதுக்கூட்டத்துக்கும் அவர் தாம் தலைமை வகித்தார். கராச்சியைப் போலவே இங்கும் ஜனங்களின் உற்சாகம் பொங்கியது. கூட்டத்தில் சில ஆங்கிலேயரும் வந்திருந்தனர். ஜூலை 31-ஆம் தேதிக்கு முன்னால் கூலிமுறை நிறுத்தப்பட்டதாக அறிக்கை வெளியாயிற்று. 1894-இல் இந்த முறையை எதிர்ப்பதற்காக முதல் விண்ணப்பத்தை நான் தயாரித்திருந்தேன். என்றாவது ஒரு நாள் இந்தப் 'பாதி அடிமைத்தனம்' கட்டாயம் ஒழிந்து போகும் என்று நம்பியிருந்தேன். 1894-இல் ஆரம்பித்த இந்தக் காரியத்தில் பலர் உதவியிருந்தும், இந்தத் தடவை நாங்கள் செய்த முயற்சியில் தூய சத்தியாக்கிரகம் கலந்திருந்தது என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது.

## 57

### அவுரிக் கறை

சம்பாரன் ராஜா ஜனகனுடைய பூமி. அங்கே மாந்தோப்புகள் ஏராளமாக இருப்பதுபோலவே 1917-இல் அவுரித் தோட்டங்களும் இருந்தன. சம்பாரன் குடியானவர்கள் தாம் பயிரிடும் நிலத்தில் 3/20 பங்கில் நிலத்தின் சொந்தக்காரனுக்காக அவுரி பயிரிட்டுக் கொடுக்க வேண்டும். இப்படிச் செய்ய அவர்கள் சட்டப்படி கடமைப்பட்டிருந்தார்கள். இதை அங்கே 'தீன் கட்டியா' என்று சொல்வார்கள். அங்கே 20 கட்டாக்கள் சேர்ந்தது ஓர் ஏகர். அதில் மூன்று கட்டாக்கள் அவுரி பயிரிட வேண்டும். ஆதலால் இந்த முறைக்குத் 'தீன் கட்டியா' என்று பெயர். சம்பாரன் போவதற்கு முன்னால் எனக்கு அதன் பெயர் கூடத் தெரியாது என்பதை இங்கே நான் குறிப்பிட வேண்

டும். அங்கே அவுரி பயிரிடுகிறார்கள் என்பதும் எனக்குத் தெரியாது என்றே சொல்லலாம். அவுரிப் பொட்டலங்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் அவை சம்பாரனிலிருந்து வருகின்றன என்பதும், அவற்றிற்காக ஆயிரக்கணக்கான குடியானவர்கள் அங்கே துன்புறுகிறார்கள் என்பதும் எனக்கு அடியோடு தெரியா. ராஜகுமார் சுக்ல் என்ற குடியானவர் ஒருவர் சம்பாரனில் வசித்துவந்தார். இந்த அவுரிப் பயிர் செய்வதில் அவர் அநுபவித்த கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல. அந்தத் துன்பம் அவர் மனத்தை உறுத்திக்கொண்டிருந்தது. எல்லோருடைய நன்மையையும் வேண்டி இந்த அவுரிக்கறையைப் போக்கவேண்டும் என்ற உற்சாகம் அவருக்கு உண்டாயிற்று. நான் லக்னௌ காங்கிரஸுக்குப் போயிருந்தபோது இந்தக் குடியானவர் என்னைப் பிடித்துக்கொண்டார். "வக்கீல் ஐயா உங்களிடம் எல்லா விவரங்களையும் சொல்வார்" என்று கூறி, என்னைச் சம்பாரனுக்கு வரவேண்டும் என்று வற்புறுத்தினார்.

இந்த வக்கீல் ஐயா, சம்பாரனில் என் அன்புள்ள தோழரும் பீஹாரில் பொதுநல வாழ்க்கைக்கு உயிராக இருந்தவருமான விரஜகிசோர் பாபுவே. ராஜகுமார் சுக்ல் அவரை என் விடுதிக்கு அழைத்து வந்தார். அவர் கறுப்பு அல்பாகா கோட்டும் நிஜாரும் அணிந்திருந்தார். அவரைப்பற்றி என் மனத்தில் நல்ல எண்ணம் அவ்வளவாக உண்டாகவில்லை. இந்த அப்பாவியான குடியானவனைக் கொள்ளையடிக்கும் வக்கீல்களில் ஒருவராக இருப்பார் என்று கருதினேன்.

அவரிடம் சம்பாரனைப்பற்றி நான் சிறிது தெரிந்துகொண்டதும், என் வழக்கப்படி, "நான் நேரில் வந்து முழுநிலைமையையும் பார்க்காதவரையில் ஒன்றும் அபிப்பிராயம் சொல்ல முடியாது. நீங்கள் காங்கிரஸில் இதைப்பற்றிப் பேசித் தீர்மானம் கொண்டுவாருங்கள். ஆனால் என்னை இப்போதைக்கு விட்டு விடுங்கள்" என்றேன். ராஜகுமார் சுக்ல் காங்கிரஸின் உதவி கிடைக்கவேண்டுமென்றுதான் விரும்பினார்; சம்பாரன் விஷயமாகக் காங்கிரஸில் விரஜகிசோர் பாபு பேசினார். அநுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று நிறைவேறியது.

ராஜகுமார் சுக்லருக்கு இதனால் மகிழ்ச்சி உண்டாயிற்று. எனினும் அவர் திருப்தி அடைந்துவிடவில்லை. சம்பாரன் குடியானவர்களின் துன்பங்களை எனக்கு நேரில் காண்பிக்கவேண்டும் என்பது அவர் விருப்பம். "என் சுற்றுப் பிரயாணத்தில் சம்பா

ரனையும் சேர்த்துக்கொள்கிறேன். இரண்டொரு நாள் அதற்கென ஒதுக்கி வைக்கிறேன்" என்றேன்.

"ஒரு நாள் போதும். உங்கள் கண்களால் பாருங்களேன்!" என்றார் அவர்.

லக்னௌவிலிருந்து நான் கான்பூருக்குப் போனேன். பார்த்தால், அங்கும் ராஜகுமார் சுக்ல் நிற்கிறார். "இங்கிருந்து சம்பாரன் வெகு அருகில் இருக்கிறது. ஒரு நாள் அதற்கென்று வைத்துக்கொள்ளுங்கள்" என்றார்.

"இந்தத் தடவை என்னை மன்னியுங்கள். நான் கட்டாயம் வருவதாக வாக்குறுதி தருகிறேன்" என்று கூறி, நான் அங்கே போகப் பாத்தியப்பட்டேன். அங்கிருந்து நான் ஆசிரமம் போய்ச் சேர்ந்தபோது ராஜகுமார் சுக்ல் அங்கும் என் பின்னால் வந்து சேர்ந்தார்.

"இப்போதாவது நீங்கள் வரும் நாளைக் குறிப்பிட்டுவிடுங்கள்" என்றார்.

"சரி; இன்ன தேதியில் நான் கல்கத்தா போவேன். அங்கே வந்து என்னை அழைத்துப் போங்கள்" என்று சொன்னேன். எங்கே போவது, என்ன செய்வது, எதைப் பார்ப்பது என்பது எதுவும் எனக்குத் தெரியாது. கல்கத்தாவில் பூபேன் பாபுவின் வீட்டுக்கு நான் போய்ச் சேருமுன்பே ராஜகுமார் சுக்ல் அங்கு 'டேரா' போட்டிருந்தார். கல்வியறிவற்ற, ஆனால் மன உறுதியுள்ள இந்தக் குடியானவர் இந்தத் தடவை என்னை ஜயித்துவிட்டார். 1917-ஆம் வருஷ ஆரம்பத்தில் நாங்கள் இருவரும் கல்கத்தாவிலிருந்து புறப்பட்டோம். இருவரும் ஒரே ஜோடியாகப் பட்டிக்காட்டுக் குடியானவர்களைப் போலவே தென்பட்டோம். அவரும் நானும் ஒரே வண்டியில் உட்கார்ந்தோம். காலையில் பாட்னாவில் இறங்கினோம்.

பாட்னாவுக்கு நான் சென்றது இது முதல் தடவை. அங்கே நான் தங்கும்படியாக யாரும் தெரிந்தவர்கள் இல்லை.

ராஜகுமார் சுக்ல் சாதாரணக் குடியானவராயினும், இங்கே அவருக்குக் கொஞ்சமாயினும் செல்வாக்கு இருக்கும் என்று நினைத்திருந்தேன். ரெயிலில் அவரைப் பற்றிய செய்திகளைப் பின்னும் அதிகமாகத் தெரிந்துகொண்டேன். பாட்னா போய்ச் சேர்ந்ததும் அவருடைய ரகசியம் அம்பலமாகிவிட்டது. அவருடைய நோக்கம் குற்றமற்றதுதான். ஆனால் அவர் தம்முடைய நண்பர்கள் என்று எண்ணியிருந்த வக்கீல்கள் அவருக்கு நண்பர்களாக இல்லை. அவர்கள் அவரைத் தங்கள் வேலைக்காரனைப் போல நினைத்தார்கள்.

கட்சிக்காரரான இந்தக் குடியானவரையும் அந்த வக்கீல்களையும் மழைக் காலத்தில் கங்கா நதியின் வெள்ளத்தைப் போன்ற அகழ் பிரித்து வைத்திருந்தது.

என்னை அவர் ராஜேந்திர பாபுவின் வீட்டுக்கு அழைத்துப் போனார். ராஜேந்திர பாபு புரிக்கோ அல்லது வேறு இடத்துக்கோ போயிருந்தார். பங்களாவில் இரண்டொரு வேலைக்காரர்கள் இருந்தார்கள். என்னிடம் உணவுப் பண்டம் கொஞ்சம் இருந்தது. ஆயினும் எனக்குப் பேரீச்சம்பழம் தேவையாக இருந்தது. பாவம்! ராஜகுமார் சுக்ல் அதைக் கடையிலிருந்து வாங்கிக் கொண்டு வந்தார்.

பீஹாரில் தீண்டாமையை மிகவும் கடுமையாகக் கைக் கொண்டுவந்தனர். நான் கிணற்றிலிருந்து இழுக்கும் தண்ணீர் தெறித்தால் வேலைக்காரனுக்குத் தீட்டுப்பட்டுவிடும். வேலைக்காரனுக்கு என் சாதி எப்படித் தெரியும்? உள்ளே இருந்த கக்கூஸை ராஜகுமார் என்னை உபயோகப்படுத்திக் கொள்ளச் சொன்னபோது, வேலைக்காரன் வெளியில்இருந்த கக்கூஸைச் சுட்டிக் காட்டினான். இதில் நான் ஆச்சரியப்படுவதற்கோ கோபித்துக்கொள்வதற்கோ எதுவும் இல்லை. ஏனெனில் இவ்வித அநுபவங்களில் நான் அடிபட்டிருந்தேன். அந்தவேலைக்காரன் பாவம், தன் கடமையைச் செலுத்திக்கொண்டிருந்தான். ராஜேந்திர பாபுவிடம் தனக்கு இருந்த பக்தியை அவன் இப்படி வெளியிட்டான். இந்த வேடிக்கையான அநுபவங்களினால் ராஜகுமார் சுக்லரிடம் எனக்கு ஒருபுறம் மதிப்பு வளர்ந்தது; மறுபுறம் அவரைப்பற்றி நான் அதிகமாகத் தெரிந்துகொண்டேன். அதற்குப் பிறகு முழுப் பொறுப்பையும் நானே ஏற்றுக்கொண்டேன்.

# 58

## பீஹாரின் எளிமை

**மௌ**லானா மஜ்ஹருல்ஹக்கும் நானும் லண்டனில் ஒன்றுகப் படித்தவர்கள். அதற்குப் பிறகு நாங்கள் பம்பாயில் 1915-ஆம் வருஷம் காங்கிரஸில் சந்தித்தோம். அவ்வருஷம் அவர் முஸ்லிம் லீகுக்குத் தலைவராக இருந்தார். அவர் பழைய நட்பை நினைவில் கொண்டு, நான் எப்போதாவது பாட்னாவுக்கு வந்தால் தம் வீட்டில் வந்து தங்கும்படி என்னை அழைத்திருந்தார். இந்த அழைப்பை ஆதாரமாகக் கொண்டு நான் அவருக்கு ஒரு சீட்டு

எழுதினேன். நான் வந்துள்ள வேலையையும் குறிப்பிட்டேன். அவர் உடனே தம் காரைப் போட்டுக்கொண்டு வந்து என்னைத் தம் வீட்டுக்கு வரவேண்டும் என்று வற்புறுத்தினார். இதற்காக நான் அவருக்கு வந்தனம் அளித்துவிட்டு, "நான் போகவேண்டிய இடத்துக்கு முதல் வண்டியிலேயே என்னை அனுப்பிவிடுங்கள். ரெயில்வே 'கைட்டி'லிருந்து எனக்கு எந்த இடமும் ஒன்றும் புரியவில்லை" என்று சொன்னேன். அவர் ராஜகுமாரிடம் பேசிய பின், "முதலில் நீங்கள் முஸப்பர்பூருக்குப் போகவேண்டும்" என்றார். அந்த ஊருக்குச் சாயங்காலம் வண்டி. அன்று மாலை வண்டியில் அவர் என்னை ரெயிலேற்றி அனுப்பினார்.

முஸப்பர்பூரில் அப்போது ஆசாரிய கிருபலானி இருந்தார். எனக்கு அவரைத் தெரியும். நான் ஹைதராபாத்து (சிந்து)க்குப் போயிருந்தபோது அவருடைய அரும்பெரும் தியாகங்களைப் பற்றியும் வாழ்க்கையைப் பற்றியும் அவர் கொடுத்த பணத்தைக் கொண்டு நடக்கும் ஆசிரமத்தைப் பற்றியும் டாக்டர் சோயித்ராம் எனக்குச் சொல்லியிருந்தார். கிருபலானி முஸப்பர்பூர் காலேஜில் புரொபஸராக இருந்தவர். அப்போது அங்கிருந்து விடுதலை பெற்றிருந்தார். நான் அவருக்குத் தந்தி அடித்தேன். வண்டி நள்ளிரவில் அங்கே போய்ச் சேர்ந்தது அவர் தம் சிஷ்யக் கூட்டத்துடன் ஸ்டேஷனுக்கு வந்திருந்தார். அவருக்கு வீடுவாசல் ஏதும் இல்லை. அவர் ஆசிரியர் மல்கானியோடு வசித்துவந்தார். என்னை அவர் வீட்டிற்கு அழைத்துப் போனார். மல்கானியும் அங்கே காலேஜில் புரொபஸர். அந்தக் காலத்தில் அரசாங்கக் கல்லூரியின் புரொபஸர் ஒருவர் தம் வீட்டில் எனக்கு இடம் கொடுத்தது அசாதாரணமான ஒரு விஷயம்.

கிருபலானி பீஹாரிலும் முக்கியமாகத் திர்ஹுத் பகுதியிலும் குடிகொண்டிருந்த ஏழைமை நிலையை என்னிடம் வர்ணித்து, என் வேலை எவ்வளவு கஷ்டமானது என்பதையும் சொன்னார். அவர் பீஹாரிகளோடு நெருங்கிப் பழகியிருந்தவர். நான் வந்த விஷயங்களைப் பற்றி ஏற்கனவே அங்கிருந்த நண்பர்களோடும் பேசியிருந்தார். பொழுது விடிந்ததுமே சில வக்கீல்கள் என்னைப் பார்க்க வந்தார்கள்.

தர்பங்காவிலிருந்து விரஜகிசோர் பாபுவும், புரியிலிருந்து ராஜேந்திர பாபுவும் திரும்பி வந்தார்கள். 'நான் லக்னௌவில் பார்த்த அந்த விரஜகிசோர் பிரஸாதா இவர்?' என்று தோற்றியது. இவரிடம் பீஹாரியின் வணக்கமும் எளிமையும் நல்ல தன்மையும் அசாதாரணமான சிரத்தையும் இருப்பதைக் கண்டு

என் உள்ளம் ஆனந்தத்தினால் பொங்கியது. பீஹாரிலுள்ள வக்கீல் குழுவுக்கு இவரிடமுள்ள மதிப்பைக் கண்டு எனக்கு ஆனந்தமும் ஆச்சரியமும் உண்டாயின.

அப்போதிலிருந்து இந்த வக்கீல் குழுவுக்கும் எனக்கும் ஆயுசு முழுவதும் நீடித்திருக்கும் நட்பு ஏற்பட்டது. விரஜகிசோர் பாபு எனக்கு எல்லா விஷயங்களையும் சொன்னார். ஏழைக் குடியானவர்களின் சார்பிலே அவர் வழக்குகள் நடத்திவந்தார். இம்மாதிரியான இரண்டு வழக்குகள் அப்போது நடந்துகொண்டிருந்தன. இந்த வழக்குகளின் மூலம் அவர் ஏழை ஜனங்களுக்கு ஏதோ கொஞ்சம் உதவி செய்துவந்த போதிலும், சில சமயம் இதிலும் வெற்றி யடையாமற் போவார். சூதுவாது அறியாத இந்தக் குடியானவர்களிடமிருந்து அவர் பீஸ் வாங்கிவந்தார். தியாகியாக இருந்துங்கூட அவரோ ராஜேந்திர பாபுவோ பீஸ் வாங்குவதற்குக் கூச்சப்பட்டதில்லை. "எங்கள் தொழிலுக்குப் பீஸ் வாங்காவிட்டால் எங்கள் வீட்டுச் செலவு நடக்காது. ஜனங்களுக்கும் நாங்கள் உதவி செய்ய முடியாது" என்பது அவருடைய வாதம். அவரும், வங்காளத்திலும் பீஹாரிலுமுள்ள பாரிஸ்டர்களும் கற்பனைக்கும் அடங்காத தொகையைப் பீஸாகப் பெறுவதைக் கேட்டபோது நான் திகைத்துப் போய்விட்டேன். "இன்னாரிடம் அபிப்பிராயம் கேட்கப் பதினாயிரம் ரூபாய் கொடுத்தோம்" என்பது ஜனங்களின் பேச்சு. ஆயிரக் கணக்கைத் தவிர வேறு ஏதும் என் காதில் விழவில்லை.

இவ்விஷயமாக என்னுடைய இனிய கண்டிப்பை இந்த நண்பர்கள் குழுவினர் அன்போடு கேட்டார்கள். அவர்கள் இதற்கு விகல்பமான அர்த்தம் செய்துகொள்ளவில்லை.

"இந்த வழக்கு விவரங்களைப் பார்த்த பின்பு நாம் கோர்ட்டுக்குப் போவதையே இனி விட்டுவிடவேண்டும் என்று நான் நினைக்கிறேன். இவ்வித வழக்குகளால் நன்மை ஏதும் உண்டாகாது. குடிமக்கள் இவ்வளவு நசுக்கப்பட்டுப் பயந்து கிடக்கும்போது கோர்ட்டுகளினால் எவ்விதப் பயனும் உண்டாக முடியாது. மக்களின் மனத்திலிருந்து பயத்தைப் போக்குவதுதான் இதற்கு உண்மையான மாற்று. எனவே இந்தத் 'தீன் கட்டியா' முறை ஒழியும் வரையில் நாம் சுகமாக உட்கார முடியாது. இரண்டு நாட்களில் என்னால் முடிந்த அளவு பார்க்கலாம் என்று வந்திருந்தேன். இப்போது பார்த்தால், இந்த வேலையில் இரண்டு வருஷங்கள்கூடப் பிடிக்கலாம் என்று தெரிகிறது. அவ்வளவு காலம் தேவையாக இருந்தாலும் நான் அதற்குத் தயாராக இருக்கிறேன்.

நான் என்ன செய்யவேண்டும் என்பது எனக்குப் புரிகிறது. ஆனால் இதற்கு உங்கள் உதவி வேண்டும்" என்றேன்.

விரஜகிசோர் பாபு திடமான சிந்தனை கொண்டவர் என்பதைக் கண்டேன். அவர் அமைதியாக, "எங்களால் இயன்ற அளவுக்குக் கட்டாயம் உதவி செய்வோம். நீங்கள் ஒப்பிக்கும் வேலையைச் செய்ய நாங்கள் இத்தனை பேரும் தயாராக இருப்போம். எங்களில் யார் எப்பொழுது தேவையாக இருந்தாலும் உங்களிடம் உடனே வருவோம். சிறை செல்வது எங்களுக்கு முற்றும் புதிது. ஆனால் அதற்கும் துணிவு செய்துகொள்ள நாங்கள் முயல்வோம்" என்று பதில் சொன்னார்.

## 59

### 'அஹிம்ஸையைக் கண்டேன்'

குடியானவர்களின் நிலையை நான் ஆராயவேண்டியிருந்தது. அவுரித் தோட்டக்காரர்களைப்பற்றி அவர்கள் செய்த முறையீட்டில் எவ்வளவு உண்மை இருந்தது என்பதைப் பார்க்கவேண்டியிருந்தது. இதற்கு ஆயிரக்கணக்கான குடியானவர்களைக் கண்டு பேசுவது அவசியம். ஆனால் இப்படிப் பொதுவாகக் கலப்பதற்கு முன்பு தோட்டக்காரர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டுக்கொள்வதும் கமிஷனரைக் கண்டு பேசுவதும முக்கியம் என்று எனக்குத் தோன்றிற்று. இருவருக்கும் கடிதம் எழுதினேன்.

தோட்டக்காரர்கள் சங்கத்துக் காரியதரிசியைக் கண்டபோது அவர் என்னிடம் தெளிவாகத் தம் கருத்தைத் தெரிவித்தார். "நீங்கள் வெளி மனிதர். எங்களுக்கும் குடியானவர்களுக்கும் உள்ள சச்சரவின் நடுவில் நீங்கள் வரக்கூடாது. இருந்தும், நீங்கள் ஏதாவது சொல்லவேண்டி யிருந்தால் அதை எழுதி அனுப்புங்கள்" என்றார். நான் அவரிடம் நல்லதனமாக, "என்னை நான் வெளி மனிதனாகக் கருதவில்லை. குடியானவர்கள் விரும்பினால் அவர்களுடைய நிலையை ஆராய எனக்கு முழு உரிமை உண்டு" என்று சொன்னேன். கமிஷனர் துரையைப் பார்த்தபோது அவர் என்னை மிரட்ட ஆரம்பித்தார். மேலே ஒரு வேலையும் செய்யாமல் திர்ஹூத்தை விட்டுப் போய்விடும்படி ஆலோசனை சொன்னார்.

என் நண்பர்களிடம் இவற்றையெல்லாம் விளக்கி, "நிலையை ஆராய்வதற்கு முந்தியே அரசாங்கத்தார் என்னைத் தடுக்கக்கூடும். நான் எதிர்பார்ப்பதற்கு முன்பே சிறை செல்லலாம். அவ்வாறு நேர்ந்தால் மோதிஹாரியிலாவது, கூடுமானால் பெதியாவிலா

வது கைது ஆவது நலம். எனவே கூடிய சீக்கிரத்தில் நான் அங்கே போய்ச் சேர்ந்துவிட வேண்டும்" என்று கூறினேன்.

நாங்கள் பாதி வழி போவதற்குள் போலீஸ் ஸூப்பரின்டெண்டண்ட்டின் ஆள் ஒருவன் வந்து என்னிடம், "ஐயா உங்களுக்குச் சலாம் அனுப்பியிருக்கிறார்" என்று சொன்னான். அதன் கருத்தை நான் அறிந்துகொண்டேன். தரணீதர பாபுவை மேற்கொண்டு போகச் சொல்லிவிட்டு, நான் அந்தப் போலீஸ் சிப்பாய் கொண்டு வந்திருந்த வாடகை வண்டியில் உட்கார்ந்தேன். சம்பாரனை விட்டுப் போய்விடவேண்டும் என்ற நோட்டீஸை அவன் என்னிடம் கொடுத்தான். நான் தங்கியிருந்த வீட்டுக்குப் போய்ச் சேர்ந்ததும் என்னிடம் கையெழுத்துக் கேட்டான். "நான் சம்பாரனை விட்டுப் போக விரும்பவில்லை. இன்னும் உள்நாட்டில் சென்று ஆராய்ச்சி செய்யவேண்டும்" என்று பதில் எழுதிக் கொடுத்தேன். உத்தரவை அவமதித்த குற்றத்திற்காக மறுநாளே நான் கோர்ட்டில் ஆஜராகவேண்டும் என்ற ஸம்மன் கிடைத்தது.

அன்று இரவு முழுவதும் விழித்திருந்து பல இடங்களுக்குத் தேவையான கடிதங்கள் எழுதினேன். முக்கியமாகத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை விரஜகிசோர் பாபுவிடம் சொன்னேன்.

நண்பர்களோடு ஆலோசனை செய்து, 'காங்கிரஸின் பெயரால் இங்கே எந்த வேலையும் செய்யக் கூடாது' என்று முடிவு கட்டினேன். எங்களுக்கும் பெயரினால் ஆகவேண்டியது ஒன்றும் இல்லை. வேலையே பிரதானம். பேச்சு அல்ல; செய்கையே முக்கியம். காங்கிரஸ் என்ற பெயர் அங்கு இருந்தவர்களின் மனத்தை உறுத்திவந்தது.

ஆதலால் காங்கிரஸ் சார்பில் மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ முன்னேற்பாடுகள் செய்யத் தூதர்கள் யாரையும் அனுப்பவில்லை. ஆயிரக்கணக்கான மக்களிடையே சென்று பிரசாரம் செய்ய ராஜகுமார் சுக்லருக்கு வல்லமை கிடையாது. அந்தப் பக்கத்தில் மக்களிடையே அரசியல் வேலை யாரும் செய்ததில்லை. சம்பாரனைத் தவிர வெளியுலகத்தைப்பற்றி அவர்களுக்குத் தெரியவே தெரியாது. ஆயினும் அவர்களும் நானும் சந்தித்தது பல நாட்களாகப் பழகிய நண்பர்களைச் சந்தித்தாற்போல இருந்தது. அங்கே நான் கடவுளையும் அஹிம்ஸையையும் சத்தியத்தையும் நேரில் கண்டேன் என்று சொல்வது மிகையாகாது. இது எழுத்துக்கு எழுத்து உண்மை. அஹிம்ஸையையும் சத்தியத்தையும் நான் நேரில் காண எனக்கு என்ன உரிமை இருந்தது

என்று யோசித்தபோது அன்பைத் தவிர வேறு எதுவும் எனக்குத் தென்படவில்லை. அன்பிலும் அஹிம்ஸையிலும் எனக்குள்ள அசையாத நம்பிக்கையைத் தவிர வேறு ஒன்றும் புலப்படவில்லை.

சம்பாரனில் அந்த நாள் என் வாழ்க்கையில் மறக்க முடியாததாக இருந்தது. அது எனக்கும் குடியானவர்களுக்கும் கொண்டாட்ட நாள். என்மீது சர்க்கார் சட்டப்படி வழக்கு நடப்பதற்கு இருந்தது. ஆனால் உண்மையில் அந்த வழக்கு, சர்க்கார்மீது நடந்தது என்று சொல்லலாம். கமிஷனர் என்னைப் பிடிப்பதற்குப் பரப்பிய வலையில் சர்க்காரையே மாட்டி வைத்துவிட்டார்.

விசாரணை நடந்தது. சர்க்கார் வக்கீலும் மாஜிஸ்டிரேட்டும் செய்வகை அறியாமல் திகைத்தனர். என்ன செய்வது என்று அவர்களுக்குப் புரியவில்லை. சர்க்கார் வக்கீல் வழக்கை ஒத்திப் போட முயன்றார். நான் குறுக்கிட்டு, "வழக்கை ஒத்திப் போட வேண்டிய அவசியம் இல்லை, சம்பாரனை விட்டுப் போகவேண்டும் என்ற நோட்டீஸை அவமதித்த குற்றத்தை நான் ஒப்புக்கொள்கிறேன்" என்று கூறி, நான் தயாரித்திருந்த ஒரு சிறு வாக்குமூலத்தைப் படித்தேன். அது வருமாறு:

"கோர்ட்டாரின் அநுமதியுடன் எனக்குக் கொடுத்த நோட்டீஸை நான் ஏன் அவமதித்தேன் என்பதைச் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். எனக்குத் தெரிந்த வரையில் இது ஸ்தல அதிகாரிகளுக்கும் எனக்குமிடையே ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தைப்பற்றிய பிரச்னை. நாட்டுக்கும் மனிதனுக்கும் தொண்டு செய்ய வேண்டி, நான் இந்தப் பிரதேசத்திற்கு வந்திருக்கிறேன். அவுரித் தோட்டக்காரர்கள் குடி மக்களைச் சரியாக நடத்துவதில்லை என்றும், குடியானவர்களுக்கு உதவி செய்ய வரவேண்டுமென்றும் என்னைப் பல தடவை வற்புறுத்தி அழைத்தனர். விவரங்கள் யாவற்றையும் நான் நன்றாகத் தெரிந்துகொள்ளாமல் அவர்களுக்கு எவ்வித உதவியும் செய்ய முடியாது. ஆதலால் முடியுமானால் அதிகாரிகள், தோட்டக்காரர்கள் ஆகியவர்களின் உதவியினால் முழு விவரங்களையும் தெரிந்துகொள்ளலாம் என்று இங்கே வந்தேன். நான் இங்கே வந்ததற்கு வேறு நோக்கம் எதுவும் இல்லை. நான் இங்கு வந்ததனால் எவ்விதமாவது அமைதிக்குப் பங்கமோ உயிர்ச் சேதமோ நேரிடும் என்பதை நான் நம்ப முடியாது. இம்மாதிரி விஷயங்களில் எனக்கு நிரம்ப அநுபவம் உண்டு. அதிகாரிகளுக்கு இருக்கும் கஷ்டங்கள் எனக்குத் தெரியும். தங்களுக்குக் கிடைக்கும் தகவல்களைக் கொண்டே அவர்

கள் நடவடிக்கை நடத்தவேண்டும் என்பதையும் ஒப்புக்கொள்கி றேன். சட்டத்தை ஒப்புக்கொள்பவனுதலால் நான் அதன்படியே நடந்துகொள்ள வேண்டும். நான் இந்த உத்தரவுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று எண்ணியிருந்தேன். ஆனுல் நான் யாருக்காக இங்கே வந்தேனே அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமை களைக் கைவிட முடியாது. அவர்கள் மத்தியில் இருந்துதான் நான் அவர்களுக்கு நன்மை செய்ய முடியும் என்று நினைக்கிறேன். எனவே சுயேச்சையாக நான் இங்கிருந்து போய்விட முடியாது. இரண்டு கடமைகள் ஒன்றுக்கு ஒன்று முட்டும் நிலைமையில், என்னை இங்கிருந்து அப்புறப்படுத்தும் முழுப் பொறுப்பையும் அரசாங்கத்தை நடத்துபவர்கள்மீது விட்டுவிடுவது ஒன்றே நான் செய்ய முடிந்தது. இந்தியாவின் பொது வாழ்க்கையில் என்னைப் போன்ற நிலையில் உள்ளவர்கள் லட்சியத்தை ஸ்தாபிப்பதில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்பதை நான் நன்கு அறிவேன். நான் இருக்கும் இந்த நிலையில், நான் இப்போது செய்ய நிச்சயித்திருப்பதையே மரியாதையுணர்ச்சியுள்ள ஒவ்வொ ருவனும் செய்வது நல்லது என்பதில் எனக்குத் திடநம்பிக்கை உண்டு. அதாவது எவ்வித எதிர்ப்பும் செய்யாமல், குற்றத்தைக் கீழ்ப்படியாததற்காக அதற்குரிய தண்டனையை ஏற்றுக்கொள் ளத் தயாராகிவிடவேண்டும். நான் கொடுக்கும் இந்த வாக்குமூலம் என் தண்டனையைக் குறைப்பதற்காக அல்ல; அரசாங்கத்தி னிடம் எனக்கு நம்பிக்கை இல்லை என்ற காரணத்தினுல் நான் சர்க்கார் உத்தரவை அவமதிக்கவில்லை என்பதையும், நான் அதனிலும் மேலான உத்தரவை அதாவது என் பகுத்தறிவுக்குக் கீழ்ப்படிவதைத் தகுதியென்று நினைத்த காரணத்தால் அப்படிச் செய்தேன் என்பதையும் விளக்கத்தான்.''

இதற்குமேல் வழக்கை ஒத்திப்போடுவதற்கு எவ்விதக் காரண மும் இருக்கவில்லை. ஆனுல் மாஜிஸ்டிரேட்டோ சர்க்கார் வக்கீலோ நான் இப்படிச் சொல்வேன் என்று எதிர்பார்க்கவில்லை. எனவே தண்டனை விதிப்பதைக் கோர்ட்டார் ஒத்திப்போட்டார்கள். நான் வைஸ்ராய்க்குத் தந்திமூலம் முழு விவரங்களைத் தெரிவித் திருந்தேன். பாட்னுவுக்கும் தந்தி கொடுத்திருந்தேன். பண்டித மாளவீயர் முதலியவர்களுக்கும் தந்தி கொடுத்திருந்தேன். தண் டனையின் முடிவைக் கேட்கக் கோர்ட்டுக்குப் போகுமுன்னமே, கவர்னருடைய உத்தரவினுல் வழக்கை வாபஸ் வாங்கிக்கொண் டிருப்பதாக மாஜிஸ்டிரேட்டினிடமிருந்து உத்தரவு வந்தது. ''நீங்கள் செய்ய விரும்பும் ஆராய்ச்சியை பேஷாகச் செய்யுங்கள்.

அதற்குச் சர்க்கார் உத்தியோகஸ்தர்களிடமிருந்து தேவையான உதவியைப் பெறலாம்'' என்று கலெக்டரிடமிருந்து கடிதம் வந்தது. இவ்வளவு விரைவில் இந்த விஷயம் இப்படி நல்ல முடிவுக்கு வரும் என்று எங்களில் யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

## 60

### வேலை முறை

சம்பாரன் விசாரணையைப்பற்றி முழு விவரங்களைக் கொடுக்கவேண்டுமானால் சம்பாரன் குடியானவர்களின் சரித்திரத்தை எழுதுவதாகும். அந்தச் சரித்திரம் முழுவதையும் இந்த அத்தியாயங்களில் எழுத முடியாது. சம்பாரன் விசாரணை என்பது அஹிம்சைக்கும் சத்தியத்துக்கும் ஒரு பெருத்த சோதனையாகவே இருந்தது.

பொதுக் காரியங்களுக்காக ஜனங்களிடம் பணம் வசூலிக்கும் வழக்கம் இதுவரை அங்கே இருந்ததில்லை. விரஜகிசோர் பாபுவின் இந்தக் குழு முக்கியமாக வக்கீல் குழுவாகத்தான் இருந்தது. பணம் வேண்டியிருந்தபோது, ஒன்று: அவர் தாமாகப் பணம் கொடுப்பார்; அல்லது, சில நண்பர்களிடமிருந்து வாங்கிக்கொள்வார். 'பணம் காசு வைத்துக்கொண்டு சுகமாக இருப்பவர்கள் சாதாரண ஜனங்களிடம் பணப் பிச்சை கேட்பதாவது?' என்பது அவருடைய எண்ணம். சம்பாரன் குடியானவர்களிடமிருந்து ஒரு தம்படியும் வாங்கக்கூடாது என்பது என் உறுதியான தீர்மானம். பணம் வாங்கினால் அதனால் தப்பபிப்பிராயத்துக்கு இடம் உண்டாகும். இந்த விசாரணைக்கு இந்தியாவில் உள்ள பொதுஜனங்களிடமிருந்து சந்தா வசூலிக்கக்கூடாது என்றும் தீர்மானம் ஆகியிருந்தது. அப்படிச் செய்தால் இது ஒரு தேசிய அரசியல் பிரச்னை ஆகிவிடும். பம்பாய் நண்பர்கள் 15,000 ரூபாய் உதவி செய்வதாகத் தந்தி கொடுத்திருந்தனர். ஆனால் ஏழைமையை ஏற்றுக்கொண்டே கூடியவரையில் செலவைக் குறைத்து இந்த இயக்கத்தை நடத்தவேண்டியிருந்தது. அதனால் அதிகப் பணம் தேவையாக இருக்கவில்லை. உண்மையில் பணத்துக்கு அவசியமே இருக்கவில்லை. மொத்தம் சேர்ந்து 3,000 ரூபாய்க்குமேல் செலவழியவில்லை என்று எனக்கு ஞாபகம். எங்களிடம் சேர்ந்திருந்த பணத்தில் ஐந்நூறோ ஆயிரமோ மிச்சம் இருந்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது. ஆரம்பத்தில் எங்கள் முறை மிகவும்

விசித்திரமாக இருந்தது. நான் நாள்தோறும் அதைப்பற்றிப் பரிகாசம் செய்துவந்தேன். இந்த வக்கீல் குழுவைச் சேர்ந்த ஒவ்வொருவரிடமும் ஒரு வேலைக்காரன் சமையலாளாக இருந்தான். ஒவ்வொருவருக்கும் தனிச்சமையல். இரவுபன்னிரண்டுமணி வரையில்கூட அவர்கள் சாப்பாடு நடக்கும். செலவு முதலிய வற்றை இவர்கள் சொந்தமாக ஏற்றுக்கொண்டிருந்தபோதிலும் இந்த நடைமுறை எனக்கு ஆபத்தாக இருந்தது. இந்த நண்பர்களோடு எனக்கு ஏற்பட்டிருந்த நெருங்கிய அன்பினால் எங்களிடையே தப்பபிப்பிராயத்துக்கு இடம் இருந்ததில்லை. என் சொல்லம்புகளை அவர்கள் அன்போடு பொறுத்துக்கொள்வார்கள். கடைசியில் வேலைக்காரர்களுக்குச் சீட்டுக் கொடுத்துவிடுவதென்றும், எல்லோரும் ஒருங்கே சாப்பிடவேண்டும் என்றும், அவர்கள் ஒழுங்காக வந்து சாப்பிடவேண்டும் என்றும் தீர்மானம் ஆயிற்று. அவர்களில் எல்லோருமே சைவ உணவுக்காரர்கள் அல்ல. வெவ்வேறு உணவுகளைத் தனித்தனியே சமைக்க ஏற்பாடு செய்வதால் செலவு அதிகம் ஆகும். ஆதலால் சைவ உணவே சமைப்பதென்றும், ஒருவருக்கு மட்டுமின்றி எல்லோருக்குமாகச் சமைக்கவேண்டும் என்றும் நிச்சயித்தோம். உணவும் எளிதாகவே இருக்கவேண்டும் என்று வலியுறுத்தினேம். இதனுல் செலவு மட்டுப்பட்டது. எங்களுடைய வேலைசெய்யும் திறமை மிகுந்தது. பொருளும் மிச்சமாயிற்று.

எங்களுக்கு அதிக உதவியும் தேவையாக இருக்கவில்லை. ஏனெனில் குடியானவர்கள் கூட்டம் கூட்டமாகத் தம் வரலாறுகளைச் சொல்லுவதற்கு வந்தனர். வரலாறு எழுதுபவர்கள் எப்பொழுதும் ஐந்தாறு பேர் இருந்தனர். அப்படி இருந்தும் சாயங்காலம் வரையில் எல்லோருடைய வாக்குமூலங்களும் முடிந்தபாடாக இருப்பதில்லை. இதை எழுதுபவர்கள் சில விதிகளை அநுசரிக்கவேண்டியிருந்தது. அவையாவன : ஒவ்வொரு குடியானவனையும் குறுக்கு விசாரணை செய்யவேண்டும். அதில் திருப்தியாகப் பதில் சொல்லாதவர்களுடைய வாக்குமூலத்தை எழுதக்கூடாது. ஆரம்பத்திலிருந்தே பலவீனமாகப் பேசுகிறவனுடைய பேச்சை எடுத்துக்கொள்ளக்கூடாது. இந்த விதிகளை அநுசரிப்பதில் அதிக நேரம் பிடித்தபோதிலும், உண்மையும் நிரூபிக்கக்கூடியவையுமான வரலாறுகளை மட்டுமே தயாரித்துக் கொள்ள முடிந்தது.

இவ்வரலாறுகளை எழுதிக்கொள்ளும்போது ரகசியப் போலீஸைச் சேர்ந்த உத்தியோகஸ்தர் யாராவது ஒருவர் அங்கே

இருப்பார். அந்த உத்தியோகஸ்தர்களை நாங்கள் தடுத்திருக்கலாம்; என்றாலும் ஆரம்பத்திலிருந்து அவர்களைத் தடுக்கக் கூடாது என்று நாங்கள் தீர்மானித்திருந்தோம். இதுமட்டுமின்றி அவரிடம் சௌஜன்யமாக இருந்து அவருக்குக் கொடுக்கக் கூடிய தகவல்களைத் தெரிவித்தும் வந்தோம். நாங்கள் பதித்த வாக்குமூலங்களை அவர்கள் பார்த்தும் கேட்டும் வந்தார்கள். இதனால் ஒரு லாபம் ஏற்பட்டது. ஜனங்களின் மனத்தில் இருந்த அச்சம் நீங்கிவிட்டது. அவர்கள் அதிகத் துணிவு கொண்டனர். போலீஸாருக்கு முன்னால் வாக்குமூலம் வாங்கியதால், மிகைப்படுத்திச் சொல்வார்களோ என்ற பயம் குறைவாகவே இருந்தது. 'பொய் சொன்னால் போலீஸார் எங்கே நம்மை ஏதாவது ஒரு வலையில் மாட்டிவிடுவார்களோ' என்ற பயத்தால் அவர்கள் ஆர அமர யோசித்தே பேசவேண்டியிருந்தது.

அவுரித் தோட்டக்காரர்களுக்கு நான் கோபமூட்ட விரும்பவில்லை. என் நல்லதனத்தினால் அவர்களை வெல்ல முயன்று வந்தேன். ஆதலால் யாரைப்பற்றிக் குறிப்பாக அதிகப் புகார்கள் இருந்தனவோ அவர்களுக்குக் கடிதம் எழுதி நேரிலும் சந்திக்க முயன்றேன். அவர்கள் சங்கத்தாரையும் கண்டு பேசினேன். குடியானவர்களின் புகார்களை அவர்களுக்குத் தெரிவித்தேன். அவர்கள் சொல்லியதையும் கேட்டுக்கொண்டேன். அவர்களில் பலர் என்னை வெறுத்தார்கள்; பலர் அசட்டையாக இருந்தார்கள்; சிலர் என்னிடம் நல்லவர்களாகவும் இருந்தார்கள்.

சமூகத் தொண்டு ஒரு புறமும், ஜனங்களின் துன்ப வரலாறுகளை எழுதும் வேலை மறு புறமுமாக நாளுக்கு நாள் அலுவல்கள் வளர்ந்தன. ஆயிரக்கணக்கானவர்களின் வரலாறுகளை எழுதிய போது அதற்கு எப்படிப் பலன் ஏற்படாமல் இருக்க முடியும்? என் முகாமில் ஜனங்களின் போக்குவரவு அதிகம் ஆக ஆக, அவுரித் தோட்ட முதலாளிகளின் கோபமும் அதிகரித்துக்கொண்டே போயிற்று. என் விசாரணையைத் தடுக்க அவர்கள் நாள்தோறும் மேன்மேலும் முயற்சிகள் செய்துவந்தனர். ஒரு நாள் எனக்குப் பீஹார் சர்க்காரிடமிருந்து, "உங்கள் விசாரணைக்கு வேண்டிய நாட்களைக் கழித்திருக்கிறீர்கள். இனி நீங்கள் உங்கள் வேலையை முடித்துக்கொண்டு பீஹாரை விட்டுப் போய்விட வேண்டும்" என்ற கருத்து அடங்கிய கடிதம் வந்தது. நல்ல எண்ணத்தோடு எழுதிய கடிதமாயினும் அதன் பொருள் தெளிவாக இருந்தது. "விசாரணையில் இன்னும் நாட்கள் பிடிக்கும். விசாரணைக்குப்

பின்னும் குடியானவர்களின் துன்பம் நீங்காதவரையில் பீஹாரை விட்டுப் போகும் நோக்கம் எனக்கு இல்லை" என்று பதில் எழுதினேன்.

என் விசாரணையை நிறுத்துவதற்கு ஒரே ஒரு நல்லவழிதான் சர்க்காரிடம் இருந்தது: ஜனங்கள் செய்த புகார்களை உண்மையாக எடுத்துக்கொண்டு அவர்கள் குறைகளைத் தீர்ப்பது; அல்லது, அவர்களுடைய குறைகளைக் கவனித்துச் சர்க்கார் தரப்பில் ஒரு விசாரணைக் கமிட்டியை நியமிப்பது. கவர்னர் ஸர் எட்வர்டு கேட் என்னைக் கூப்பிட்டு, விசாரணைக் கமிட்டி நியமிக்கத் தாம் தயாராக இருப்பதாகக் கூறி, அதில் ஓர் அங்கத்தினனாக இருக்கச் சொன்னார். மற்ற அங்கத்தினர்களின் பெயர்களைப் பார்த்தேன். என் நண்பர்களோடு கலந்து ஆலோசித்தேன். 'விசாரணையின் போது என் நண்பர்களோடு கலந்து ஆலோசிக்கும் சௌகரியம் வேண்டும். நான் இந்தக் கமிட்டியின் அங்கத்தினன் ஆவதால் குடியானவர்களுக்காகப் பரிந்து பேசும் என் உரிமை போய்விடாது என்பதையும், விசாரணை முடிந்த பின்பு எனக்குத் திருப்தி இல்லாவிட்டால் குடியானவர்களுக்கு வழிகாட்டும் என் சுதந்தரம் போய்விடாது என்பதையும் அரசாங்கம் தெரிந்துகொள்ள வேண்டும்' என்ற நிபந்தனையின் மேல் நான் அங்கத்தினனாக ஒப்புக்கொண்டேன்.

இந்த நிபந்தனைகள் விரும்பத் தக்கவையே என்பதை உணர்ந்த ஸர் எட்வர்டு கேட் இவற்றிற்கு ஒப்புக்கொண்டார். காலஞ்சென்ற ஸர் பிராங்க் ஸ்லை அந்தக் கமிட்டியின் தலைவராக நியமனம் பெற்றார். விசாரணைக் கமிட்டியார் குடியானவர்களின் குறைகள் யாவும் உண்மையானவையே என்று கூறி, அவுரித் தோட்ட முதலாளிகள் அநியாயமாகப் பறித்த பணத்தில் ஒரு பகுதியைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்றும், 'தீன் கட்டியா' முறையை ஒழித்துவிட வேண்டும் என்றும் சிபாரிசு செய்தனர்.

இந்த ரிப்போர்ட்டைச் சாங்கோபாங்கமாகத் தயாரிப்பதற்கு ஸர் எட்வர்டு கேட் பெரிதும் உதவினார். அவர் உறுதியாக இருந்திராவிட்டால், தமது சாமர்த்தியம் முழுவதையும் பயன்படுத்தியிராவிட்டால், அந்த ரிப்போர்ட்டு ஏகமனதாக எழுதப்பட்டு இருந்திராது; சட்டமும் நிறைவேறியிராது. தோட்ட முதலாளிகள் மிகுந்த செல்வாக்கு வாய்ந்தவர்களாக இருந்தனர். ரிப்போர்ட்டு வெளிவந்த பின்பும் பலபேர் அந்த மசோதாவைத் தீவிரமாக எதிர்த்தனர். ஆனால் ஸர் எட்வர்டு கேட் கடைசிவரை

13

யில் உறுதியாக இருந்து, கமிட்டியின் எல்லாச் சிபார்சுகளையும் முற்றும் நிறைவேற்றிவைத்தார்.

இவ்வண்ணம் நூறு வருஷகாலமாகப் பழகிப் போயிருந்த அந்தத் 'தீன் கட்டியா' முறை ஒழிந்தது. அதனோடு கூடவே அவுரித் தோட்ட முதலாளிகளின் ராஜ்யமும் அஸ்தமித்தது. அடங்கியிருந்த குடியானவர்கள் தங்கள் வலிமையை ஓரளவு அறிந்துகொண்டார்கள். அவுரிக் கறை எவ்வளவு துவைத்தாலும் மறையாது என்ற அவர்களுடைய குருட்டு நம்பிக்கை நீங்கியது.

# 61

## தொழிலாளிகளுடன் தொடர்பு

சம்பாரன் விசாரணைக் கமிட்டியின் வேலையிலிருந்து சிறிதே ஓய்வு கிடைத்திருக்கும் போது அஹமதாபாத்திலிருந்து ஸ்ரீமதி அநஸூயா பஹன் தம் 'தொழிலாளர்கள் சங்க'த்தைப்பற்றி எழுதிய கடிதம் கிடைத்தது. அவர்களுக்குச் சம்பளம் குறைவு. அவர்கள் வெகு நாட்களாகச் சம்பள உயர்வு கேட்டுவந்தார்கள். இவ் விஷயமாக அவர்களுக்கு வழிகாட்டும் ஆவல் எனக்கு இருந்தது. பார்க்கப்போனால் இது சிறிய வேலைதான். ஆனால் தொலைவில் உட்கார்ந்து அதை என்னால் செய்ய முடியவில்லை. அதனால் உடனே அஹமதாபாத் போய்ச் சேர்ந்தேன்.

இதில் என் நிலைமை மிகவும் தர்மசங்கடமாக இருந்தது. தொழிலாளிகளின் கட்சி வலுவாக இருந்ததாக எனக்குத் தோன்றிற்று. ஸ்ரீமதி அநஸூயா பஹன் தம் சொந்தச் சகோதரரோடு போராடவேண்டிய சந்தர்ப்பம் வந்தது. தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்குமிடையே நடந்த இந்தக் கொடிய போரில் ஸ்ரீமான் அம்பாலால் ஸாராபாய் முக்கியமான பங்கு எடுத்துக் கொண்டிருந்தார். ஆலை முதலாளிகளோடு எனக்கு இனிய தொடர்பு இருந்தது. அவர்களோடு போராடுவது எனக்குச் சங்கடமான வேலையாக இருந்தது. நான் அவர்களுடன் கலந்து பேசி, "பஞ்சாயத்து வைத்துத் தொழிலாளர்களின் கோரிக்கைக்கு முடிவு கட்டுங்கள்" என்று கேட்டுக்கொண்டேன். ஆனால் முதலாளிகள் தமக்கும் தொழிலாளிகளுக்கும் இடையே பஞ்சாயத்தார் மத்தியஸ்தமாக இருப்பதை விரும்பவில்லை.

எனவே நான் தொழிலாளிகளுக்கு வேலைநிறுத்தம் செய்ய ஆலோசனை கூறினேன். அதற்கு முன்பு நான் தொழிலாளிகளோடும் அவர்களுடைய தலைவர்களோடும் போதுமான அளவு

பழகிப் பேசி முடித்திருந்தேன். வேலைநிறுத்தத்திற்கு நான் பின் வரும் நிபந்தனைகளைக் கூறி விளக்கினேன் : (1) எந்த நிலையிலும் அமைதிக்குப் பங்கம் உண்டாக்கக் கூடாது. (2) வேலைக்குப் போக விரும்புகிறவர்களிடம் எவ்விதமான தொந்தரவோ பலாத் காரமோ செய்யக் கூடாது. (3) தொழிலாளிகள் பிச்சை எடுத் துப் புசிக்கக்கூடாது. (4) வேலைநிறுத்தம் எவ்வளவு நாட் கள் நீடித்தாலும் சரி, அவர்கள் உறுதியாக இருக்கவேண்டும். பணம் காசு இல்லாவிட்டால் வேறு தொழில் செய்து வயிற்றை நிரப்பிக்கொள்ள வேண்டும்.

தொழிலாளிகளின் தலைவர்கள் இந்த நிபந்தனைகளை அறிந்துகொண்டனர். அவர்களுக்கு இவை பிடித்தன. தொழி லாளிகள் ஒரு பொதுக்கூட்டம் கூடி, 'எங்கள் கோரிக்கைகளை முதலாளிகள் ஏற்றுக்கொள்ளாத வரையில் அல்லது அவற்றைப் பற்றி ஆலோசனை செய்யப் பஞ்சாயத்து நியமிக்காத வரையில் நாங்கள் வேலைக்குப் போகமாட்டோம்' என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

இந்த வேலைநிறுத்தத்தின்போது ஸ்ரீ வல்லபபாயோடும் ஸ்ரீ சங்கரலால் பாங்கரோடும் நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது. ஸ்ரீமதி அநஸூயா பஹனை முன்னமே எனக்கு நன்றாகத் தெரியும். ஸாபர்மதி நதிக்கரையில் ஒரு மர நிழலில் நாள்தோறும் தொழிலா ளர் கூட்டங்கள் நடந்தன. அவர்கள் நூற்றுக்கணக்கில் கூட் டங்களுக்கு வருவார்கள். நான் அவர்களுக்குத் தினந்தோறும் அவர்கள் பிரதிக்கினையை ஞாபகப்படுத்தினேன். அமைதியையும் சுயமரியாதையையும் காப்பாற்றவேண்டிய அவசியத்தைத் தெரி வித்தேன். அவர்கள் தம்முடைய 'எங்கள் நோக்கம் ஒன்றே' என்ற கொடிகளைத் தூக்கிக்கொண்டு ஊர்வலம் வருவார்கள். இந்த வேலை நிறுத்தம் 21 நாள் நடந்தது. இதன் நடுவில் நான் அடிக்கடி ஆலை முதலாளிகளோடு பேசித் தொழிலாளிகளின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டினேன். "நாங்களும் எங்கள் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும். எங்களுக்கும் தொழிலாள ருக்கும் உள்ள தொடர்பு தகப்பனுக்கும் புதல்வருக்கும் உள்ளது போன்றது. இதன் நடுவில் யாராவது தலையிட விரும்பினால் அதை நாங்கள் எப்படிப் பொறுக்க முடியும்? தகப்பனுக்கும் புதல்வருக் கும் நடுவே பஞ்சாயத்து ஏதுக்கு?" என்ற பதில் எனக்குக் கிடைக்கும்.

தொழிலாளிகள் முதல் இரண்டு வாரம் மிகவும் தைரியத் தோடு இருந்தார்கள். மிக்க அமைதியோடும் இருந்தனர். தினந்

தோறும் நடக்கும் கூட்டங்களில் அவர்கள் ஏராளமாக வருவார்கள். நாள்தோறும் அவர்கள் பிரதிக்ஞையை ஞாபகப்படுத்துவேன். "நாங்கள் செத்தாலும் சாவோமேயன்றி எங்கள் பிரதிக்ஞையை ஒருபோதும் விடமாட்டோம்" என்று அவர்கள் கூறுவார்கள்.

ஆனால் கடைசியில் அவர்கள் சோர்ந்துபோயினர். உடல் வலுவற்ற மனிதன் பிறர்மீது ஆத்திரம் கொள்வதுபோல, வலுவிழந்ததுமே அவர்கள் ஆலைக்குச் செல்லும் தொழிலாளிகளைப் பகைக்கலாயினர். ஒருவேளை அவர்கள்மீது பலாத்காரம் செய்துவிடுவார்களோ என்று எனக்குப் பயம் தோன்றியது. தினசரிக் கூட்டத்தில் ஆட்களின் தொகை குறைந்தது. வந்தவர்கள் முகத்திலும் சோர்வு குடிகொண்டிருந்தது. தொழிலாளிகள் கலகலத்துப் போனதாக எனக்குச் செய்தி கிடைத்தது. நான் கவலையில் ஆழ்ந்தேன். இந்த நிலையில் என் கடமை என்ன என்று சிந்திக்கலானேன். தென்னுப்பிரிக்காவில் தொழிலாளிகளின் வேலை நிறுத்தத்தைப்பற்றி எனக்கு அநுபவம் இருந்தது. ஆனால் இந்த அநுபவம் எனக்குப் புதிதாக இருந்தது. என்னுடைய தூண்டுதலினால் அவர்கள் செய்துகொண்ட அந்தப் பிரதிக்ஞை, நாள்தோறும் நான் ஞாபகப்படுத்திவந்த அந்தப் பிரதிக்ஞை, தளர்ந்து போவதாவது? இந்த எண்ணத்தை என் தற்பெருமை என்றே, தொழிலாளியிடமும் சத்தியத்தினிடமும் எனக்கு இருந்த அன்பு என்றே கருதலாகும்.

காலை வேளை. நான் கூட்டத்தில் இருந்தேன். எனக்கு என்ன செய்வது என்று ஒன்றும் புரியவில்லை. ஆனால் அதே கூட்டத்தில் என் வாயினின்றும் இந்தச் சொற்கள் வெளிவந்தன: "தொழிலாளிகள் மீண்டும் உறுதியோடு முன்வந்து, ஒரு முடிவு ஏற்படும் வரையில் வேலைநிறுத்தத்தைச் சமாளிக்கவேண்டும். அது நடக்காத வரையில் நான் உபவாசம் இருப்பேன்." அங்கே கூடியிருந்த தொழிலாளிகள் திடுக்கிட்டுப் போயினர். அநஸூயா பஹனின் கண்களில் கண்ணீர் ததும்பியது. "நீங்கள் வேண்டாம்; நாங்கள் உபவாசம் இருக்கிறோம். உங்களை உபவாசம் இருக்கவிடமாட்டோம். எங்களை மன்னிக்கவேண்டும். நாங்கள் எங்கள் பிரதிக்ஞையைக் காப்போம்" என்று தொழிலாளிகள் கூறினர்.

"நீங்கள் உபவாசம் இருப்பது அவசியமில்லை. உங்கள் பிரதிக்ஞையைக் காத்தால் அதுவே போதும். நம்மிடம் பணம் இல்லை. தொழிலாளிகளுக்குப் பிச்சைச் சோறு போட்டு நாம் வேலைநிறுத்தம் நடத்த வேண்டியதில்லை. நீங்கள் எங்காவது

தொழில் செய்து உங்கள் வயிற்றை நிரப்பிக்கொள்ளும் அளவுக்குச் சம்பாதித்துக் கொண்டால், வேலைநிறுத்தம் எவ்வளவு நீடித்தாலும் நிச்சிந்தையாக இருக்க முடியும். என் உபவாசமோ ஏதாவது ஒரு முடிவு ஏற்படுவதற்கு முன்னால் கலையக்கூடியதல்ல'' என்றேன்.

வல்லபபாய் தொழிலாளிகளுக்காக முனிசிபாலிடியில் வேலை தேடினார். ஆனால் அங்கே வேலை ஒன்றும் கிடைப்பதாக இல்லை. ஆசிரமத்து நெசவுச் சாலையில் அடித்தளத்தை நிரப்ப மணல் ஏராளமாகக் கொண்டுவர வேண்டியிருந்தது. 'பல தொழிலாளிகளுக்கு அந்த வேலையைக் கொடுக்கலாமே' என்று மகன்லால் குறிப்பிட்டார். தொழிலாளிகள் வேலை செய்யத் தயாராயினர். அனஸூயா பஹன் முதல் கூடையைத் தூக்கி வந்தார். ஆற்றங்கரையிலிருந்து தொழிலாளிகள் வரிசை வரிசையாக மணற் கூடைகளைத் தூக்கிவந்தனர். அது காண்பதற்குரிய காட்சியாக இருந்தது. தொழிலாளிகளுக்குப் புதிய பலம் வந்தது. அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்குள் ஆசிரமத்துச் சிப்பந்திகள் களைத்துப் போயினர்.

இந்த உபவாசத்தில் ஒரு குற்றம் இருந்தது. ஆலை முதலாளிகளோடு எனக்கு இனிய தொடர்பு இருந்ததை ஏற்கனவே எழுதியிருக்கிறேன். ஆதலால் இந்த உபவாசம் அவர்கள் உள்ளத்தைத் தீண்டாமல் இருக்க முடியவில்லை. சத்தியாக்கிரகி என்ற முறையில் நான் அவர்களுக்கு எதிராக உபவாசம் செய்யக் கூடாது என்பதும் தொழிலாளிகளின் வேலைநிறுத்தமே அவர்கள் மனத்தில் படவேண்டும் என்பதும் நான் அறிந்தவையே. நான் பிராயச்சித்தம் செய்தது அவர்களுடைய குற்றத்துக்காக அல்ல; தொழிலாளிகளின் குற்றத்துக்காகத்தான். நான் தொழிலாளிகளின் பிரதிநிதியாதலால் அவர்களுடைய குற்றம் என்னையும் பாதித்தது. முதலாளிகளிடம் நான் வேண்டிக்கொள்ளத்தான் முடியும். அவர்களுக்கு எதிராக உபவாசம் இருப்பது பலாத்காரமாகும். எனினும் இந்த உண்ணாவிரதம் அவர்கள் உள்ளத்தில் பதியாமல் இராது என்பதை அறிந்திருந்தேன். அப்படித்தான் நடந்தது. ஆனால் என்னை நான் தடுத்துக்கொள்ள முடியவில்லை. இந்தக் குற்றம் இருந்தும் உண்ணாவிரதம் இருப்பது என் கடமை என்பதை நான் நேரடியாகக் கண்டேன்.

“நான் உண்ணாவிரதம் இருப்பதனால் நீங்கள் உங்கள் வழியினின்றும் சற்றும் விலகவேண்டிய அவசியமில்லை'' என்று முதலாளிகளுக்குச் சமாதானம் சொன்னேன். அவர்கள் கசப்பும்

இனிமையும் கலந்த முறையில் என்னைக் கண்டித்தார்கள். இப்படிச் செய்ய அவர்களுக்கு உரிமை இருந்தது. ஆனால் வெறும் இரக்கத்தினால்தான் அவர்கள் சமாதானத்துக்கு வழிதேடலானார்கள். அநஸூயாபாயின் வீட்டில் அவர்கள் கூட்டங்கள் நடத்தினார்கள். ஸ்ரீ ஆனந்தசங்கர் துருவரும் இதில் தலையிட்டார். கடைசியில் அவர் மத்தியஸ்தராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வேலைநிறுத்தம் நின்றது. நான் மூன்று நாட்களே உபவாசம் இருக்க நேர்ந்தது. முதலாளிகள் தொழிலாளிகளுக்கு மிட்டாய்கள் வழங்கினார்கள். 21-ஆம் நாள் சமாதானம் நடந்தது. சமாதானக் கூட்டமும் கூடியது. இந்தக் கூட்டத்துக்கு ஆலை முதலாளிகளும் கமிஷனரும் வந்திருந்தார்கள். கமிஷனர் தொழிலாளிகளுக்கு, "நீங்கள் எப்பொழுதும் மிஸ்டர் காந்தி சொல்லுகிறபடியே நடந்துகொள்ள வேண்டும்" என்று புத்திமதி கூறினார். இந்தச் சம்பவம் நடந்த சில நாட்களுக்குப் பிறகு, விரைவிலேயே இதே கமிஷனரோடு நான் ஒரு போர் நடத்தவேண்டியிருந்தது. காலம் மாறியது; எனவே அவரும் மாறினார். கேடா ஜில்லா பட்டாதார்களிடம் என் பேச்சைக் கேட்கவேண்டாம் என்று ஆலோசனை கூறினார்!

## 62

### ரௌலட் சட்டமும் என் தர்ம சங்கடமும்

கேடா குடியானவர்களின் சத்தியாக்கிரகத்தைப் பற்றி நான் இங்கே ஒன்றும் சொல்லாமல் விட்டுவிடுகிறேன். விருப்பம் இருந்தோ இல்லாமலோ குடியானவர்களின் கோரிக்கைகளுக்கு இணங்கிய அந்த அரசாங்கத்துக்கு இப்போது நாங்கள் உதவும் சந்தர்ப்பம் வந்தது. ஐரோப்பாவில் மகாயுத்தம் நடந்துவந்தது. டில்லியில் நடந்த யுத்த மகாநாட்டுக்கு என்னைக் கூப்பிட்டிருந்தார்கள். எனக்கு அது தர்ம சங்கடமாக இருந்தது. இங்கிலாந்து மற்ற அரசுகளோடு செய்துகொண்ட ரகசிய ஒப்பந்தங்களைப்பற்றிப் பெருத்த விவாதம் நடந்தது. நான் என் ஆட்சேபங்களைக் குறித்திருந்தேன். வைஸ்ராய் செம்ஸ்போர்டு என்னை விவாதத்தில் கலந்துகொள்ள அழைத்தார். விவாதம் முடிந்த பிறகு நான் கலந்துகொள்வதாகக் கூறி என் கொள்கைகளை அவருக்கு எழுதி அனுப்பினேன். லோகமான்ய திலகர், அலி சகோதரர்கள் முதலிய தலைவர்கள் அதில் கலந்துகொள்ளாதது பற்றி என் வருத்தத்தைத் தெரிவித்ததோடு, ஜனங்களின் அரசியல் கோரிக்கைகளையும்,

போரினால் எழும் முகம்மதியர்களுடைய கோரிக்கைகளையும் குறிப்பிட்டிருந்தேன்.

இதன் பிறகு சைனியத்துக்கு ஆள் திரட்டும் வேலை இருந்தது. கேடா குடியானவர்கள் சைனியத்தில் சேர விரும்பவில்லை. அப்படி இருந்தும் எங்களுக்குப் போதுமான பேர் கிடைத்தனர். என்னுடைய இந்த வேலையைப்பற்றிக் கண்டனங்களும் வந்தன. ஆனால் அவற்றைப் பொறுமையாகக் கேட்பதே என் கடமை என்று எண்ணினேன். எதிர்காலத்தில் எந்தச் சாம்ராஜ்யத்தில் நாம் முழுப் பங்கு பெற விரும்புகிறோமோ அதற்கு ஆபத்தில் உதவி செய்வது நம் கடமையே. இதில் என்னுடைய ராஜ பக்தியும் அடங்கியிருந்தது. ஆங்கிலேயர்களுக்கு இருக்கும் பக்தியைப் போலவே ஒவ்வோர் இந்தியனும் தன் பக்தியை வெளிப்படுத்த வேண்டும் என்று நான் விரும்பினேன்.

ஆனால் நான் நீண்ட நோய்வாய்ப்பட்டதனாலும் யுத்தம் சில காலத்துக்குள்ளேயே முடிந்துவிட்டதனாலும் என் எண்ணம் ஈடேறாமலே இருந்துவிட்டது. நான் ஆரோக்கியம் பெறுவதற்காக மாதேரானுக்குப் போனேன்.

அங்கே போனால் உடம்பு சீக்கிரம் குணப்படும் என்று நண்பர்கள் சொன்னதைக் கேட்டு நான் அங்கே சென்றேன். ஆனால் அவ்விடத்துத் தண்ணீர் கன்மாக இருந்ததனால் என்னைப் போன்ற நோயாளி அங்கே வசிப்பது கஷ்டமாக இருந்தது. சீத பேதியில் நலிந்துபோய் என் ஆசனத் துவாரம் மிகவும் பலவீனப்பட்டிருந்தது. அதில் ரணம் இருந்ததால் மலம் கழிக்கும்போது மிகுந்த வலி உண்டாயிற்று. ஆதலால் எதைச் சாப்பிடவும் எனக்குப் பயமாக இருந்தது. ஒரு வாரத்தில் மாதேரானிலிருந்து திரும்பினேன். என் ஆரோக்கியப் பொறுப்பை ஸ்ரீ சங்கர்லால் தாமே ஏற்றுக்கொண்டிருந்தார். அவர் டாக்டர் தலாலிடம் ஆலோசனை கேட்கவேண்டுமென்று வற்புறுத்தினார். டாக்டர் தலால் வந்தார். ஒரு நொடிக்குள்ளே முடிவு செய்துவிடும் அவருடைய திறமை என்னைக் கவர்ந்தது.

"நீங்கள் பால் குடிக்காதவரையில் உங்கள் உடம்பு சரியாகாது. பால் அருந்துவதோடு இரும்புச் சத்தை இஞ்செக்ஷன் செய்துகொள்ளவும் வேண்டும். நீங்கள் இவ்வளவையும் செய்தால் உங்கள் தேகம் முன்போல் புஷ்டியடைவதற்கு நான் உத்தரவாதம்" என்று அவர் சொன்னார்.

"நீங்கள் இஞ்செக்ஷன் செய்யுங்கள். நான் பால் மட்டும் அருந்தமாட்டேன்."

"பால் அருந்தும் விஷயமாக உங்கள் பிரதிக்கினை என்ன? அதை விவரமாகச் சொல்லுங்களேன்."

"பசுக்களையும் எருமைகளையும் கொடூரமாக நடத்திப் பால் கறக்கிறார்கள். இதை அறிந்ததும் எனக்குப் பாலினிடம் வெறுப்பு உண்டாகிவிட்டது. பால் மனிதனுக்குரிய உணவல்ல என்று எப்போதுமே நான் கருதி வந்திருக்கிறேன். ஆதலால் நான் பால் அருந்துவதில்லை."

என் கட்டிலருகிலேயே நின்றிருந்த கஸ்தூரிபாய், "அப்படியானால் நீங்கள் ஆட்டுப் பால் அருந்தலாமே" என்று சொன்னாள்.

டாக்டர் தலால் இடைமறித்து, "நீங்கள் வெள்ளாட்டுப் பால் அருந்தினால் எனக்குப் போதும்" என்றார்.

நான் விட்டுக் கொடுத்தேன். சத்தியாக்கிரகப் போரில் எனக்கு இருந்த ஆசை எனக்கு உயிரில் ஆசையை உண்டாக்கியது. என் பிரதிக்கினையின் எழுத்துக்களின்படி நடந்துகொண்டதோடு திருப்தியடைந்து, அதன் ஆத்மாவைக் கொன்றேன். பாலையும் நெய்யையும் பற்றி நான் பிரதிக்கினை எடுத்துக்கொண்டபோது பசுக்களையும் எருமைகளையுமே கருத்தில் கொண்டிருந்தேன். ஆயினும் என் பிரதிக்கினை எவ்விதப் பாலுக்கும் பொருத்தமானதாகும். மேலும், எந்த மிருகத்தின் பாலும் மனிதனுக்கு ஏற்ற உணவல்ல என்று நான் மறுக்கும்போது, அதை உணவாக உபயோகப்படுத்தும் உரிமை எனக்கு இல்லை. இவற்றையெல்லாம் அறிந்திருந்தும் நான் வெள்ளாட்டுப் பாலை அருந்துவதற்குத் தயாரானேன். சத்தியத்தை உபாசிப்பவன், சத்தியாக்கிரகப் போருக்காக வாழ்ந்திருக்க விரும்பி, தன் சத்தியத்தை மாசுபடுத்தினான்.

இதனால் என் மனத்தில் ஏற்பட்ட புண் இன்னும் ஆறவில்லை. ஆட்டுப் பாலை விடவேண்டுமென்று நான் எப்போதும் சிந்தித்து வந்திருக்கிறேன். தினந்தோறும் வெள்ளாட்டுப் பாலை அருந்தும் போது இந்த வருத்தம் எனக்கு உண்டாகிறது. ஆயினும் தொண்டு செய்யவேண்டும் என்ற மிகவும் நுண்மையான மோகம் என்னைப் பற்றிக்கொண்டிருக்கிறது. அது என்னை விடுவதாக இல்லை. அஹிம்ஸையைக் கொண்டு பார்க்கும்போது என் உணவுப் பரிசோதனைகள் எனக்கு மிகவும் பிரியமானவை. அவற்றில் எனக்கு ஆனந்தம் உண்டாகிறது. இதுதான் என்னுடைய பொழுதுபோக்குங்கூட. ஆனால் ஆட்டுப்பாலை அருந்துவது எனக்கு இந்தக் காரணத்தினால் உறுத்தவில்லை. சத்தியத்தைக் கொண்டு பார்க்கும்போதுதான் அது என்னை உறுத்துகிறது.

அஹிம்ஸையை நான் அறிந்துகொண்டிருப்பதைவிடச் சத்தியத்தைப் பின்னும் அதிகமாக அறிந்துகொண்டிருப்பதாக நினைக்கிறேன். சத்தியத்தை நான் கைவிட்டால் அஹிம்ஸை சம்பந்தமான பெரிய சிக்கல்களை நான் எப்போதுமே விடுவிக்க முடியாது என்பதை அநுபவத்தில் கண்டிருக்கிறேன். சத்தியத்தைக் காப்பது என்ருல், ஏற்றுக்கொண்ட விரதங்களின் உடலையும் ஆத்மாவையும் காப்பது, சொல்லினுல் வரும் பொருளையும் கருத்திஞல் உண்டாகும் பொருளையும் காப்பது என்று அர்த்தம். இவ்விடத்தில் நான் ஆத்மாவை அதாவது கருத்திலிருந்து வெளியாகும் பொருளை அழித்துவிட்டேன். இதுதான் என்னை எப்போதும் உறுத்துகிறது. இந்தப் பிரதிக்ஞை சம்பந்தமாக நான் என் கடமையை அறிந்திருந்தும், இதை நான் அறிய முடியவில்லை; அல்லது அதைக் காக்கும் தைரியம் என்னிடம் இல்லை என்று சொல்லலாம். இரண்டும் ஒன்றுதான்; ஏனெனில் இந்தச் சந்தேகத்துக்கு வேர் நம்பிக்கையின்மையே. இறைவன் எனக்கு நம்பிக்கையைக் கொடுக்கவேண்டும்!

நான் ஆட்டுப் பால் அருந்த ஆரம்பித்த சில நாளைக்கெல்லாம் டாக்டர் தலால் ஆசனத் துவாரத்தில் சஸ்திர சிகிச்சை செய்தார். அதனுல் குணம் ஏற்பட்டது.

இவ்வாறு நான் நோயிலிருந்து குணமடையத்தொடங்கிப் பத்திரிகைகள் படிக்கும் நிலைக்கு வந்திருந்தபொழுது, ரௌலட் கமிட்டியின் அறிக்கை என் கைக்கு வந்தது. அதில் செய்திருந்த சிபாரிசுகளைக் கண்டு நான் திடுக்கிட்டேன். இதற்கு ஏதாவது செய்யவேண்டும் என்று சகோதரர் உமரிடமும் சங்கர்லாலிடமும் சொன்னேன். இரண்டொரு மாதத்துக்குள் நான் அஹமதாபாத் போய்ச் சேர்ந்தேன். வல்லபபாய் என் உடல் நலத்தைப்பற்றி விசாரிக்க அநேகமாகத் தினந்தோறும் வருவது வழக்கம். இதைப் பற்றி நான் அவரிடம் பேசி ஏதாவது செய்யவேண்டும் என்பதைக் குறிப்பிட்டேன். "என்ன செய்வது?" என்று அவர் கேட்டார். "கமிட்டியின் சிபாரிசுகளின்படி வர இருக்கும் சட்டத்தை எதிர்த்துப் பிரதிக்ஞை செய்பவர்கள் சிலர் முன்வந்தாலும் போதும். நாம் சத்தியாக்கிரகம் ஆரம்பித்துவிடலாம். இப்படி நோய்ப்படுக்கையில் இல்லாவிட்டால் நான் ஒருவனுகவே போராடி, 'பின்னுல் மற்றவர்களும் வரட்டும்' என்று எதிர்பார்த்திருப்பேன். ஆனுல் இந்த நிலையில் தனியாகப் போராடும் சக்தி என்னிடம் அடியோடு இல்லை" என்று சொன்னேன். இந்தப் பேச்சின் பயனுக, என்னுடன் சரியான தொடர்புகொண்ட சிலரை

அழைத்து ஒரு சிறு கூட்டம் நடத்த ஏற்பாடு ஆயிற்று. ரௌலட் கமிட்டியாருக்குக் கிடைத்த சாக்ஷியங்களிலிருந்து, அவர்கள் செய்த சிபாரிசுப்படி சட்டம் தேவையே இல்லை என்பது எனக்குத் தெளிவாகத் தென்பட்டது. மேலும், இம்மாதிரியான சட்டத்தைச் சுய மதிப்புள்ள எந்தத் தேசமோ மக்களோ ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்பதும் எனக்குத் தெளிவாகப் புலப்பட்டது.

கூட்டம் நடந்தது. மிஞ்சிப் போனால் சுமார் 20 பேருக்கு அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள அழைப்பு அனுப்பியிருப்போம். வல்லபபாயைத் தவிர ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடு, மிஸ்டர் ஹார்னிமான், காலஞ்சென்ற உமர் ஸோபானி, ஸ்ரீ சங்கர்லால் பாங்கர், ஸ்ரீமதி அநஸூயா பஹன் முதலியவர்கள் வந்திருந்ததாக எனக்கு ஞாபகம்.

சத்தியாக்கிரகப் பிரதிக்கினை இந்தக் கூட்டத்தில் தயாராயிற்று. அங்கே இருந்தவர்கள் எல்லோருமே அதில் கையொப்பமிட்டது எனக்கு நினைவு இருக்கிறது. அப்போது நான் பத்திரிகை ஒன்றும் நடத்தவில்லை. ஆனால் அவ்வப்போது தினசரிகளுக்கு எழுதிவந்ததுபோலவே இதைப் பற்றியும் எழுதலானேன். சங்கர்லால் பாங்கர் இயக்கத்தை நன்றாக ஆரம்பித்தார். அவருடைய வேலை செய்யும் திறமையையும் நிர்வாகத் திறமையையும் அப்போது நான் நன்றாக அறிந்துகொண்டேன்.

அப்போது இருந்த எந்த ஸ்தாபனமும் சத்தியாக்கிரகத்தைப் போன்ற அஸ்திரத்தை ஏற்றுக்கொள்வது இயலாத காரியம் என்று தோற்றியதால் சத்தியாக்கிரக சபை ஏற்பட்டது. அதில் முக்கியமாகப் பம்பாயிலிருந்து அங்கத்தினர்கள் அதிகமாகச்சேர்ந்ததால் அதன் தலைமை ஸ்தானத்தையும் பம்பாயிலேயே ஏற்படுத்தினோம். பிரதிக்கினையில் ஏராளமானவர்கள் கையொப்பமிட்டனர். கேடா சத்தியாக்கிரகப் போரில் நடந்ததுபோல இப்போதும் துண்டுப் பிரசுரங்கள் வெளிவந்தன. அங்கங்கே கூட்டங்கள் நடந்தன.

இந்தச் சபைக்கு நான் தலைவனாக இருந்தேன். இந்தச் சபையில் இருந்த அறிவாளிகளுக்கும் எனக்கும் அதிக ஒற்றுமை ஏற்பட முடியாது என்று கண்டேன். சபையில் குஜராத்தி மொழியையே உபயோகிக்கவேண்டும் என்ற என் வற்புறுத்தலையும், என் மற்ற வேலை முறைகளையும் கண்டு அவர்கள் வியப்புற்றனர். ஆயினும் அவர்களில் பலரும் என் வேலைமுறைக்குத் தக்கபடி நடந்துகொள்ளும் தாராள மனப்பான்மையைக் காட்டினார்கள் என்பதை

நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் இந்தச் சபை நீண்ட நாளைக்கு நடக்காது என்பதை ஆரம்பத்திலேயே கண்டுகொண்டேன். சத்தியத்தையும் அஹிம்ஸையையும் நான் வலியுறுத்திப் பேசியது சிலருக்கு வெறுப்பாக இருந்தது. அப்படி இருந்தும் ஆரம்பத்தில் இந்த வேலை மிகவும் தீவிரமாக நடந்தது.

# 63

## அற்புதமான காட்சி

ரௌலட் கமிட்டி அறிக்கைக்கு விரோதமாக இவ்வாறு ஒரு புறத்தில் கிளர்ச்சி வலுத்து வருகையில், மறுபுறத்தில் அரசாங்கத்தார் அந்தச் சிபாரிசுகளை அமலுக்குக் கொண்டுவருவதில் முனைந்தார்கள். ரௌலட் மசோதா வெளியாயிற்று. நான் சட்டசபைக் கூட்டத்துக்கு ஒரே ஒரு தடவைதான் போயிருக்கிறேன். இந்த ரௌலட் மசோதாவின்மீது நடந்த விவாதங்களைக் கேட்கத்தான் போனேன். சாஸ்திரியார் மிகவும் தீவிரமாகப் பிரசங்கம் செய்தார். அதில் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்தார். சாஸ்திரியாரின் வாக்கு வெள்ளம்போல் பெருகிக்கொண்டிருக்க, வைஸ்ராய் அவரையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். சாஸ்திரியாரின் பிரசங்கம் அவர் மனத்தில் புகுந்து அவரை மாற்றிவிட்டிருக்கும் என்று எனக்குத் தோன்றிற்று. அப்படிப்பட்ட ஆவேசம் சாஸ்திரியாரிடம் பொங்கிக்கொண்டிருந்தது.

ஆனால் தூங்குகிறவனை எழுப்பலாம். விழித்துக்கொண்டிருப்பவன் தூங்குவதாகப் பாசாங்கு செய்தால் அவன் காதருகில் பறையடித்தாலும் என்ன பயன் இருக்கப்போகிறது? சட்டசபையில் மசோதாக்களின்மீது நடக்கும் விவாதங்களை ஒரு கேலிக்கூத்து என்றே சொல்லிவிடலாம். சர்க்கார் அப்படித்தான் கேலிக்கூத்து விளையாடியது. தான் செய்யவேண்டிய வேலையை அது ஏற்கனவே தீர்மானித்திருந்ததனால் சாஸ்திரியாரின் எச்சரிக்கை பயன்படாமற் போயிற்று.

என் ஈனஸ்வரத்தை அங்கே யாராவது கேட்டால்தானே? நான் வைஸ்ராயைக் கண்டு மன்றாடி வேண்டிக்கொண்டேன். அந்தரங்கக் கடிதங்களும் பகிரங்கமான கடிதங்களும் எழுதினேன். சத்தியாக்கிரகத்தைத் தவிர எனக்கு வேறு வழியில்லை என்பதையும் தெளிவாகச் சொன்னேன். அத்தனையும் வீணாயிற்று.

இன்னும் மசோதா சட்டமாகி கெஜட்டில் பிரசுரமாகவில்லை. என் உடல் பலவீனமாக இருந்தும் நான் நீண்ட

பிரயாணம் செய்யத் துணிந்துவிட்டேன். உரத்துப் பேசும் சக்தி இன்னமும் எனக்கு வரவில்லை. நின்று பேசும் சக்தியை நான் அப்போது இழந்தது இன்னமும் திரும்பி வரவில்லை. நின்று பேசினால் சிறிது நேரத்தில் உடம்பு முழுவதும் நடுங்கும். மார்பிலும் வயிற்றிலும் வலி உண்டாகும். ஆயினும் சென்னையிலிருந்து வந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்று எனக்குத் தோன்றிற்று. தென்னாடு அப்போது எனக்குச் சொந்த வீட்டைப்போலவே இருந்தது. தென்னாப்பிரிக்காவில் இருந்த தொடர்பின் காரணமாகத் தமிழர்கள், தெலுங்கர்கள் முதலிய தென்னாட்டாரிடம் எனக்கு ஏதோ தனி உரிமை இருப்பதாகவே நான் எண்ணிவந்திருக்கிறேன். என்னுடைய இந்த நினைப்பில் நான் இதுவரை சிறிதாவது தவறு செய்திருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஸ்வர்க்கிய ஸ்ரீ கஸ்தூரிரங்க ஐயங்காரின் சார்பாக இந்த அழைப்பு வந்திருந்தது. சென்னைக்குப் போனதும், இந்த அழைப்பின் மறைவில் இருந்தவர் ஸ்ரீ ராஜகோபாலாசாரியார் என்பது தெரிந்தது. அவரோடு எனக்கு ஏற்பட்ட முதல் பழக்கம் அதுதான் என்று சொல்லலாம். அவரைப் பார்த்தவுடனேயே தெரிந்துகொள்ளக்கூடிய அளவுக்குத்தான் அந்தத் தடவை பழகினேன்.

பொது வாழ்க்கையில் அதிகப் பங்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தோடும், ஸ்ரீ கஸ்தூரிரங்க ஐயங்கார் முதலிய நண்பர்களின் வேண்டுகோளினாலும் அவர் சேலத்தை விட்டுச் சென்னையில் வக்கீல் தொழில் நடத்த வந்திருந்தார். அவர் வீட்டில்தான் நான் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். இரண்டொரு நாளைக்குப் பின்பே நான் அவர் வீட்டில் இறங்கியிருப்பதை அறிந்தேன். அது ஸ்ரீ கஸ்தூரிரங்க ஐயங்காரின் பங்களா ஆதலால் நான் அவருடைய விருந்தினனாக இருப்பதாக எண்ணியிருந்தேன். மகாதேவ தேசாய் என் பிழையைத் திருத்தினார். ராஜகோபாலாசாரியார் என்னிடமிருந்து விலகியே இருந்துவந்தார். ஆனால் மகாதேவ் அவரோடு நன்கு பழகியிருந்தார். "நீங்கள் ஸ்ரீ ராஜகோபாலாசாரியாரோடு நன்கு பழகிக்கொள்ள வேண்டும்" என்று அவர் என்னை எச்சரித்தார்.

நான் அவரோடு பழகினேன். நாள்தோறும் அவரோடு போராட்டத்துக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்ய ஆலோசனை செய்துவந்தேன். பொதுக்கூட்டங்கள் நடத்துவதைத் தவிர எனக்கு வேறு எதுவும் தோன்றவே இல்லை. ரௌலட் மசோதா சட்டமாகிவிட்டால் அதற்கு விரோதமாகச் சாத்துவிக எதிர்ப்பு

எப்படிச் செய்வது? சாத்துவிக எதிர்ப்புச் செய்யும் சந்தர்ப்பம் சர்க்கார் கொடுத்துத்தானே வரும்? வேறு எந்தச் சட்டங்களைச் சாத்துவிக முறையில் எதிர்க்க முடியும்? அதற்கு வரம்பு எங்கே என்று முடிவு கட்டுவது? இவ்விதவான விஷயங்களையே நாங்கள் விவாதித்துவந்தோம்.

ஸ்ரீ கஸ்தூரிரங்க ஐயங்கார் தலைவர்களை அழைத்து ஒரு சிறு கூட்டத்துக்கும் ஏற்பாடு செய்தார். அந்தக் கூட்டத்திலும் நீண்ட நேரம் விவாதங்கள் நடந்தன. அதில் ஸ்ரீ விஜயராகவாசாரியார் வெகுவாகக் கலந்துகொண்டார். நுட்பமான அம்சங்களையெல்லாம் விளக்கி நான் சத்தியாக்கிரக சாஸ்திரத்தை வெளியிடவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். "அது என் சக்திக்கு அப்பாற்பட்டது" என்று அவரிடம் சொன்னேன்.

இவ்வாறு ஆலோசனைகள் நடந்துகொண்டிருக்கையில், ரௌலட் மசோதா சட்டமாகி, கெஜட்டில் வெளிவந்திருப்பதாகச் செய்தி வந்தது. இந்தச் செய்தி கிடைத்த அன்று இரவு நான் சிந்தனை செய்துகொண்டே தூங்கிவிட்டேன். மறுநாள் அதிகாலையில் விழித்துக்கொண்டேன். அப்போது பாதித் தூக்கத்தில் என் கனவில் ஒரு சிந்தனை உதித்தது.

பொழுதுவிடிந்தவுடனே நான் ஸ்ரீ ராஜகோபாலாசாரியாரைக் கூப்பிட்டு, "இந்தச் சட்டத்தை எதிர்த்து நாடு முழுவதையும் நாம் ஹர்த்தால் நடத்தச் சொல்லவேண்டும் என்ற யோசனை நேற்றிரவு கனவில் எனக்குத் தோன்றியது. சத்தியாக்கிரகம் ஆத்மசுத்தி கொண்ட போராட்டம்; இது தார்மிகமான போராட்டம். தர்ம காரியத்தைத் தூய்மையோடு தொடங்குவதுதான் சரி. ஒரு நாள் எல்லோரும் உபவாசம் இருந்து வேலைகளையும் வியாபாரங்களையும் நிறுத்திவைக்கவேண்டும். முஸ்லிம் சகோதரர்கள் ஒரு நாளைக்குமேல் உபவாசம் வைத்துக்கொள்ளமாட்டார்கள். ஆதலால் 24 மணி நேரம் உபவாசம் இருக்க யோசனை கூறவேண்டும். எல்லா மாகாணங்களும் நம்மோடு கலந்துகொள்ளுமா என்பதை நான் சொல்ல முடியாது. ஆனால் பம்பாய், சென்னை, பீஹார், சிந்து இம்மாகாணங்களைப் பொறுத்தவரையில் எனக்குக் கட்டாயம் நம்பிக்கை உண்டு. இந்த இடங்களில் ஹர்த்தால் சரியாக நடந்துவிட்டால்கூட நாம் திருப்தியடையத்தான் வேண்டும்" என்று கூறினேன்.

ஸ்ரீ ராஜகோபாலாசாரியார் இந்த யோசனையை ஏற்றுக்கொண்டார். பிறகு உடனே இதை மற்ற நண்பர்களிடம் சொன்னார். எல்லோரும் சந்தோஷமாக இதை வரவேற்றனர். நான்

சிறிய அறிவிப்பு ஒன்றைத் தயாரித்து வெளியிட்டேன். முதலில் 1919-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 30உ என்று குறிப்பிட்டிருந்தோம். பிறகு அதை ஏப்ரல் 6உயாக மாற்றினோம். ஜனங்களுக்கு இந்த அறிவிப்பினால் சிறிதுநேர அவகாசமே கிடைத்தது. வேலையை உடனே தொடங்குவது அவசியமாக இருந்ததால் நீண்ட கால அறிக்கை தருவதற்கு நேரமே இல்லை.

ஆனால் கட்டுப்பாடாக அவ்வளவு வேலையும் எப்படித்தான் நடந்ததோ! பாரதநாடு முழுவதிலும் - நகரங்களிலும் சரி, கிராமங்களிலும் சரி - ஹர்த்தால்கள் நடந்தன. அது ஓர் அற்புதக் காட்சியாக இருந்தது.

# 64

## அந்த வாரம்! - 1

தென்னிந்தியாவில் சிறிது பிரயாணம் செய்துவிட்டு அநேகமாக ஏப்ரல் 4-ஆம் தேதி பம்பாய் போய்ச் சேர்ந்தேன். 6உ நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுவதற்கு நான் பம்பாய்க்கு வரவேண்டும் என்று ஸ்ரீ சங்கர்லால் பாங்கரிடமிருந்து தந்தி வந்தது.

ஆனால் அதற்கு முன்னால் டில்லியில் 30-ஆம் தேதியே ஹர்த்தால் நடந்துவிட்டது. அந்தக் காலத்தில் டில்லியில் ஸ்வர்க்கீய ஸ்வாமி சிரத்தானந்தருக்கும் காலஞ்சென்ற ஹக்கீம் அஜ்மல்கான் ஸாஹேப்புக்கும் அபாரமான செல்வாக்கு இருந்தது. ஹர்த்தால் தேதியை 6உக்கு மாற்றிய செய்தி டில்லிக்குத் தாமதமாகக் கிடைத்தது. டில்லியில் அன்று நடந்ததைப்போன்ற ஹர்த்தால் அதற்கு முன்பு எப்போதும் நடந்ததில்லை. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருமனப்பட்டவர்கள்போலத் தோன்றினார்கள். சிரத்தானந்தரை ஜும்மா மசூதிக்கு அழைத்து அங்கே அவரை உபந்நியாசம் செய்யச் சொன்னார்கள். இவற்றையெல்லாம் சர்க்கார் அதிகாரிகளால் பொறுக்க முடியவில்லை. ஊர்வலம் ஸ்டேஷனை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. போலீஸார் அதைத் தடுத்தனர். அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பலபேர் காயமடைந்தனர். பலர் இறந்தனர். டில்லியில் அடக்குமுறை தாண்டவமாடியது. சிரத்தானந்தர் என்னை டில்லிக்குக் கூப்பிட்டார். 6உ பம்பாயில் இருந்துவிட்டு உடனே டில்லிக்குப் புறப்படுவதாகத் தந்தியடித்தேன்.

டில்லியில் நடந்தாற்போலவே லாகூரிலும் அமிர்தஸரஸிலும் ஹர்த்தால்கள் நடந்தன. அமிர்தஸரஸிலிருந்து டாக்டர்கள்

ஸத்தியபாலும் கிச்லூவும் உடனே என்னை வரச்சொல்லித் தந்தி அடித்திருந்தனர். அப்போது அவர்கள் யாரென்றே எனக்குத் தெரியாது. டில்லியிலிருந்து அமிர்தஸரஸ் வருவதாக அவர்களுக்கு எழுதினேன்.

6வ காலையில் பம்பாயில் ஆயிரக்கணக்கானவர்கள் சௌபாத்தியில் ஸ்நானம் செய்தனர். அங்கிருந்து டாகுர்துவார் போவதற்கு ஊர்வலம் கிளம்பியது. இந்த ஊர்வலத்தில் பெண்களும் குழந்தைகளுங்கூட இருந்தனர். முஸ்லிம்களும் ஏராளமாகக் கலந்துகொண்டிருந்தனர். இந்த ஊர்வலம் முடிந்த பின்பு முஸ்லிம் சகோதரர்கள் எங்களை ஒரு மசூதிக்கு அழைத்துப்போனார்கள். அங்கே ஸ்ரீமதி ஸரோஜினி தேவியையும் என்னையும் உபந்நியாசம் செய்யச் சொன்னார்கள். அந்த இடத்திலேயே சுதேசி விரதத்தையும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைப் பிரதிக்கினையையும் ஜனங்களை எடுத்துக்கொள்ளச் செய்யவேண்டுமென்று ஸ்ரீ விட்டல்தாஸ் ஜேராஜனி குறிப்பிட்டார். நான் அவ்வளவு அவசரமாகப் பிரதிக்கினை செய்விக்க மறுத்துவிட்டேன். நடப்பதைக்கொண்டே திருப்தியடையவேண்டுமென்று சொன்னேன். 'ஒரு தடவை பிரதிக்கினை எடுத்துக்கொண்ட பிறகு அதை மீற முடியாது. சுதேசி விரதத்தின் உட்கருத்தை நாம் அறிந்துகொள்ளவேண்டும்' என்று கூறி, ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையைப் பற்றிய பொறுப்பையும் விளக்கினேன். பிரதிக்கினை எடுத்துக்கொள்ள விரும்புகிறவர்கள் மறுநாள் காலையில் சௌபாத்தி மைதானத்துக்கு வரலாம் என்று கடைசியில் சொன்னேன்.

பம்பாயில் ஹர்த்தால் முடிவுற்றது.

இங்கே சட்டமறுப்புச் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்திருந்தோம். சட்டத்தை மீறக்கூடிய இரண்டு மூன்று விஷயங்கள் இருந்தன. இவை ரத்தாகக்கூடிய சட்டங்கள். யாரும் இவற்றைச் சகஜமாக மீற முடியும். இவற்றில் ஒன்றை உபயோகிக்கத் தீர்மானித்திருந்தோம். உப்புவரி ஜனங்களின் மனத்தைப் பெரிதும் உறுத்தியது. அந்த வரியை நீக்குவதற்குப் பலர் முயன்றனர். எனவே எல்லோரும் தத்தம் வீட்டில் அநுமதியின்றி உப்புக் காய்ச்சலாம் என்று நான் சொன்னேன். மற்றொன்று, அரசாங்கத்தார் பறிமுதல் செய்த புத்தகங்களை விற்பதுபற்றிய யோசனை. என்னுடைய இரண்டு புத்தகங்கள் அப்படி இருந்தன. இந்திய ஸ்வராஜ்யம் என்பது ஒன்று; மற்றொன்று ஸர்வோதயம். இந்தப் புத்தகங்களை அச்சிடுவதும் விற்பதும் சட்ட மறுப்புச் செய்ய மிகவும் சுலபமான வழி என்று தோன்

றிற்று. இவற்றை அச்சிட்டுச் சாயங்காலம் உபவாசம் முடிந்ததும் சௌபாத்தியில் பெருங் கூட்டம் நடந்த பிறகு விற்பது என்று ஏற்பாடாயிற்று.

சாயங்காலம் பல தொண்டர்கள் புத்தகங்களை விற்கப் புறப்பட்டனர். ஒரு காரில் நானும், மற்றொன்றில் ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடுவும் புறப்பட்டோம். அச்சிட்ட பிரதிகள் யாவும் விற்றுப்போயின. இதில் வசூலான தொகையை இந்தப் போராட்டத்துக்கே செலவழிப்பதாக இருந்தோம். ஒரு பிரதிக்கு நாலணு விலை வைத்தோம். ஆனால் என் கையிலோ ஸரோஜினி தேவியின் கையிலோ யாரும் நாலணுக் கொடுக்க வில்லை. அவர்களில் பலரும் தங்கள் சட்டைப்பைகளில் இருந்த பணம் முழுவதையும் கொடுத்துப் புத்தகம் வாங்கிக்கொள்பவர்களாக இருந்தனர். சிலர் பத்து ரூபாய் நோட்டும் சிலர் ஐந்து ரூபாய் நோட்டுமாகக் கொடுத்தார்கள். ஒரு பிரதிக்கு ஐம்பது ரூபாய் நோட்டுங்கூடக் கிடைத்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது. புத்தகத்தை வாங்குகிறவர்களுக்கும் சிறைக்குப் போகும் ஆபத்து நேரலாம் என்று ஜனங்களிடம் சொன்னோம். ஆனால் அந்த நிமிஷத்தில் அவர்கள் சிறையைப்பற்றிய பயத்தை அறவே விட்டிருந்தனர்.

அரசாங்கத்தார் தடை செய்த புத்தகங்களை விற்கவில்லை என்றும், விற்ற புத்தகங்கள் மறுபதிப்பைச் சேர்ந்தவை, அவை பறிமுதல் செய்த புத்தகங்கள் ஆகமாட்டா என்றும், ஆதலால் இந்தப் புதிய பதிப்பை அச்சிடுவதிலோ விற்பதிலோ வாங்குவதிலோ சட்டப்படி ஏதும் குற்றம் இல்லை என்றும் சர்க்கார் கருதியதாக எங்களுக்கு 7-ஆம் தேதி தெரிந்தது. இந்தச் செய்தியைக் கேட்டதும் ஜனங்கள் ஏமாற்றமடைந்தனர்.

அன்று காலையில் சௌபாத்திக் கடற்கரையில் சுதேசி விரதமும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை விரதமும் ஏற்றுக்கொள்ள விரும்பியவர்கள் வந்து கூடவேண்டியிருந்தது. 'வெளுத்ததெல்லாம் பாலல்ல' என்ற அநுபவம் முதல் தடவையாக விட்டல்தாஸ் ஜேராஜனிக்கு ஏற்பட்டது. மிகக் குறைந்த பேர்களே வந்திருந்தார்கள். அவர்களில் இரண்டு மூன்று சகோதரிகளின் பெயர்கள் எனக்கு ஞாபகம் இருக்கின்றன. ஆண்களும் குறைவாகவே இருந்தனர். நான் பிரதிக்கினையை ஏற்கனவே தயாரித்து வைத்திருந்தேன். அதன் கருத்தை அவர்களுக்கு நன்ருக விளக்கி, அதன் பிறகே அவர்கள் விரதம் ஏற்றுக்கொள்ள அநுமதித்தேன். கொஞ்சம் பேர் வந்திருந்ததால் எனக்கு ஆச்சரியமும் உண்டாகவில்லை, வருத்தமும் உண்டாகவில்லை. அவசர வேலைக்கும் நிதானமான நிர்மாண

வேலைக்கும் உள்ள வித்தியாசத்தையும், அவசர வேலையில் ஜனங்களுக்குள்ள பிரியத்தையும் நிர்மாண வேலையில் அவர்களுக்குள்ள கசப்பையும் நான் அப்போதிலிருந்து இடைவிடாமல் உணர்ந்து வந்திருக்கிறேன்.

7-ஆம் தேதி இரவு நான் டில்லிக்கும் அமிர்தஸரஸுக்கும் போகப் புறப்பட்டேன். 8-ஆம் தேதி (வட) மதுரை போய்ச் சேர்ந்ததுமே, ஒருவேளை என்னைக் கைது செய்யலாம் என்ற லேசான வதந்தி காதில் விழுந்தது. மதுரையைத் தாண்டியதும் ஒரு ஸ்டேஷனில் வண்டி நின்றது. அங்கே ஆசார்ய கிட்வானி என்னைப் பார்க்க வந்தார். "உங்களைக் கட்டாயம் கைது செய்யப் போகிறார்கள். என் தொண்டு தேவையாக இருந்தால் நான் அதற்குத் தயாராக இருக்கிறேன்" என்று கூறி எனக்கு நம்பகமான செய்தியை அறிவித்தார். நான் அவருக்கு வந்தனமளித்து, தேவை நேரும்போது அவரிடம் வேலை வாங்கிக்கொள்ள மறக்கமாட்டேன் என்பதைச் சொன்னேன்.

பல்வல் ஸ்டேஷன் வருவதற்கு முன்பு, போலீஸ் அதிகாரி என் கையில் அரசாங்க உத்தரவைக் கொடுத்தார். "நீங்கள் பஞ்சாபில் பிரவேசிப்பதால் கலவரம் அதிகமாகுமென்று அஞ்சுகிறோம். ஆதலால் நீங்கள் பஞ்சாப் எல்லைக்குள் நுழையக்கூடாது என்று உத்தரவிடுகிறோம்." இதுதான் அந்த உத்தரவு. போலீஸ் அதிகாரி அதைக் கொடுத்த பின்பு என்னை வண்டியிலிருந்து இறங்கச் சொன்னார். நான் இறங்க மறுத்து, "நான் கலவரத்தை வளர்ப்பதற்காக அல்ல, அழைப்பு வந்ததால் அந்தக் கலவரத்தை நீக்குவதற்கே போக விரும்புகிறேன். எனவே இந்த உத்தரவுக்கு நான் கீழ்ப்படிய முடியாமைக்கு வருந்துகிறேன்" என்றேன்.

பல்வல் வந்தது. மகாதேவ தேசாய் என்னோடு இருந்தார். அவரை டில்லிக்குப் போய், சிரத்தானந்தருக்குத் தகவல் தெரிவித்து ஜனங்களை அமைதியாக இருக்கச் சொல்லச் சொன்னேன். உத்தரவுக்குக் கீழ்ப்படியாமைக்காகக் கிடைக்கும் தண்டனையை நான் ஏற்றுக்கொள்ள நிச்சயித்திருப்பதையும், நான் தண்டனை அடைந்தாலும் ஜனங்கள் அமைதியாக இருப்பதில் நம்முடைய வெற்றி அடங்கியிருக்கிறது என்றும் சொல்லச் சொன்னேன்.

பல்வல் ஸ்டேஷனிலிருந்து என்னை வண்டியிலிருந்து இறக்கிப் போலீஸ் காவலில் வைத்தார்கள். டில்லியிலிருந்து வந்த ஏதோ ஒரு வண்டியின் மூன்றாம் வகுப்புப் பெட்டியில் என்னை உட்கார வைத்தனர். போலீஸ் கோஷ்டியும் என்னோடு உட்கார்ந்தது. (வட) மதுரைக்கு வந்ததும் என்னைப் போலீஸ் பாரக்ஸுக்கு

அழைத்துச் சென்றனர். இனி என் நிலைமை என்ன? என்னை எங்கே அழைத்துச் செல்லப் போகிறார்கள் என்பதைப்பற்றி எந்த அதிகாரிக்கும் ஒன்றும் தெரியவில்லை. அதிகாலை 4 மணிக்கு என்னை எழுப்பிக்கொண்டு போய் ஒரு கூட்ஸ் வண்டியில் உட்கார வைத்தனர். அன்று பகலில் ஸவாய் மாதோபூரில் என்னை இறக்கினர். அங்கே பம்பாய் மெயிலில் லாகூரிலிருந்து இன்ஸ்பெக்டர் போரிங் வந்தார். அவர் என்னைத் தம் பொறுப்பில் ஏற்றுக்கொண்டு பம்பாய்க்குக் கொண்டுவந்து விட்டார்.

நான் வீட்டுக்குப் போனதுமே உமர் ஸுபானியும் அநஸூயா பஹனும் காரில் வந்து என்னை உடனே பாய்துனிக்கு வரச் சொன்னார்கள். "ஜனங்கள் பொறுமை யிழந்து பரபரப்படைந்திருக்கிறார்கள். எங்களில் யார் சொல்லியும் அவர்கள் சமாதானம் அடையவில்லை. உங்களைப் பார்த்தால்தான் அவர்கள் சாந்தமடைவார்கள்" என்றனர்.

நான் காரில் உட்கார்ந்தேன். பாய்துனிக்குப் போகும் வழியில் பெருங்கூட்டம் தென்பட்டது. என்னைக் கண்டதும் ஜனங்கள் ஆனந்தத்தினால் பித்துப் பிடித்தவர்கள்போல ஆயினர். இப்போது ஊர்வலம் புறப்பட்டது. 'வந்தே மாதரம்', 'அல்லா ஹோ அக்பர்' என்ற கோஷங்கள் வானைப் பிளந்தன. பாய்துனியில் குதிரைப் போலீஸ் படை நின்றிருந்ததைக் கண்டேன். மேலிருந்து கற்கள் பொழிந்தன. ஜனங்களை அமைதியாக இருக்கும்படி கைகூப்பி வேண்டினேன். நாங்களும் அந்தக் கல்மாரியிலிருந்து தப்ப முடியாது என்று தோற்றியது.

அப்துல் ரஹமான் தெருவிலிருந்து கிராபோர்டு மார்க்கெட்டை நோக்கிச் சென்ற ஊர்வலத்தைத் தடுப்பதற்காகக் குதிரைப் படை முன்னால் வந்து நின்றது. ஊர்வலத்தைக் கோட்டைக்குள் போகவிடாமல் தடுக்க அவர்கள் பெரு முயற்சி செய்தனர். ஜனங்கள் கட்டுக்குள் அடங்கவில்லை. அவர்கள் போலீஸ் படையைப் பிளந்துகொண்டு முன்னேற ஆரம்பித்தனர். அந்தப் பிரம்மாண்டமான கூட்டத்தில் என் குரல் அவர்களுக்குக் கேட்பது சாத்தியமல்ல. குதிரைப் படைக்குத் தலைமை வகித்த உத்தியோகஸ்தர் கூட்டத்தைக் கலைக்க உத்தரவிட்டார். உடனே குதிரை வீரர்கள் ஈட்டிகளை வீசிக்கொண்டு குதிரையை ஓரேயடியாகத் தட்டிவிட்டனர். அவற்றில் ஏதாவது ஓர் ஈட்டி எங்கள் உயிரை வாங்கிவிட்டால் ஒன்றும் ஆச்சரியம் இல்லை என்று எனக்குப் பயம் தோன்றியது. ஆனால் இந்தப் பயத்துக்கு இடமே இருக்கவில்லை. பக்கவாட்டில் எங்களைத் தாண்டி அந்த ஈட்டிகள் எல்லாம் ரெயில்

வண்டி வேகத்தில் முன்னால் பாய்ந்தன. கூட்டம் இங்கும் அங்குமாகக் கலைந்தது. எங்கும் கூக்குரல் எழுந்தது. சிலர் மிதிபட்டனர். சிலர் காயமடைந்தனர். குதிரை வீரர்களுக்குக் கூட்டத்தைத் தாண்டிச் செல்ல வழி இல்லை. ஜனங்கள் அக்கம்பக்கத்தில் ஒதுங்குவதற்கு இடம் இல்லை. பின்னால் திரும்பினாலோ ஆயிரமாயிரம் ஜனங்கள் கூட்டமாக நின்றிருந்தனர். அந்தக் காட்சி மிகவும் பயங்கரமாக இருந்தது. குதிரைவீரர்களும் ஜனங்களும் பித்துப் பிடித்தவர்கள்போலத் தென்பட்டனர். குதிரை வீரர்கள் எதையும் பார்க்கவில்லை; எதையும் பார்க்க முடியவில்லை. அவர்கள் கண்ணை மூடிக்கொண்டு குதிரைகளை வேகமாக ஓட்டினர். ஆயிரக்கணக்கான ஜனங்கள் கொண்ட அந்தக் கூட்டத்தை அவர்கள் கிழித்துக்கொண்டு சென்ற அத்தனை நேரமும் அவர்களால் எதையுமே பார்க்க முடியவில்லை என்பதைக் கண்டேன்.

கூட்டத்தை இவ்வாறு கலைத்துத் தடுத்தார்கள். எங்கள் மோட்டாரை முன்னால் போகவிட்டனர். நான் போலீஸ் கமிஷனரின் ஆபீசுக்கு முன்னால் காரை நிறுத்தச் சொல்லி, அவரிடம் போலீஸாரின் செய்கையைப்பற்றிப் பிராது செய்வதற்காக இறங்கினேன்.

## 65

## அந்த வாரம்! - 2

கமிஷனர் கிரிப்பித்தின் காரியாலயத்துக்குள் சென்றேன். மாடிப் படிகளின் அருகில் சென்றதுமே ஆயுதந்தரித்த போலீஸ் படைகள் ஏதோ ஒரு யுத்தத்திற்குத் தயாராக இருப்பதுபோல நிற்பதைக் கண்டேன். தாழ்வாரத்திலும் ஒரே அமர்க்களமாக இருந்தது. நான் கமிஷனருக்குச் செய்தி அனுப்பிக் காரியாலயத்துக்குள் நுழைந்தபோது அவருக்குப் பக்கத்தில் மிஸ்டர் போரிங் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தேன். நான் கண்டவற்றைக் கமிஷனருக்கு வர்ணித்தேன். அவர் சுருக்கமாக, "நாங்கள் ஊர்வலத்தைக் கோட்டைக்குள் போக விடுவதாக இல்லை. அங்கே போனால் கலவரம் நிகழாமல் இருக்காது. சும்மா வாயால் சொல்வதால் ஜனங்கள் திரும்பிப் போகமாட்டார்கள் என்பதைக் கண்டேன். எனவே கூட்டத்தைத் தாக்கிக் கலைப்பதைத் தவிர வேறு வழி இல்லை" என்று சொன்னார்.

"ஆனால் அதன் பலன் என்ன ஆகும் என்பது உங்களுக்குத் தெரியாதா? ஜனங்கள் கட்டாயம் குதிரைகளின் கீழே மிதி

பட்டுத்தானே போவார்கள்! குதிரைப்படை அனுப்பவேண்டிய அவசியமே இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது" என்றேன்.

"இதெல்லாம் உங்களுக்குத் தெரியாது. நீங்கள் செய்யும் போதனையினால் ஜனங்களின் மனம் எப்படி மாறுகிறது என்பது உங்களைவிட அதிகமாகப் போலீஸ் உத்தியோகஸ்தர்களாகிய எங்களுக்குத் தெரியும். நாங்கள் முன்னாலேயே கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளாவிட்டால் பின்னும் அதிகத் தீமை ஏற்படும். ஜனங்கள் உங்கள் கட்டிலும் அடங்குகிறவர்களல்ல என்பதை உங்களுக்குச் சொல்லுகிறேன். சட்ட மறுப்பைப்பற்றிய விஷயத்தை அவர்கள் சட்டென்று அறிந்துகொள்வார்கள். ஆனால் அமைதியாக இருப்பது அவர்கள் ஆற்றலுக்குப் புறம்பானது. உங்கள் நோக்கம் நல்லது. ஆனால் ஜனங்கள் அதைப் புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் தங்கள் சுபாவத்துக்கு ஏற்றபடியே நடந்துகொள்வார்கள்."

"இதுதான் உங்களுக்கும் எனக்குமுள்ள அபிப்பிராய பேதம். ஜனங்கள் சுபாவமாகச் சண்டை போடுகிறவர்களல்ல; அவர்கள் அமைதியை விரும்புகிறவர்கள்."

நாங்கள் விவாதத்தில் இறங்கினோம்.

கடைசியில் அவர், "சரி, ஜனங்கள் உங்களுடைய பேச்சைப் புரிந்துகொள்ளவில்லை என்று உங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார்.

"இம்மாதிரியான நம்பிக்கை எனக்கு ஏற்பட்டால் நான் இந்தப் போராட்டத்தை ஒத்திவைப்பேன்."

"ஒத்திவைப்பதாவது? நீங்கள்தாம் விடுதலை யடைந்த மறுகணமே பஞ்சாபுக்குப் போவதாக மிஸ்டர் போரிங்கிடம் சொன்னீர்களாமே?"

"ஆம்; அடுத்த வண்டியில் புறப்படத்தான் எண்ணியிருந்தேன். ஆனால் இன்று அது முடியாது."

"நீங்கள் பொறுமையோடு இருந்தால் இன்னும் பல விஷயங்களை அறிந்துகொள்வீர்கள். இப்போது அஹமதாபாத்தில் என்ன நடக்கிறது? அமிர்தஸரஸில் என்ன நடந்திருக்கிறது? இவையெல்லாம் உங்களுக்குத் தெரியுமா? எங்கே பார்த்தாலும் ஜனங்கள் பைத்தியம் பிடித்தவர்களைப்போல நடந்துகொண்டிருக்கிறார்கள். எனக்கே இன்னும் முழு விவரங்களும் தெரிந்தபாடில்லை. பல இடங்களில் தந்திக் கம்பிகளையும் அறுத்திருக்கிறார்கள். இந்தக் கலவரங்களுக்கெல்லாம் பொறுப்பாளி நீங்களே என்று நான் சொல்லுகிறேன்."

"நான் பொறுப்பாளியாக இருந்தேனுயின் அதை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கமாட்டேன். அஹமதாபாத்தில் ஜனங்கள் ஏதாவது கலவரங்கள் செய்திருந்தார்களாயின் அதனுல் எனக்கு ஆச்சரியமும் வருத்தமும் உண்டாகும். அமிர்தஸரஸைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நான் அங்கே எப்போதும் போனதில்லை. என்னை அங்கே யாருக்கும் தெரியாது. நான் அங்கே போனதைப் பஞ்சாப் அரசாங்கம் தடுக்காதிருந்திருந்தால், அங்கே அமைதியை நிலைநாட்டுவதில் பெரும் பங்கு எடுத்துக் கொண்டிருப்பேன் என்பது மட்டும் எனக்குத் தெரியும். என்னைத் தடுத்ததனுல் அரசாங்கம் ஜனங்களைத் தூண்டுவதற்குக் காரணமாயிற்று."

இவ்வாறு நாங்கள் பேசிக்கொண்டே இருந்தோம். எங்கள் அபிப்பிராயத்தில் ஒற்றுமை ஏற்படும் என்று தோற்றவில்லை.

சௌபாத்திக் கடற்கரையில் ஒரு பொதுக்கூட்டம் நடத்தி அதில் ஜனங்களை அமைதியாக இருக்கக் கேட்டுக்கொள்ளும் என் எண்ணத்தை அவரிடம் தெரிவித்துவிட்டு நான் விடைபெற்றேன்.

சௌபாத்தியில் கூட்டம் நடந்தது. நான் ஜனங்களுக்கு அமைதியைப் பற்றியும் சத்தியாக்கிரகத்தின் வரம்பைப்பற்றியும் தெரிவித்தேன். "சத்தியாக்கிரகம் உண்மையாளர்களின் ஆயுதம். ஜனங்கள் அமைதியாக இராவிட்டால் சத்தியாக்கிரகப் போராட்டத்தை என்னுல் நடத்த முடியாது" என்றேன்.

அஹமதாபாத்தில் கலவரம் நடந்திருப்பதாக அனஸூயா பஹனுக்கும் செய்தி வந்தது. பம்பாயில் அவரும் கைதுசெய்யப்பட்டதாக யாரோ வதந்தியைக் கிளப்பிவிட்டதனுல் ஆலைத் தொழிலாளிகள் வெறிகொண்டு வேலைநிறுத்தம் செய்ததாகவும் பிரளயம்போன்ற கலவரத்தை உண்டாக்கிவிட்டதாகவும் செய்தி வந்தது. ஒரு ஸார்ஜண்டும் கொலை செய்யப்பட்டார்.

நான் அஹமதாபாத்துக்குப் போனேன். நடியாத்துக்கு அருகில் ரெயில் தண்டவாளங்களைப் பெயர்க்கவும் முயற்சி நடந்திருந்தது. நான் அஹமதாபாத் போனபோது அங்கே ராணுவச் சட்டம் அமலில் இருந்தது. ஜனங்கள் பயத்தினுல் நடுநடுங்கிக் கொண்டு இருந்தனர். தங்கள் செய்வினைக்கு ஏற்ற தண்டனையை அவர்கள் வட்டியும் முதலுமாக அநுபவித்தார்கள்.

கமிஷனர் மிஸ்டர் பிராட்டிடம் என்னை அழைத்துப்போக ஸ்டேஷனில் ஆள் நின்றிருந்தான். நான் அவரிடம் சென்றேன். அவர் மிகவும் கோபமாக இருந்தார். நான் அமைதியாகப் பதில் சொன்னேன். கொலை நிகழ்ந்ததற்காக என் வருத்தத்தைத்

தெரிவித்தேன். ராணுவச் சட்டம் தேவையில்லை என்பதையும் மறுபடி அமைதியை நிலைநாட்டும் உபாயங்களைச் செய்ய நான் தயாராயிருப்பதையும் சொன்னேன். பொதுக் கூட்டம் நடத்த அநுமதி கேட்டதோடு, ஸாபர்மதி ஆசிரம மைதானத்தில் அதை நடத்தவேண்டும் என்ற என் எண்ணத்தையும் தெரிவித்தேன். இந்த யோசனை அவருக்குப் பிடித்தது. இதன்படி ஏப்ரல் 13வ ஞாயிறன்று கூட்டம் நடந்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது. அன்றோ அல்லது மறுநாளோ ராணுவச் சட்ட அமல் நீங்கியது. இந்தக் கூட்டத்தில் நான் ஜனங்களுக்கு அவர்களுடைய குற்றத்தை எடுத்துக் காட்ட முயன்றேன். அதற்குப் பிராயச் சித்தமாக நான் 3 நாள் உபவாசம் இருந்து, ஜனங்களையும் ஒரு நாள் உண்ணுவிரதம் இருக்க வேண்டிக்கொண்டேன். கொலை முதலியவற்றில் கலந்துகொண்டவர்கள் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூறினேன்.

என் கடமையை நான் தெளிவாகக் கண்டேன். எந்தத் தொழிலாளர்களிடையே நான் இவ்வளவு காலத்தைக் கழித்தேனே, எவர்களுக்கு நான் தொண்டு செய்தேனே, எவர்களிடம் நான் நன்மையையே எதிர்பார்த்தேனே, அத்தகைய தொழிலாளிகள் கலவரங்களில் கலந்துகொண்டதை என்னால் பொறுக்க முடியவில்லை. அவர்களுடைய குற்றத்தில் எனக்கும் பங்கு இருப்பதாக எண்ணினேன். சத்தியாக்கிரகத்தை உடனே ஒத்திப்போடும் முடிவை வெளியிட்டேன்.

## 66

### 'ஹிமாலயத் தவறு'

அஹமதாபாத் கூட்டத்துக்குப் பிறகு நான் நடியாத்துக்குப் போனேன். ஹிமாலயத் தவறு என்று இப்போது வழங்கிவரும் சொல்லை நான் முதல்முதலில் அங்கேதான் உபயோகித்தேன். அஹமதாபாத்திலேயே என் பிழை எனக்குத் தெரிந்தது. ஆனால் நடியாத்தில் அங்குள்ள நிலைமையைச் சிந்தித்த பிறகும், கேடா ஜில்லாவில் பலர் கைதியாகியிருப்பதைக் கேட்ட பிறகும், இந்தச் சம்பவங்களைப் பற்றி நான் பிரசங்கம் செய்துகொண்டிருந்த அந்தக் கூட்டத்தில், கேடா ஜில்லாவிலும் மற்றும் பல இடங்களிலும் உள்ளவர்களை உரிய காலத்துக்கு முன்பே எதிர்ப்புச்செய்ய அழைத்ததில் நான் அவசரப்பட்டது தவறு என்ற எண்ணம் திடீரென்று

தோன்றியது. இந்தத் தவறு எனக்கு ஹிமாலயத்தைப்போலப் பெரிதாகத் தென்பட்டது.

நான் இதை ஒப்புக்கொண்டேன். ஆதலால் என்னை எல்லோரும் பரிகசித்தார்கள். எனினும் இதை ஒப்புக்கொண்டதற்காக நான் எப்போதும் வருந்தியதில்லை. பிறருடைய கஜக்கோல் அளவு குற்றங்களை ஒரு தூசாகவும், கடுகைப்போல் தென்படும் நம்முடைய குற்றத்தை மலையாகவும் பார்க்கக் கற்றுக்கொண்டால்தான் நம்முடைய குற்றங்களையும் மற்றவர்களுடைய குற்றங்களையும் நாம் சரியாக மதிப்பிடமுடியும் என்பதை நான் எப்போதும் ஒப்புக்கொண்டு வந்திருக்கிறேன். சத்தியாக்கிரகி ஆக விரும்புகிறவன் சாதாரணமான இந்த விதியை மிகவும் நுணுக்கமாக அநுசரிக்கவேண்டும் என்பது என் கருத்து.

இனி, அந்த ஹிமாலயத் தவறு என்ன என்பதைப் பார்ப்போம். சட்டத்தை வணக்கமாகச் சுயேச்சையோடு ஒப்புக்கொண்டு அதற்குப் பணிந்து நடந்திருப்பவர்களே சட்டத்தை எதிர்த்துச் சாத்துவிக எதிர்ப்புச் செய்ய முடியும். பெரும்பாலும் சட்டத்தினால் ஏற்படும் தண்டனைக்குப் பயந்துதான் நாம் அதற்குக் கீழ்ப்படிகிறோம். அதிலும், நீதி அநீதியைப் பற்றிய பிரச்னை இல்லாத சட்டங்களின் விஷயத்தில் இது மிகவும் நன்றாகப் பொருந்தும். சட்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நல்லவர் என்று கருதப்படுகிறவர் திடீரென்று திருட்டுத் தொழில் செய்யமாட்டார். ஆனால் அதே மனிதர் இரவில் ஸைக்கிளுக்கு விளக்கேற்றும் விதியை அசட்டை செய்துவிட்டால் சிறிதும் வருத்தப்படுவதில்லை. இந்த விதிப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று ஒருவர் ஆலோசனை கூறினாலுங்கூட அந்த நல்ல மனிதரும் அதை அநுசரிக்க உடனே தயாராக இருக்கமாட்டார். ஆனால் அதே விஷயம் சட்டமாகும்போது அதை மீறி நடப்பதால் அபராதம் போடுவார்கள் என்ற பயம் உண்டாகிறது. அப்பொழுது அபராதம் கொடுப்பதிலிருந்து தப்புவதற்காகவே அவர் விளக்கைப் போட்டுக்கொள்வார். இதை நாம் சட்டத்துக்குக் கீழ்ப்படிதல் என்று எடுத்துக்கொள்ள முடியாது.

ஆனால் சத்தியாக்கிரகியோ சமூகச் சட்டங்களை நன்றாக அறிந்து சுயேச்சையாக அதைத் தன் கடமை என்று எண்ணி அவற்றிற்குப் பணிவான். இவ்வாறு சமூக விதிகளை அறிந்துகொண்டு அநுசரிப்பவனுக்குத்தான் சமூக விதிகளில் உள்ள நீதியையும் அநீதியையும் பிரிவுபடுத்திக் காணும் தகுதி உண்டாகிறது. அப்போதுதான் சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் இன்ன

இன்ன விதிகளை மீறிச் செல்லலாம் என்ற உரிமை அவனுக்குக் கிடைக்கிறது. இவ்வித உரிமையை அவர்கள் பெறுவதற்கு முன்னமே சட்டமறுப்புச் செய்ய அவர்களை அழைத்த என் தவறு எனக்கு ஹிமாலயத்தைப் போலப் பெரிதாகத் தோற்றியது. கேடா ஜில்லாவில் நுழையும்போதே அங்கு நடந்த போராட்டம் எனக்கு ஞாபகம் வந்தது. முன்னால் நிற்கும் சுவரைப் பாராமலே கண்ணை மூடிக்கொண்டு நான் வேகமாக ஓடியிருப்பதாகத் தோற்றியது. ஜனங்கள் சட்டமறுப்புச் செய்யத் தகுதி பெறுவதற்கு முன்னால் அவர்கள் இந்த ஆழ்ந்த ரகசியத்தை அறிந்துகொள்ள வேண்டும் என்று எனக்குத் தோன்றிற்று. நாள் தவறாமல் தமக்குத் தோன்றியபடி சட்டத்தை மீறியவர்கள், ரகசியமாகப் பல தடவை சட்டத்தை மீறியவர்கள், திடீரென்று சாத்துவிகச் சட்ட மறுப்பை எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? அவர்கள் அதன் வரம்புக்கு உட்பட்டு எப்படி நடந்துகொள்ள முடியும்?

ஆயிரக் கணக்கான, லக்ஷக்கணக்கான ஜனங்கள் இந்த லட்சியத்தைக் கடைப்பிடிக்க முடியாது என்பது சாதாரணமாகத் தெரியக்கூடிய விஷயம். ஆனால் இதுதான் விஷயம் என்று இருந்தால், சட்ட மறுப்பைச் செய்விப்பதற்கு முன்னால் அதை ஜனங்களுக்குத் தெளிவுபடுத்துகிறவர்களும் கணந்தோறும் அவர்களுக்கு வழிகாட்டுகிறவர்களுமான தூய தொண்டர் படை ஒன்று உண்டாகவேண்டும். இந்தப் படையினர் சட்டமறுப்பையும் அதன் வரம்பையும் நன்றாக அறிந்திருக்க வேண்டும்.

இத்தகைய சிந்தனைகள் நிரம்பியவனாய், நான் பம்பாய் சேர்ந்தேன். அங்கே சத்தியாக்கிரக சபையின் மூலம் சத்தியாக்கிரகிகளான தொண்டர்களின் படை ஒன்றை அமைத்தேன். அவர்கள் மூலமாக ஜனங்களுக்குச் சட்டமறுப்பைப்பற்றிப் பயிற்சி உண்டாக்க ஆரம்பித்தேன். சத்தியாக்கிரகத்தின் ரகசியத்தைத் தெரிவிக்கும் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டேன்.

இந்த வேலை நடந்துவந்தபோதிலும் ஜனங்களுக்கு இதில் அதிக ருசி உண்டாக்க என்னால் முடியவில்லை என்பதைக் கண்டேன். போதுமான அளவு தொண்டர்கள் எனக்கு ஒருபோதும் கிடைக்கவில்லை. பதிவான தொண்டர்கள் யாவரும் முழுப் பயிற்சியையும் பெற்றுவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. பெயரைப் பதிவு செய்துகொண்டவர்களும் நாள் ஆக ஆக உறுதியாக இராமல் மெல்ல நழுவத் தொடங்கினர். சாத்துவிகச் சட்ட மறுப்பு என்னும் வண்டி, நான் எதிர்பார்த்திருந்த வேகம் ஒரு புறம் இருக்க, அதைவிட மிகவும் மெதுவாகவே போகும் என்பதை அறிந்துகொண்டேன்.

## 67

## பஞ்சாபில்

பஞ்சாபில் நிகழ்ந்த சம்பவங்களுக்கெல்லாம் ஸர் மைக்கேல் ஓட்வயர் என்னைப் பொறுப்பாளியாக்கினார். அங்கிருந்த சில இளைஞர்கள் ராணுவச் சட்டத்திற்கு என்னைப் பொறுப்பாளியாக்கச் சிறிதும் கூசவில்லை. நான் சட்ட மறுப்பை ஒத்திப்போடாமலிருந்தால் ஜலியான்வாலா பாக்கில் அந்தப் படுகொலை ஒருபோதும் நிகழ்ந்திராது என்றும், ராணுவச் சட்ட அமல் வந்திராது என்றும் கோபாவேசத்தில் கூறினர். நான் பஞ்சாபில் கால் வைத்தால் என்னைக் கொலை செய்துவிடுவதாகவும் சிலர் பயமுறுத்தினார்கள்.

ஆனால் நான் செய்தது உசிதமென்றும் சரியென்றும், அறிவாளிகளுக்கு அதில் தப்பபிப்பிராயம் உண்டாவதற்கு இடமே இல்லையென்றும் கருதினேன். நான் பஞ்சாபுக்குப் போகத் துடித்துக்கொண்டிருந்தேன். அதற்கு முன்னால் நான் பஞ்சாபைப் பார்த்ததில்லை. என் கண்ணால் பார்க்கக்கூடிய அளவுக்கு அங்குள்ள நிலைமைகளை நேரில் காணவேண்டும் என்ற தீவிரமான எண்ணமும், என்னை அழைத்திருந்த சத்தியபால், கிச்லூ, ராம்பஜதத்த சௌத்ரி ஆகியவர்களைச் சந்திக்கவேண்டும் என்ற விருப்பமும் எனக்கு இருந்தன. அவர்கள் சிறையில் இருந்தனர். ஆயினும் அரசாங்கத்தார் அவர்களை அதிக நாட்களுக்குச் சிறையில் வைத்திருக்க முடியாது என்று பூர்ணமாக நம்பினேன். நான் பம்பாய்க்குப் போகும்போதெல்லாம் பஞ்சாபியர் பலர் என்னை வந்து பார்ப்பார்கள். அவர்களுக்கு நான் ஆறுதல் சொன்னேன். அவர்கள் சந்தோஷத்தோடு திரும்பிப்போவார்கள். அப்போது என்னிடம் தன்னம்பிக்கை அதிகமாக இருந்தது.

ஆனால் நான் பஞ்சாபுக்குப் புறப்படும் நாள் தள்ளிப்போய்க்கொண்டே இருந்தது. 'இன்னும் சமயம் வரவில்லை' என்று சொல்லி வைஸ்ராயும் அதை ஒத்திப்போட்டுக்கொண்டே வந்தார்.

இதனிடையில் ஹண்டர் கமிட்டி ஏற்பட்டது. ராணுவச் சட்ட அமலில் பஞ்சாப் அரசாங்கம் புரிந்த செயல்களைக் குறித்து விசாரணை செய்வதற்காக அது நியமிக்கப்பட்டிருந்தது. தீனபந்து ஆண்ட்ரூஸ் அங்கே போயிருந்தார். அவ்விடத்து நிலைமைகளைப்பற்றி அவர் எழுதிய கடிதங்கள் உள்ளத்தை

உருக்கின. பத்திரிகைகளில் வெளியான விவரங்களைக் காட்டிலும் மிகவும் கடுமையாகவே ராணுவச் சட்டக் கொடுமைகள் நிகழ்ந்திருந்தன என்று அந்தக் கடிதங்களிலிருந்து புலனாயிற்று. அவரும் என்னைப் பஞ்சாபுக்கு வர வற்புறுத்தினார். மற்றொரு புறம் மாளவீயஜீ நான் பஞ்சாபுக்குக் கட்டாயம் போகவேண்டுமென்று தந்தி மேல் தந்தி கொடுத்தார். அப்போது நான் மறுபடி வைஸ்ராய்க்குத் தந்தி கொடுத்தேன். 'இன்ன தேதி நீங்கள் போகலாம்' என்ற பதில் வந்தது. இப்பொழுது தேதி எனக்குச் சரியாக ஞாபகம் இல்லை. அநேகமாக அது அக்டோபர் 17உ என்று நினைக்கிறேன்.

லாகூருக்குப் போனதும் நான் கண்ட காட்சியை மறக்கவே முடியாது. நீண்ட நாள் பிரிந்திருந்த உறவினர் ஒருவரைக் காண்பதற்கு அவருடைய சுற்றத்தார்கள் வந்திருக்கிறார்களோ என்று தோன்றும்படி, ஸ்டேஷனில் என்னை அழைத்துப்போக ஒரு பெருங்கூட்டம் கூடியிருந்தது. ஜனங்கள் மகிழ்ச்சி மிகுதியினால் மெய்ம்மறந்திருந்தனர். பண்டித ராம்பஜதத்த செளத்ரியின் பங்களாவில் நான் தங்கினேன். ஸ்ரீமதி ஸரளாதேவி செளத்ராணியை எனக்கு முன்னாலேயே தெரியும். என்னை உபசரிக்கும் பாரம் அவர் தலையில் சுமந்தது. 'உபசரிக்கும் பாரம்' என்ற சொல்லை நான் வேண்டுமென்றே உபயோகித்திருக்கிறேன். இன்று போலவே அந்தக் காலத்திலும் நான் தங்கும் இடம் ஒரு சத்திரமாகிவிடுவது வழக்கம்.

பஞ்சாப் தலைவர்கள் சிறையில் இருந்ததனால் பண்டித மாளவீயரும் பண்டித மோதீலால்ஜீயும் ஸ்வாமி சிரத்தானந்தரும் அவர்களுடைய ஸ்தானத்தை வகித்திருந்ததைக் கண்டேன். மாளவீயரோடும் சிரத்தானந்தரோடும் நான் ஏற்கனவே நெருங்கிப் பழகியிருந்தேன். ஆனால் மோதீலால்ஜீயோடு இப்போது லாகூரில்தான் நெருங்கிப் பழக முடிந்தது. இவர்களும், சிறை செல்லும் பாக்கியம் பெறாத மற்ற ஸ்தலத் தலைவர்களும் உடனே என்னைத் தம் சொந்த மனிதனாக்கிக்கொண்டனர். நான் வேற்று மனிதன் என்ற உணர்ச்சி எனக்கு எங்குமே உண்டானதில்லை.

ஹண்டர் கமிட்டியின் முன்பு சாக்ஷியம் கொடுப்பதில்லை என்று நாங்கள் யாவரும் ஒருமுகமாக முடிவு செய்திருந்தோம். அதற்குக் காரணங்களை அப்போதே வெளியிட்டிருந்தோம். எனவே அவற்றை இங்கே குறிப்பிடவில்லை. அந்தக் காரணங்கள் நேர்மையானவை. நாங்கள் அந்தக் கமிட்டியைப் பகிஷ்கரித்தது சரியானதே என்பதுதான் இன்றும் என் அபிப்பிராயம்.

ஹண்டர் கமிட்டியைப் பகிஷ்கரித்த பிறகு பொதுஜனங்களின் சார்பில் அதாவது காங்கிரஸ் சார்பில் ஒரு விசாரணைக் கமிட்டி ஏற்படுத்தவேண்டும் என்று தீர்மானித்தோம். பண்டித மோதிலால் நேரு, சித்தரஞ்சன் தாஸ், அப்பாஸ் தையப்ஜீ, ஜயகர் ஆகியவர்களும் நானும் கமிட்டி அங்கத்தினர்களானோம். விசாரணை செய்வதற்காக நாங்கள் வெவ்வேறு இடங்களுக்குப் பிரிந்து சென்றோம். இந்தக் கமிட்டியின் வேலை முறைகளை அமைக்கும் பொறுப்பு எனக்கு ஏற்பட்டது. பெரும்பாலான கிராமங்களுக்குச் சென்று விசாரணை செய்யும் வேலை என் பங்குக்குக் கிடைத்ததால், பஞ்சாபையும் அங்குள்ள கிராமங்களையும் பார்த்து அறியும் அரிய சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டது.

இந்த விசாரணையின்போது பஞ்சாப் பெண்மணிகள் யுகக் கணக்காகப் பழகினவர்கள்போல எனக்குத் தோன்றினார்கள். நான் போகுமிடமெல்லாம் அவர்கள் கூட்டம் கூட்டமாக வந்து தாம் நூற்ற நூல்களை என் முன்னால் குவித்துவிடுவார்கள். இந்த விசாரணையோடுகூடவே, பஞ்சாப் ஒரு பெரிய கதர் நிலையம் ஆகக்கூடும் என்பதையும் அனாயாசமாகத் தெரிந்து கொண்டேன்.

ஜனங்களுக்கு நேர்ந்த கொடுமைகளைப்பற்றி நான் ஆழ்ந்து விசாரணை செய்யச் செய்ய, என் ஊகத்துக்கும் அப்பாற்பட்ட அளவில் நிகழ்ந்த அரசாங்கத்தின் கொடுங்கோன்மையையும், அதிகாரிகளின் அடக்குமுறைகளையும், அவர்களுடைய மனம் போன செய்கைகளையும் விவரமாக அறிந்தேன். அதனால் எனக்கு ஆச்சரியமும் மனவருத்தமும் உண்டாயின. அரசாங்கத்துக்கு ஏராளமாகப் போர்வீரர்களை அளிக்கும் பஞ்சாப் மாகாணத்தில் இவ்வளவு கொடுமைகளை ஜனங்கள் எப்படிப் பொறுத்துக் கொண்டார்கள் என்பது எனக்கு வியப்பாக இருந்தது. இன்றும் அதை நினைக்கும்போது வியப்பு உண்டாகிறது.

இந்தக் கமிட்டியின் அறிக்கையைத் தயாரிக்கும் வேலையை என்னிடம் ஒப்பித்திருந்தனர். பஞ்சாபில் எத்தகைய கொடுமைகள் நிகழ்ந்தன என்பதை அறிய விரும்புகிறவர்கள் இந்த அறிக்கையைக் கட்டாயம் படிக்கவேண்டும். இந்த அறிக்கையில் நான் வேண்டுமென்று எங்கும் மிகுதிபடுத்திக் கூறவில்லை என்பதை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன். நான் எழுதியவற்றிற்கெல்லாம் அறிக்கையில் தக்க அத்தாட்சிகள் இருக்கின்றன. அறிக்கையில் குறிப்பிட்ட அத்தாட்சிகளைக் காட்டிலும் பின்னும் அதிகமான ஆதாரங்கள் கமிட்டியாரிடம் இருந்தன. கொஞ்சமாவது

சந்தேகத்துக்கு இடமான எந்த விஷயத்தையும் அறிக்கையில் சேர்க்கவில்லை. இவ்வாறு உண்மையை மட்டுமே நோக்கமாகக் கொண்டு எழுதிய அந்த அறிக்கையைப் படித்தால், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் தன் அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காக எந்த அளவுக்குப் போக முடியும் என்பதையும் எவ்வளவு அமானுஷிக மான செயல்களைச் செய்யக்கூடும் என்பதையும் காணலாம். எனக்குத் தெரிந்தவரையில் அந்த அறிக்கையில் சொல்லிய எந்த விஷயமும் இன்றுவரையில் உண்மையற்றதாக நிரூபிக்கப் படவில்லை.

## 68

### காங்கிரஸில் பிரவேசம்

காங்கிரஸில் நான் இதற்கு முன்னால் பங்கு எடுத்துக்கொண்டதை என் காங்கிரஸ் பிரவேசமாக நான் கருதவில்லை. இதற்கு முன்னால் காங்கிரஸ் கூட்டங்களுக்கு நான் சென்றது என் பக்திக்கு அடை யாளமாகத்தான். காங்கிரஸ் சைனியத்தில் ஒரு சாதாரணப் போர்வீரனாக இருப்பதைத் தவிர எனக்கு வேறு வேலை இருக்கும் என்ற லேசான எண்ணங்கூட இதற்கு முன்னால் நடந்த காங் கிரஸ் கூட்டங்களில் எனக்கு உண்டானதில்லை. அத்தகைய விருப்பமும் எனக்கு இருந்ததில்லை.

அமிர்தஸரஸில் எனக்கு உண்டான அநுபவத்திலிருந்து என்னுடைய ஒருவிதமான ஆற்றல் காங்கிரஸுக்குப் பயன்படும் என்று அறிந்தேன். லோகமான்யரும் மாளவீயரும் மோதிலால்ஜீ யும் தேசபந்துவும் பஞ்சாப் கமிட்டியில் நான் செய்த தொண் டில் திருப்தியடைந்திருந்ததைக் கண்டேன். அவர்கள் தங்கள் கூட்டங்களுக்கும் ஆலோசனை செய்வதற்கும் என்னை அழைத் தனர். விஷயாலோசனைக் கமிட்டியின் உண்மையான வேலைகள் இம்மாதிரியான கூட்டங்களில் நடப்பதையும், தலைவர்களின் தனி நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களும் உதவி செய்யக் கூடியவர் கள் என்று கருதப்பட்டவர்களுமே இந்தக் கூட்டங்களுக்கு வருவதையும் நான் கண்டிருக்கிறேன். ஆனால் மற்றவர்களும் ஏதாவது ஒரு சாக்கை வைத்துக்கொண்டு இந்தக் கூட்டத்தில் நுழைந்துவிடுவது உண்டு.

அடுத்த வருஷத்தில் செய்யப்போவதாக இருந்த இரண்டு வேலைகளில் எனக்கு ஆர்வம் இருந்தது. ஏனெனில் ஏற்கனவே அவற்றில் நான் ஊடாடியிருந்தேன்.

முதலாவது: ஜலியான்வாலா பாக் படுகொலையின் ஞாபகச் சின்னம். இதற்கென்று மிகவும் சிறப்போடு காங்கிரஸ் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது. அதற்காகச் சுமார் ஐந்து லக்ஷம் ரூபாய் திரட்டவேண்டியிருந்தது. அந்த நிதியின் தர்ம கர்த்தர்களில் என் பெயரும் இருந்தது. நாட்டின் பொது வேலைகளுக்குப் பிச்சை வாங்கும் பேராற்றல் படைத்தவர்களில் முதல்வராக இருந்தவர் மாளவீயர்; இப்போதும் அந்த முதல் ஸ்தானம் அவருடையதுதான். இந்த விஷயத்தில் என் ஸ்தானம் அவருக்கு மிகக் கீழே போகாது என்பதை நான் அறிந்திருந்தேன். என்னுடைய இந்த ஆற்றலைத் தென்னாப்பிரிக்காவிலேயே உணர்ந்திருந்தேன். ராஜாக்களையும் மகாராஜாக்களையும் ஜாலவித்தையில் மயக்கி லக்ஷக் கணக்காகப் பணம் திரட்டும் சாமர்த்தியம் எனக்கு இருந்ததில்லை. இன்றும் அது இல்லை. இந்த விஷயத்தில் மாளவீயரோடு போட்டிபோடுகிற யாரையும் நான் கண்டதில்லை. ஆனால் ஜலியான் வாலா பாக் சம்பந்தமாக அவர்களிடம் பணம் வாங்க முடியாது என்பதை நான் அறிந்தேன். ஆதலால் இந்த ஞாபகச் சின்னத்துக்குப் பணம் திரட்டும் முக்கியப் பொறுப்பு என்மீதே விழும் என்பதை நிதியின் தர்மகர்த்தாப் பதவியை ஏற்றுக் கொண்டபோதே நான் அறிந்திருந்தேன். நடந்ததும் அதுதான். இந்த ஞாபகச் சின்னத்துக்காகத் தாராள மனம் படைத்த பம்பாய் வாசிகள் ஏராளமான பணம் கொடுத்தனர். இன்றும் ஜனங்களிடம் அதற்கு வேண்டிய பணம் இருக்கிறது. ஆனால் ஹிந்து, முஸ்லிம், சீக்கியரின் ரத்தம் கலந்தோடியதனால் தூய்மை பெற்ற இந்த இடத்தில் எவ்விதமான ஞாபகச் சின்னத்தை நிறுவுவது, அதாவது கிடைத்துள்ள பணத்தை எவ்விதமாக உபயோகிப்பது என்பது சிக்கலான பிரச்னையாகி இருக்கிறது; ஏனெனில் அந்த மூவரிடையில் அல்லது இருவரிடையில் நேசப்பான்மை தென்படுவதற்குப் பதிலாக இன்று எதிரி மனப்பான்மை தென்படுகிறது.

இரண்டாவது: காரியதரிசியாக இருந்து வேலை செய்யும் என்னுடைய ஆற்றல் காங்கிரஸுக்குப் பயன்படக்கூடியதாக இருந்தது. நீண்டநாள் அநுபவத்தினால் ஒரு விஷயத்தை எங்கே, எப்படி, மிகக் குறைந்த சொற்களில், பணிவு மாறாத மொழியில் எழுதவேண்டும் என்று தெரிந்துகொண்டிருந்தேன் என்பதைத் தலைவர்கள் அறிந்திருந்தனர். அப்போது இருந்த காங்கிரஸ் அமைப்பு, கோகலே சேமித்துவைத்துப் போன ஆஸ்தி, அவர் பல விதிகள் ஏற்படுத்தியிருந்தார். அவற்றை ஆதார

மாகக் கொண்டுதான் காங்கிரஸ் வேலைகள் நடந்துவந்தன. அந்த விதிகள் எவ்வாறு ஏற்பட்டன என்ற இனிய சரித்திரத்தை அவர் வாயாலேயே கேட்டிருந்தேன். ஆனால் அந்த விதிகளைக்கொண்டு இனி வேலை நடத்த முடியாது என்று எல்லோரும் கருதினர். காங்கிரஸுக்கு அமைப்புத் தயாரிப்பதைப்பற்றி வருஷந்தோறும் விவாதங்களும் நடந்தன. வருஷம் முழுவதும் இடைவிடாமல் வேலை நடத்தவும் வருங்கால விஷயத்தைப்பற்றிச் சிந்திக்கவும் காங்கிரஸினிடம் எவ்விதமான திட்டமும் இல்லை.

காங்கிரஸில் மூன்று காரியதரிசிகள் இருந்தனர். ஆனால் உண்மையில் வேலை செய்பவர் ஒருவர்தாம். அவரும் 24 மணி நேரம் அதற்காக வேலை செய்பவர் அல்ல. அவர் காரியாலய வேலையை நடத்துவாரா, வருங்காலத்தைப்பற்றி யோசிப்பாரா, அல்லது காங்கிரஸ் முன்னாலேயே ஏற்றுக்கொண்டிருக்கும் பொறுப்புக்களை நடைமுறை வருஷத்தில் நிறைவேற்றுவாரா? அந்த வருஷம் இந்தப் பிரச்னையை எல்லோரும் முக்கியம் என்று கருதினார்கள். மகாசபை கூடும்போது ஆயிரக்கணக்கானவர்கள் கூடுகிறார்கள், அதில் பொதுஜன வேலை எப்படி நடக்கும்? பிரதிநிதிகளின் எண்ணிக்கைக்கு வரம்பே இல்லை. எந்த மாகாணத்திலிருந்தும் எத்தனை பிரதிநிதிகள் வேண்டுமாயினும் வரலாம். எவனும் பிரதிநிதியாக இருக்க முடியும். எனவே இதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும் என்பதை யாவரும் உணர்ந்தனர்.

காங்கிரஸுக்குப் புது அமைப்புத் தயாரிக்கும் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். நான் ஒரு நிபந்தனை போட்டேன். ஜனங்களிடம் இரண்டு தலைவர்களுக்குச் செல்வாக்கு இருப்பதைக் கண்டேன். ஆதலால் காங்கிரஸ் அமைப்புத் தயாரிப்பதில் அவர்களுடைய பிரதிநிதிகள் இருவர் என்னோடு ஒத்துழைக்க வேண்டும் என்று சொன்னேன். தலைவர்கள் தாமே வந்து அமைதியாக உட்கார்ந்து அமைப்பை நிர்மாணிப்பதில் ஈடுபடமாட்டார்கள் என்பதை அறிந்திருந்தேன். அதனால்தான் லோகமான்யரையும் தேசபந்துவையும் அவர்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான இருவரை என்னுடன் அனுப்பக் கேட்டுக்கொண்டேன். இந்த மூவரைத் தவிர, காங்கிரஸ் அமைப்பைத் தயாரிக்கும் கமிட்டியில் வேறு யாரும் இருக்கக்கூடாது என்று யோசனை கூறினேன். இந்த யோசனைகளுக்கு அவர்கள் ஒப்புக்கொண்டனர். லோகமான்யர் ஸ்ரீ கேல்கரையும், தேசபந்து ஸ்ரீ ஐ. பி. ஸேன் என்பவரையும் தங்களுக்காக நியமித்தனர். இந்த அமைப்புக் கமிட்டியார் ஒரு நாளாவது சேர்ந்து உட்கார்ந்தது இல்லை.

ஆயினும் நாங்கள் வேலையை நடத்திவந்தோம். இந்த அமைப்பை வகுத்ததைப்பற்றி எனக்குக் கொஞ்சம் பெருமை உண்டு. இதன் படி வேலை செய்தோமானால் நாம் கரையேறமுடியும் என்பது என் அபிப்பிராயம். இது எப்பொழுது நடந்தாலும் சரிதான். ஆனால் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகே நான் உண்மையில் காங்கிரஸில் பிரவேசித்ததாக எண்ணுகிறேன்.

சத்தியாக்கிரகத்தை ஒத்திப்போட்டவுடனே நான் அமைதியை நிலைநாட்டும் வேலைகளைச் செய்யத் தீர்மானித்தேன். நான் 1908-இலிருந்தே கைத்தறித் தொழிலை ஆதரித்துவந்தேன். அப்பொழுது கைராட்டினம் என் கைக்குக் கிடைக்கவில்லை. 1915-இல் ஆசிரமம் ஸ்தாபித்த பிறகு கையால் நூல் நூற்பதைப் பற்றிச் சிந்திக்கலானேன். ஆலை நெசவுத் துணியை உபயோகிப்பதனால், நமக்கு நூல் நூற்றுக்கொடுக்கும் அந்த ஆலைகளுக்கு நாம் சம்பளமில்லாத ஏஜெண்டுகளாகிறோம் என்பதை உணர்ந்தேன். நம் முடைய பழைய கைராட்டினத்தைப் புனருத்தாரணம் செய்தால் தான் இந்தத் தளையிலிருந்து நமக்கு விடுதலை கிடைக்கும் என்று எண்ணி நான் இந்த வேலையில் முனைந்தேன். பரோச்சில் எனக்கு அறிமுகமான கங்காபஹன் மஜூம்தார், தமயந்தி நளனைத் தேடித் திரிந்ததுபோல, கைராட்டினத்தைத் தேடித் திரியப் பிரதிக்ஞை செய்தார். அவர் எங்கும் தேடி அலைந்த பிறகு கடைசியாக, பரோடா ஸம்ஸ்தானத்தைச் சேர்ந்த பீஜாப்பூர் என்னும் ஊரில் ராட்ராட்டையைக் கண்டுபிடித்தார். இதன் பிறகு அவர் பஞ்சு கொட்டுகிறவர்களைத் தேடவேண்டும் என்று சொன்னேன். அவர் ஒருவனைத் தேடிப்பிடித்தார். மாதம் 35 ரூபாயோ அதற்குமேலோ சம்பளம் கொடுத்து அவனை வேலைக்கு வைத்துக்கொண்டோம். அவன் சிறுவர்களுக்குப் பஞ்சுகொட்டக் கற்றுக்கொடுத்தான். நான் பஞ்சுப் பிச்சை எடுத்தேன்.

இங்கே ஆசிரமத்திலும் கைராட்டினத்தை நிறுவுவதில் நேரம் பிடிக்கவில்லை. மகன்லால் காந்தி தம் ஆராய்ச்சித் திறமையினால் ராட்டையில் பல சீர்திருத்தங்கள் செய்தார். ராட்டைகளும் தக்ளிகளும் ஆசிரமத்திலேயே தயாராயின. கதர் கஜம் ஒன்றுக்கு ரூ. 1-1-0 விலை ஆயிற்று. என் நண்பர்களிடமிருந்து அந்த முரட்டுக் கதருக்குக் கஜத்துக்கு ஒரு ரூபாய் ஓர் அணா வீதம் வசூல் செய்தேன். அவர்கள் சந்தோஷமாகக் கொடுத்தனர். இப்போது நான் ஒரேயடியாகக் கதர்மயமாகிவிடுவதற்குத் துடித்தேன். என் வேஷ்டி அப்போது நாட்டுத் துணியாக இருந்தது. பீஜாப்பூரிலும் ஆசிரமத்திலும் அப்போது தயாராகிவந்த கதர் மிகவும் முரடாக

வும் முப்பது அங்குல அகலம் கொண்டதாகவும் இருந்தது. ஒரு மாதத்துக்குள் 45 அங்குலம் அகலமுள்ள கதர்வேஷ்டி எனக்குத் தராவிட்டால் நான் அந்த முரட்டுக் கதர்வேஷ்டியையே உடுத்த வேண்டியிருக்கும் என்று கங்கா பஹனை எச்சரித்தேன். அவர் திடுக்கிட்டுப் போனார். காலவரையறை மிகவும் குறைவாக இருந்தது. ஆயினும் அவர் தைரியத்தை இழக்கவில்லை. அவர் ஒரு மாதத்துக்குள்ளேயே 50 அங்குலம் அகலமுள்ள ஒரு ஜோடி கதர் வேஷ்டியை என்னிடம் கொண்டுவந்து கொடுத்து என் வறுமையைப் போக்கினார்.

இதனிடையில் சகோதரர் லக்ஷ்மிதாஸ், லாட்டிகாம் என்னும் ஊரிலிருந்து தீண்டாச் சகோதரரான ராம்ஜீயையும் அவர் மனைவி கங்கா பஹனையும் ஆசிரமத்துக்கு அழைத்து வந்து, அவர்கள் மூலமாக நீண்ட அகலத்தில் கதர் நெய்யத் தொடங்கினார். கதரியக்கத்துக்கு இந்தத் தம்பதிகள் செய்திருக்கும் தொண்டு சாமானியமல்ல. குஜராத்திலும் அதற்கு வெளியிலுங்கூட, கைநூலைக் கொண்டு துணி நெய்யும் கலையை இவர்கள் பல பேருக்குக் கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். கல்வியறிவற்ற, ஆனால் பண்பாட்டில் தேர்ச்சிபெற்ற இந்தச் சகோதரி கைத்தறியில் உட்கார்ந்துவிட்டால், இங்கும் அங்கும் பாராமல், யாரோடும் பேசும் தேவையை உணராமல், அதிலேயே லயித்துப்போகிறார்.

## 69

### ஒரு சம்பாஷணை

சுதேசி என்ற பெயரால் இந்தக் கதரியக்கம் தொடங்கியபோது ஆலை முதலாளிகள் என்னை மிகவும் கண்டித்தார்கள். உமர் ஸோபானி கெட்டிக்காரத்தனமும் ஜாக்கிரதையுமுள்ள ஆலை முதலாளி. தம்முடைய அறிவாற்றலினால் அவர் எனக்கு உதவி செய்து வந்ததோடு, மற்றவர்களின் அபிப்பிராயங்களையும் என்னிடம் சொல்வார். அவர்களுள் ஓர் ஆலைச் சொந்தக்காரரின் வாதங்கள் உமர் ஸோபானியின் மனத்தில் பதிந்தன. ஸோபானி அவரிடம் என்னை அழைத்துப் போவதாகச் சொன்னார். நான் அதற்குச் சம்மதித்தேன். நாங்கள் இருவரும் அந்த ஆலை முதலாளியிடம் போனோம்.

"உங்களுடைய இந்தச் சுதேசி இயக்கம் ஒன்றும் புதிதல்ல என்பது உங்களுக்குத் தெரியுமோ?" என்று அவர் கேட்டார்.

"ஆம்; தெரியும்."

"வங்கப் பிரிவினையின்போது சுதேசி இயக்கம் மிகவும் மும்முரமாக இருந்ததும் உங்களுக்குத் தெரிந்திருக்குமே! இந்த இயக்கத்தை எங்கள் ஆலைகள் நன்கு பயன்படுத்திக்கொண்டன. நாங்கள் துணிகளின் விலையை உயர்த்தினோம். செய்யத்தகாத காரியங்களைக்கூடச் செய்தோம்."

"நான் இதைக் கேட்டிருக்கிறேன்; கேட்டு வருந்தியிருக்கிறேன்."

"உங்கள் வருத்தம் எனக்குத் தெரியும். ஆனால் அதற்குக் காரணம் எதுவும் இல்லை. நாங்கள் பரோபகாரத்துக்காக வியாபாரம் செய்வதில்லை. லாபம் சம்பாதிக்கத்தான் தொழில் நடத்துகிறோம். எங்கள் ஆலையின் பங்குதாரர்களுக்கு நாங்கள் பதில் சொல்லி ஆகவேண்டும். ஒரு பொருளின் விலை அதற்கு இருக்கும் தேவையைப் பொறுத்தது. இந்த விதிக்கு மாறாக யார் என்ன சொல்ல முடியும்? வங்காளிகள் தங்களுடைய கிளர்ச்சியினால் சுதேசித் துணிகளின் விலை கட்டாயம் ஏறும் என்பதை நிச்சயமாக அறிந்திருக்க வேண்டியிருந்தது."

"அவர்கள் பாவம், என்னைப்போலவே விரைவில் பிறரை நம்புகிறவர்கள். ஆதலால், 'ஆலை முதலாளிகள் இவ்வளவு சுயநலமுள்ளவர்களாக இருக்கமாட்டார்கள்; எப்போதும் துரோகம் செய்யவே மாட்டார்கள்; சுதேசியின் பெயரால் அந்நிய நாட்டுத் துணியை விற்கவே மாட்டார்கள்' என்று அவர்கள் நினைத்திருந்தார்கள்."

"நீங்கள் இம்மாதிரியான நம்பிக்கையுடையவர்கள் என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் உங்களை எச்சரிக்கை செய்ய விரும்பி இவ்வளவு தூரம் வரும் சிரமத்தைக் கொடுத்தேன். அப்பாவிகளான வங்காளிகளைப்போல நீங்களும் அதே பிழையைச் செய்யக்கூடாது."

இப்படிச் சொல்லி அந்த ஸேட் தம்முடைய குமாஸ்தா ஒருவரைச் சில மாதிரித் துணிகள் கொண்டுவரச் சொன்னார். உபயோகமற்ற நூலில் நெய்த கம்பளங்கள் அவை. அவற்றைக் கையிலே எடுத்துக்கொண்டு அவர், "இதோ பாருங்கள், நாங்கள் இந்தப் புதுச் சரக்கைத் தயாரித்திருக்கிறோம். இது ஏராளமாக விற்கிறது. உபயோகமற்ற நூலைக்கொண்டு தயார் செய்வதால் மலிவாக அடங்குகிறது. இந்தச் சரக்கை நாங்கள் இந்தியாவின் வடகோடி வரையில் அனுப்பிவைக்கிறோம். அங்கங்கே எங்கள் ஏஜெண்டுகள் பரவி இருக்கிறார்கள். எனவே, உங்களைப்போன்ற ஏஜெண்டுகள் எங்களுக்குத் தேவை இல்லை என்று நீங்கள்

அறிந்துகொள்ளலாம். உண்மையைச் சொல்லப்போனால், உங்களைப்போன்றவர்களின் குரல்கூட எட்டாத இடத்துக்கு எங்கள் ஏஜெண்டுகள் போகிறார்கள். அவர்களோடு எங்கள் சரக்குகளும் போகின்றன. இன்னொரு விஷயம்; அதையும் நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும். இந்தியாவுக்குத் தேவையான அளவு துணியை நாங்கள் உற்பத்தி செய்வதே இல்லை. ஆகையால் சுதேசி இயக்கம் என்பது முக்கியமாக உற்பத்தியைப் பற்றிய பிரச்னை. போதிய அளவு துணியை நாம் உற்பத்தி செய்து அதன் தரத்தையும் உயர்வாக்கினால் வெளிநாட்டுத் துணி வருவது தானாக நின்றுபோகும். எனவே நான் சொல்லும் யோசனை இது: சுதேசி இயக்கத்தை நீங்கள் இப்போது நடத்தும் இந்த முறையில் நடத்தக்கூடாது. புதிய ஆலைகளை ஏற்படுத்துவதில் நீங்கள் கவனம் செலுத்தவேண்டும். நம் நாட்டில் நாட்டுச்சரக்கை விற்பதற்குப் பிரசாரம் தேவை இல்லை. நம் நாட்டிலேயே சரக்கை உற்பத்தி செய்வதுதான் முக்கியம்."

"தாங்கள் சொல்லும் வேலையையே நான் செய்துகொண்டு வருகிறேனென்றால் நீங்கள் எனக்கு ஆசி கூறுவீர்கள் அல்லவா?"

"அதெப்படி? நீங்கள் புதிய ஆலைகளை நிறுவ முயன்றால் பாராட்டுக்கு உரியவர்கள் ஆவீர்கள்."

"நான் இதைச் செய்யவில்லை என்றாலும் சர்க்காவைப் புனருத்தாரணம் செய்யும் வேலையில் ஈடுபட்டிருக்கிறேன்."

"அதென்ன விஷயம்?"

நான் சர்க்காவைப் பற்றிய முழு விவரங்களையும் அவரிடம் சொல்லி, "என் அபிப்பிராயமும் உங்களுடைய அபிப்பிராயத்தை ஒட்டியே இருக்கிறது. நான் ஆலைகளுக்கு ஏஜென்ஸி எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. அதனால் லாபத்துக்குப் பதிலாக நஷ்டமே உண்டாகும். ஆலைத்துணிகள் விலையாகாமல் விழுந்து கிடப்பதில்லை. நான் துணி உற்பத்தி செய்வதோடு அந்தத் துணியை விற்கவும் ஏற்பாடு செய்யவேண்டும். இப்போது நான் கதர் உற்பத்தியில் மட்டுமே ஈடுபட்டு வருகிறேன். சுதேசி இயக்கத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு. ஏனெனில் அதன் மூலம் இந்தியாவில் பட்டினியாகச் சாகும் வேலையில்லாப் பெண் மணிகளில் பாதிப் பேருக்கு வேலை கொடுக்க முடியும். அவர்கள் நூற்ற நூலை நெய்து, இவ்வாறு உற்பத்தியான கதரை ஜனங்களுக்கு அணிவிப்பதே என் வேலை. இதுதான் என் இயக்கம். சர்க்கா இயக்கம் எவ்வளவு தூரம் வெற்றி பெறும் என்பதை

நான் சொல்ல முடியாது. இப்பொழுதுதான் அது ஆரம்பமாகி யிருக்கிறது. ஆனால் அதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு. எது எப்படி இருந்தாலும், இந்த இயக்கத்தினால் தீமை ஒன்றும் விளையாது என்பதில் மட்டும் விவாதத்துக்கு இடமில்லை. இந்த இயக்கத்தின் காரணமாக இந்தியாவில் துணி உற்பத்தி எவ்வளவுக்கு அதிகமாகிறதோ அவ்வளவுக்கு நன்மையும் உண்டாகும். ஆதலால் இந்த முயற்சியில் நீங்கள் குறிப்பிட்ட குற்றங்களுக்கு அடியோடு இடம் இல்லை."

"நீங்கள் இந்த முறையில் இந்த இயக்கத்தை நடத்துகிறீர்கள் என்றால், அதைப்பற்றி நான் சொல்ல வேண்டியது எதுவும் இல்லை. இந்த யந்திர யுகத்தில் கைராட்டினம் நிற்குமா நிற்காதா என்பது வேறு விஷயம். ஆயினும் என்னைப் பொறுத்த வரையில் உங்கள் நோக்கம் நிறைவேற வேண்டுமென்று விரும்புகிறேன்."

## 70

## பூர்ணாஹுதி

இப்போது இந்தச் சரிதத்தை முடிக்க வேண்டிய தருணம் வந்திருக்கிறது. இதற்குப் பிறகு என் வாழ்க்கை பொது வாழ்க்கையோடு கலந்துவிட்டது. ஜனங்கள் அதைப்பற்றித் தெரிந்துகொள்ளாமல் இருப்பது சாத்தியமல்ல. ஒத்துழையாமை இயக்கத்தின் பிறப்பு, நாக்பூர் காங்கிரஸில் கிலாபத் அநீதிகளுக்கு மாற்றாக ஒத்துழையாமையை மேற்கொள்ளத் தீர்மானம் செய்தது, ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையைச் சாதிப்பதற்காகச் செய்த முயற்சிகள் - இவற்றையெல்லாம் இங்கே குறிப்பிடுவதோடு நிறுத்துகிறேன். 1921-ஆம் வருஷத்திலிருந்து நான் காங்கிரஸ் தலைவர்களோடு மிகவும் நெருங்கிப் பழகியிருக்கிறேன். அவர்களைப் பற்றிக் குறிப்பிடாமல் நான் எந்த நிகழ்ச்சியையும் வர்ணிக்க முடியாது. இவையெல்லாம் என் நினைவில் இன்னும் பசுமையாகவே இருக்கின்றன. சிரத்தானந்தரும் தேசபந்துவும் லாலாஜீயும் ஹக்கீம் சாகபும் இன்று நம் அருகில் இல்லை. ஆயினும் அதிருஷ்டவசமாக இன்னும் எத்தனையோ தலைவர்கள் நம்மிடையே இருக்கிறார்கள். காங்கிரஸில் ஏற்பட்ட பெருத்த மாறுதலுக்குப் பிற்பட்ட சரித்திரம் இன்னும் உருவாகிவருகிறது. என்னுடைய முக்கியமான சோதனைகள் காங்கிரஸ் மூலமாகவே நடந்துள்ளன. ஆதலால் அந்தச் சோதனைகளை விவரிக்கும்போது காங்கிரஸ்

தலைவர்களையும் குறிப்பிடுவது இன்றியமையாததாகும். இவற்றை இப்போதே நான் விவரிப்பது உசிதமல்ல. மேலும், இப்போது நடந்துகொண்டிருக்கும் சோதனைகள் விஷயத்தில் நான் திட்டமான முடிவுகளுக்கு வந்துவிட்டேன் என்று சொல்ல முடியாது. ஆதலால் இந்தச் சரிதத்தை இப்போதைக்கு நிறுத்திக்கொள்வதே என் கடமை என்று கருதுகிறேன். என் பேனாவும் இதற்கு மேல் எழுத மறுக்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

வாசகர்களிடம் விடை பெற்றுக்கொள்ள எனக்கு வருத்தமாக இருக்கிறது. என்னுடைய நோக்கத்தில் என் சோதனைகள் மிகவும் மதிப்பு வாய்ந்தவை. அவற்றை நான் உள்ளபடி விளக்கினேனா இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரையில் அவற்றைச் சரியாக விளக்கக்கூடிய வரையில் முயன்றிருக்கிறேன். சத்தியத்தை நான் எந்த உருவில் கண்டேனோ, எந்த வழியாகக் கண்டேனோ, அதே உருவில் அதே வழியாக அதை விளக்க எப்போதும் முயன்று வந்திருக்கிறேன். வாசகர்களுக்கு இந்த விவரங்களைத் தெரிவித்த பிறகு என் உள்ளத்தில் அமைதியை உணர்கிறேன்; ஏனெனில், இவற்றைப் படிப்பதனால் வாசகர்களின் உள்ளத்தில் சத்தியத்தினிடத்தும் அஹிம்ஸையினிடத்தும் மிகுந்த சிரத்தை உண்டாகும் என்று நம்புகிறேன்.

நான் சத்தியத்தையே இறைவனாகக் கருதி வந்திருக்கிறேன். சத்தியமயமாவதற்கு அஹிம்ஸை ஒன்றே ராஜபாட்டை என்பது இந்தச் சரித்திரத்தின் ஏடுகளில் வாசகர்களுக்குப் புலனாகாவிட்டால் என்னுடைய இந்த முயற்சி வீண் என்று நினைப்பேன். என் முயற்சிகள் வேண்டுமானால் வீணாகலாம்; ஆனால் என் கொள்கை பயனற்றதல்ல. என் அஹிம்ஸை உண்மையாக இருந்துங்கூடப் பிஞ்சாக இருக்கிறது, அரைகுறையாக இருக்கிறது. ஆதலால் நான் கண்ட சத்திய தரிசனம், சாமான்யமான ஆயிரம் சூரியர்களை ஒன்று சேர்த்தும் அளந்து காண முடியாத மகத்தான ஒளி கொண்ட சத்தியமென்னும் கதிரவனுடைய ஜோதியில் ஒரு கிரணத்தைப் பார்ப்பதுபோல ஆகும். எனவே இதுவரையில் நான் செய்த சோதனைகளை ஆதாரமாகக் கொண்டு, 'பூர்ண அஹிம்ஸை இல்லாத பக்ஷத்தில் இந்தச் சத்தியத்தைப் பூர்ணமாகக் காண்பதும் அசாத்தியம்' என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியும்.

இவ்வாறு உலகமெல்லாத்தும் பரவிய சத்திய நாராயணனை நேரில் காண்பதற்கு, எல்லா உயிர்களையும் தன்னைப்போலவே நேசிக்கும் ஆற்றல் பெறுவது மிகவும் அவசியம். இந்தச் சத்தியத்

தைப் பெற விரும்புகிறவன் வாழ்க்கையில் எந்தத் துறையிலிருந்தும் விலகியிருக்க முடியாது. இந்தக் காரணத்தினால்தான் என் சத்திய வழிபாடு என்னை அரசியல் துறைக்கு இழுத்துக்கொண்டு போயிற்று. அரசியலோடு சமயத்துக்கு யாதொரு தொடர்பும் இல்லை என்று சொல்லுகிறவர்கள் சமயத்தையே அறியாதவர்கள் என்று நான் சிறிதும் தயக்கமின்றிச் சொல்வேன். இப்படிச் சொன்னதால் நான் எவ்விதத்திலும் பணிவின் வரம்பைத் தாண்டி விடவில்லை என்று நம்புகிறேன்.

ஆத்மத் தூய்மையின்றி உலகிலுள்ள ஒவ்வோர் உயிரினிடத்தும் ஒன்றி நிற்கும் அநுபவத்தைப் பெற முடியாது. ஆத்மத் தூய்மைஇல்லை என்றால், அஹிம்ஸா தர்மத்தைக் கடைப்பிடிப்பது எந்த விதத்திலும் சாத்தியமல்ல; ஏனெனில் தூய்மையற்றவன் பரமாத்மனைக் காண்பதற்குத் தகுதியற்றவனாகிறான். ஆதலால் வாழ்க்கை வழியில் எல்லாத் துறைகளிலும் தூய்மை பெறுவது சாத்தியமானதே; ஏனெனில் தனி மனிதனுக்கும் உலகத்துக்குமிடையே, ஒருவனுடைய தூய்மை பலருடைய தூய்மைக்குக் காரணமாகும்படியாக, அவ்வளவு நெருங்கிய தொடர்பு இருக்கிறது. தனித்தனியே ஒவ்வொருவனும் முயன்று பார்ப்பதற்குத் தேவையான வல்லமையைச் சத்திய நாராயணன் எல்லோருக்கும் பிறப்பிலேயே அளித்திருக்கிறான்.

ஆனால், இந்தத் தூய்மை வழி கடுமையானது என்பதை நான் கணந்தோறும் உணர்ந்துவருகிறேன். தூய்மை பெறுவது என்றால், மனத்தாலும் வாக்காலும் உடலினாலும் நிர்விகாரமாக இருத்தல், விருப்பு வெறுப்புக்களற்று இருத்தல் என்று கருத்து. இந்த மாறுதலற்ற நிலையை எய்துவதற்கு நான் நிமிஷந்தோறும் முயன்று வந்திருந்தபோதிலும் இதுவரை அதை அடையவில்லை. இதனால்தான் ஜனங்களின் புகழ்ச்சி என்னை மயக்க முடியவில்லை; அதற்குமாறாக அது பெரும்பாலும் எனக்கு வருத்த மூட்டுவதற்கே காரணமாகிறது. மனோவிகாரங்களை வெல்வது, உலகம் முழுவதையும் சஸ்திர யுத்தம் செய்து வெல்வதைக் காட்டிலும் கடினமானது என்று நான் கருதுகிறேன். இந்தியாவுக்கு வந்த பிறகும் நான் என்னுள் மறைந்திருக்கும் மாசுகளைக் கண்டிருக்கிறேன்; கண்டு வெட்கப்பட்டிருக்கிறேன்; ஆனால் தைரியத்தை இழக்கவில்லை. சத்திய சோதனைகள் செய்து நான் இன்பம் கண்டிருக்கிறேன்; இன்றும் அதைக் கண்டுகொண்டிருக்கிறேன்; ஆனால் இன்னமும் நான் மேடு பள்ளங்கள் நிறைந்த வழியைக் கடக்கவேண்டும் என்பதை அறிவேன். அதற்கு நான் சூனிய

நிலையை எய்திவிடவேண்டும். மனிதன் தன்னுடைய இயல்பான நிலையில் தன்னை எல்லோரிலும் கடையனாகக் கருதாதவரையில் விடுதலை அவனிடமிருந்து விலகியிருக்கும். அஹிம்ஸை என்பது பணிவின் கடைசி எல்லை; அதன் முடிவு. இத்தகைய பணிவு இல்லாமல் விடுதலை எப்போதும் கிடைக்காது என்பது அநுபவத்தில் கண்ட விஷயம். ஆதலால், இத்தகைய அஹிம்ஸை கொண்ட பணிவை எய்தவேண்டும் என்று கோரி, அதில் உலகத்தின் உதவியையும் வேண்டிக்கொண்டு இப்போதைக்கு, இந்த அத்தியாயத்தோடு நிறுத்திக்கொள்கிறேன்.